# பேரா.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்
# பகுப்பாய்வும் நுண்ணாய்வும்



செல்வி லலிதாமினி முருகேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94

# பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்
# பகுப்பாய்வும் நுண்ணாய்வும்

Nallur Pradeshiya Sabha
Head Office
Thirunelvely
02 NOV 2004

செல்வி லலிதாமினி முருகேசு
பீ.ஏ. (சிறப்பு), எம்.பில்

பொ.கைலாசபதி நூற்றாண்டு நினைவுக்குழு
யாழ்ப்பாணம்
இலங்கை
2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட|7991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# P.KAILASAPATHY'S THOUGHTS
## CLASSIFICATION AND ANALYSIS

MISS. LALITHAMINI MURUGESU,
B.A. (Special) M.Phil.

A publication of
P.Kailasapathy Centenary Committee

Printed by: Bharathy Pathippakam,
430,K.K.S.Road,
Jaffna.
Phone: 021-222 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்
பகுப்பாய்வும் நுண்ணாய்வும்

செல்வி லலிதாமினி முருகேசு
பீ.ஏ. (சிறப்பு), எம். பில்

பொ.கைலாசபதி நூற்றாண்டு நினைவுக்குழு
யாழ்ப்பாணம்
இலங்கை
2003

பாரதி பதிப்பகம்,
430,காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**P.KAILASAPATHY'S THOUGHTS:
CLASSIFICATION AND ANALYSIS**

**ISBN 955 8058 02 - 5**

**MISS LALITHAMINI MURUGESU,
B.A. (Special), M.Phil.**

**A Publication of P.Kailasapathy Centenary Commnittee,
314, Chemmany Road,
Nayanmarkaddu
Jaffna, Sri Lanka.**

**Bharathy Pathippakam,
430,K.K.S.Road,
Jaffna.
Phone: 021 - 222 3081**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் போற்றிய உப அதிபர் பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் பற்றிய சிந்தனை வளர வேண்டும்; அதற்கு ஆவன செய்தல் வேண்டும் என்று அரும்பாடுபட்ட சிலரது தளராத முயற்சியே அண்மையில் குறகிய காலத்தில் கைலாசபதி அவர்கள் பற்றிச் சில நூல்கள் வெளிவருவதற்குக் காரணமாயிற்று. இது நல்ல அறிகுறி.

முதலில் திரு.ச.பரநிருபசிங்கம் அவர்கள் 'திரு.பொ.கைலாசபதி அவர்களும் பொருளாராய்ச்சியும்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக் கலைப்பீடத்தில் கல்விசார் ஆய்வரங்கில் (Academic Forum) ஆற்றிய சொற்பொழிவு சிறு நூல் வடிவில் கலைப்பீடத்தினால், 1994இல் வெளியிடப்பெற்றது. பின்னர் உப அதிபரின் சிந்தனைகள் பற்றி ஏழாலையூர் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் செய்த ஆய்வு 'சைவசித்தாந்த நோக்கிற் கைலாசபதி ஸ்மிருதி' என்னும் நூலாக 1998இல் வெளிவந்தது. இதனை யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

சிந்தனைகளையும்,பரநிருபசிங்கம் அவர்களின் சொற்பொழிவையும், சிந்தனைகள் பற்றிப் பண்டிதர் அவர்கள் எழுதிய நூலையும் ஆர்வத்துடன் ஊன்றிப் படித்த செல்வி மு.லலிதாமினி திரு.ஆ.சபாரத்தினம் அவர்களிடம் கைலாசபதி அவர்கள் பற்றியும் அவரது சிந்தனைகள் பற்றியும் மேலும் தெளிவான விளக்கங்களைப் பெற்றுவந்தார்; யாழ்.பல்கலைக்கழகத்து இந்து நாகரிகத் துறையில் பொ.கைலாசபதி அவர்கள் பற்றித் தமது எம். பில். பட்டத் திற்கு ஆராய முன்வந்தார். ஆராய்ந்து பட்டம் பெற்றார்; பாராட்டும் பெற்றார். பண்டிதர் கந்தையா அவர்கள் கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் சிலவற்றிற்குக் கூறிய விளக்கத்திற்கு லலிதாமினி தமது ஆய்வில் வேறு விளக்கம் கூறியுள்ளமை சுட்டிக்காட்டத்தகும்.

செல்வி லலிதாமினியின் ஆய்வு இப்பொழுது இந்நூலாக வெளிவருகிறது. நூலாக வெளிவருவதற்கு முன் ஆய்வேட்டைப் படித்துப் பார்த்த பண்டிதர் கந்தையா அவர்கள் அதனை மிகவும் பாராட்டி எனக்குக் கடிதம் எழுதினார். ஒருவகை மகிழ்ச்சி தோன்றிய போதும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏன் என்றால் பண்டிதரோ கண்டிப்பானவர்; சைவசித்தாந்தம் பற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூல்கள் எழுதியவர்; பிறரின் நூல்களை விமர்சித்தவர். எப்படியோ பண்டிதர் அவர்களின் பெறற்கரிய பாராட்டைப் பெற்ற லலிதாமினியின் ஆய்வைத் துறைசார்ந்த அறிஞர் அனைவருமே வரவேற்றுப் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. லலிதாமினியின் ஆய்வுத்திறன் மேலும் வளர்க.

திரு.பரநிருபசிங்கம், பண்டிதர் கந்தையா, செல்வி லலிதாமினி ஆகியோர் போன்று வருங்காலத்திலும் அறிஞர்கள் கைலாசபதி பற்றிச் சிந்தித்தல் வேண்டும். பல்கலைக் கழகம் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் ஆய்வாளர்களை நெறிப்படுத்தி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து, ஊக்கமளித்தல் வேண்டும். சிறந்த ஆய்வுகள் பல்கலைக்கழகத்திற்குச் சிறப்பைத் தரும்.

உப அதிபர் பற்றி, 'மௌன தவமுனிவர் கைலாசபதி : வாழ்வும் சிந்தனையும்' 'சிந்தனைச்செல்வர் பொ.கைலாசபதி : ஆளுமையும் ஆக்கமும்' என வெளிவந்துள்ள சிறு நூல்களையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். இவை போன்ற நூல்கள் கைலாசபதி அவர்களைப் பற்றிப் பொதுவாக அறிந்து கொள்வதற்குப் பயன்படும். எனவே, இத்தகைய நூல்களும் வரவேற்கத்தக்கவை.

*சு. சுசீந்திரராசா*
*வாழ்நாள் பேராசிரியர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*தலைவர்,*
*பொ. கைலாசபதிநூற்றாண்டு விழாக்குழு.*

*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
*05. 06. 2002*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்த, ஆன்மீகச் சூழ்நிலையில் ஆலவிருட்சமாயப் பரிணமித்த ஒரு தலைசிறந்த அறிஞர் பொ.கைலாசபதி அவர்களாவார். சுமகால அறிஞரால் 'மௌனதவமுனி' எனப்போற்றப்பட்ட அவரது சிந்தனைகள் ஆன்மீக சாதகர்கள் ஒரு சிலர் மத்தியிலே மட்டும் அறியப்பட்டிருந்தன. இரு தசாப்தங்களாக அவருடன் ஒட்டி உறவாடிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அவற்றைத் தொகுத்து எழுதி வைத்தார். அது பேராசிரியர் சு.சுசீந்திராசா, ஆ.சபாரத்தினம் ஆகியோரின் முயற்சியால் 700 பக்கங்கள் கொண்ட பெருநூலாய்யாழ் பல்கலைக்கழகத்தினால் 1994ஆம் ஆண்டு வெளிவந்தது. இதில் அடங்கியுள்ள சிந்தனைகளே இவ்வாய்வுக் கட்டு ரையின் பொருளாய் அமைந்துள்ளன.

காலம் காலமாக இந்துப்பண்பாட்டின் வளர்ச்சிக்குப் பல அறிஞர்கள் பங்களித்தனர் சமயம், தத்துவம், கலை போன்றவற்றை உள்ளடக்கிய பண்பாட்டு மரபின் உயிர்நாடி எது என்பதைத் தம்முடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு பசுமரத்தாணி போல மனதில் இருத்தியவர் கைலாசபதி அவர்கள்.

தமது பேச்சு, மூச்சு, வாழ்வு அனைத்திலும் தீர்க்கதரிசியாக விளங்கிய கைலாசபதி அவர்கள் இந்துப்பண்பாட்டினுடைய பல்வேறு துறைகளையும் வளம்படுத்துவதற்கு வழிகோலியவர். பரமேஸ்வராக் கல்லூரியில் படித்தும், சிறிது காலம் படிப்பித்தும், சைவாசிரிய கலாசாலையில் சுமார் முப்பது ஆண்டுகள் உப அதிபராயிருந்து பெரும் எண்ணிக்கையிலான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தும் சமகால கல்வி மான்கள் மத்தியில் நடமாடும் கலைக்களஞ்சியம் என அறிமுகமாயிருந்த கைலா சபதி அவர்களின் சிந்தனைகளை இன்றைய தலைமுறையினரும் ஓரளவு அறி யத்தக்க வகையில் இவ்வாய்வுக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் முதலாம் அத்தியாயம் கைலாசபதி அவர்கள் பற்றிய அறிமுக உரையாக அமைகிறது. இரண்டாம் அத்தியாயத்தில் அவரது மெய்யியலின் பாரிய கட்டமைப்பு மனிதனது அந்தக்கரண விருத்திகள் பற்றியது என்பதைப் பொதுவாக அறிமுகம் செய்கிறது. மூன்றாம் அத்தியாயத்தில் கைலாசபதி அவர்களின் வேதம், வேதாங்கம் பற்றிய கருத்துக்கள் ஓரளவு தொகுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படுகின்றன. மேற்புலவழி வேத ஆராய்ச்சி அர்த்தமற்றது. அவ்வாய்வாளர் வேத ரிஷிகளுக்கு எதிர்த்திசையில் செல்கின்றார்: வேதாங்கங்களின் உணர்ச்சி யின்றி, அதாவது நேர்காட்சியின்றி, புத்திஜீவிகள் தமது பல்வேறுபட்ட அளவு கோல்களைக் கொண்டு வேதங்களை மதிப்பீடு செய்வது பொருத்தமற்றது என்ற கைலாசபதி அவர்களின் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. நான்காம் அத்தி யாயத்தில் தமிழ், தொல்காப்பியம் பற்றிய கருத்துக்களும், ஐந்தாம் அத்தியா யத்தில் மரபுவழியல்லாத கணித, விஞ்ஞான மற்றும் அளவையியல் சார்ந்த புதிய சிந்தனைகள் சிலவும் முன்வைக்கப்பட்டுள்ளன. இறுதி அத்தியாயம் நிறைவுரை யாக அமைகிறது.

இந்தியவியல் அறிவுப் பரம்பலுக்குக் கைலாசபதி அவர்களின் சிந்த னைகள் உதவியவாறு தொகுத்துத் தரப்படுகின்றது. இவ்வாய்வின் முக்கிய நோக்கம் இதுவேயாகும்.

'தொன்மைய வாமெனு மெவையுநன்றாகாவின்று
தோன்றிய நூலெனு மெவையுந் தீதாகா'

என்ற உமாபதிசிவத்தின் வாக்குக்கு ஏற்பக் கைலாசபதி அவர்களின் சிந்த னைகள் சில தொன்மைக் கருத்துக்களை மறுக்கின்றன என ஒரு சாராரும் நவீ னத்துவம் அனைத்தையும் ஒதுக்குகின்றன என மற்றோர் சாராரும் குறை கூறுவர். ஆயினும், இவ்வாய்வு முயற்சியின் வெளிப்பாடாக முன்வைக்கப்பட்ட கருத் துக்கள் கற்றோர். மத்தியில் சிந்தனைக்கு விருந்தாக அமையும் என்பது ஆய்வாளரின் நம்பிக்கையாகும்.

*மு. லலிதாமினி*

சுபானு ஸ்ரீ கார்த்திகை மீ
அபரபக்க சதுர்த்தி புனர்பூசம்
(12.12.2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Synopsis

This study is based on the thoughts of P.Kailasapathy (1902-1961), the Silent Sage. They were recorded by Panditamani. S.Kanapati pillai, whow as closely associated with him for four decades. The verbatim records spread from1941to1957, and were published in1994.It was a mass of facts revealing the intellectual Acumen and mystical experience of the Silent Sage. Scholars including the recorder found it insurmountable. The key that opened the path to classification and analysis was the monograph,"P.Kailasapathy and his Philosophical Research"by S.Paranirupasingam, who also conceived the diagrammatic representation of Buddhi Vrtti (intellectual development)

The first chapter outlines the cultural background of second half of the19th century that moulded the Sage's life,with a brief history of his life and achievement.

Chapter Two classifies the psychological structure of Kailasapathy's thoughts. The most important is Buddhi Vrtti. Twentyfour steps are identified; they are divided into three classes. The average man can reach only upto five steps. His ascent to the higher steps is an arduous task requiring years of hard work.. As he ascends the steps, his purified intellectdevelopes great powers and grasps very deep truths. The other "limbs" of the inner faculties, Ahamkara, Manas, and Chitta ,also develop . These developments are spoken of as " Opening of Eyes". The final goal is becoming Sadasiva, who is said to possess



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

fifteen eyes. Great men who achieved the "opening of eyes" are given as examples from life and scriptures. Normally , the books place Dharma, Artha, Kama and Moksha as the goals of life. In Kailasapathy's structure of Buddhi Vrtti ,these form the $10^{th}$ to the $13^{th}$ steps His special discovery is the classification of many more steps above and below them.

Chapter Three is devoted to his views on the Vedas &Vedangas.The $19^{th}$ century scientific outlook adopted by Max Muller and other Western Indologists is completely discarded... Like Sri Aurobindo Kailasapathy also points an acusing finger at the traditional commenters who were far removed in time and thought from the authors of the pure Vedic tradition.

Chapter Four deals with Kailasapathy's views on language; Aryan (Vedic Sanskrit) and Tamil are the original languages of pure human thought, meant for the elevation of the Soul. They are not mere media of human communication. The birth and evolution of languages as hypothesized by the $19^{th}$ century comparative philologists is not accepted. The ancient Tamil grammer, Tolkappiyam and Vedic grammar (not Panini,the grammarian of classical Sanskrit) are placed on an equal footing.They can be properly understood only by those who can ascend to Jñāna, the 15thstep in Buddhi Vṛtti. Tamil is classified into18 types.The lowest is Dharma Tamil ,which has no grammar. Vākada Tamil & Jotisha Tamil belong to this class. THE REASON Why the Tamil of the Siddha works on medicine ,and astrology are in colloquial Tamil, is given.

The sage Agastya belongs to the Amirta taḷam (base) .Through his grace and love for humanity, he descends to Dharma ,the $10^{th}$ level in Buddhi Vrtti and givės his wisdom of herbs etc. to the ordinary people,in easy tamil. Tolkāppiyam is THE grammar for Sangam Tamil ( Mut -Tamil, or Kāma Tamil). Siva Tamil is the highest


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chapter Fivegives a random selection of his thoughts on ideal government ,kingship , Logic etc. He explains why Indian thinkers did not pursue science and mathematics to their end, for their own sake as the Westerners did. Knowledge for knowledge'sake was not their aim.Unless a step forward in these fields leads to Amrtatvam (Deathlessness or Eternal Life), the sage will not pursue these. Kailasapathy's special contribution to Epstemology is his classification of Pramānas into seven categories . His own thoughts come under the fourth-Smrti that which is " remembered" by apurified mind His discovery Buddhi vrtti etc. was achieved under a type of Prāsāda Yoga.

The concluding Chapter (Six) summarizes the thesis .It humbly states that this classification and analysis is only a tiny part and much wil have to be done further.

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


❖ அணிந்துரை iii

❖ முன்னுரை v

❖ நன்றியுரை

❖ பொருளடக்கம்

❖ அத்தியாயம் ஒன்று

**கைலாசபதி அவர்கள் : ஓர் அறிமுகம் 1 - 17**

1.1. மெய்யியல் அறிஞரின் மரபு 01

1.2 19ம், 20ம் நூற்றாண்டுக் கல்விச் சீர்திருத்தமும் மறுமலர்ச்சியும் 02

1.3 கைலாசபதியும் கல்வியும் 03

1.4. கைலாசபதியும் கலாசாலையும் 05

1.5 கைலாசபதியின் திருமணம் 06

1.6 கைலாசபதியின் புறவாழ்வும் அகவாழ்வும் 06

1.7 கைலாசபதியும் வேதாந்தமடமும் 07

1.8 குருவின் சிறப்பும் சீடனின் ஆன்மீக நாட்டமும் 08

1.9 உபஅதிபரும் பண்டிதமணியும் 09

1.10 கைலாசபதிக்கு அறிஞர் அளித்த அந்தஸ்து 11

1.11 கைலாசபதி பற்றிய ஆய்வுச்சிந்தனை : தோற்றமும் வளர்ச்சியும் 12

குறிப்புக்கள் 13

❖ அத்தியாயம் இரண்டு

**பதினைந்து கண்விருத்திகள் 18 - 86**

2.1 மனித குறிக்கோள் 18

2.2 கண் விருத்தியும் பாகுபாடும் 18

2.2.1 முதலாம் கண்: அகங்காரவிருத்தி 20

2.2.1.1 பிரேமை 20




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.1.2 ஆசாரம் 21

2.2.1.3 அருள்நோக்கு 21

2.2.1.4 ஆரியத்துவம் 22

2.2.1.5 சத்தியம் 22

2.2.1.6 ஞானம் 23

2.2.1.7 அநந்தம் 23

2.2.1.8 பிரமம் 23

2.2.1.8.1 நாற்பால் - வருண வேறுபாடு 24

2.2.1.9 இரண்டாம் கண்: புத்திவிருத்தி

2.2.2.1. மூன்று கட்டுக்களும் முதற்கட்டுத்தளங்களும் 25

2.2.2.1.1 முதற்கட்டு முதல்தளம்: கேவலக்கிடை 32

2.2.2.1.2 இரண்டாம் தளம்: சீவனநோக்கு 33

2.2.2.1.3 மூன்றாம் தளம்: சுட்டிப்பான கிரகிப்பு 33

2.2.2.1.4 நான்காம் தளம்: கலைஞானம் 34

2.2.2.1.5 ஐந்தாம் தளம்: பொதுவிவேகம் 34

2.2.2.1.6 ஆறாம் தளம் : நல்லார்வம் 35

2.2.2.1.7 ஏழாம் தளம் : நாகரிகம் 36

2.2.2.1.8 எட்டாம் தளம் : சம்ஸ்காரம் 37

2.2.2.1.9 ஒன்பதாம் தளம் : பண்பாடு 38

2.2.2.2 இரண்டாம் கட்டுத் தளங்களும் வகுப்புக்களும் 40

2.2.2.10 பத்தாம் தளம் : தர்மம் 41

2.2.2.11 பதினொராம் தளம் : அர்த்தம் 41

2.2.2.12 பன்னிரண்டாம் தளம் : காமம் 42

2.2.2.13 பதின்மூன்றாம் தளம் : மோக்ஷம் 43

2.2.2.14 பதினான்காம் தளம் : அமிர்தம் 43

2.2.2.15 பதினைந்தாம் தளம் : ஞானம் 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.2.16 பதினாறாம் தளம் : சித்தாந்தம் 46
2.2.2.17 பதினேழாம் தளம் : முடிந்த சத்தியம் 46
2.2.2.3 மூன்றாம் கட்டுத் தளங்களும் வகுப்புக்களும் 46
2.2.2.4 புத்திவிருத்தித் துறைகள் 47
2.2.2.4.1 தர்மத் துறைகள் 47
2.2.2.4.2 அர்த்தத் துறைகள் 49
2.2.2.4.3 காமத் துறைகள் 49
2.2.2.4.4 மோக்ஷத் துறைகள் 52
2.2.2.4.5 அமிர்தத் துறைகள் 53
2.2.2.4.6 ஞானத் துறைகள் 55
2.2.2.4.7 சித்தாந்தத் துறைகள் 57
2.2.2.4.8 முடிந்த சத்தியத் துறைகள் 58
2.2.2.4.9 சத் துறைகள் 58
2.2.3. மூன்றாம் கண்: மனோவிருத்தி 59
2.2.3.1 மனோவிருத்தி நிலைகள் 59
2.2.3.2 சமய மார்க்க வேறுபாடு 60
2.2.4 பன்னிரு விருத்திகள்: உட்கண்கள் 62
2.2.4.1 நான்காம் கண்: சித்தவிருத்தி 62
2.2.4.2 ஐந்தாம் கண்: உள்ள விருத்தி 64
2.2.4.3 ஆறாம் கண்: மனோவிருத்தி 65
2.2.4.4 ஏழாம் கண்: சித்தலயம் 65
2.2.4.5 எட்டாம் கண்: உள்ளலயம் 65
2.2.4.6 ஒன்பதாம் கண்: மனத்தெளிவு 66
2.2.4.7 பத்தாம் கண் : சித்தத்தெளிவு 66
2.2.4.8 ஏனைய கண்விருத்திகள் 66
குறிப்புக்கள் 67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அத்தியாயம் மூன்று

கைலாசபதியும் வேதமும் 87 - 119

3.1 வேதத்தின் பெருமை 87

3.2 ஐரோப்பியரின் வேதம் பற்றிய விளக்கம்: 87

அதனைச் சுதேசிகள் ஏற்றல் 87

3.3 கைலாசபதியின் வேதம் பற்றிய விளக்கம் 88

3.3.1 வேதம் நான்கு 89

3.3.2 மந்திரபாகம் 90

3.3.3 வேதப்பிரிவும் புத்திவிருத்தித்தளமும் 91

3.3.4 வேத சாகைகள் 93

3.3.5 வேதத்தில் லௌகிகப் பிரார்த்தனை 94

3.3.6 வேதம் வாழ்க்கை நூல் 94

3.3.7 வேதம் மூலம் : அநாதி சிருஷ்டி 95

3.3.8 மறையும் வேதமும் 96

3.4. வேதாங்கம் 96

3.4.1 வியாகரணம் 97

3.4.1.1. நவவியாகரணம் 98

3.4.1.2 வடமொழி - தமிழ் வியாகரணம் 98

3.4.1.3 உயிர்களின் கருத்துப்பரிமாற்ற ஊடகம் 99

3.4.1.4 வாக்கும் அர்த்தமும் 99

3.4.2 ஜோதிஷம் 99

3.4.3 நிருக்தம் 101

3.4.3.1. நிருக்தமும் மோட்சதளமும் 102

3.4.4 சந்தஸ் 102

3.4.4.1 சந்தஸும் காமதளமும் 102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4.5 சிகைஷ 103

3.4.6 கல்பம் 103

3.4.6.1 கல்பமும் சம்ஸ்காரமும் 103

3.4.6.1.1 ஞான கர்ம தாரதம்மியம் 104

3.4.6.1.2 கைலாசபதி அவர்களின் விசேட விளக்கம் 104

3.5. உபாங்கம் 105

3.5.1 உபாங்கமும் புத்திவிருத்தித்தளமும் 105

3.5.2 ஸ்மிருதி 107

3.5.2.1 ஸ்மிருதியின் இன்றைய நோக்கு 108

3.5.2.2. ஸ்மிருதி வியாக்கியானங்கள் தேய்வின் அறிகுறி 108

3.5.3 மீமாம்சை 109

3.5.3.1 மீமாம்சையின் தாரதம்மியம் 109

3.5.2.2. உத்திர மீமாம்சையும் உரைகளும் 110

3.5.4 புராணம் 110

3.5.4.1 புராணக் காட்சியும் போக்கும் 111

3.5.5 நியாயம் 111

3.5.5.1 நியாய தர்க்கம் ; இன்றைய நோக்கு 112

3.5.5.2 அறிவாராய்ச்சியலும் நியாய சாஸ்திரமும் 112

3.5.6 உபாங்கப்பிறப்பும் புத்திவிருத்தியும் 113

3.5.7 முடிவுரை 113

குறிப்புக்கள் 114

❖ அத்தியாயம் நான்கு

**கைலாபதி அவர்களின் தமிழ் பற்றிய, விசேடமாகத் தொல்காப்பியம் பற்றிய, கருத்துக்கள் 120 - 147**

1.1 தமிழ்: பொதுநோக்கு 120

4.2 மொழிகள் இரண்டு 120



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2.1 சொல்லை விட்டுப் பொருளில்லை 121

4.3 பதினெட்டு வகைத்தமிழ் 122

4.4 ஆரியம் - தமிழ் ஆன்மீக மொழிகள் 124

4.5 சங்கத்தமிழ்: - முத்தமிழ் 126

4.6 தொல்காப்பியம் : அன்றும் இன்றும் 127

4.6.1 கைலாசபதியின் தொல்காப்பிய அறிவு நுட்பம் 127

4.6.1.1 தொல்காப்பியம் சங்கத்தமிழ் இலக்கணமே 128

4.6.1.2 அகவகை

4.6.1.3 நால வர்ணமும் - நாற்பாலும் 129

4.6.1.4 ஆன்மீக - அந்தக்கரண நிலை வேறுபாடு 130

4.6.1.5 நாற்பாலாரின் பண்பு 131

4.6.1.6 திணை ஏழும் : துறை ஏழும் 133

4.6.1.7 புணர்ச்சி ஐந்திணைக்கும் பொது 135

4.6.1.8 திணை - ஒழுக்க வைப்பு முறையின் ஆழம் 136

4.7 சொல் - பொருள் தொடர்பு 137

4.8 கைலாசபதியும் உரையாசிரியரும் 138

4.9 கம்பராமாயணமும் கைலாசபதியும் - 140

குறிப்புக்கள் 141

❖ **அத்தியாயம் மூன்று**

**மரபுவழியல்லாத புதிய சிந்தனைகள் 148 -172**

5.1. முன்னுரை 148

5.2 அரசும் அரச அங்கங்களும் 148

5.2.1 நாடு - வரைவிலக்கணம் 149

5.2.2 அரசவாழ்வில் சூது - இரு நோக்குகள் 150

5.2.3 க்ஷத்திரியரும் மானமும் 151



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.2.4 நவீன இந்தியரின் இலட்சிய புருஷர்கள் 155

5.3. தர்க்கம் பற்றிய சிந்தனைகள் 156

5.3.1 கல்விசார் சிந்தனைகள் - மணிமேகலை 156

5.3.2 சித்தியாரில் அளவையியல் 158

5.3.3. கைலாசபதி அவர்களின் அளவைப் பிரமாணம் 158

5.3.3.1 புத்திவிருத்தியும் அளவைப்பிரமாணமும் 159

5.3.3.2 புத்திவிருத்தியும் உபாங்கமும் 159

5.3.3.3 ஸ்மிருதி 162

5.3.3.4 சுருதி 162

5.3.3.5 கலை 163

5.3.3.6 சாட்சாத்காரம் 163

5.4 விஞ்ஞான, கணித சிந்தனைகள் 164

5.4.1 விஞ்ஞான நோக்கு - விமர்சனம் 164

5.4.2 ஆயுர் வேதம் 164

5.4.3 எண்கொள்கை 165

5.4.4 அண்டவியற் கருத்துக்கள் 167

குறிப்புகள் 169

❖ **அத்தியாயம் ஆறு**

**நிறைவுரை** **173 - 174**

❖ **உசாத்துணை நூல்கள்** **175 - 178**

அனுபந்தம் 1 179

அனுபந்தம் 2 (A) 181

அனுபந்தம் 2(B) 183

அடைவு ஒன்று 187

அடைவு இரண்டு 190

பிழை திருத்தம் 198



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ. கைலாசபதி அவர்கள்
(1957 இல்) ஓய்வுபெற்றபொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் ஒன்று
# கைலாசபதி அவர்கள்: ஓர் அறிமுகம்

## 1.1 *மெய்யியல் அறிஞரின் மரபு*

மெய்யியல் அறிஞர் ஒவ்வொருவரும் தமக்கென ஒரு மரபைச் சார்ந்து விளங்குவர். அம்மரபுச் சூழலுக்குள் தோன்றிய மெய்யியலாளரும் அம்மரபுச் சமுதாயத்தின் ஓர் அங்கமாகவே இருப்பர். அவரது சிந்தனைகள் சமூகத்தின் சில பிரச்சினைகளுக்கு மத்தியில் முகிழ்க்கின்றன. இதனால் அவர் அச்சிந்தனை வடிவங்களுக்கு வாரிசாக அமைகிறார்.[1]

ஓர் இனத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சி தலைமுறை தோறும் பயன்பாடு உடைய சிந்தனை வடிவங்களில்தான் தங்கியிருக்கின்றது. புதுமைக்காக மரபைக் கைவிடுதல் வெறும் மேற்போக்குத் தன்மைக்கே வழிவகுக்கும். இது மெய்யியல், கலை, சமூக, அறவியல் அமைப்புக்கள் அனைத்திற்கும் பொருந்தும் விடயமாகும். எப்படி ஒருவன் தனக்கென அமைந்த ஒரு தாய்மொழியை வாரிசாக்கி, அதன் மூலம் தனது ஆரம்பகாலச் சிந்தனைகளைச் சிந்திக்கிறானோ அப்படியே ஒரு மெய்யியற் கல்விமானும் தனக்கென ஒரு மெய்யியற்றாய் மொழியை (Philosophical mother tongue) உடையவனாயிருக்கிறான். இது அவனது இயல்பான உலக நோக்குக்கு (Weltanschauung) நிறமூட்டுகிறது. இதனால் மெய்யிலாளன் ஓர் அறிவார்ந்த மொழியைப் பேசுகிறான். அதில் அவனது எண்ணக்கருவூலங்கள், தனித்தன்மைகள், பெறுமான மதிப்பீடுகளெல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.

ஒரு மெய்யியல் அறிஞனிடம் எத்தகையதோர் மெய்யியற் கருவூலத்தைக் கையளித்தாலும் அவன் புதிதாக உயிரோட்டமுடன் கூடிய ஒன்றை உருவாக்கி உலகுக்கு அளிக்கும் தனிச்சிறப்பு உள்ளவனாகிறான். அதில் அவனது கருத்துச் செல்திசை (Tenor of his thought) இறந்த காலத்தில் இருந்து வந்தாலும், தீர்வு காணும் விதம் நிகழ் காலத்திலேயே உருவாகின்றது. இதனால் அவனது தீர்வும் தம் காலத்தைச் சார்ந்ததும், என்றும் புதுத்தோற்றம் எடுக்கும் நிலையிலுள்ளதுமான செயற்பாட்டினையே பிரதிபலிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யியல் செழித்தோங்கிய காலப்பகுதியில் வாழ்ந்த சிந்தனை யாளர்கள் தம் மரபுவழிவந்த கல்வியைத் தம்முள் தாங்கியவர்களாகவும், தம் சமகாலப் புதுச்சவால்கள் குறித்து ஆழ்ந்த உணர்ச்சி உடையவர்களாகவும் இருந்திருக்கின்றனர். இதனால் மெய்யியல் அறிஞர்கள் புதிய சவால்கள் பலவற்றிற்கு விளக்கம் கொடுக்கும் இன்றியமையாமையையும் உணர்ந்தனர்.

உண்மையான மெய்யியல் அறிஞன் ஒருவனுக்கு இறந்தகால உலகில் ஏதோ சில புதிதாயும், விளங்கிக் கொள்வதற்கு அரிதாயும் தோன்றும் "வறுமைக் காலங்கள்" (dead periods) சில அமைகின்றன. அவ் வறுமைக் காலங்களில் அமையும் மெய்யியற் கொள்கைகள் சில உயர்கல்வி நிலையங்களில் மட்டுமே கல்விமான்களால் போற்றப்பட்டுக் கிடக்கின்றன. சாதாரண மனிதன் அவற்றைப் பற்றி ஒன்றும் அறியான்.

அப்படியான வெறும் புத்தகப்பூச்சிகள் மத்தியில் மட்டும் நிலவும் சிந்தனைகளைத் தனித்துவப்படுத்திக் காட்டுவது அதனது பொருளையும் வடிவத்தையும் துலக்கும் மரபே. தர்க்கிக்க எடுத்துக்கொள்ளப்படும் பதார்த் தங்களும் (Categories), விவாதத்தின் விடயங்களாகிய பிரச்சினைகளும் அறிவுசார் சூழலில் நன்கு அறிமுகமானவைகளே. சுருக்கமாகக் கூறினால், பிரச்சினைகள் நிறைந்த காலப் பகுதியில் வேறு துறைகளில் அறிவுச் செயற்பாடுகள் பிரகாசித்துக்கொண்டு உள்ளக் கிளர்ச்சியை ஊட்டுவனவாய் அமையும்போது,மெய்யியலில் ஓர் தொய்வு - வெற்றிடம் - தோன்றுவது இயல்பே. காரணம், மிகத்திறமை வாய்ந்த சிந்தனையாளர்களின் கவனம் வேறு திசைகளில் சென்றுவிடும். இதனால் ஆழ்ந்து சிந்திப்பதும், விளக்கம் காண்பதும் தடைப்பட்டு விடும். புதிய கருத்துக்கள் பலவர்ணக் காட்சிக் கருவியின் (Kaleidoscope) படம்போல அடிக்கடி வர்ணமாறுதல் உடையனவாய் இருக்கும்போது, அவற்றை ஒழுங்கு முறையில் உள்ளத்தில் அமைத்துக் கொள்ளவோ, அவற்றிலிருந்து பொதுவான கருத்துக்களைக் குறிப்பிட்டுக் காட்டவோ முடியாது. இதனால் மெய்யியலை வாழ்க்கைத் துறையாகக் கொண்டவர்கள் தம்முன்னோர் பேசி முடிவுக்குக் கொண்டுவந்த விடயங்களையே மீண்டும் மீண்டும் தர்க்கித்துக் கொண்டிருப்பர்.[2]

## *1.2 19ஆம்,20ஆம் நூற்றாண்டுக் கல்விச் சீர்திருத்தமும் சமுதாய மறுமலர்ச்சியும்*

சென்ற நூற்றாண்டின் இறுதியில் மேற்கூறிய வெறும் நூற் கல்விப் புலமைசார் காலகட்டத்தில் எம்மவர் இருந்தனர். கருவி நூல்களைப் படிப்பதும், மூல நூலாசிரியருக்குக் கொடுக்காத முக்கியத்துவத்தை உரையாசிரி யர்களுக்குக் கொடுப்பதும் வழக்கமாயிற்று. உண்மை காணும் விருப்பின்றி, எம்மவர்-பிறர், எம்மடத்தவர் - பிறமடத்தவர்,எம் மதத்தவர் - பிற மதத்தவர் என்று இருமை உணர்ச்சியால் பிளவுண்ட நெஞ்சினராய், பழசாய்ப் போன பிரச்சினை களையே பேசிக் காலம் போக்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத்தேக்கநிலை சற்று மாறுதலடையத் தொடங்கியது. சிந்தனை உலகத்தில் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டது. ஒரு புதிய, ஆக்கரீதியான காலப்பகுதி தொடங்கியது. பெரும் சிந்தனையாளர் மெய்யியற் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறைகளை, வேறுபட்ட பல அறிவுத்துறைகளின் மத்தியிலிருந்து பெற்ற உண்மைகளிலும் (Facts) பிரச்சினைகளிலுமிருந்து பெற லாயினர். இதனால் கணிதம், மானிடவியல், உளவியல், பௌதிகவியல்,வரலாறு, கலைகள் ஆகிய துறைகளுக்குரிய விடயங்கள் மீது சிந்தனையாளர் தம் கருத் தைச் செலுத்தினர். மொழி, காலப் பிரமாணம் (அளவு) போன்ற நன்கு அறிந்த விடயங்கள் புதிய அனைத்துலகத் தொடர்புகளினூடாகத் தோற்றமளித்தன.

1864இல் இலங்கை அரசாங்கம் புகுத்திய முக்கியமான கல்விச் சீர்திருத்தம் காரணமாக நாடெங்கும் மேல்நாட்டுக் கல்வி பரவியது. இது 1840இல் ஒரு சில கிறீஸ்தவ ஆங்கிலக் கல்லூரிகளில் மட்டுமே நிலவிவந்தது. இக்கல்வி முறையை உள்ளூர்ச் சமயத்தவர்களும் உதவி நன்கொடை பெற்றுத் தங்கள் பாடசாலைகளிற் புகுத்தினர். இதனால் யாழ்ப்பாணத்தவரும் அப்புதிய கல்வி முறையின் பிடியில் அகப்பட்டனர். 1857இல் சென்னை, கல்கத்தா போன்ற நகரங்களில் தோன்றிய பல்கலைக்கழகங்களில் நம் நாட்டவர்களும் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றனர். மேல்நாட்டு வரலாறு,அரசியல்,மொழிகள் மூலம் நம்மவர் தமக்கு அந்நியமான ஒரு வாழ்க்கை முறையில் ஆழ்ந்த பயிற்சியும், தம் சொந்தப் பண்பாடு பற்றி மிகக் குறுகிய அறிவும் உடையவர்களாய், அக் கல்லூரிகளில் நின்று வெளியேறினர். சி.வை.தாமோதரம்பிள்ளை (1832-1901), கனகசபைப்பிள்ளை (1855-1906) முதலியவர்கள் என்னதான் பழமை பேணிய வர்கள் எனினும் அவர்களது அறிவுசார் சூழலில் மேல்நாட்டு நாகரிகம் பரவத் தொடங்கியது எனலாம். கிறீஸ்தவ பண்பாடு கற்றோர் மத்தியில் பரவியதன் விளைவாக அதில் ஊறி அதன் தீமைகளை நன்கு உணர்ந்தவர்கள் மீண்டும் தம் தொன்மையான நெறியை வளர்க்கும் புதிய கல்வி நிலையங்களை அமைக் கலாயினர். கேம்பிறிஜ் கனிஷ்ட, சிரேஷ்ட தராதரப் பரீட்சைகளும் இலண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சைகளும் இங்கு நடந்தன. இவை அனைத்தும் இங்கு தோன்றிய புதிய இளைஞர் சமுதாயத்திற்குத் தம் தொன்மையான பண்பாட்டு டன் புதிய பல்கிளைசார் அறிவுத்துறைகளை அறிமுகம் செய்து அவர்களது கல் விசார் சூழலில் மேல்நாட்டவரின் பண்பாட்டுக் கூறுகளை அதிகரிக்கச் செய்தன.

### *1.3 கைலாசபதியும் கல்வியும்*

மேற்கூறப்பட்ட அறிவுசார் மரபுச் சூழ்நிலையில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கைலாசபதியின் இளமைப் பருவம் ஆரம்பமானது.[3] அளவெட்டியூர் வீரகத்தி பொன்னம்பலம் - பார்ப்பதி தம்பதிகளின் புத்திரராய் 1902ஆம் ஆண்டு யூன் மாதம் 9ஆம் நாள் பிறந்தார். பெற்றோர் அவருக்குக் கைலாசபதி என்று பெயர் வைத்தனர். இளமையில் செல்லமாகச் 'செல்லப்பா' எனவும் அழைக்கப் பட்டார். ஊரில் உள்ள முதியோர் "மாலாணரின் (தந்தையாருக்கு ஊரவர் இட்ட பெயர்) கைலாயர் " என்றே அழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபதி அவர்கள் பிறந்த வீட்டுக்கருகில் வேதாரணியச் சைவக் குருமார் வசிக்கும் மடம் ஒன்று இருந்தது. அம்மடத்தில் வசித்து வந்தவர்கள் பிரசித்திபெற்ற தேவாரக் கணபதிக்குருக்கள் என்பவரின் பரம்பரையில் வந்த வர்கள். எப்பொழுதும் இம்மடம் பண்மயமாகவே இருக்கும். அவ்விடத்தில் வீசுங் காற்றும் பண்கலந்து பயன்செய்து கொண்டிருக்கும். கைலாசபதி அவர்களின் தந்தையாரான பொன்னம்பலம் அவர்களும் சுவாசித்த காற்று அந்தக் காற்றே. கைலாசபதி அவர்கள் கர்ப்பத்தில் இருந்த போதே அப்பண்ணிசைக் காற்று அவரைப் பரிசித்திருக்கும். குழந்தை உதயமாகி, குருக்கள்மார் மத்தியில், அவர்கள் மடியில் தவழ்ந்து, வளர்ந்த மழலை பயின்றது. குழந்தையின் செவிகள் பண்ணிசையிலே ஊறிப் பயின்றன.[4]

> தசநாடிகளையும் சுத்தம் செய்து நாட்டங்களைப்
> பண்படுத்துவது பண்[5]

எனக் கைலாசபதி அவர்களே பின்னாளில் கூறியுள்ளார்.

அவர்கள் தமது இளமைக் கல்வியை அளவெட்டியில் அமைந்த அமெரிக்க மிஷன் பாடசாலை, ஞானோதய வித்தியாசாலை, அருணோதயக் கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்தார். அக்காலச் சூழ்நிலையில் ஆங்கிலக் கல்வியே நவீன அறிவுக்கும், உத்தியோக வாய்ப்புக்கும் நுழைவாயிலாக இருந்தமையால் 7ஆம் வகுப்பின் பின் மல்லாகம் ஆங்கில பாடசாலையில் தமது கல்வியைத் தொடர்ந்தார். அங்கு கணித மேதையும், சித்தியாரில் துறைபோன அறிஞரும் என அன்று மக்களால் பொதுவாகக் கருதப்பட்ட திரு.இரத்தினசபாபதி அவர்கள் ஆசிரியராக இருந்தார். இளைஞர் கைலாசபதியின் தோற்றத்தையும், ஆளுமை யையும் கண்ட அவர், வகுப்பின் வேறு பிரிவிலிருந்து மாறி அமர்ந்தவருக்குத் தமது பிரிவிலேயே கல்வியைத் தொடர்வதற்கு அநுமதி தந்தார். அத்துடன் ஓய்வு நாட்களில் விசேடமாக அவருக்குக் கணிதம் கற்பித்தார். கைலாசபதி அவர்கள் 1920இல் இலங்கை அரசாங்கம் நடத்திய ஆரம்ப பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (E.S.L.C) சித்தி எய்தினார். 1921ஆம் ஆண்டு யூன் இலண் டன் மற்றிக்குலேஷன் பரீட்சையில் சித்தியெய்திச் சிறிது காலம் ஆசிரியராக இருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று அமைந்துள்ள இடத்தில்தான் அன்று பரமேஸ்வராக் கல்லூரி (1920) ஆரம்பமானது. திருநெல்வேலியே கல்விக் களஞ்சியம் என மக்களால் மதிக்கப்பெற்றது. கல்விமான்கள் பலரும் பரமேஸ் வராக் கல்லூரியில் கற்பித்துவந்தார்கள். அங்கு ஆசிரியத் தொழிலை மேற் கொண்டிருந்த கைலாசபதி அவர்கள், 1923இல் இன்ர மீடியற் விஞ்ஞான (Intermediate in Science) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டமையினால், தம் தொழிலை விட்டு அவ்வகுப்பில் மாணவனாகச் சேர்ந்தார். 1924இல் அப்பரீட்சையில் சித்தியடைந்தார். 1927ல் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் (Victoria College) ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் இலண்டன் விஞ்ஞான மாணிப் பரீட்சைக்கான முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டார். தூயகணிதம், பிரயோககணிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றுடன் அளவையியலையும் ஒரு பாடமாக எடுத்து, 1930இல் அப் பரீட்சையில் சித்தியடைந்தார். அக்கால அளவையியலில் 1/3 பகுதிக்கு மேல் ஐரோப்பிய மெய்யியல் அடங்கும். எனவே, கிரேக்க மெய்யியலாளர் முதல் சென்ற நூற்றாண்டு ஐரோப்பிய மெய்யியலாளர் வரை ஆழ்ந்து கற்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. பிளேட்டோ, சோக்கிரட்டீஸ், ஹெகல், காண்ட் போன்ற வர்களைப் பற்றி, பின்னர் அவர் தமது புத்திவிருத்திக் கட்டமைப்பில் இடம் வகுத்தமைக்குரிய அத்திவாரம் இங்கு இடப்பட்டது போலும்.

### *1.4 கைலாசபதியும் சைவாசிரிய கலாசாலையும்*

1928இல் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை ஆரம்பமானது. அங்கு இந்திய விடுதலை எழுச்சியினால் பெரிதும் கவரப்பட்டவரும், கல்கத்தா, வாரணாசி பல்கலைக்கழகங்களில் கற்ற கலைப்பட்டதாரியுமான மயிலிட்டியூர் சி.சுவாமிநாதன் அவர்கள் 1929ஆம் ஆண்டு தொடக்கம் 1951ஆம் ஆண்டுவரை அதிபராகக் கடமையாற்றினார்.

அதிபர் அவர்கள் மாணவர் கைலாசபதியின் திறமையை, மல்லாகத்தில் அதிபராயிருந்தபோது அறிந்தவர் ஆகையால், அவரைச் சைவாசிரிய கலாசா லையின் உபஅதிபராக (1930-1957) நியமனம் செய்வதில் ஆர்வம் காட்டினார். சுவாமிநாதன் அவர்கள் முதல்வராக இருந்தமையினால் கைலாசபதி அவர்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு இடையூறுகள் நிகழவில்லை. இரத்தினசபாபதி அவர்கள் நல்ல குருவாக அமைந்தது போல, சுவாமிநாதன் அவர்கள் அதிபராக இருந்ததும் கைலாசபதி அவர்களின் தவத்தின் பயன் எனப் பலர் கருதினர். கைலாசபதி சிந்தனையில் இதனைக் காட்டியுள்ளார்:

> **நடந்த நீதி (சுவாமிநாதர்) படிப்பித்தவர்; உப அதிபர். அடிமை வேலைக்கு வந்தோம். கூலிக்கு வந்து மறுக்க முடியாது, பிறின்ஸிபல்லைப் பேணித் தான் நடந்து வந்தது. அவரும் மரியாதையாகத்தான் நடந்திருக்கிறார். அந்த முறையில் ஒரு பிரச்சினை இல்லாமல் உத்தியோகத்தோடு. என் யோசனையில் அமைந்தது.**[6]

பரமேஸ்வராக் கல்லூரியின் மாணவனாக இருந்த காலத்திலும், பின்னர் சைவாசிரிய கலாசாலையில் உபஅதிபராக இருந்த காலத்திலும் கைலாசபதி அவர்கள் திருநெல்வேலிச் சிவன் கோயிலுக்குத் தெற்கே உள்ள ஈரப்பலாத் தோட்டத்து அறிஞர் கூட்டத்துடன் தாமும் ஒருவராகச் சேர்ந்தார். அங்கு வாங்கின் ஒரு பகுதியில் தாமரை இலையில் தண்ணீர் போலப் பற்றற்று அமர்ந்திருப்பார். ஊரடங்கிய பின் இரவு பதினொரு மணியிலிருந்து நான்கு மணிவரை படிப்பார். அந்த அறிஞர் குழாத்தில் அவர் ஒரு தனிமனிதன் எனவும், அவரைத் தான் முதன் முதலாகக் காணும்போது பூணூல் அணியாத பிராமணன் எனவே எண்ணிய தாகவும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை கூறியுள்ளார்.[7] கைலாசபதி அவர்க ளின் அமைதி,தேஜஸ், குடுமி என்றிவைகள் இவ்வாறு எண்ணச் செய்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.5 கைலாசபதியின் திருமணம்

1926இல் கைலாசபதி அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது. அவர் மணஞ்செய்த பெண் பெற்றோரை இழந்து கைலாசபதி அவர்களின் தந்தையாரால் ஒரே இல்லத்தில் வளர்க்கப்பட்டவர். கைலாசபதி அவர்கள் அக்காலத்தில் மதிக்கப்பட்ட பரீட்சையில் சித்தியெய்தி ஆசிரிய கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தமையால் தந்தையார் இவருக்கு உயர்ந்த இடத்தில் திருமணம் செய்து வைக்கும் யோசனையை உளங்கொண்டார். இதனை அறிந்த கைலாசபதி அவர்கள் இறந்தவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி நடப்பதே தர்மம். ஆகவே தந்தையார் வளர்த்த பெண்ணையே தமக்குத் திருமணம் செய்துவைக்கும்படி கூறினாராம். "சத்தியம் வத" என்ற வேதவாக்கு அப்பொழுதே அவர் உள்ளத்தில் நிலைத்திருந்தது. 1941இல் தம் மனைவி இறக்க, நண்பர்களின் வற்புறுத்தல்களுக்கும் குருவின் (இரத்தினசபாபதி) விருப்புக்கும் அமைய, கைலாசபதி அவர்கள் இரண்டாம் விவாகம் செய்தார். இரண்டு பெண்பிள்ளைகளுக்குத் தந்தையாரானார்.

## 1.6 கைலாசபதியின் புறவாழ்வும் அகவாழ்வும்

கைலாசபதி அவர்களின் புறவாழ்வு வெகு சாதாரணமாகக் காணப்பட்டாலும் அகவாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. பரீட்சைக்காகக் கடும் மூளை உழைப்புக்காலம் முடிந்தபின், ஓரிரு ஆண்டுகள் ஆசிரிய கலாசாலையில் புதிய துறைகளிற் கற்பிக்கவேண்டிய தேவை நோக்கிக் கல்விசார் முயற்சிகளில் ஈடுபட்டார். இக்காலப்பகுதியில் கலாநிலையக் கூட்டங்களில் பங்குபற்றி, "தமிழகத்துத் தருக்க நூல் வளர்ச்சி" என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினார்.[8]

தர்க்கம் சம்பந்தமான புதிய பிரச்சினைகள் தம் உள்ளத்தில் எழும்போது கைலாசபதி அவர்கள் சேர். இராதாகிருஷ்ணனுக்கு எழுதலாம் என்று எண்ணியதுண்டாம். ஆயினும், இப்படியான விடயங்களில் மனதை விடுவது ஆன்மீக வாழ்வுக்குப் பயனற்றது என்பதால் அச்சிந்தனையைப் பின் கைவிட்டாராம். அவரின் மெய்ஞ்ஞான குருவான இரத்தினசபாபதி அவர்கள் "உமது எதிர்கால இலட்சியம் என்ன?" என்று கேட்டபோது சு.சிவபாதசுந்தரம் போல "சாத்திர ஆராய்ச்சி மூலம் உண்மை காண விருப்பம்" என்று கூறினாராம். இத்தொடர்பில் சாத்திர நூல்களில் சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன், திருக்களிற்றுப்படியார் போன்றவற்றில் தமது விசேட பார்வையைச் செலுத்தினார். அவற்றைச் சிந்தனையில் ஆங்காங்கே காணலாம்.[9]

"சட்ட இனி உளது சத்தே காண்"

"சொன்னவித் தொழில்களென்ன காரணந் தோற்ற வென்னின்"[10]

"பெருமைக்கும் நுண்மைக்கும்[11]

"நல்ல சிவதன்மம்"[12]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சாத்திர ஞானத் தேடுதல் மூலம் உண்மையை அறிய முயல்வது ஓரளவுக்கே பயன்தரும் என்ற முடிவுக்கு அவர் இறுதியில் வந்தார்.

ஆசார்ய வினோபாஜியைச் சுயசரித்திரம் எழுதும்படி சொன்னபோது தமது சரித்திரம் அகம் சார்ந்தது; புறம் சார்ந்த நிகழ்ச்சிகள் வெகு சிலவேயாதலால் அவற்றை எழுதுவது கருத்தற்றது என்றாராம். ராஜாஜியையும் மொனிக்கா ஃபெல்ரன் (Monica Feltan) என்ற ஆங்கிலமாது பின்தொடர்ந்து சரித்திரம் எழுதக் கேட்டபோது சரித்திரம் எழுதுவதை மறுத்தாராம். கலாநிதி ஆனந்தக்குமார சுவாமி கூட "வேதரிஷிகள் தம் சரித்திரத்தை எழுதவில்லையே" எனச் சொன்னாராம். இதே போல் கைலாசபதி அவர்களும் உலகியல் வாழ்வின் சம்பவங்களுக்கு முக்கியத்துவம் அளித்தது கிடையாது. அக்காரணத்தினாலேயே பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கூடக் கைலாசபதி அவர்களைத் தமது பேச்சு, எழுத்துக்களில் குறிப்பிடும் போதெல்லாம் "ஒரு பெரியார்", "மகான்", "மகாத்மா" போன்ற சுட்டுக்களையே பயன்படுத்தியுள்ளார். கைலாசபதி அவர்களுக்குத் தம் பெயர் சுட்டுவது பிடிக்காது என்ற காரணமே பிரதானம் போலும்.

கைலாசபதி அவர்கள் சைவாசிரிய கலாசாலை பஅதிபராக இருந்த போது கலாசாலை உதவி நன்கொடை பெறும் நிறுவ கவே இருந்தது. சைவ வித்தியாவிருத்திச் சங்கச் செயலாளராக சு.இராச தினம் அவர்கள் இருந்தார்கள். அவர் மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு தொகை பணத்தையே விரிவுரையாளர்களுக்குக் கொடுப்பது வழக்கம். மிகுதிப்பணத்தை ஆண்டு இறுதியில் அரச உதவி நன்கொடைப்பணம் பெற்றே வழங்குவார். அப்போது விரிவுரையாளர்கள் தாம் ஒவ்வொரு மாதத்துக்குரிய பணத்தையும் அந்தந்த மாதங்களில் வாங்கியதாகக் கையெழுத்திடல் வேண்டும். ஆனால், கைலாசபதி அவர்களோ சத்தியம், தர்மம் தவறக்கூடாது என்ற கொள்கை உடையவர். ஆதலால் அதற்குச் சம்மதிக்கவில்லை. "வீணாக மீண்டும் அரசுக்கே பணஞ் சேரப் போகிறதே" என்று சக விரிவுரையாளரான ஆர். நடராசா (B.Sc), கூற, "இதற்காக ஏன் ஒரு பொய் சொல்வான்" என்று பதிலளித்து, ஸ்மிருதிப்படியே தமது வாழ்க்கையை அமைத்ததாக அவருடன் நெருங்கிப் பழகிய மூதறிஞர் ஒருவர் மூலம் அறிய முடிந்தது.

### *1.7 கைலாசபதியும் வேதாந்த மடமும்*

கைலாசபதி அவர்களிடம் 1928இன் பிற்பகுதியில் மனோவிருத்தியாகிய தவம் தீவிரமடைந்தது. அச்சமயம் அவருக்குச் சிவகுருநாதபீடம் என அழைக்கப்படும் கந்தர்மட வேதாந்த மடத்தில் மகாதேவ சுவாமிகளின் தொடர்பு உண்டாயிற்று. மகாதேவர் பிரமசாரிய வாழ்வை முடித்து, கிருகஸ்தம் புகாமலே, உண்மையான துறவு உள்ளத்தில் உதிக்க, வேதாந்த மடத்தில் சேர்ந்தவர்; சைவ தோத்திர நூல்களில் அதீத பற்றுடையவர். அம்மடத்தில் ஏராளமான வேதாந்த நூல்கள் இருந்தன. அக்கால இந்தியாவில் மாயாவாதத்துக்கும், சைவசித்தாந்தத்துக்கும் இடையே பெரும் விவாதங்கள் நிகழ்ந்தன. அவைகள் அக்காலப் பத்திரிகைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகைகள், நூல்கள் மூலம் எங்கும் பரவின. கந்தர்மட வேதாந்த மடத்திலும் இவை எல்லாம் கிடைக்கக்கூடியதாக இருந்தன. கைலாசபதி அவர்கள் மகாதேவசுவாமிகளின் ஒழுக்கத்தினாலும் நூல்களைக் கற்கும் ஆர்வத்தினாலும் உந்தப்பட்டு அம்மடத்துக்குச் செல்வது வழக்கம்.

1924ம் ஆண்டளவில் வெளிவந்த கொழும்புத்துறை ஹே. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் "ஆன்ம விசாரம்" என்ற நூல் வேதாந்த மடத்தினால் இரண்டு பாகமாக வெளியிடப்பட்டது. கைலாசபதி அவர்கள் அங்கு சென்ற காலப் பகுதியில் அவை அச்சிலில்லை. வேதாந்தமட மகாதேவசுவாமிகள் அதனை மீண்டும் பதிப்புச் செய்யவிரும்பினார். கைலாசபதி அவர்களே அச்செலவு முழுவதையும் ஏற்றுப் புத்தகம் வெளிவர உதவினார் என அறிகிறோம்.[13] சைவாசிரிய கலாசாலையில் புவியியல் விரிவுரையாளராக இருந்த கந்தசாமி ஐயர் அவர்களை (சுப்பிரமணிய ஐயரின் உறவினர்) இந்நூல் பற்றி நான் விசாரித்த போது கைலாசபதி அவர்களே சுப்பிரமணிய ஐயரை "உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவர்" (He is one of the greatest thinkers of the world) என ஆங்கிலத்தில் குறிப்பிட்டதாகப் பெருமையுடன் கூறினார்.

கைலாசபதி அவர்களின் போக்கை உணர்ந்தோர் 1934ஆம் ஆண்டளவில் அவருக்கு மனோவிருத்தி என்ற கண் விழித்தது / வெளித்தது எனக் கொள்வர். அக்காலத்தில் அவர்பால் நிகழ்ந்த மாற்றங்களைப் பற்றி அவரோடு பழகிய பண்டிதமணி, சி.கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுவார்.[14] தனிமை, ஏதோ பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டு இந்த உலகத்தவரை மறந்தவர் போல இருத்தல், ஒரு வீண் சொல்கூடப் பேசாமல் மாலை வேளைகளில் தனிமையை நாடி வெகுதூரம் நடத்தல் போன்றவைகளே அம்மாற்றங்களில் சில.

### 1.8 *குருவின் சிறப்பும் சீடனின் ஆன்மீக நாட்டமும்*


விஞ்ஞானப் பட்டதாரியான கைலாசபதி அவர்களை மெய்ஞ்ஞான நாட்டமுடையவராக மாற்றியவர் இரத்தினசபாபதி உபாத்தியாயர். சீடனான கைலாசபதி அவர்களும் குருவுக்கு வாய்த்த நன்மாணவனாக இறுதிவரை இருந்தார். சைவாசிரிய கலாசாலை அதிபர் சி.சுவாமிநாதன் அவர்கள் "விட்டகுறை, தொட்ட குறை இருவரையும் ஒருங்கு சேர்த்து வைத்தன"[15] என்றார். 1942ஆம் ஆண்டில் இரத்தினசபாபதி உபாத்தியாயர் நோயுற்று மானிப்பாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பிரமச்சாரியான அவரை அவரது நண்பர்கள் அருகில் நின்று பராமரித்தனர். அவருக்கு உதவி செய்யும் பொருட்டுப் பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை போன்றோரும் இரவில் நித்திரை விழித்துப் பார்த்ததாக அறிய முடிகிறது. 1945ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அவர் காலமானார். இறுதிக் கருமங்கள் திருநெல்வேலியில் கைலாசபதி அவர்களின் இல்லத்திலே நடைபெற்றன.[16]

இரத்தினசபாபதி உபாத்தியாயர் இறந்தபின் தமது ஆன்மீக விடயங்களைக் கலந்துபேசக் கைலாசபதி அவர்களுக்கு ஆளில்லாமற் போனது. எனினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தினசபாபதி உபாத்தியாயர்



Nallur Pradeshiya Sabha
Head Office
Thirunelvely
04 NOV 2004

**1916 மகா ஜனாக் கல்லூரியில் எடுத்த படம்**
**1960 கல்லூரிப் பொன்விழா மலரில் உள்ளது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ. கைலாசபதி அவர்கள்
(1940 களில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் ஆன்மீக யாத்திரை தங்குதடையின்றிச் சென்றது. பத்திரிகை வாசிப்பு, நூல்களை அறியும் போக்கு என்பவற்றை இயன்றளவு நீக்கினார். தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே ஓரிரு நூல்களைப் படித்ததாக அறியமுடிகிறது. அரவிந்தரின் "தெய்வ ஜீவனம்" (Life Divine), கங்காநாத் ஜாவின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய "மீமாம்சா சூத்திரம்",சைவாசிரிய கலாசாலை அவருக் களித்த பிரியாவிடையின் போது அவருக்கு வழங்கப்பட்ட "அடங்கன் முறை" என்பன அவற்றுள் சில.

## *1.9 உபஅதிபரும் பண்டிதமணியும்.*

கைலாசபதி அவர்கள் பிற்காலத்தில் மிகமிகச் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே நூற்படிப்பில் ஈடுபட்டிருந்தார். ஆனால், சாதாரண உலகத்தவர் போலத் தனியே நூற்படிப்பை வைத்துக்கொண்டு அவர் ஞானம் பேசவில்லை. அவரது சிந்த னைகள் நூல்களில் இல்லாவிடினும் நூல்களின் கருத்துக்கு மாறானவையாக இருந்ததில்லை. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "அவர் எதையோ பார்த்துச் சொல்வது போலச் சொல்லிக்கொண்டு போகிறார். அவர் சொல்லி யவற்றில் அநேகமானவை எனக்கு விளங்கவில்லை. அவை எந்த நூல்களிலும் இல்லாதவை. ஆனால், நூல்களின் கருத்துக்கு முரணானவையல்ல. எனக்கு விளங்கியவற்றைக் குறிப்பெடுத்தேன். அவற்றில் சில கருத்துரைகளைத்தான் பேசியும் எழுதியும் பார்க்கிறேன்" [17] என்றார்.

1930களின் தொடக்கத்தில் கலாசாலை விடுமுறைக் காலத்தில் பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை அவர்களும் உபஅதிபர் கைலாசபதி அவர்களும் கீரிமலை கிருஷ்ணபிள்ளை மடத்தில் தங்கியிருந்தார்கள். பண்டிதமணிக்கு உபஅதிபர் ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதென்றும், பண்டிதமணி உப அதிப ருக்குத் தொல்காப்பியம் சொல்வதென்றும் உடன்பாடு. முதல் நாள் பண்டிதர் அவர்கள் தாம் வைத்திருந்த தொல்காப்பியக் குறிப்புக்களை விரித்து வைத்துப் பாடத்தை ஆரம்பித்தார். இடைமறித்த உபஅதிபர் தொல்காப்பியம் பற்றிச் சொல்லத்தொடங்கினார். "அன்று தொட்டு நான் அவரிடம் தமிழ் படித்துக் கொண்டே இருக்கிறேன்."[18] எனவும் பண்டிதமணி அவர்கள் கூறியுள்ளார்கள்.

கைலாசபதி அவர்கள் தமது சிந்தனைகளில் உதித்தவற்றைக் கேட்போரின் தகுதிநோக்கியே கூறும் திறமை கொண்டவர். ஓரே கதையை வெவ்வேறு ஆட்களுக்கு வெவ்வேறு விதமாகக் கூறுவர்.

> **விந்துவை வீணாக்கக் கூடாது. அது கருக்கொள்ளக் கூடிய இடத்தில் தான் விடவேணும். சொல் விந்தின் அம்சமானது. அதை வீண் செய்யக் கூடாது. பயன் செய்யக் கூடிய இடத்தில்தான் சொல்லவேண்டும். முத்துக்களை வீணே சிந்தலாமா?** [19]

என்பதற்கு அமைய, பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை,பரநிருபசிங்கம்,[20] சின்னத் தம்பி (தலைமையாசிரியர் கணபதிப்பிள்ளை[21] என அழைக்கப்படுபவர்), சபாரத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம், அராலியூர் துரைரத்தினம் போன்ற குறிப்பிட்ட சிலருக்குத் தமது ஸ்மிருதி களைக் கூறியதாக அறிகிறோம்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கைலாசபதி அவர்களுக்குச் சிறிது காலம் உணவு அனுப்பியதாக அறியமுடிகிறது. "சுவைக்குப் பலி" என்பது கைலாசபதி அவர்களின் ஸ்மிருதி வாய்பாடு. ஒருவன் ஒன்றைச் சுவைத்தால் அச் சுவை நல்கியவனுக்கு உடனே கடன் தீர ஏதாயினும் ஒன்று செய்துவிட வேண்டும். பண்டைக்கால மன்னர்களும், வள்ளல்களும், பாணர், கூத்தர், புலவர் முதலியோர் தமக்குச் சுவை அளித்ததற்கு உடலுக்குடன் பரிசில்கள் வழங்கு வதன் மூலம் சுவைக்குப் பலி கொடுத்தார்கள். ஆனால், கலியுகத்தில் மனிதன் உலோபம் காரணமாகக் காண்பதெல்லாம் தமக்கென உரிமை கொண்டாடு கிறான். இதனால், கர்மம் - வினை - சுமையாக ஏறும் என்கிறார் கைலாசபதி அவர்கள். எனவே, ஆசிரிய கலாசாலையில் மாதச்சம்பளம் எடுத்தவுடன் உணவு கொண்டுவரும் இளைஞனுக்கு என ரூபா நூறைப் பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையிடம் கொடுத்ததாகவும், அவர் பதினைந்து ரூபாவை எடுத்துவிட்டு, மிகுதியைக் கைலாசபதி அவர்களிடம் கொடுத்ததாகவும் மூதறிஞர் ஒருவர் மூலம் அறியமுடிகிறது. கைலாசபதி அவர்கள் தாம் கண்ட ஸ்மிருதியையே தமது வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார்.

கைலாசபதி அவர்களை உணர்ந்தோர் 1918 வரை நல்லார்வ தளத்திலும் பின்னர் பத்தாண்டுகள் (1918 - 1928) நாகரிக தளத்திலும் நின்று பின்னர் 1928இல் ஒரு தளம் மேலே ஏறினார்; சம்ஸ்காரம் என்ற தளத்தில் நின்றகாலம் இது என்பர்.

சம்ஸ்கார பராமரிச வுண்மையாலும்[22]

என்ற கருத்தினைப் பிற்காலத்தில் அவர் எடுத்துக் காட்டுவதுண்டு. அதில் அவரே நிற்கத் தொடங்கிய காலகட்டத்தில் தன்னைப் புனிதப்படுத்தும் விசாரத்திலும், அதற்கான தீவிர சாதனைகளிலும் எவ்வளவு ஆர்வமுடன் ஈடுபட்டிருந்தார் என்பது சொல்லாமலே விளங்கும். மனோவிருத்தி என்று அவர் பிற்காலத்தில் குறிப்பிட்ட தவக்கண் 1934இல் அவருக்கு வெளித்தது. இது முன்னரும் கூறப்பட்டது. (பிரிவு. 1.7,ப.7) இதன் காரணத்தால் தவத்தின் பயன் முற்றியது. அக்காலத்தில் கலாசா லையிலும், இல்லத்திலும் உடனிருந்து அவரை அவதானித்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவரைப்பற்றி ஆறுமுகநாவலரின் பெறாமகனும், தமது ஆசிரியரும், "நாவலர் சரிதம்" எழுதியவருமான த. கைலாயபிள்ளை அவர்க ளுக்கு எழுதிய கடிதத்தில் "அவர் மனித உருவில் ஒரு தெய்வம்"[23] எனச் சுட்டி யுள்ளார். அத்துடன் தமது ஆசிரியர்களாகிய சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர்,த.கைலாயபிள்ளை ஆகியோரிடம் தாம் கற்றது "வெறும் சொற்பொருளே" என்றும், கைலாசபதி அவர்களிடமே "தாம் நூலின் உண்மைப் பொருளை" அறிந்ததாயும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் ச.பரநிருபசிங்கம் அவர்களுக்குக் குறிப்பிட்டுள்ளார்.[24]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபதி அவர்கள் தமது ஐம்பத்தைந்தாம் வயதைத் தாண்டியபின் (1957இல்) சைவாசிரிய கலாசாலை உபஅதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னாளில் நீரிழிவு, வலிப்பு போன்ற நோய்களுக்கு உட்பட்டார். பண்டிதமணி.சி . கணபதிப்பிள்ளை அதுபற்றிக் கைலாசபதி அவர்களிடம் கேட்டபோது, "நாங்கள் என்ன ரிஷி, முனி கோத்திரத்தில் பிறந்தவர்களா? பிறப்பிலோ சம்ஸ்காரத்தாலோ உடற் புனிதம் இல்லை. ஏதோ திருவருளின் உபகாரத்தால் சிற்சில விருத்திகள் சாதக முறையில் ஏற்படலாம். ஆனால், அதைத் தாங்கும் தூய்மை உடலுக்கு இல்லா மையால் - இரண்டுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டால் - இப்படி ஏற்படுகிறது" என்று கூறியதாகப் பண்டிதமணியுடன் பழகியோர் மூலம் அறியமுடிகிறது. இறுதிக்காலப் பகுதியில் கைலாசபதி அவர்களிடம் அருள்நோக்கு என்ற அகங் கார விருத்தி நிலைகளுக்கு மேல் ஆரியத்துவம் என்ற நான்காம் நிலையை நோக்கி ஆன்மீகவிருத்தி வேகமாக ஏறிக்கொண்டே சென்றது. 1954இல் அவருக் குச் சித்த விருத்தி வெளித்தது.[25] அதில் அகங்கார விருத்தி போல எட்டு நிலை கள் உண்டு. அதில் நான்காம் நிலையை அடைந்தவர்கள் வேதமந்திர திருஷ் டாக்கள். அவர்கள் கலியுகத்தில் பூமிக்கு வரமாட்டார்கள். இங்கிருக்கும்போதே அந்நிலை ஏற்பட்டாலும் இருக்கமாட்டார்கள். இவைகள் கைலாசபதி அவர்க ளுக்கும் பொருந்துமாம்.

கைலாசபதி அவர்கள் 1961இல் கார்த்திகை மாதம் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். அவர் குறிப்பிட்ட சிலருடன் மட்டும் பழகியதாலும், அவரது சிந்த னைகள் குறிப்பிட்ட வெகுசிலருக்கே விளங்கியதாலும் அக்காலச் சூழ்நிலையில் அவரைப் புரிந்தோர் சிலராகவே இருந்தனர். இதனால் அவரது மரணச்சடங்கும் அளவெட்டியில் மிக எளிமையாகவே நடைபெற்றது.

## 1.10 *கைலாசபதிக்கு அறிஞர் அளித்த அந்தஸ்து*

கைலாசபதி அவர்களுடன் மிகச் சிலரே நெருங்கிப் பழகினர். (இது முன்னரும்) கூறப்பட்டுள்ளது.) பழகியவர்கள் தம் அநுபவ அடிப்படையில் ஒரு சிறந்த சிந்த னையாளர் என்றே குறிப்பிட்டுள்ளார்கள். சைவாசிரிய கலாசாலையின் அதிபர் சுவாமிநாதன் கைலாசபதி அவர்களை "நல்ல ஒரு விவேகி", "வறுத்த வித்து"[6] எனவும், பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை கைலாசபதி அவர்களை, "தெய்வப் பிறவி", "மனிததெய்வம்", "மகாத்மா", "மகான்", "நெற்றிக்கண்ணர்"[7] எனவும் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் "ஆன்மீகச் செல்வரான உபஅதிபர் பொ.கைலாச பதியின் சந்நிதி என் சிந்தனைக்கு ஊற்றாயிருந்தது"[8] எனவும், "அவர் நடத்திய பாடம் ஆயிரத்திற்கும் குறையா"[29] எனவும் எழுதியமை நம் சிந்தனைக்குரியது. இவர்களின் அநுபவ வெளிப்பாட்டின் காரணமாகவே பல்கலைக்கழகப் பேராசிரி யர்களும் பண்டிதமணி அவர்களைப் புகழும் போதெல்லாம் கைலாசபதி அவர்க ளையும் சேர்த்துப் புகழ்ந்து கொண்டனர் போலும்! யாழ்ப்பாணத்துப் பல்கலைக் கழகத்தின் முன்னை நாள் துணைவேந்தரான பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் "பண்டிதமணி அவர்கள் ஆசிரிய கலாசாலைப் பேராசானாகப் பணியாற் றிய காலத்திலே அங்கும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் பணியாற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பேரறிஞர்களின் தொடர்பு காரணமாக அவரின் ஆளுமை பிரகாசிக்கத் தொடங்கியது. ஒருவர் உபஅதிபர் என்று சுட்டால் குறிப்பிடப்படும் கைலாசபதி அவர்கள்" எனவும், "கைலாசபதி அவர்கள் சைவ சித்தாந்தத்திலே துறை தோய்ந்த புலமையாளர்" எனவும், "நாவலரின் மாணாக்கர்களூடாக, பண்டிதமணி அவர்கள் பெற்றிருந்த சைவத்தமிழ் ஞானம் கைலாசபதி, மகாலிங்கசிவம் ஆகி யோரது கூட்டுறவினால் புதிய செழுமை பெற்றது"[30] எனவும் குறிப்பிட்டுள்ளார். அதே பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த கா. சிவத்தம்பி அவர் களும் "பண்டிதமணியின் மெய்யியல் சிந்தனை வலிமையும் வளமும் திரு.பொ. கைலாசபதி அவர்களிடமிருந்த தொடர்பு காரணமாகவே வந்தது" எனவும் "உப அதிபர் கைலாசபதி அவர்களுடனான தொடர்பு பண்டிதமணி. சி.கணபதிப்பிள் ளையின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம்"[31] எனவும் குறிப்பிட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியரான பொ.பூலோகசிங்கம் அவர்கள் "பண்டிதமணி அவர்களின் ஆத்ம சிந்தனை செந்தி நாதையர் வழிச்சென்று, உபஅதிபர் வழிச்சென்று ஆத்ம விசாரத்தினை அடைந்த போது பண்டிதமணி அவர்கள் ஒடுக்கத்தையே நாடி நின்றார்கள்"[32] எனக் குறிப் பிட்டுள்ளார்.

## *1.11 கைலாசபதி பற்றிய ஆய்வுச் சிந்தனை: தோற்றமும் வளர்ச்சியும்.*

அறிஞர் கூட்டத்தினால் நன்கு மதிக்கப்பட்ட கைலாசபதி அவர்கள் பற்றி வெளிவந்த நூல்கள் மிகக்குறைவு. அத்துடன் அவருடன் பழகியவர்கள் ஒருசிலர் மட்டுமே இன்று உள்ளனர். அவர்களும் கைலாசபதி பற்றிய சிந்தனைகளை வெளியிடுவதற்குத் தயங்குகிறார்கள். இத் தயக்கத்தின் காரணத்தை இரண்டு வகையாகப் பார்க்கலாம்:

I. அதிஉன்னத ஆன்மீக நிலை எய்தியவர்களின் கருத்துக்கள் வாய்மொழி மூலமாகவே, தகுதியுடையவர்கள், நம்பிக்கையுடையவர்களுக்கு மட் டுமே வெளியிடப்படல் வேண்டும். மற்றையோர்களுக்கு வெளிப்படுத் தினால் அதனால் நன்மையிலும் தீமையே அதிகம் விளையும் என்ற நம்பிக்கை.

II. கைலாசபதி அவர்களின் பெருமையை ஒப்புக்கொள்வோரும் அவர் களின் சிந்தனைகள் விளங்குவதற்கு அரியன, ஆகையால் அவற்றில் முயல்வது வீண், என்னும் எண்ணம்.

இத்தகைய இரு கருத்துக்களும் தொடர்கதையாக மாறினால் பொன்னே போல் போற்றப்பட்ட சிந்தனைகள் தேடுவாரற்று நாளடைவில் அழிந்துவிடலாம். இதனை மனங்கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் மொழியியல் துறைத்தலைவர் பேராசிரியர் சு.சுசீந்திரராசா அவர்கள் 'பண்டித மணியும் உபஅதிபர் கைலாசபதியும்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினார். அதனைத் தொடர்ந்து கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் பொதிந்த கொப்பிகளைத் தேடிப் பெறுவதில் நாட்டங் கொண்டார். இதற்கு முதறிஞர் ஆ.சபாரத்தினம் அவர்களின் துணையை நாடினார். அவரும் ஆரம்பத்தில் தயங்கினாலும் பின்னர் சம்மதித்தார். இவர்கள் இருவரும் சிந்தனைகள் பொதிந்த அப்பியாசக் கொப்பிகளைப் பெறுவதிலும், அச்சிந்தனைகளை விளங்கிக் கொள்வதிலும், அதனைப் படியெடுப்பு உள்வெட்டுத் தகட்டில் எடுப்பதிலும் பல இடையூறுகளை எதிர்நோக்கினர். பேராசிரியர் சு.சுசீந்திரராசா அவர்களே 'பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்' நூல் வடிவம் பெறும்போது ஏற்பட்ட இடையூறுகளைச் சிந்தனையின் முன்னுரையில் காட்டியுள்ளார்.[33] மேற்கூறப்பட்ட இரு வகை மறுப்புக்களையும் அவர் சீர்தூக்கி, ஒரு பந்தியில் முடித்துவிட்டார். "சாதனையாளர்களும், ஆய்வாளர்களும் கைலாசபதி அவர்களின் சிந்தனைகளைப் பற்றி சிந்திப்பார்களாக. பண்டிதமணியைப் போற்றுபவர்கள் பண்டிதமணி போற்றிய கைலாசபதி அவர்களையும் தகுதிகண்டு போற்ற முயல்வாராக. இச்சிந்தினைகளை இதனிலும் செம்மையான முறையில் அச் சேற்ற முயல்வார்களாக."[34] அத்துடன் கைலாசபதி சிந்தனைகள் பற்றிய ஆய்வு கங்கையும் யமுனையும் போல இருபெரும் நெறிகளில் பெருக்கெடுக்க வேண்டுமென்றும், சாதனையாளர் தம் சாதனைக்கு அவர் வகுத்த நெறியை நன்குணர்ந்து அதன் வழியில் சென்று ஆன்மீகக் குறிக்கோளை அடையவேண்டும் என்றும், ஆய்வாளர்கள் தம் பரந்த படிப்பையும், அதனால் தம் மனதில் வலிமையுடன் ஊன்றியிருக்கும் கருத்துக்களையும், கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் என்ற உரைகல்லில் உரைத்துப் பார்த்து, அவர் கருத்துக்களைப் பிற அறிஞர்களின் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு, ஒரு அறிவுசார் முடிவுக்கு வர வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதன் பிரதிபலனாக கைலாசபதி அவர்களின் சிந்தனைகளைச் சிலர் கற்று, தம் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தினர். பண்டிதர் மு.கந்தையா அவர்கள் "சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்ற நூலை எழுதினார். அதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே வெளியிட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்துநாகரிகத்துறை சார்ந்த ஓரிருவரும் ச.பரநிருபசிங்கம் அவர்களிடம் கைலாசபதி சிந்தனைகளுக்குப் பொருள் கற்க முனைந்தனர். பரநிருபசிங்கம் அவர்கள் வெளிநாடு செல்லும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமையால் அவர்கள் எண்ணிய கருமம் கைகூடவில்லைப் போலும்.

## குறிப்புக்கள்

1 பொ.கைலாசபதி அவர்களின் இளமைப்பருவத்தில் அளவெட்டியில் கந்த புராண அடிப்படையில் ஊறிய சைவசித்தாந்தம் சாதாரண மக்களின் வாழ்வியல் நோக்கில் பின்னிப் பிணைந்திருந்தது. அங்கு சைவ வாலிபர் சங்கம் மாதந்தோறும் சைவசமயப் பிரசாரகர்களை அழைத்து, சமகால சமய, தத்துவஞானக் கருத்துக்களைப் பரப்பிவந்தது. அக்கிராமத்தில் கத்தோலிக்க தேவாலயமும் இருந்தது. அதில் ஞாயிற்றுக்கிழமைகளில் பூசைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றன. அத்துடன் புரட்டஸ்தாந்து குடும்பங்களும் சில இருந்தன. அதனால் கைலாசபதி அவர்களுடைய நினைப்பில் சைவ சித்தாந்த, சைவ சமயக் கருத்துக்கள் (Philosophy and Religion) உடன்பாட்டு ரீதியில் படிந்து அவரது சிந்தனை ஆக்கங்களில் இடம்பெற்றன. கிறீஸ்தவ சமயக் கருத்துக்கள் பற்றிய விசாரணை,அதில் ஆழ்ந்த உண்மை உண்டோ என்ற ஆய்வு அவரது புத்தியில் நிகழ்ந்து கொண்டே இருந்தது. இதனால் பிற்காலத்தில் அம்மதங்கள் பற்றிய சில முடிவுகளைக் கண்டார்.

2 இதுகாறும் கூறுப்பெற்ற கருத்துக்கள் The Philosophy of Ernst Cassirer (1949) என்ற நூலில் William M.Urban எழுதிய Philosophy of Language என்ற கட்டுரையில் உள்ளவையே.

3 இன்று கைலாசபதி அவர்கள் பற்றி அறிந்து கொள்வதற்குப் பெரும் வாய்ப்பில்லை. சைவாசிரியகலாசாலையில் அதிபராக, விரிவுரையாளராகப் பணிபுரிந்தோரும், கைலாசபதி அவர்களுடன் நெருங்கிப்பழகிய ஒரு சிலரும் அவ்வப்போது எழுதியவை உண்டு. இவை மிகமிகக் குறைவு. ஏனெனில் தம்மைப்பற்றி யாரும் எழுதுவதைச் சிறிதேனும் விரும்பாதவர். அவருடன் கூடிப்பழகிய ஒரு சிலர் இன்றும் வாழ்கின்றனர். அவர்கள் கைலாசபதி அவர்களை உளமார உணர்ந்தவர்கள். அவர்கள் கூறும் கருத்துக்கள் இங்கு பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்று அவர்கள் அனைவரும் வயதில் முதிர்ந்தவர்கள். காலப்போக்கில் அவர்களும் இல்லை என்றால் கைலாசபதி பற்றி அறிந்துகொள்வதற்கு வாய்ப்பே இல்லை. அவர்கள் கூறும் கருத்துக்களைப் பதிவு செய்துகொள்வது விரும்பத்தக்கது. அவற்றின் பொருள், பயன் என்பவற்றை ஆய்வாளர் தத்தம் நிலைக்கேற்ப எக்காலத்திலும் சீர்தூக்கி ஆராயலாம், கொள் ளலாம் அல்லது தள்ளலாம்.

4 பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, 'சிந்தனைக்களஞ்சியம்,' பக். 232-233 பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, யாழ்ப்பாணம், 1987.

5 சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 'பொ.கைலாசபதி அவர்களின் சிந்த னைகள்,' பக். 99, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1994.

6 மேற்படி, ப. 616.

7 பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, 1987: 235. மு.கு.

8 பொ. கைலாசபதி, "தமிழகத்து தர்க்க நூல் வளர்ச்சி", "ஞாயிறு"(மும்மாத சஞ்சிகை) ப. 61- 64, 338- 340, 437- 439, யாழ்ப்பாணக் கலாநிலையம், 1933,1934.

9 சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994; 89. மு.கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டி உணர்வதனை சுட்டி அசத்தென்னச்-----
சட்ட இனிஉளது சத்தேகாண்--சுட்டி
உணர்ந்தநீ சத்தல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம்.

(சிவஞானபோதம், 9.2.2)

10 சிவஞானசித்தியார் சுபக்கம், 56

11 திருவருட்பயன், 3

12 திருக்களிற்றுப்படியார், 15

13 கைலாசபதி அவர்களைக் கவர்ந்த அந்நூலின் ஆசிரியர் பற்றி யாழ்ப்பாண மக்கள் அறியாதிருப்பது கவலைக்குரிய விடயம். ஹே. சுப்பிரமணிய ஐயர் இளமையில் சாத்திரப்படிப்பில் ஆர்வமாக இருந்தவர். வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டு ஆன்ம சாதகராக மாறியவர். அவர் தம் சொந்தச் சிந்தனையாக 12 அப்பியாசக் கொப்பிகளில் எழுதிவைத்தவைகளே 'ஆத்ம விசாரம்' என்ற நூல். அவர் 1921ல் இறக்க, அச்சிந்தனைகள் தேடுவாரற்று விடப்பட்டன. அவற்றுள் இரண்டு கொப்பிகளை ஐயர் அவர்களை நன்கு அறிந்தவர்கள் கண்டுபிடித்தனர். 1924ஆம் ஆண்டு சுவாமி மகாதேவா வேதாந்தமடத்தின் பெயரால் அவற்றை வெளியிட்டார்.

14 பண்டிதமணி நாவலர் ஸ்தாபித்த பாடசாலையில் தமிழ் கற்கவந்த காலத்தில் ஒரு நாள் யாழ்ப்பாணப் பெரிய கடைச் சிவன்கோயிலுக்கு அண்மையில் சென்றுகொண்டிருந்த கைலாசபதி அவர்களைப் பண்டிதமணிக்கு யாரோ ஒருவர் சுட்டிக்காட்டி "உவர் மிகச்சிறு வயதில் லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சையில் சித்தி எய்தியவர்" எனக்கூறியதிலிருந்து பண்டிதமணிக்கும், கைலாசபதிக்கும் ஒருவகைத் தொடர்பு ஆரம்பமாயிற்று. பின்னர் பரமேஸ்வராக் கல்லூரியில் லண்டன் விஞ்ஞான இடைநிலைப் பரீட்சைக்கு கைலாசபதி அவர்கள் படித்த காலத்தில் ஒரே விடுதியில் இருவரும் வசித்தபோது அத்தொடர்பு நெருக்கம் உற்றது. எனினும் கணித, ஆங்கிலத் துறையில் பயின்றவருக்கும், தமிழ் படித்த தனக்கும் பெரிய இடைவெளி உண்டு எனக்கருதி பண்டிதமணி அவர்கள் அவருடன் நெருங்கிப் பழகாதிருந்தார். உடன் விரிவுரையாளாராக ஆசிரிய கலாசாலையில் சுமார் 30ஆண்டுகள் பழகியபோது அவரின் சிறப்புக்களைப் பண்டிதமணி உணர்ந்தார்.கைலாசபதி கூறும் கருத்தாழம் மிக்க சிந்தனைகளைப் பின்னாளில் ஒருசொல்கூட விடாது எழுதிவைத்தார். தன்னுடைய பிரசங்கங்களில் எல்லாம் அவரின் ஏதாவது ஒரு புது விடயத்தை எடுத்துச் சொல்லிவந்தார். அது கைலாசபதி சிந்தனையிலிருந்து வந்தது என்பதை இருவருடனும் பழகியவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியகர்த்தா ஜோன்சனுக்கு பொஸ்வெல் என்பவர் வரலாறு எழுதியது போலப் பண்டிதமணி கைலாசபதியின் வரலாற்றை எழுதாது விட்டாலும், கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் கல்விசார் அறிஞர்கள் மத்தியில் வழக்கத்துக்கு வந்தமைக்குப் பண்டிதமணியே கர்த்தாவாய் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

15 கைலாசபதி பாராட்டு விழா மலர், பக். II, பாராட்டு விழாச்சபை வெளியீடு, யாழ்ப்பாணம், 1958.

16 ச. பரநிருபசிங்கம், 'எட்டினதும் எட்டாததும்', பண்டிதமணி நினைவு மலர், பக். 44, பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, யாழ்ப்பாணம், 1989.

17 ச. பரநிருபசிங்கம், பொ. கைலாசபதியும் பொருளாராய்ச்சியும், பக். 6, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு, 1994.

18 ச. பரநிருபசிங்கம், 1989; 45 மு.கு.

19 ச. பரநிருபசிங்கம், 1994; 6 மு.கு.

20 பரநிருபசிங்கம் அவர்கள் அளவெட்டியூரில் 1925இல் பிறந்தவர். கைலாச பதி அவர்கள் பற்றித் தம் இளம்பருவத்திலேயே கேள்வியுற்றவர். அவர் கைலாசபதி அவர்களுடன் மற்றிக்குலேஷன் பரீட்சை எடுத்த சற்குண சிங்கம் அவர்களைச் (சுவாமி சத்தா) சிறிது காலம் வழிகாட்டியாகக் கொண்டவர். எனினும் கைலாசபதி அவர்கள் மீது தீவிர நாட்டம் பிறந்த மையால் வார இறுதி நாட்களில் (1955) அவரைச் சந்திக்கும் வழக்கத்தை மேற் கொண்டவர். கைலாசபதி அவர்களும் ஓரிரு நாட்களில் இவர் சாதகர் என்பதை உணர்ந்து பல விடயங்களை வாரி வழங்கினாராம். அவ்விட யங்கள் அனைத்தும் பல கொப்பிகளில் அட்சரம் தவறாது எழுதப்பட்டன. "அருணோதயக் கல்லூரியின் கணித ஆசிரியரும், அதிவிவேகியுமான ச. பரநிருபசிங்கம் அவர்கள்" புத்திவிருத்திப் படத்தைத் தயாரித்து அதற் குள்ளே கைலாசபதி அவர்களின் போதனைகள் 90 வீதத்தையும் உள்ள டக்கினார். கிரேக்க சிந்தனை மரபில் சோக்கிரட்டீசின் போதனைகள் பிளேட்டோ, செனஃபோன் மூலம் இரு நெறியில் வந்தன. அதேபோல் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும், ச. பரநிருபசிங்கம் அவர் களும் கைலாசபதி ஸ்மிருதியை நாம் அறிவதற்கு மூலகர்த்தாக்களாக உள்ளனர்.

21 'ஹெட்மாஸ்டர், கணபதிப்பிள்ளை எனவழங்கும் சின்னத்தம்பி அளவெட்டி ஆங்கில வித்தியாசாலையில் (இப்போது அருணோதயக்கல்லூரி) தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர். நீண்டகாலம் அவ்வித்தியாசாலையில் இரசாயனம், ஆங்கிலம் முதலிய பாடங்களை மாணவர்களுக்குக் கற்பித்து, ஆரம்ப பாடசாலை விடுகைத் தராதரப்பத்திரப் பரீட்சைக்கு (E.S.L.C)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைத் தயாரித்து, பேரும் புகழும் பெற்றவர். ஞானப்போக்கில் அதீத நாட்டமுடையவர். சிவதொண்டன் நிலையம் "சிவதொண்டன்" இதழை ஆரம்பித்தபோது இவரே அதன் பத்திராதிபர் போலக் கடமை யாற்றினார். கைலாசபதி அவர்களின் மெய்ஞ்ஞான குருவாகிய இரத்தின சபாபதி உபாத்தியாரிடம் இவர் அவ்வப்போது சென்று வருவதுண்டு. அந்த வகையில் கைலாசபதியுடன் பழகியவர்; அவரின் தகுதி அறிந்து, அவரை மதித்துப் பின்னாளில் அவர் கூறும் கருத்துக்களை எழுதியும் வைத்தவர். யோகர் சுவாமிகளிடம் பெற்றது என்ன என்று ஒருவர் கேட்டபோது, "நல்லொழுக்கம், ஆசாரம் முதலிய நற்பண்புகளை அவரிடம் இருந்து பெற்றேன்; ஞான உபதேசம் என்றவகையில் சாத்திரங்கள் சொல்லுகின்ற தத்துவங்கள் விளக்கங்களை நான் பெற்றது இரத்தினசபாபதி உபாத்தியாயரிடமே" என்றாராம். மணம் முடித்து ஓர் ஆண்டில் மனைவியை இழந்தவர். ஒரே மகனை வளர்த்து வந்தவர். இயன்ற அளவு பிரமச்சரிய வாழ்க்கை நடத்தி, கிராமத்தில் நற்பெயருடன் வாழ்ந்தவர். சின்னப்பு ஆசிரியர் என்பவருடன் இணையாசிரியராகச் சேர்ந்து சோதிட வாசகம் 1ஆம், 2ஆம் புத்தகங்களை வெளியிட்டார். அத்துடன் சோதிடத்தில் இரத்தினசபாபதி அவர்களைப் பின்பற்றி மிகமதிப்பும் பெற்றவர். வேண்டியவர்களுக்கு மட்டும் சோதிடம் கூறும் இவர் பற்றிய கூற்றுக்கள் கைலாசபதி அவர்களின் சிந்தனைகளிலும் ஆங்காங்கு வருகின்றன.

சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 122 மு.கு.

22 ச. பரநிருபசிங்கம், 1994: 6 மு.கு.

23 I மேற்படி, பக். 7.

II ச. பரநிருபசிங்கம், 1989, பக்.45.

24 மேற்படி, பக், 21.

25 ச. பரநிருபசிங்கம், 1994, பக்.21

26 I. பாராட்டு விழாமலர், சைவாசிரியர் கலாசாலை பழையமாணவர் வெளியீடு, 1958.

II சு.சுசீந்திரராசா,ஆ.சபாரத்தினம் 1994: ii மு.கு.

24 பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, அத்வைத சிந்தனை, பக். 78, 80, 81,84, பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, 1984.

28 பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, 1987: ப. XVII மு.கு.

29 மேற்படி, ப. 238.

30 சு. வித்தியானந்தன், பண்டிதமணி நினைவு மலர்; 1989: ப. 1 மு.கு.

31 மேற்படி, ப. 166.

32 மேற்படி, ப. 108.

33 சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம் 1994: VI-IX மு.கு.

34 மேற்படி, ப. XIII.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் இரண்டு
# பதினைந்து கண் விருத்திகள்

## 2.1 மனித குறிக்கோள்கள்

மனிதர்களுள் பலர் உண்டு, உடுத்து, உறங்கி, இனம் பெருக்கி வாழும் வாழ்க்கையே மனித குறிக்கோள் என்கின்றனர். அவர்களுள் மிகச் சிலர் நான் யார்? என் உள்ளம் ஆர்? வந்தவாறு எப்படி? போமாறு ஏதோ? என்று சிந்தித்து அவற்றுக்கு அடிப்படையாக உள்ள சக்தியை அறிய ஆவலுறுகின்றனர். அதன் விளைவாகத் தோன்றியவையே அநுபூதி நெறிகள். இந்நெறி நின்ற அநுபூதி மான்கள் சாதாரண கண்களால் காணும் பரு உடலைத் தூலசரீரம் என்றும், அதற்குள்ளே சூட்சுமமாக ஒரு சரீரம் உண்டு என்றும் சிந்தித்தார்கள். ஆரம்ப காலத்தில் அதனை ஒரு வஸ்துவாகவே உணர்ந்தார்கள். பின் அந்தக்கரணங் கள் (உட்கருவிகள்), அவற்றின் நுண்ணிய பிரிவுகள் எனப் பகுப்பாய்வு செய் தார்கள். இறுதியில் அந்தக்கரணங்களைக் கொண்டு அறியும் பொருள் ஒன்று உண்டு என்றும், அதுவே ஆன்மா என்றும் வரைவிலக்கணம் வகுத்தனர். அது பூரண அறிவு உடையதன்று; அதாவது, அறிவிக்க அறியும் பொருள் என்றனர். அதனை அறிவுடையதாக்கும் பொருள் ஒன்று உண்டு; அதுவே மெய்ப்பொருள்; அம்மெய்ப் பொருளை அறிந்து அது ஆவதே மனிதனது இலட்சியம் என்றனர். உபநிடதங்கள், தந்திரங்கள், ஆகமங்கள் எல்லாம் இவற்றை விரித்தும், விளக் கியும், இந்நிலையில் உயர்ந்து உயர்ந்து ஞான நெறியின் உச்சியை அடையும் குறிக்கோளையே மனிதனது குறிக்கோளாக எடுத்துக் காட்டுகின்றன.

## 2.2 கண்விருத்தியும் பாகுபாடும்

மேலே கூறப்பட்ட சிந்தனை மரபுக்கு வாரிசாக அமைந்த கைலாசபதி அவர்களும் இதனைத் தம் பன்முகப் பார்வையில் - அறிவுசார் நெறியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி, ஸ்மிருதி என்ற உயர்ந்த பிரமாணத்தின் மூலம் அதிஅற்புதமான முறையிலும் - கண்டு விளக்கினார். ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாத சிவம் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு அருவம், அருவுருவம், உருவம் என்ற திருமேனிகளைத் தாங்கி ஞானிகளின் அகக்கண்களுக்குக் காட்சி தரும் என்று சைவசமயம் கூறுகின்றது. இம்மூவகைத் திருமேனிகளில் சாதாக்கியம் என்ற தத்துவத்தில் இருந்து தோன்றியதே அருவுருவத் திருமேனியாகிய சதாசிவ மூர்த்தம்.[1] இதற்கு ஐந்து திருமுகங்களும், பதினைந்து திருக்கண்களும் உண்டு என்று சைவ இறையியல் நூல்கள் கூறுகின்றன.[2] இதனைக் கைலாசபதி தமது சிந்தனைக்கட்டமைப்பில் பதினைந்து கண்விருத்தி எனக்குறிப்பிட்டுள்ளார்.[3] சிவபூசை செய்வோர் தம்மைச் சதாசிவமாகப் பாவித்து ஈசானாதி ஐந்து முகங்களுக்குரிய பஞ்சப் பிரமமந்திரங்களால் சதாசிவத்தைத் தன்னில் பதிய வைத்து வழிபடும்முறை அகோரசிவாசாரியார் பத்ததியிலும் தரப்பட்டுள்ளது.[4] சித்தியாரிலும் "சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி" எனக் குறிப்பிடப்படுகிறது.[5] இத்தகைய பின்னணியில் மனிதன் சிவத்துவம் அடைதலைக் கைலாசபதி அவர்கள் கண்விழித்தல் என்பார். இப்பாதை கற்பனைக்கு எட்டாத அளவு நீண்டது; கடினமானது. அதில் படிப்படியாக முன்னேறுவதைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்:

| | |
|---|---|
| 1ம் கண் | அகங்காரவிருத்தி |
| 2ம் கண் | புத்திவிருத்தி |
| 3ம் கண் | மனோவிருத்தி |
| 4ம் கண் | சித்தவிருத்தி |
| 5ம் கண் | உள்ளவிருத்தி |
| 6ம் கண் | மனோலயம் |
| 7ம் கண் | சித்தலயம் |
| 8ம் கண் | உள்ளலயம் |
| 9ம் கண் | மனத்தெளிவு |
| 10ம் கண் | சித்தத்தெளிவு |
| 11ம் கண் | உள்ளத்தெளிவு |
| 12ம் கண் | மனஅழிவு |
| 13ம் கண் | சித்த அழிவு |
| 14ம் கண் | உள்ள அழிவு |
| 15ம் கண் | மனமுளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேலே கூறப்பட்ட பதினைந்து கண்களுள் 7ம் கண்ணாகிய சித்தலயம் வரைதான் இதிகாசபுராண சாத்திரங்களில் இருந்து சான்று காட்ட முடியும் என்றும் அதற்கு மேலே உள்ளவற்றின் இலக்கணங்களைக் குறிப்பால் உணர்ந்தவர்களைச் சிறிது கூறமுடியுமே தவிர, அவற்றுக்கு இலக்கியம் காட்ட முடியாது என்றும் கைலாசபதி கூறுவர்.

### *2.2.1 முதலாம் கண்: அகங்கார விருத்தி*

பதினைந்து கண்விருத்திகளில் முதலாவதாக உள்ளது அகங்காரவிருத்தி. இவ்விருத்தி கைவரப் பெற்றவர்கள் மானம் தெரிந்தவர்கள்.[6] மா = அள; மானம் = மதிப்பு. அதாவது அவர்கள் பெறுமதி, விழுமியம் (Value) தெரிந்தவர்கள். ஒரு பொருளின் மதிப்பை உணரும் திறன், நிலையான பொருளுக்கும் நிலையற்ற பொருளுக்கும் உள்ள வேறுபாடு, நூல்களின் தராதரத்தை அளந்தறியும் திறன் ஆகியவை வளர்ச்சியுறுவது இவ்வகங்கார விருத்தியின் ஏற்றத்தைப் பொறுத் ததே.

இவ்வகங்கார விருத்தியின் படிமுறைக் கிரமத்தை எட்டாகக் காண்கிறார் கைலாசபதி. அவை பிரேமை, ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம், சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் எனப் பெயர் பெறும். இவற்றுள் மேலுள்ள நான்கும் கீழுள்ள நான்கிற்கும் பிம்பமாகும். அதாவது பிரேமையின் பிம்பம் பிரமம். ஆசாரத்தின் பிம்பம் அநந்தம். அருள்நோக்கின் பிம்பம் ஞானம். ஆரியத்துவத்தின் பிம்பம் சத்தியம் எனவும் வரையறை செய்துள்ளார். இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.

**அகங்கார விருத்தியின் பிம்ப பிரதி பிம்பங்கள்**




### *2.2.1.1 பிரேமை*

அவற்றுள் முதல் நிலை பிரேமை.[7] பிரேமை என்பது ஒரு விடயத்தில் நல் விருப்பு; "இன்னசை"; அதாவது காதல். எல்லா மனிதர்களுக்கும் இது நெஞ்சில் நிலை பெற்றிருக்கும். அதற்கு மேலுள்ள ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம், சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் என்பவற்றை ஒருவன் பெரும் முயற்சி செய்தே அடையவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேமை எட்டு இடம் மேலே பார்ப்பர் .

பிரேமை முதலியவைகளில், பிரேமை பிறந்திருப்பது நல்லது.

தொடக்கமாகலாம். பிரேமை பிரமச்சாயை. சுவதந்திர

நோக்குள்ளவனுக்குத் தான் பிரேமை பிறக்கும். பிரேமை பிறந்தவர்களுக்கு

ஞான பூமிகள் உண்டு. தனுமாநசி இருக்கிறது. தனு, மனம் நசிக்கிறது.

பார்க்க முடியாமல் சமாதி கூடுவான். ஏற்றகாலத்தில் விழிப்பான்.[8]

*2.2.1.2 ஆசாரம்*

இரண்டாவதாக இடம்பெறுவது ஆசாரம். ஆசாரம் என்பது "சர்" (Car) என்ற வடமொழி வினையடியாகப் பிறந்தது. அனுட்டானம், சீலம், சுத்தம், அறம், பொருள் பற்றிய நோக்கு, வழிபாடு முதலியவற்றை உள்ளடக்கியது. சிலர் வாழ்க்கையில் தர்மத்தை இயன்றவரை அனுசரித்து வாழும் வாழ்க்கையையும் ஆசாரம் என்பர். ஆனால் இந்திய சாத்திரங்களில் இது மேலோரின் நடையையே குறிக்கின்றது.[9] இதனையே இன்னும் விசாலமான பொருளில் கைலாசபதி உப யோகிக்கின்றார்.

நான்கு வகைக்கும், "பெருமைக்கும் நுண்மைக்கும்

பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான்"

நுண்மை, ஆசாரத்தால் தெரியும் விரித்து விரித்துச் சொல்வார்கள்.[10]

என்கிறார். ஆசாரம் என்ற இரண்டாம் நிலையை அடைந்த ஒருவன் உலகத்தை வெறும் சடமாகப் பார்க்கமாட்டான். அச்சடத்துக்குள்ளே மிளிரும் சித்துப்பொருள் ஒன்று உண்டு எனக் காண்பான். மண்ணை வெறும் சடமாகிய பஞ்ச பூதங்களில் ஒன்றாக நோக்கமாட்டான். பஞ்சபூதங்களை இயக்கும் சக்தி ஒன்று அதில் மிளிர் வதை உணர்கிறான்.[11] எனவே, அவனது சமூக நடத்தை மற்றையவர்களிலும் பார்க்க மாறுபட்டிருக்கும்.

*2.2.1.3 அருள்நோக்கு*

மூன்றாவதாக அமைவது அருள்நோக்கு. இது அருள், அருட்குணம் என்று சற்று மாறுபட்டும் கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் வருகிறது. அருள் நோக்கு என்பது நண்பர் - பகைவர், நல்லவர் - தீயவர், தன்னவர் - பிறர் ஆகிய அனைவரையும் ஒப்ப நோக்கி, கருணை செலுத்தும் ஒரு உன்னத நிலை. அதா வது தனக்குத் தீமை செய்தவனையும் "பாவம், அறியாது செய்கிறான்" என்று இரக்கத்தோடு நோக்கும் நிலை.

இத்தகைய நோக்குள்ள ஒருவனுக்குத்தான் அடிமை - குடிமை முறை தெரியும். அதனால் அடிமையையும் தன் பிள்ளையாகப் பாவிப்பான். அடிமையும் அன்புடன் தொண்டு செய்வான். பழைய தமிழர் சமுதாயத்தில் அடிமை, குடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிருந்தது. காரணம், தலைமையாயுள்ளாரின் அருள் நோக்கு. இது இன்று மறைந்துவிட்டது. தலைமையாளர் அருள்நோக்குத் தன்மையை இழந்து, அதிகார நோக்கில் ஆதிக்கம் செலுத்த முயன்றனர். இதனையே கைலாசபதி அவர்கள்,

> **எல்லோரும் வாழட்டும் என்ற அருணோக்கை (அன்பு முகத்தை) பண்டைய எசமான் அடிமைகளிற் காணலாம். அடிமை விரும்பி யாட்பட்டது. எசமானின் ஆசௌசம் கூட அடிமைக் குண்டு.**[12]

என்கிறார். மேலும் அருள்நோக்குத் தெரிந்தவன் தான் தமிழ் தெரிந்தவன்.[13] இதனடிப்படையிலேயே சங்கத்தமிழ் மேன்மையும், திருமுறைத்தமிழ் மேன்மையும் லயங்கொண்டு இருந்தன. இதற்கு "நாவலாரூரன் செந்தமிழ்",[14] "தமிழ் ஞானசம்பந்தன்",[15] "தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டான்"[16] போன்றன அகச்சான்றுகளாகும். தமிழ் தனியே பேச்சு மொழியாக- உலகியலுக்கு மட்டும் உபயோகமான ஒரு ஊடகமாக - இருக்கவில்லை. அது ஆன்மாவை அத்யான்மீக நிலைக்கு உயர்த்தும் ஆன்மீகக்கருவி பற்றிய ஒரு நோக்காகவே (attitude of life) இருந்தது.

### *2.2.1.4 ஆரியத்துவம்*

அகங்கார விருத்தியில் நான்காவதா[க] கூறப்படுவது ஆரியத்துவம். அதில் வரும் "ஆரியம்" என்ற வடமொழிப் பதம் மூல சம்ஸ்கிருத மொழிப் பொருளில் எடுக்கப்படுகிறது. "உயர்ந்த", "கண்ணியமான", "விசுவாசத்துக்குரிய" என்பனவே அதன் பொருள். ஆரியன் புனிதன்; ஆரியத்துவம் அடைவதென்றால் புனிதத்துவம் அடைதல்.[17] ஆரியன் உள்ளத்திலும் உடலிலும் பரிசுத்தன். ஆகையால் அழுக்கு நிறைந்த உலகியலில் சாதாரண வாழ்க்கை நடத்தும் மக்களுடன் சேர்ந்து பழகமாட்டான். அதனால் ஆணவம் பிடித்தவன் என்பது கருத்தன்று. அவனது உடல், மனம் அனைத்துமே அதிக சக்திமிக்க கருவிகளாகும். சாதாரண மனிதர்களினால் அறியமுடியாத விடயங்களை எல்லாம் எளிதில் அறிவான். இதனால் சாதாரண உலகம் அவனைப் போற்றி வணங்கும். அவன் வழி செல்லும். அவன் வகுத்த நியதிகளைக் கடைப்பிடிக்கும்.

### *2.2.1.5 சத்தியம்*

ஐந்தாவதாகக் கூறப்படுவது சத்தியம் என்ற நிலை. நாம் வாழ்க்கையில் சத்தியத்தைக் கடைப்பிடித்தாலே சத்துப்பொருளை அணுக முடியும். அசத்தியம் உடையவன் சத்தியத்தை அணுகமுடியாது. எனவே, அவன் சத்துக்குச் சேய்மை யானவனே. "சத்தியம் வத" எனத் தொடங்குகிறது சாந்தோக்கிய உபநிடத மந்திரம்.[18] சத்தியகாம ஜாபாலன் கதையில் கௌதம ரிஷி தன் தந்தை கோத்திரத்தைக் கூறமுடியாத பிள்ளையை உண்மை பேசியபடியால் பிராமணனே எனக் கூறி, குருகுல வாசத்திற்கு ஏற்றுக்கொண்ட கதை பற்றிய விபரம் கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் இடம்பெறுகின்றது:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையை அறியாவொரு பிள்ளை குருவுக்கு உண்மை சொன்னான்.

குரு உண்மை சொன்ன நீ பிராமணப் பிள்ளை தான் என்றார்.[19]

அரிச்சந்திரன் போன்ற எண்ணில்லாக் கதைகளும் புராண இதிகாசங்களும் சத்தியத்தின் நித்தியத்தை எடுத்துக் காட்டுகின்றன. நான் என்னும் அகங் காரத்துடன் செயலாற்றும் உயிருக்கு உறுதுணையாக இருக்கும் அகங்காரம் என்ற அந்தக்கரணம் பரிசுத்தம் அடைந்து, மிக மேலான நுண்ணிய ஆன்மீக விடயங்களை அறிவதற்கு ஆதாரமாக அமைவது சத்தியம் என்ற இவ்வைந்தாம் நிலை.

*2.2.1.6 ஞானம்*

அகங்கார விருத்தியில் ஆறாவதாக இடம்பெறுவது ஞானம். இது "ஜ்ஞா" என்ற வினையடியாகப் பிறந்தது. அறிவு என்ற சாதாரண பொருளில் வழங் கினாலும் உண்மையில் பரிசுத்தத்தில் மலர்ந்த உயர் ஆன்மீக அறிவையே குறிக்கிறது. பிரஜ்ஞானம், விஜ்ஞானம் என "ப்ர", "வி" என்னும் உபசர்க் கங்களைச் சேர்த்து எழுதும்போது, அவை சாத்திர நூல்களில் அதி உன்னத அறிவு நிலைகளைக் குறிக்கும். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் ஞானத்தை உணர்ந்தவர்கள் என கைலாசபதி அவர்கள் குறிப்பிடுவது அருணகிரிநாதரையும், கச்சியப்ப சிவாச்சாரியாரையுமே.[20] கைலாசபதி அவர்களுக்கும் 1953ல் இந்நிலை கைகூடியது என அவர்களின் சிந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.[21] அதனைப் பரநிருபசிங்கமும் தமது நூலில் சுட்டியுள்ளார்.[22]

*2.2.1.7 அநந்தம்*

ஏழாவதாக இடம்பெறுவது அநந்தம். அநந்தம் முடிவற்றது, எல்லையற்றது. தெய்வங்களுள்ளும் அதி உயர்ந்தோருக்கு மட்டுமே இந்நிலை கைவந்திருக் கலாம்.[23] இதிகாச புராணங்களில் அநந்தம், பிரமம் என்ற 7ஆம், 8ஆம் நிலைகளை அடைந்த மனிதர்களுக்குச் சான்றுகாட்ட முடியவில்லை என்கிறார் கைலாசபதி அவர்கள்.

*2.2.1.8 பிரமம்*

அகங்கார விருத்தியின் உயர்ந்த இறுதிநிலையாக மதிக்கப்படுவது பிரமம்.[24] அநந்தத்திலும் இது உயர்வானது. இதனை அடைந்தவர்கள் எந்தவொரு விடயத்தையும் அதுவே தானாய் நின்று அழுந்தி அறியக்கூடியவர்களாக இருப் பர். சிவகுமாரர், அதாவது கடவுளர் மட்டுமே இப்பிரம நிலையை அடைந்தவர்கள் எனக் கைலாசபதி குறிப்பிடுகிறார். இவ்வகங்கார விருத்தியின் முதல் நான்கும், அதாவது பிரேமை, ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம் என்ற நான்கும், சடபாகம் என்றும், சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் என்ற நான்கும் சித்பாகம் என்றும் வகுக்கப்படும்.[25] சடபாகத்தில் நிற்கும் சாதகர் ஒருவர் சித்பாகத்திலுள்ள நிலைகளைக் குறிக்கோளாக முன்வைத்துச் சாதிக்கும் முறைகளும் உண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2.2.1.8.1 நாற்பால், வருண வேறுபாடு*

அகங்கார விருத்தியில் மேலே கூறிய நான்கு நிலைகளுள் பிரேமை என்ற ஒன்றே சாதாரண மனிதன் ஒருவனுக்கு இருக்கும். ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம் என்பவை மனிதனின் இடைவிடா முயற்சியினால் மட்டுமே அடையக்கூடியவை. சத்தியம்,ஞானம், அநந்தம், பிரம்மம் என்பன அதி உயர்ந்த நான்கு நிலைகள். இவை பற்றித் தொன்மையான உரையாசிரியர்களோ நவீன வியாக்கியானகாரர்களோ எதுவித விசேட விளக்கமும் தரவில்லை. ஆனால் கைலாசபதி அகங்காரம் என்ற அந்தக்கரணவிருத்தியில் முற்கூறிய பிரேமை, ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம் என்ற பிரதிபிம்பங்களின் பிம்பமே சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம்; பிரதிபிம்பமாகிய அருள்நோக்கு என்ற நிலையை எய்தியவன் பிம்பமாகிய சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் ஆகிய நான்கையும் நோக்குவது பற்றித் தோன்றியவையே வேளாளன், வணிகன், அரசன், அந்தணன் என்று தொல்காப்பியமும் சங்கநூல்களும் பேசும் "வேற்றுமை தெரிந்த நாற்பால்." இதனை கைலாசபதி,


அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் தமிழ் சாதகர்கள்[26] என்கிறார்.




அதேபோல் ஆரியத்துவம் என்ற நிலையை அடைந்தவன் பிம்பமாகிய நான் கையும் நோக்குவதால் வந்த வேறுபாட்டையே வர்ணங்கள் எனத் தர்மசாஸ் திரங்கள் குறிப்பிடுகின்றன. இதனைக் கைலாசபதி அவர்கள்,

பிரம க்ஷத்திரிய சூத்திரர் ஆரியச்சாதகர் ஆரியசாதகம்

அத்துவசுத்தி தீக்'களோடு கூடியது.[27] என்கிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஆன்மீக சாதனை பற்றிய வேறுபாடேயன்றி மேலைநாட்டவர் சொல்வது போலப் பொருளாதார, சமூக வேறுபாடு பற்றி எழுந்த வகுப்பு முறை (Social Classification) அல்ல.

மாபெரும் ஆலவிருட்சத்தின் மேலே தெரியும் சில வேர்களை மட்டும் கண்டுவிட்டுப் பூமிக்கு அடியில் அம்மரத்தின் பாரிய வேர்ப்பின்னல் எப்படியிருக்குமென வர்ணிப்பது போலவே, இவ்வகங்காரவிருத்தியின் பிரேமை என்ற 1ஆம் நிலையை மட்டும் அடைந்த நாம் மீதி ஏழு நிலைகளையும் இத்தன்மையது என வரைவிலக்கணப்படுத்துவது "நகையினை நிறுத்தும் அன்றே." இவை எட்டும் எதிர் நிரனிறையாய் ஒரு மகாசாதகருக்கு அமையும்போது அவர்கள் உண்மையை எப்படி அறிவார்கள் என்பதைப் புத்திவிருத்தியிலும் தொடர்புபடுத்திக் கைலாசபதி அவர்கள் கூறுவது வியப்புக்குரியது.

### *2.2.2 இரண்டாம் கண்: புத்திவிருத்தி*

#### *2.2.2.1 மூன்று கட்டுக்களும் முதற்கட்டுத் தளங்களும்*

கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் மிகமிக நுட்பம் வாய்ந்ததும், விசாலமானதும் புத்திவிருத்தி பற்றிய அவர் கருத்துக்களாகும். பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும் உள்ளவை இப்புத்திவிருத்தித் தளங்கள்.

பழைய சாத்திரங்கள் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு தளங்களைப் பற்றிப் பேசுகின்றன. ஆனால், தற்காலத்தில் அவற்றுக்குக் கொள்ளும் பொருளோ மிகக் குறுகியதாகக் காணப்படுகிறது. தர்மம் சில கடமைகள் என்றும், அர்த்தம் சாதாரண உலகப் பொருளைத் தேடுவது என்றும், காமம் உடலுக்கு ஐம்புலன் வழி கிடைக்கும் இன்பங்களை அனுபவிப்பது என்றும், மோட்சம் இவைகளினின்றும் விடுபடுவதென்றும் பொதுவாக நம்பப்படுகிறது. "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்ற சூத்திரத்தில் கூறப்படும் நான்கும் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற புருடார்த்தங்களும் ஒத்த கருத்துள்ளவை என்ற எண்ணமே பொதுவாகக் கற்றோரிடையே நிலவி வருகிறது.[28] பௌத்த சமணக் கருத்துக்கள் தமிழ் பேசிய மக்களிடையே பரவிய காலத்தில் தர்மமும் மோட்சமும் தேடத்தக்கவை, அர்த்த காமங்கள் அவ்வளவு சிறந்த குறிக்கோள்கள் அல்ல என்ற கருத்தே நிலைபெறத் தொடங்கியது. "அற நூற் காலம்" என்று இலக்கியவரலாற்று அறிஞர்களால் குறிப்பிடப்படும் சங்க மருவிய காலப்பகுதியில் வெளிவந்த பல நூல்களிலும் (நாலடியார் உட்பட) இக்கருத்துக்களே பிரதிபலித்தன. திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் கூட இக்கருத்துக்கு அடிபணிந்துள்ளார் போலும். ஆனால் கைலாசபதி அவர்கள்,

அறம் = தர்மார்த்த காம மோக்ஷம்

பொருள் = அர்த்தம் காம மோக்ஷ ஆன்மப் பிரகாசம்

இன்பம் = காம மோக்ஷ ஆன்ம பிரகாச ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு = மோக்ஷ ஆன்மப் பிரகாச ஞானம்[29]

என்றும்,

அறம் தர்மம் - மோக்ஷம்

தான் அழிந்த இடத்து அர்த்தம்

இன்பம் காமத் தொடக்கம்

வேதாந்தம் சித்தாந்தம் வரை செல்லும் வீடு[30]

என்றும் குறிப்பிட்டுள்ளார். அர்த்தம் - பொருள். பொருள் என்பது பதத்தால் சுட்டப் படும் அனைத்தையும் குறிக்கும். பிற்காலத்தார் கொண்டது போல அழியும் செல்வப் பொருள்களை மட்டும் குறிக்காது. தர்மம் செய்யும் போது ஒருவன் தான் தானாக நின்று செயலை ஆரம்பிக்கின்றான். அதனால் பொருளை அறிவது கடினம். "அர்த்தம் தான் அழிந்த இடத்தில் பிறக்கும். பொருள் அல்லாதவற்றை - அழியும் பொருளைப் (ம்ருத்) பொருள் எனக்கருதிய அறிவு நீங்கி, அழியாப் பொருள் பற்றிய அறிவு புலப்படும் போது தான் அழிகிறான். அந்த இடத்தில் தான் அர்த்தம் விளங்கும் என்கிறார் கைலாசபதி அவர்கள்.

காமம் என்ற புருஷார்த்தத்தில் விரும்பத்தக்கது - காமிக்கத்தக்கது எது என்ற உண்மை புலப்படும். அதனால் அது இன்பம் ஆரம்பிக்கின்ற இடமாகிறது.

வேதாந்தம் என்பது அமிர்தம் சம்பந்தமானது. அதன்மேல் சித்தாந்தம். சித்தாந்தம் என்பது வெறும் மெய்யியல் சிந்தனை - பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களில் எடுத்து விளக்கப்படும் எண்ணக்கட்டமைப்பு (Structure of Thought) என்று நினைப்பது தவறு. அது ஒரு குறிக்கோள்; வாழ்க்கை முறை. அதை அகக்காட்சியினால் காணுகின்ற முறையொன்று உள்ளது என்கிறார். அதற்குப் புத்திவிருத்தியின் மூன்று கட்டுக்கள் பற்றிய அம்சங்களைத் தருகிறார்.

*புத்திவிருத்தியின் மூன்று கட்டுக்கள்*

தொன்மையான நூல்களோடு ஒத்தும், சற்று விசாலமாயும் சிந்தித்த கைலாசபதி அவர்கள் மோட்சம், காமம், அர்த்தம், தர்மம் என்ற நான்கு புருஷார்த்தங்களுக்குக் கீழேயும் ஆட்கள் நிற்கும் தளங்கள் உண்டு என்று சிந்திக்கத் தொடங்கினார். அதன் விளைவே புத்திவிருத்தியின் 1ஆம் கட்டுப்பற்றிய அவரின் கண்டுபிடிப்பு.

புத்திவிருத்தி 3 கட்டு

I பண்பாடு வரை ஒரு கட்டு - 9

II தர்மம் தொடங்கி சத் ஈறாக ஒரு கட்டு - 9

III அகண்டாகாரம் தொடங்கி மேலே ஒரு கட்டு - 6[31]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது 1ஆம் கட்டில் மேலிருந்து கீழாக,

9. பண்பாடு
8. சம்ஸ்காரம்
7. நாகரிகம்
6. நல்லார்வம்
5. பொது விவேகம்
4. கலை ஞானம்
3. சுட்டிப்பான கிரகிப்பு
2. சீவனம்
1. கேவலக்கிடை

என்பவற்றையும்,

2ம் கட்டில்,
18. சத்
17. முடிந்த சத்தியம்
16. சித்தாந்தம்
15. ஞானம்
14. அமிர்தம்
13. மோட்சம்
12. காமம்
11. அர்த்தம்
10 தர்மம்

என்பவற்றையும்,

3ம் கட்டில்,
24. சிவம்
23. ஆதிப்பிரமம்
22. ஆனந்தம்
21. முடிந்த ஞானம்
20. சித்
19 அகண்டாகாரம்

என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளார்.

இத்தளங்களின் பொதுத் தன்மைகள், அதில் நிற்போர் பற்றிய விபரங்களை ச.பரநிருபசிங்கம் அவர்களும் தந்துள்ளார்.[32] ஆயினும், அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் அடிப்படையாகக் கொண்டு நாம் புத்திவிருத்திக் கட்டமைப்பைப் பூரணமாக விளங்கிக்கொள்ள முடியாது. அதனை வாசித்த அறிஞர் சிலருக்குப் பிழையான விளக்கமும் தெளிவின்மையும் தோன்றியுள்ளது. அதனால், அதில் தோன்றிய சிக்கல்களைக் களைவது அவசியமென நினைக்கிறேன்.

புத்திவிருத்தியில் 24 தளங்கள் பேசப்பட்டாலும் அவற்றுள் கீழிருந்து மேலாக கேவலக்கிடையில் இருந்து மோட்சம் வரையுள்ள தளங்களில் நிற்போர் பற்றியே நாம் சிந்திக்கவும், வரைவிலக்கணங்களை வகுக்கவும் முடியும். அதற்கு மேலேயுள்ள அமிர்தம் தொடக்கம் சத் வரையுள்ள தளங்களுக்கு கைலாசபதி அவர்கள் கூறியதை வைத்துக்கொண்டு சாத்திரங்களை விளங்குதற்கு அவை எவ்வளவு தூரம் உபகாரமாய் இருக்கும் என்பதை நாம் சிந்திக்கலாம். 18 தளங்களுக்கு மேலே 24 தளங்கள் வரை உள்ளவற்றை நாம் தத்துவங்களாக ஒரு சிறிதளவு நினைக்கலாம். ஆனால், நூற்கல்வியை முழுதும் நம்பி அதனையே தம் "தாய்மொழியாக"ப் பேசி வருபவர்களுக்குத் திருப்தி உண்டாகும் வகையில் நாம் விளக்க முடியுமோ என்பது ஐயமே. எனினும் கீழ்த்தளங்களில் நம்பிக்கை ஏற்படும் வகையில் விளக்கினால், அதே நம்பிக்கையின் அடிப்படையில் மேலுள்ள - அறிவுக்கப்பாற்பட்ட - விடயங்களை ஓரளவிற்காயினும் ஒப்புக்கொள்ளும்படி விளக்க இயன்றவரை முயலலாம்.


கைலாசபதி அவர்கள் புத்திவிருத்தியின் ஒவ்வொரு தளங்களில் நிற்பவர்களையும் நான்கு வகுப்புக்களாக வகைப்படுத்துகிறார். வகுப்பு என்ற சொல்லுக்குப் பதிலாக, "type",[33] "சாதி"[34] என்ற சொற்களையும் ஆரம்பத்தில் உபயோகித்தார். நாம் "வகுப்பு" என்ற சொல்லைப் பயன்படுத்துவோம்.

இவ்வகுப்புகளின் ஏற்ற இறக்கம் பற்றியும் கைலாசபதி அவர்கள் தமது சிந்தனையில் குறிப்பிட்டுள்ளார். முதலாம் வகுப்பில் நிற்பவர்கள் தாம் நிற்கும் தளத்தில் இருந்து மேலே ஐந்து இடங்களை நோக்காக அடைவர். இதே சமயம் கீழேயும் ஐந்து தளங்கள் இறங்குவர். இதனைப் போலவே 2ம், 3ம், 4ம் வகுப்பாரும் முறையே 7ம், 9ம், 9ம் தளங்களை மேல் நோக்காக அடைவார்கள்.[35] கீழேயும் 7ம், 9ம், 9ம் தளங்கள் வரை இறங்குவார்கள். இதனைப் மறுமக்கத்தில் உள்ள வரைபடம் மூலம் (ஒன்பதாம் தளத்தில் நிற்கும் நான்கு வகுப்பார்) விளக்கலாம்.

மேலும் புத்திவிருத்தித் தளங்களின் வகுப்புக்களை விளங்கிக் கொள்ளும் விதத்தில் அவர் தம் காலத்தில் வாழ்ந்த சில அறிஞர்களின் பெயர்களையும் உள்நாட்டிலும், பிறநாட்டிலும் பிரபல்யமான மேதைகளின் பெயர்களையும் சுட்டிக்காட்டியுள்ளார். நாம் உள்நாட்டிலும், பிறநாட்டிலும் பிரபல்யமாக அறிமுகப் பட்டோரை மட்டும் எடுத்துக்கொண்டு அவர்களின் குணாதிசயங்களைக் கொண்டு அந்தந்தத் தளங்களின் இலக்கணங்களை விளங்கிக்கொள்ள முயல்வோம். அந்த வகையில் அட்டவணையில் எல்லாத் தளங்களுக்கும் உரிய உதாரண புருஷர்களைத் தந்துள்ளோம். தளங்களில் நான்கு வகுப்புக்கள் உண்டு என்ற கைலாசபதி அவர்களின் சிந்தனையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒன்பதாம் தளத்தில் நிற்கும் நான்கு வகுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் பலருக்கு விளங்கவில்லை. சிந்தனையில் ஆங்காங்கு பரவிக்கிடந்த கருத்துக்களைக் கொண்டும் கைலாசபதி அவர்களுடன் நேரடியாகத் தொடர்புடைய மூதறிஞர் சிலர் பெற்ற தகவல்களைக் கொண்டும் இவ்வட்டவணையைத் தயாரித்துள்ளேன். அவை பல காலமாக நிலவி வந்த கருத்துக்களுக்கு முரண்பாடாய் இருக்கலாம். பலருக்கு வெறுப்பும் கோபமும் ஏற்படலாம். ஆயினும், விளக்கத்தின் பொருட்டு இவ்வட்டவணையைத் தருதல் அவசியமாகிறது.

**புத்திவிருத்தித் தளங்களில் நிற்பவர்கள் : முதலாம் கட்டு**

பண்பாடு 9
- 1 தாயுமானவர்
- 2 நாவலர்
- 3 விசுவாமித்திரர்
- 4 ஆழ்வார்கள்

சம்ஸ்காரம் 8
- 1 தயானந்தர்
- 2 அரதத்தசிவாசாரியார்
- 3 சேக்கிழார்
- 4 உமாபதிசிவாசாரியார்

நாகரிகம் 7
- 1 யாகம் செய்த அரசர்
- 2 ஹே. சுப்பிரமணிய ஐயர்
- 3 பொன்னம்பலம் (ஆசிரியர்)
- 4 அரவிந்தர்

நல்லார்வம் 6
- 1 பைபிள் எழுதிய 4 அர்ச்சிய சிஷ்டர்கள்
- 2 புத்தர்
- 3 விவேகானந்தர்,சிவஞானமுனிவர்
- 4 காந்தி, தாவடி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொதுவிவேகம் 5
  - 1 இராமகிருஷ்ணர், வைரவியார் .பண்டிதை வேதநாயகி,*
  - 2 சிவபாத சுந்தரம்
  - 3 பிளேட்டோ, கைலாசபிள்ளை
  - 4 பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை, 🎗 சோக்றறீஸ்

- கலைஞானம் 4
  - 1 பண்டிதை வேதநாயகி* ↑
  - 3 வே.நடராஜா
  - 2 தலைமையாசிரியர் சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை) ▲
  - 4 ஷேக்ஸ்பியர்,காண்ற்,ஹெகல், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ↑🎗

- சுட்டிப்பானகிரகிப்பு 3
  - 1 மக்கள் தலைவர்கள், சு. சுவாமிநாதன்
  - 2 தலைமையாசிரியர்சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை) ↑▲
  - 3 காசிப்பிள்ளை உபாத்தியாயர்
  - 4 சு. இராசரத்தினம்

- சீவனநோாக்கு 2
  - 1 தம்பிப்பிள்ளை (ஆசிரியர்)
  - 2 சேர். பொன். இராமநாதன்
  - 3 செல்லத்துரை (ஆசிரியர்)
  - 4 Dr.P.சுப்பிரமணியம், சிதம்பரப்பிள்ளை

- கேவலக்கிடை 1
  - 1 99.9% மக்கள்
  - 2 விஸ்வலிங்கம் (ஆசிரியர்)
  - 3 சற்குணசிங்கம், வைத்தியலிங்கம்.
  - 4 வ.சிவப்பிரகாசம் M.Sc., Ph.D.

* 🎗 ▲ } இவர்கள் கீழ்த்தளத்தில் இருந்து மேல் தளத்துக்கு ஏறியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திவிருத்திக் கட்டமைப்பின் 3ம், 4ம் வகுப்பில் நிற்பவர்கள் மேல் நோக்காக 9ம் தளத்தை எட்டமுடியும். எனினும் அவர்களுக்குள்ளும் ஒரு சிறு வேற்றுமை உண்டு. அதாவது 4ம் வகுப்பினருக்கு 6ம் இடம் மறையும் என்பது பொதுவிதி. அவர்களுக்கு 6ம் இடத்தைக் கடந்து செல்லும் நோக்கு விரிவு இருந்தும் அவ் 6ம் இடம் மறைவதால் அவர்களின் சாதனைகளிலும் சில குறை பாடுகளை ஏற்படுத்தும் என்கிறார் கைலாசபதி அவர்கள். அதனை அவர்கள்,

> 4ம் வகுப்பு ஏற்ற இறக்கம்
>
> 1ம் வகுப்பார் நிற்கிற பூமி, மேலே 5ம் பூமி
>
> நோக்குத்தெரிய விரிவார்கள். ஏறுவார்கள். கீழேயும் 5ம் பூமிக்கு இறங்குவார்
>
> 2ம் வகுப்பார். மேலே 7ம் பூமி நோக்கி விரிவார். கீழேயும் 7ம் பூமி நோக்கி இறங்குவார் 3ம் வகுப்பார். மேலே ஒன்பது நோக்கு விரிவார் கீழேயும்
>
> 9 பூமிக்கு இறங்குவார். 4ம் வகுப்பாரும் மேற்படியே. ஆனால் 3ம், 4ம் வகுப்பாரிடையே வித்தியாசம் உண்டு.[36]

என்கிறார். 6ம் இடம் மறைதல் என்ற பொதுவிதி எப்படி உண்டாயிற்று என்பதை விளக்குதல் சற்றுக்கடினமானது. நான்கு வகுப்பிலும் உள்ளவர்களின் ஆற்றல் படிப்படியாக அதிகரிப்பதைக் கைலாசபதி அவர்கள் நாலு சட்டைக்காரர், எட்டுச் சட்டைக்காரர், நின்று பார்ப்போர், பாய்ந்து பார்ப்போர் என்ற ரீதியில் ஒன்பது இடங்களையும் எட்டும் முறையை விளக்குகிறார்.

> நாலாம் வகுப்பார் நிற்கும் தளத்திற்கு ஒன்பதாம்தளம்மேல், கீழ் நோக்கு எட்டும். நாலுமடிச்சட்டை, எட்டுமடிச்சட்டை போல் விரிவார். இடையில் சில பூமி மறையும். ஒரு படைச்சட்டையில் ஆறாம் படி எட்டாது. 1ம், 2ம், 3ம் வகுப்பாருக்கு இடையில் மறைவு இல்லை.[37]

அந்தக் கணித நுட்பத்தில் நாம் நுழையாது பொது விதியாகிய ஆறாம் இடம் மறைதல் 4ம் வகுப்புக்குரிய இலக்கணமாக ஏற்றுக்கொண்டு புத்தி விருத்தியின் கட்டமைப்பை மேலும் ஆராயலாம்.

### *2.2.2.1.1 முதற்கட்டு முதல் தளம்: கேவலக்கிடை*


புத்திவிருத்திக்கட்டமைப்பில் கீழிருந்து முதலாவதாக அமைவது கேவலக்கிடை என்ற அடித்தளம்.[38] இது மனிதர் எவ்வித இலட்சியமுமின்றி உடலையே தான் என நினைத்து உடலுக்குரிய குணங்களின் வசப்பட்டு வாழும் நிலை. கேவலக்கிடை= கேவலத்தில் கிடப்பது."மாவும் மாக்களும் ஐயறி வினவே" என்று சுட்டியது இவர்களைத்தான்.

எல்லாத்தளங்களிலும் நிற்பவர்களைப் போலவே இத்தளத்தில் நிற்பவர்களையும் நான்கு வகைப்படுத்துகிறார் கைலாசபதி அவர்கள். 1ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தி விருத்தி தளங்களுக்கு உதாரண புருஷர்



மகாத்மா காந்தி
(ஆறாம் தளம், 4ம் வகுப்பு)



ஸ்ரீ அரவிந்தர்
(ஏழாம் தளம், 4ம் வகுப்பு)



விவேகானந்தர்
(ஆறாந் தளம், 3ம் வகுப்பு)




இராமகிருஷ்ணர்
(ஐந்தாம் தளம், 1ம் வகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தி விருத்தி தளங்களுக்கு உதாரண புருஷர்



த.கைலாசபிள்ளை
(ஐந்தாம் தளம், 3ம் வகுப்பு)



பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
(ஐந்தாம் தளம், 4ம் வகுப்பு)



ச.பருநிருபசிங்கம்
(ஆறாம் தளம், 4ம் வகுப்பு)



அச்சுவேலி
மு.வைத்திலிங்கம்
(முதலாம் தளம், 3ம் வகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தி விருத்தி தளங்களுக்கு உதாரண புருஷர்



சி.சுவாமிநாதன். அதிபர்
(மூன்றாம் தளம். 1ம் வகுப்பு)



த.சின்னத்தம்பி
(தலைமை ஆசிரியர்),(கணபதிப்பிள்ளை)
(மூன்றாம் தளம். 2ம் வகுப்பு)



கா. காசிப்பிள்ளை
உபாத்தியாயர் (1905 - 1988)
(மூன்றாம் தளம். 3ம் வகுப்பு)



சு.இராசரத்தினம்
(மூன்றாம் தளம். 4ம் வகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பார் தாம் நிற்கும் கேவலக்கிடைத் தளத்திலிருந்து மேல்நோக்காக நோக்கும்போது சீவனநோக்கு, சுட்டிப்பான கிரகிப்பு, கலைஞானம், பொது விவேகம் என்ற தளங்களை நோக்காக எட்டுவர். இதற்குச் சான்றாக உலகில் வாழும் 99.9 வீதமான மக்களைக் குறிப்பிடுகிறார்.[39] 2ஆம் வகுப்பார் நிற்கும் தளத்திலிருந்து 7 தளங்களை எட்டி நோக்குவர். அதாவது சீவனநோக்கு, சுட்டிப் பான கிரகிப்பு, கலைஞானம், பொது விவேகம் ஆகியவற்றுடன் நல்லார்வம், நாகரிகம் ஆகிய இரு தளங்களையும் மேலதிகமாக எட்டுவர். அதேபோல் 3ம், 4ம் வகுப்பாரும் மேலே கூறப்பட்ட 7 தளங்களுடன் அதாவது சீவனநோக்கு, சுட்டிப் பான கிரகிப்பு, கலைஞானம், பொதுவிவேகம், நல்லார்வம், நாகரிகம் என்பவற் றுடன் சம்ஸ்காரம், பண்பாடு ஆகிய இருதளங்களையும் மேலதிகமாக நோக்குவர்.

*2.2.2.1.2 இரண்டாம் தளம்: சீவனநோக்கு*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் கீழிருந்து மேலாக 2ம் தளத்தை வகிப்பது சீவனநோக்கு. கைலாசபதி அவர்கள் இதனை ஆரம்பத்தில் சீவனம் என்றே குறிப்பிட்டார். அதாவது,

> ***சீவனத்தில் நோக்குத் தொடங்கும்***[40]

என்கிறார். இது கேவலக்கிடையிலும் ஒரு படி மேலானது. காரணம் இவர்கள் தமக்கென ஒரு வாழ்க்கை உண்டு; அதற்காகப் பாடுபட வேண்டுமெனச் சிந்திப்பவர்கள். தம் நலனுக்காகவே மனைவி, பிள்ளைகள் என்று இணைத்தாலும் அவர்களுக்காக உழைத்துத் தியாகம் செய்யும் மனப்பாங்குடையோர் இந்நோக்குள்ளவர்கள். இத்தளத்தின் 1ம், 2ம், 3ம், 4ம் வகுப்பார்களுக்குக் கைலாசபதி அவர்கள் சுட்டிய தம்கால அறிஞர்கள்[41] பற்றிய விபரத்தை விரிவஞ்சி அடிக்குறிப்பில் தருகின்றேன்.

*2.2.2.1.3 மூன்றாம் தளம்: சுட்டிப்பான கிரகிப்பு*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் 3ம் தளமாக அமைவது சுட்டிப்பான கிரகிப்பு. இது இயற்கையான மனிதனுக்குள்ள ஆழ்ந்து நோக்கும் அறிவு (intuitive knowledge) க்கு வழி செய்யும். நினைத்த காரியம் சொல்லுதல், சாத்திரம் சொல்லுதல், உருப்பற்றுதல் ஆகியவை இத்தளத்தைச் சார்ந்தவை. அத்துடன் மீனவனுக்கு மீன்பற்றிய அறிவு, வேடனுக்கு மூலிகைகள் பற்றிய அறிவு போன்றவையும் இத்தளத்தின்பாற் படும். அதனைக் கைலாசபதி அவர்கள்,

> சுட்டிப்பான அறிவு (கடல் வாசிக்கு, மீனியற்கை பற்றிச் சுட்டிப்பாய்த் தெரியும்) விஞ்ஞானியிலும் பார்க்க.(தனது ஆட்கள் என்ன செய்வார்கள் என்பது சுட்டிப்பாய்த் தெரியும்).[42]

என்கிறார். அத்துடன் சுட்டிப்பான கிரகிப்புத் தளத்தில் நிற்பவர்கள் சமுதாயத்தில் தலைமை தாங்கி பொதுமக்களை வழிநடத்தும் ஆற்றல் உள்ளவர்கள். அதாவது இத்தளத்தினர் பிறப்பிலேயே தலைமைத்துவம் உள்ளவர்கள்[43] (Born Leaders).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2.2.2.1.4 நான்காம் தளம்: கலைஞானம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் நான்காம் தளத்தை வகிப்பது கலைஞானம். இத்தளத்தினர் கலைகளைச் சுவைக்கும் திறன் உடையவர். கலை என்பது கலிப்பு, எழுச்சி என்ற பொருளிலும் வரும். உள்ளே இருந்து எழுவது - கலிப்பது எதுவோ அதுவே கலை. இசை, நாடகம் முதலிய கலைகள் மனிதனது எழுச்சி களைச் சீர் செய்வன. அவை இறுதியில் மனிதனை அர்த்தத்துக்கு இட்டுச் செல்ல வழிசெய்வன.அதாவது பொருளை - மெய்ப்பொருளை - நாடும் ஆவலைத் தூண்டுவன. அழியும் புலனின்பங்களைத் தூண்டுவதுடன் நின்று விடுவது கலை என இக்காலத்தவர் நினைப்பது கலையின் முழுப்பரிமாணத்தையும் சிதைத்து விடும். இத்தளத்தின் முதல் மூன்று வகுப்புக்களுக்குத் தம் சமகால அறிஞர் களைச்[44] சுட்டிய அவர் 4ஆம் வகுப்புக்கு உலகப்புகழ் பெற்ற ஷேக்ஸ்பியர், ஹெகெல், கான்ற் போன்றவர்களைக் குறிப்பிடுகிறார்."ஒருவரை அறிவதற்கு அவர் விட்டுச் சென்ற கருத்துக்களே அளவுகோல்" என்பதை மனங்கொண்ட அவர்கள் ஷேக்ஸ்பியரை உயர்த்திப் பேசினார். அக்காலப் பல்கலைக்கழக புகுமுகப் பரீட் சைக்கு ஆங்கிலப்பாடநூல் வரிசையில் ஷேக்ஸ்பியரின் நாடகம் ஒன்று கட்டா யமாக இருந்தது. எனவே, ஷேக்ஸ்பியரின் நூல்களைப் படித்துத் தெளிந்தமையே அதற்குக் காரணமாகலாம். அந்த வகையில் ஷேக்ஸ்பியர் கலைஞான தளத்தின் 4ம் வகுப்பினர் எனத் தீர்மானித்தது சரி என நம்புகிறோம். அவர் ஒன்பதாம் தளமா கிய காமம் வரை எட்டுவார். எனவே காமிக்கத்தக்க பொருள் எது என ஷேக்ஸ் பியர் அறிவார். அதன் விளைவாக எழுந்தவை அவரது அதி உன்னதமான சிந்தனைகள். விஞ்ஞானமாணிப் பட்டத்துக்கு மேலைத்தேச அளவையியலை ஒரு பாடமாகக் கற்ற கைலாசபதி அவர்கள் ஹெகல், கான்ற் போன்றோர்களின் கருத்துக்களையும் நன்கு அறிந்திருந்தார். இம் மெய்யியலாளர்களின் நூல் கொண்டு இவர்களின் தளத்தைச் சிந்தித்துள்ளார். இத்தளத்தினர் புத்திவிருத் தியின் 12ம் தளமாகக் காமம் வரை நோக்கெட்டுவர். அதேசமயம் கேவலக் கிடைக்குக் கீழேயும் இறங்கக்கூடியவர்கள். இதனைப் பரநிருபசிங்கம் அவர்களும் "கான்ற், ஹெகல், ஷேக்ஸ்பியா ஆகியவர்கள் காமநோக்கை எட்டக்கூடியவர்கள். ஆனால் கேவலக்கிடைக்குக் கீழேயும் இறங்குவர்[45]" எனக்குறிப்பிட்டுள் ளார். பண்டிதமணி இத்தளத்தில் நின்று, பின்னர் பொதுவிவேக தளத்துக்கு ஏறி னார் என அவதானித்துள்ளார் பொ.கை.

*2.2.2.1.5 ஐந்தாம் தளம்: பொதுவிவேகம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் ஐந்தாவதாக இடம்பெறுவது பொதுவிவேகம். மேல்நாட்டு விஞ்ஞானிகள் பொதுவிவேகத்திற்குத் (general intelligence) தமது உளவியலில் முக்கிய இடம் கொடுக்கிறார்கள். எனவே, கைலாசபதி அவர்களும் இதற்கு 5ம் இடம் கொடுத்தது பொருத்தமே. சாதாரண உலகத்தினர் போற்றும் விடயமாகையால் இதுபற்றிய அவரின் கருத்துக்களை ஒன்று திரட்டுவது நல்ல பயனையே விளைவிக்கும். இத்தளத்தினர் பெரிய விடயங்களையும் அதிநுட் பமாக உணரும் தன்மையையுடையவர்கள். அத்துடன் கணிதம், விஞ்ஞானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம், கலை முதலிய அனைத்திலும் தம் திறமையை நுட்பமாகக் காட்டக் கூடியவர்கள். இத்தளத்திற்கு உதாரண புருஷர்களாக தம் காலத்தில் வாழ்ந்த சில அறிஞர்களைச் சுட்டியுள்ளார்.[46] அவர்கள் பற்றிய விபரம் அடிக்குறிப்பாகத் தரப்படுகிறது.

*2.2.2.1.6 ஆறாம்தளம்: நல்லார்வம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் ஆறாவதாக அமைவது நல்லார்வம். நல்லார்வ நோக்குள்ளவர்கள் ஆயிரத்தில் ஒருவர் தான். அவர்கள் நல்ல காரியங்கள் செய்ய வேண்டும் என்ற மனக்கிளர்ச்சி உடையவர்கள். அத்துடன் அவர்கள் உண்மையான சமூக சேவையாளர்களும் கூட (Social Service Volunteers). இத்தளத்தின் 1ம்வகுப்பாருக்கு பைபிள் (புதிய ஏற்பாடு) எழுதிய நான்கு அர்ச்சிய சிஷ்டர்களை கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார். சாதாரண உலகமக்கள் இத்தளத்தினர் பற்றி மிகஉயர்ந்த கருத்துக்களை வைத்துள்ளார்கள். அவர்களுக்கு கைலாசபதி அவர்கள் ஆறாம் தளத்தை அமைத்தது எமக்குச் சற்றுப்பிடிக்காமலும் இருக்கலாம். ஆதலால் அவர் அப்படி அமைத்ததன் காரணத்தை சற்று இவ்விடத்தில் ஆராய்வது நன்மையாக அமையும் என நினைக்கிறேன்.

மேல்நாட்டு ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து வளர்ந்தது கிறீஸ்தவம். அது உலக சனத்தொகை அடிப்படையிலும் முதலாம் இடத்தைப் பெறுகிறது. அதனால் அதன், உயர்வு பற்றியும் சாதாரண மனிதர்களாகிய எமக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால், கைலாசபதி அவர்கள் நூல்களின் அறிவு கொண்டு அன்றி, அதை இயற்றியவர்களின் வாக்குச் சுத்தத்தை ஸ்மிருதி முறையில் கண்டு, அவர்களுக்குரிய வகுப்பை வகுத்துள்ளார். கிறிஸ்து உலக இரட்சகர் என்று கூறப்பட்டாலும் அவரின் வாக்குகள் என்று நமக்கு வந்தவை மிகச்சிலவே. உதாரணம் மலைப்பிரசங்கம் (Sermon on the Mount), பிதாவுக்குத் தோத்திரம் (Lord's Prayer) போன்றனவே. இன்று நம் கையில் இருப்பவையாகிய புதிய ஏற்பாட்டிலுள்ள நான்கு சுவிசேஷங்களும் (நற்செய்தி) வேறும் சிலவும் கி.பி. பல தசாப்தங்களுக்குப் பிந்தியவையே என ஆய்வாளர் கூறுகின்றனர். அவற்றை ஆக்கிய நூலாசிரியர்களையே இங்கு பைபிள் அர்ச்சியசிஷ்டர் (Biblical Saints) என்று கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார். அவர்களுடைய திருவார்த்தை கொண்டு அவர்கள் நிலையை நல்லார்வத்தின் 1ம் வகுப்பு எனக் கைலாசபதி அவர்கள் காண்கிறார். அவர்கள் மேலே தர்மம் வரை ஐந்து இடங்களை நோக்காக எட்டுவார். அப்படி தர்மத்தில் ஊன்றி நிற்கும் போது, அவர்கள் தர்மத்தைப் பற்றிக் கூறியவை தெளிவாய் இருக்கும். அத்துடன் ஐந்து தளம் கீழேயும் இறங்கி சீவனத்தை நோக்குவார். எனினும், கேவலக்கிடைக்கு இறங்காத பெருமையுடையவர்கள். அதனால், அவர்கள் சிறியன சிந்தியாதவர்கள். அவர்களது வாழ்க்கையின் இலட்சியம் பிறர்நலன் புரிதல்; "உன்னைப் போல் உன் அயலவனையும் நேசி" என்பது அவர்களின் தாரக மந்திரம் அதனால் அவர்கள் கீழ்த்தளங்களில் உள்ளவர்களின் மதிப்பைப் பெற்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் கைலாசபதி அவர்கள் இத்தளத்தை இவர்களுக்கு கொடுத்தார் போலும். மேலும் அவர்,

> பைபிள் சொன்ன இடம் சாதாரண சனங்களின்
>
> கீழ்த்தளத்திற்கு அடுத்த மேல்தளம்
>
> பெரிய உண்மை பைபிளில் வரலாம்
>
> எங்கிருந்து வந்தது கேள்வி.”[47]

என்கிறார்.

நல்லார்வ தளத்தின் இரண்டாம் வகுப்பிற்கு கௌதம புத்தரையும்,[48] மூன்றாம் வகுப்பிற்கு விவேகானந்தர்,[49] சிவஞான முனிவர்[50] போன்றவர்களையும், நாலாம் வகுப்புக்கு மகாத்மா காந்தியையும்[51] உதாரண புருஷர்களாகக் காட்டியுள்ளார்.

*2.2.2.1.7 ஏழாம்தளம்: நாகரிகம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் ஏழாம் தளமாக இடம்பெறுவது நாகரிகம். எது கொண்டாடத்தக்கது? எதை விலக்கி நடக்கவேண்டும்? என்ற பிரச்சினைகள் நாகரிக நோக்குடையவர்களுக்குத்தான் இருக்கும். இவர்கள் பெரிய வேதாந்தங் களையும் பேசுவார்கள். ஆனால், சுத்தியைப் பற்றிய யோசனை - பிழைசெய்தேன், செய்கிறேன் என்ற எண்ணம் இவர்களுக்கு வராது. தங்களில் அழுக்கு இருப்பதும் இவர்களுக்குத் தெரியாது. ஏனைய தளங்களைப் போலவே இதுவும் நான்கு வகுப்புக்களாக பகுக்கப்பட்டுள்ளது. அதில் முதலாம் வகுப்பாருக்கு உதாரணமாக யாகம் செய்த க்ஷத்திரியர்கள் சுட்டப்பட்டுள்ளனர். அவர்களை கைலாசபதி அவர்கள்,

> நாகரிக தளத்தில் நிற்கும் முதலாம் வகுப்பார் பெரிய யஜ்ஞ க்ஷத்திரியர்கள். அவர்களுக்கு அர்த்த நோக்குக்கு மேல் தெரியாது. கீழே சீவனத்துக்கு மேல் சுட்டிப்பான தளத்திற்கு கீழ் இறங்கார்கள்.[52]

என்கிறார். புராண இதிகாசங்களில் அரசர் நூறு யாகம் செய்து சிறப்படைந்த வரலாறு கூறப்படுகிறது. புறநானூறு போன்ற இலக்கியங்களில் “பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி”, (புறநானூறு செய்: 12) “ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி” (புறநானூறு செய்: 16) போன்ற க்ஷத்திரிய மன்னர்கள் பேசப்படுகிறார்கள். தற்கால ஆய்வாளர் ஆரியரின் செல்வாக்கு தமிழகத்தில் பரவிய பின்னரே இவ்வழக்கங்கள் வந்தன எனப் பேசுவர். ஆனால் ஆரியரும், தமிழரும் இந்தியாவை ஞானபூமியாக உடையவர்கள் என்ற கருத்தைக் கொண்ட கைலாசபதி அவர்கள் இவர்கள் ஒரே இந்திய மரபில் வந்தவர்களே என்கிறார். இவர்களைப்பற்றி பரநிருபசிங்கம் “யக்ஞங்களைச் செய்த க்ஷத்திரியர் அர்த்த நோக்குத் தெரிந்தவர்கள் அவர்கள் சுட்டிப்பான கிரகிப்பு வரைதான் இறங்குவார். சீவனத்துக்கு இறங்கார். சீவன நோக்கு இல்லாத படியால் அவர்களுக்கு வீரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது"[53] என்கிறார். இத்தளத்தின் ஏனைய வகுப்பார் பற்றிய விபரம் அடிக்குறிப்பாகத் தரப்படுகிறது.[54]

### *2.2.2.1.8 எட்டாம் தளம்: சம்ஸ்காரம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் கீழிருந்து மேலாக 8வது தளமாக அமைவது சம்ஸ்காரம். சம்ஸ்காரம் என்ற சொல் (சம்ஸ்+ க்ரு) = விளக்கு (Polish), சுத்தப்படுத்து (refine) என்ற பொருளைத் தரும். உள்ளத்தை விளக்குவது, சுத்தப்படுத்துவது சம்ஸ்காரம். வைதிகக் கிரியைகளில் 40 வகையான சம்ஸ்காரங்கள் கூறப்பட்டுள்ளன. அவை மனித ஆன்மாவை சுத்தியாக்கிப் பண்படுத்துவன என்கிறார். சம்ஸ்கார தளத்தின் 1ம் வகுப்பாருக்கு உதாரணமாக தயானந்தரை சுட்டுகிறார். இவர் 12ம் தளமான காமம் வரை நோக்களவில் எட்டுவார். இவரை இந்திய மறுமலர்ச்சிக்கு வடக்கிலும், தெற்கிலும் கூட பணிபுரிந் தவர் என தற்கால வரலாற்று எழுத்தாளர் நினைப்பது வழக்கமாகிவிட்டது. தயானந்தர் வாழ்ந்த சூழ்நிலையில் வடமேற்கு இந்தியாவில் முஸ்லீம்களின் செல்வாக்கும், கிறீஸ்தவ பிரசாரமும் இரண்டு பக்கத்தாக்குதல் போல இந்து சமயத்தவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தின. அவர்களோ இத்தாக்குதல்களை நேரடியாக எதிர்த்து நிற்கும் ஆற்றலின்றிப் பழமையில் (Conservativism) தற்பாதுகாப்புத்தேடி அதனை அழுங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டனர். நவீன விஞ்ஞான பகுத்தறிவு வாதமும், இஸ்லாம் மதத்தின் ஏகபரம்பொருட் கொள்கை யும், பௌராணிக இந்துமத நெறியில் வாழ்ந்த இந்துக்களுக்கு விடை கூற முடியாத புதிர்களாய் நின்றன. வேதத்தைத் தமது நூல்களாகக் கொண்டவர்கள் அவற்றின் அடிப்படைத் தத்துவங்களுக்கு சவால்கள் தோன்றியபோது குருட்டு நம்பிக்கையின் பின்னே சரணடைந்தனர். இதனை நன்கு கவனித்த தயானந்தர் நடைமுறையிலிருந்த இந்துமதத்தின் மீது வெறுப்புற்றார். தீவிர சீர்திருத்த வாதியாகமாறி, வேதம் அனைத்து அறிவையும் - தற்கால விஞ்ஞான அறிவைக் கூட - தன்னுள் அடக்கியுள்ளது என வாதித்தார். ஆனால், வேதத்தில் பற்பல தெய்வ வழிபாடு இல்லை என்ற ஏகபரம்பொருட் கொள்கையை நியாயித்து நூல்கள் பல எழுதி வெளியிட்டார். "சத்தியார்த்த பிரகாசம்" என்ற புதிய விளக்க நூல் மூலம் தமது சமயக்கருத்துக்களுக்கு ஒரு வலுவான அத்திவாரத்தை அமைத்தனர். வைதிகர்கள் அவரை இஸ்லாமிய, கிறீஸ்தவ கொள்கைகளின் வசமாகிவிட்டார் எனக் குற்றஞ்சாட்டினர். சீர்திருத்தப் போக்கினரோ அவர் விஞ் ஞான வழியில் செல்லாது வேதத்தில் சகல அறிவும் இருக்கிறது எனப் பேசியதை மறுத்தனர். ஆனால், தயானந்தர் சுட்டிப்பான கிரகிப்புத் தளத்திற்கு இறங்க மாட்டார். ஆதலால், சமுதாயத்தின் நல்லவர் யார்? தீயவர் யார்? என அறியும் ஆற்றல் அவருக்கு எட்டவில்லை. இதனால்தான் அவரது ஆரிய சமாஜத்தில் உட்பூசல்கள் இடம்பெற்றன. தயானந்தர் மேலே 12ம் தளமான காமம் வரை எட்டுவார். அதாவது சத்தியத்தைக் காமிக்க வேண்டும் என்பதில் நல்ல நம்பிக்கை உடையவர். இதனால்தான் கைலாசபதி அவர்கள் தயானந்தருக்கு இத்தளத்தைக் கொடுத்தார் போலும். "சிந்தனை"யில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயானந்தர் விசேஷம் வேத நெறியை அனுசரித்தவர் படித்தவர். சங்கரரை ஏசவும் இல்லை. புத்தர் கொடுமைக்கு ஓர் உபாயம் செய்திருக்கலாம் என்றார் தயானந்தர்
கீழிறங்கார் கீழைக் கவனியார்.[55]

என்கிறார். இத்தளத்தின் 2ம் வகுப்புக்கு உதாரண புருஷராக அரதத்த சிவாசாரியாரைக் குறிப்பிட்டுள்ளார். இவர் சைவ உலகில் அதிகம் அறியப்படாதவர் ஆதலால் அவரைப்பற்றி சற்று இவ்விடத்தில் விளக்கலாம் என எண்ணுகின்றேன். சபாபதி நாவலர் அவர்கள் இவருடைய "சதுர்வேததாற்பரிய சங்கிரகம்", "இராமாயண தாற்பரிய சங்கிரகம்", "பாரததாற்பரிய சங்கிரகம்" ஆகிய நூல்களை வடமொழியினின்றும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அரதத்தர் சிவபரத்துவத்தை வேத இதிகாசங்கள் மூலம் நிலை நாட்டியவர் என்ற ஒரு விடயம் மட்டுமே நமக்குத் தெரியும். அத்துடன் அவரது சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் திருவாரூர் நிர்மலமணிதேசிகரால் வடமொழியில் வியாக்கியானம் செய்யப்பட்டது என்பது பலருக்குத் தெரியாத விடயமுமாகலாம். கர்ணபரம்பரைக் கதையின்படி அவர் வைஷ்ணவராக இருந்து, சைவசமயத்துக்கு மாறியவர். அதன் காரணமாக மன்னனிடம் தண்டனையும் அனுபவித்தவர். கைலாசபதி அவர்கள் தமது வாக்குச் சுத்தத்தால் அரதத்த சிவாசாரியாரின் நூல்களை ஆராய்ந்தமையால் அவருக்கு இத்தளத்தை கொடுத்தார் போலும்.

இத்தளத்தின் 3ம் வகுப்பினருக்கு உதாரணமாக சேக்கிழார் காட்டப் பட்டுள்ளார். இவர் கேவலக்கிடைக்கும் கீழே இறங்கும் தன்மை கொண்டவர். மேலே 16ம் தளமான சித்தாந்தம் வரை எட்டுவார்.

சேக்கிழார் ஊர்த்துவமாகப் பாடுவார் நின்ற தளம் சம்ஸ்காரம்[56]

என்கிறார் கைலாசபதி அவர்கள். இத்தளத்தின் 4ம் வகுப்பினராக உமாபதி சிவாச்சாரியார் கணிக்கப்படுகிறார். இவரது சித்தாந்த அட்டகம் 14 மெய்கண்ட சாஸ்திரங்களில் சேர்க்கப்பட்டிருப்பதை கைலாசபதி அவர்கள் மறுக்கவில்லை.

போதம் சித்தி பிரகாசம் முறையே விழிக்கச் செய்வது சித்திக்கச் செய்வது போதத்துக்குப் புகட்டுவதாம். படிக்கிரமத்தில் அமைந்தவை. மூன்றும் அருளிய ரீதி வேறு.[57]

எனக் கைலாசபதி அவர்கள் 1941ல் கூறும்போது உமாபதி சிவாச்சாரியாரின் சிவப்பிரகாசத்தையே சுட்டுகிறார். திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம் ஆகிய நூல்களிலிருந்தும் தமது சிந்தனைக்கு ஆதாரங்களைக் காட்டியுள்ளார். அத்துடன் உமாபதி சிவாச்சாரியரின் கோயிற் புராணத்திற்கும், கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணத்திற்கும் மிகப்பெரிய மதிப்பும் கொடுத்திருக்கிறார்.

### *2.2.2.1.9 ஒன்பதாம் தளம்: பண்பாடு*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் 9ம் தளமாக அமைவது பண்பாடு. மேல் நாட்டவர் பேசும் கலாசாரம் (culture) விரிந்த மனப்பான்மை (broadmindedness)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இத்தளத்தோடு சேர்ந்தவை. துனியில்காட்சி - கறள் இல்லாத நோக்கு - கணநேர வெகுளி என்பன இப்பண்பாட்டு முதிர்ச்சியின் அடையாளங்கள். இத்தளத்தின் 1ம்,2ம்,3ம்,4ம் வகுப்பாளர்களுக்கு முறையே தாயுமானவர், ஆறுமுகநாவலர், விசுவாமித்திரர், ஆழ்வார்கள் போன்றவர்களை கைலாசபதி அவர்கள் உதாரண புருஷர்களாகக் காட்டியுள்ளார். 1ம் வகுப்பினரான தாயுமானவர் மதுரைநாயக்கர் குல அரசின் முதன் மந்திரியாகப் பணிபுரிந்தவர். மாணிக்கவாசகர் போல வெளித்தோற்றத்திற்கு உத்தியோகத்தவராக இருந்தும் உள்ளே ஞானசாதகராக விளங்கியவர். நந்தவனத்தில் இவர் தியானத்தில் இருந்தபோது மகாராணியாரின் வருகையும், செயலும் தான் நெறிதவறி விடவேண்டி வரும் என்ற அச்ச உணர்வை அவர் பால் தோற்றுவித்தது. உடனே இரவோடு இரவாக இராச்சியத்தை விட்டு வெளியேறினார். மோட்ச நோக்குள்ள ஒருவரே இத்தகைய போக்கைக் கைக்கொள்ள முடியும். "வீடுபெறநில்" என்ற ஔவை வாக்கை செயன்முறையில் காட்டியவர்; 13ம் தளமான மோட்சம் வரை எட்டிப்பார்க்கும் திறமை கொண்டவர். அதேசமயம் கீழேயும் பொது விவேகம் வரை இறங்கும் தன்மை கொண்டவர் என்கிறார் கைலாசபதி அவர்கள். பொதுவிவேகத் தொடர்பு காரணமாக தாயுமானவருக்கு நித்திய அநித்திய வஸ்து விவேகம் பிறந்தது. அவரது பாடல்களில் அதிகமான இடங்களில் இக்கருத்து காணப்படுகிறது. பண்பாட்டுத்தளத்தின் 2ம் வகுப்பினராக நாவலர் அவர்களைக் காட்டியுள்ளார். ஞான நோக்குவரை அவர் எட்டும் தன்மை கொண்டமையினாலேயே அவரது பெரியபுராண சூசனம் கற்றோர் மத்தியில் ஒப்பற்ற விளக்கமாக மதிக்கப்பட்டது போலும். 3ம் வகுப்பினரான விசுவாமித்திரர் முடிந்த சத்தியம் வரை நோக்காக எட்டுவர்[58] கீழேயும் கேவலக்கிடைக்கு இறங்குவார். இவர் பண்பாட்டுத் தளத்தின் மூன்றாம் வகுப்பினர் ஆயினும் நாலாம் கண்ணாகிய சித்தவிருத்தியில் ஆரியத்துவம் அடைந்தமையால் மந்திரதிருஷ்டா ஆனார். இவர் முடிந்த சத்திய நோக்கை எட்டியமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார் என்பதற்கு ஆதாரமாக மேனகை விடயத்தில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிடுவர்

4ம் வகுப்பினரான ஆழ்வார்கள் சிவநிந்தனை இல்லாதவர்கள் என்பதே கைலாசபதி அவர்களின் கருத்து. இவர்களும் 17ம் தளமான முடிந்த சத்தியத்தை நோக்காக எட்டக்கூடியவர்கள். அதனை,

> சடகோபர், பண்பாட்டில் நின்று நன்றாக எட்டிப்பார்க்கும் சாதி. முடிந்த சத்திய நோக்கு விளங்கும். (ஊமை பிறக்கும்) கைகூடிய போது கொஞ்சக் காலம் இருக்கலாம். ஊமை பிறக்கும் இடத்தில் முத்திரை. கருவிகரணம் வியத்தமாகா நிலையாகலாம். தெரிந்ததைப் பார்த்துக்கொண்டு வெளியிற் றோய்தற்குக் கருவிகரணம் இடங்கொடாநிலை. சடகோபருக்கு பேச ஆளில்லை. ஊமையாய்ப் புளியடியிலிருந்தார். மதுரகவி வடக்கே தவம் செய்தார். தெற்கே ஒளி தெரிந்தது. அங்கேதான் அநுக்கிரகமென்று நாடிவந்தார். இவர் பேசினார்.[59]

என்று தமது சிந்தனையில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2.2.2.2 இரண்டாம் கட்டுத்தளங்களும் வகுப்புக்களும்*

புத்திவிருத்தியின் 2ம் கட்டு மிக முக்கியமானது. இது தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், அமிர்தம், ஞானம், சித்தாந்தம், முடிந்த சத்தியம், சத் ஆகிய தளங்களை உள்ளடக்கியுள்ளது. ஆயிரத்தில் ஒருவர் தான் இந்தக்கட்டிலுள்ள ஆரம்ப தளங்களிலேனும் நிற்கமுடியும்.[60]

**முடிந்த சத்தியம் 17**
- 1 அம்மை
- 2 காசி விஸ்வநாதர்
- 3 உருத்திரர்
- 4 ஊர் பேர் கழிந்தோர்

**சித்தாந்தம் 16**
- 1 ஆளுடையபிள்ளையார்
- 2 விஷ்ணு
- 3 விநாயகர்
- 4 சிற்சபேசர்

**ஞானம் 15**
- 1 பிரம்மா
- 2 பதஞ்சலி
- 3 சுப்பிரமணியர்
- 4 சோமாஸ்கந்தர்


**அமிர்தம் 14**
- 1 மெய்கண்டார்
- 2 சுந்தரர்
- 3 அகஸ்தியர்
- 4 தக்ஷிணாமூர்த்தி

**மோக்ஷம் 13**
- 1 சுகர்
- 2 திருவள்ளுவர்
- 3 ரிஷி வாமதேவர்
- 4 திருந்திதேவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தி விருத்தி தளங்களுக்கு உதாரண புருஷர்



திருவள்ளுவர்

(பதின்மூன்றாம் தளம், 2ம் வகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம் 12
- 1 வியாசர்
- 2 மறைஞான சம்பந்தர்
- 3 திருநாவுக்கரசர்
- 4 கிருஷ்ணர்

அர்த்தம் 11
- 1 நக்கீரர்
- 2 வசிட்டர்
- 3 வியாக்கிரபாதர்
- 4 திருமூலர்

தர்மம் 10
- 1 விதுரர்
- 2 கச்சியப்பர்
- 3 இராமர், அருணந்திசிவாசாரியார்
- 4 மாணிக்கவாசகர், இரத்தினசபாபதி உபாத்தியாயர்

*2.2.2.2.10 பத்தாம் தளம் : தர்மம்*

2ம் கட்டின் அடித்தளமாகிய தர்மம் எந்தவகையிலும் விளக்குவதற்கு அரியது. அதற்கு பிம்ப, பிரதிபிம்பத் தொடர்பு இல்லை.[61] அதன் காரணத்தினால் அதனைச் ஸ்திரப்படுத்துவது கடினம். அத்துடன் அதனைப் பூரணமாக உணரவும் முடியாது. நூல்கள் அனைத்தும் இதனது தனித்தனி அம்சங்களைச் சந்தர்ப்பத் துக்கு ஏற்றபடி சுட்டிக்காட்டுகிறனவே ஒழிய முற்றுமுழுதான வரைவிலக்க ணத்தை வரையறை செய்யவில்லை. "தர்மம் என்ற ஒரு பொருள் உளது" (கந்த: அசுர, காசிபனுற்ப. 42) என்று சுட்டும் செய்யுளில் கூட தர்மத்தைப் பற்றிய படம் வெறும் நிழலாய், மாயவிம்பமாய் எம்மனதின் பிடிக்கு அப்பாற்பட்டதாய் (elusive) காணப்படுகிறது. அதனைத் தளமாக அமைத்து நிற்பவரையும் இக்காலத்தில் காணுவது அருமை என்பார் கைலாசபதி அவர்கள்.

> பண்பாட்டுக்கு மேலே இப்பொழுது நினைக்க முடியாது (தொண்டு தான் இக்காலம்)[62]

தர்மத்தை நோக்காக அடையக்கூடியவர்கள் இருந்தாலும் அவர்களும் ஸ்திரமாக அதனைக் குறிக்கோளாக, வைத்திருக்கும் ஆற்றல் இன்றிக் கீழே இறங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பமும் ஏற்படுகிறது. அதனால் தான் அதில் ஊன்றி நின்று அதனைச் சாதிப்போர் இன்று இல்லை என்றார் கைலாசபதி அவர்கள்.

தர்மநோக்கை எட்டக்கூடியவர்களாகச் சீவனநோக்கில் நிற்கும் 3ம், 4ம் வகுப்பாரும், கலைஞான தளத்தில் நிற்கும் 2ம் வகுப்பாரும், நல்லார்வத்தில் நிற்கும் 1ம் வகுப்பாரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களுள்ளும் கீழ்த் தளங்களில் நிற்பவர்களைப் பார்க்கிலும் ஆழமாகப் பார்க்கும் திறமை மேற்றளங்களில் நிற்பவர்களுக்கு உண்டு. அதாவது, மேற்றளமாகிய நல்லார்வத்தில் நிற்கும் 1ம் வகுப்பார் கீழே கேவலக்கிடைக்கு இறங்கமாட்டார். ஆதலால் அவர்கள் ஆன்மீக உலகில் சாதிமான்கள். அவர்கள் பார்ப்பதுபோலக் கலைஞான, சீவன தளத்தினர் தெளிவாகப் பார்க்கமாட்டார்கள். எனவே தர்மத்தை நோக்காக அடையக்கூடியவர்களிலும் ஏற்றத்தாழ்வு உண்டு எனலாம். இத்தளத்தின் 1ம், 2ம், 3ம், 4ம் வகுப்பினர்களுக்கு உதாரண புருஷர்களாக முறையே விதுரர்,[63] கச்சியப்பசிவாசாரியார்,[64] இராமர்,[65] மாணிக்கவாசகர்[66] போன்றவர்களைக் கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### *2.2.2.2.11 பதினோராம் தளம்: அர்த்தம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் 11ம் தளமாக அமைவது அர்த்தம். இது பொருளின் உண்மையைப் புலப்படுத்துவது, பொருள் (அர்த்தம்) என்பது சொல் லால் - பதத்தால் உணர்த்தப்படும் அனைத்தையும் குறிக்கும். காணப்பட்ட உலகிலுள்ள பொருள்கள் முதல் காணமுடியாத எண்ணக் கருக்களை உணர்த் தும் பொருள்கள்வரை அதன் பரப்பு விஸ்தாரமாக உள்ளது. புத்திவிருத்தி என்ற அந்தக்கரணத்தின் உதவியால் மனிதன் அவற்றை ஆராய்கிறான். நிலையற்ற னவான அழியும் பொருள்கள் முதல் அழியாப் பொருள்கள் வரை அனைத்தையும் அவன் சிந்திக்கிறான். ஆகவே அத்தளத்தில் ஏறியவன் தன் நிலையையும், தன் செல்கதியையும் காணவல்லவனாகிறான். அதனால் இத்தளம் அதிமுக்கியம் பெறுகிறது.

ஏனைய தளங்களைப் போலவே இத்தளத்தில் உள்ளவர்களையும் நான்கு வகைப்படுத்துகிறார் கைலாசபதி அவர்கள். 1ம் வகுப்புக்கு நக்கீரரையும்[67] 2ம் வகுப்புக்கு வசிட்டரையும்[68] 3ம் வகுப்புக்கு வியாக்கிரபாதரையும்[69] 4ம் வகுப்புக் குத் திருமூலரையும்[70] குறிப்பிட்டுள்ளார்.

### *2.2.2.2.12 பன்னிரண்டாம் தளம்: காமம்*

காமம் புத்திவிருத்திக் கட்டமைப்பில் 12ம் தளமாக அமைகிறது. காமம் என்பது உடலியல் இன்பம் மட்டும்தான் என்ற பொருளில் எடுக்கக்கூடாது. இது 'கம்'என்ற வினையடியாகப் பிறந்தது. "விரும்பு", "ஆசைகொள்" போன்ற கருத்துக் களை உடையது. காமிக்கத் தக்கது எது? என்று பொருளாராய்ச்சியின் மூலம் அறிந்த ஒருவன் படிப்படியாகத் தான் கண்ட பொருள்களில் பற்றுவைத்து உயர்ந்து உயர்ந்து இறுதியில் சத்தியகாமன் ஆகிறான். ஒன்றிணைந்த நோக்குள்ள நம்முன்னோர் உலகியல் காமத்தையும் ஆன்மீக காமத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனியே வேறுபடுத்தி எல்லைக்கோடிட்டுப் பிரித்துக்காட்டவில்லை. வக்கிர நோக்குள்ள இக்காலத்தவர் தண்ணீர்க் குவளை ஒன்றில் இருக்கும் நேரிய தடியை முறிந்த தடி என நினைப்பது போல உடற்காமம், ஆன்மீகக் காமம் என இருவேறு பகுதிகளாக நினைக்கின்றனர். தொல்காப்பியரும் "காமஞ் சான்ற கடைக்கோட் காலை ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே".[71] என்றார். நக்கீரரும் இறையனார் களவியலுரையில் "காமம் நன்றாமாறும் உண்டு" எனத் தொடங்கி "தெய்வத்தை வழிபடுவல்" என்றும் "எழுந்த காமம் கண்டாயன்றே? மேன்மக்களாலும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்கும் ஆதலில் இக்காமம் பெரிதும் உறுதியுடையது" என்கிறார்.[72] இத்தளத்தின் 1ம், 2ம், 3ம், 4ம் வகுப்பினர் களுக்கு முறையே வியாசர்,[73] மறைஞானசம்பந்தர்,[74] திருநாவுக்கரசர்,[75] கிருஷ்ணர்[76] போன்றவர்களைக் கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### *2.2.2.2.13 பதின்மூன்றாம் தளம்: மோக்ஷம்*

கைலாசபதி அவர்களின் புத்திவிருத்திக் கட்டமைப்பில் 13ம் தளமாக அமைவது மோக்ஷம். இது "முச்" என்ற வினையடியாகப் பிறந்து, விடுபடுதல், வீடு என்ற பொருளைத் தருகிறது. "வீடுபெற நில்" என்றார் ஔவையார். பற்றுக்க ளினின்றும் விடுபடுதல் ஆன்மாக்களின் தீவிர முயற்சியால் நிகழவேண்டும். "முத்தி" என்ற சொல்லும் "வீடு" என்ற பொருளையே தருகிறது. முத்தி அடைந் தார் என்றதும் நாம் ஏதோ ஒரு உலகத்தை அடைந்து அங்கு ஆனந்தமாய் இருப்பதாய் நினைக்கிறோம். பந்தங்களினின்றும் விடுபடுதல் தான் வீடு. மனிதன் ஒருவனுக்குச் சிற்றின்பச் சுவைகள் விடுபடப் பேரின்பச் சுவைகள் பெருகிக் கொண்டே போகும். அந்தவகையில் இத்தளத்துக்கு சுகர்,[77] திருவள்ளுவர்,[78] ரிஷி வாமதேவர்,[79] திருநந்திதேவர்[80] போன்றவர்களைக் கைலாசபதி அவர்கள் சுட்டியுள்ளார்.

### *2.2.2.2.14 பதின்நான்காம் தளம்: அமிர்தம்*

புத்திவிருத்தியின் 14ம் தளமாக அமைவது அமிர்தம். இதனைக் கைலாசபதி அவர்கள் தொடக்க காலத்தில் ஆன்மப்பிரகாசம் என்றே குறிப்பிடுகிறார். நூல்கள் வற்புறுத்தும் புருஷார்த்தங்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் மனிதனது முயற்சியினால் சம்பாதிக்கப்பட்டு விட்டால், அவனது "நான் செய்கிறேன்" என்ற முயற்சி முற்றுப்பெறுகிறது என்கிறார் கைலாசபதி அவர்கள். மிருத் = மரணம். அமிர்தம் = மரணமற்ற பெருவாழ்வு. இது யோக சம்பந்தமான தளம். இதில் ஐந்து துறைகள் உள்ளன. அவற்றுள் ஐந்து வகையான யோகங்கள் தொடர்புற்றுள்ளன. திருவள்ளுவர் கூறும் ஐம்பெருவேள்வி, ஸ்மிருதிகள் கூறும் பஞ்சமகாயக்ஞம், சித்தியார் கூறும் கர்மங்கள், தவங்கள், செபங்கள், தியானங்கள் முதலியன என்று இருபது வகையான யோகமுறைகள் நூல்களில் உள்ளவாறு அமைவதைக் கைலாசபதி அவர்கள் இத்தளத்துடன் தொடர்புபடுத்துகிறார். மேலும் ஐவகை யோக முயற்சிகளின் பயனாகப் பக்குவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் கடவுளர்க்குப் படையாக, அஸ்திரமாக, கொடியாக, வாகனமாக, ஈற்றில் பெண்ணாக (சக்தியாக) ஆகும் பாக்கியத்தைப் பெறுகின்றன.[81] இதில் கைலாசபதி அவர்களின் தனித்தன்மை மிளிர்கிறது. ஆன்மா தனக்கென ஒரு சிந்தனையுமின்றி, முற்றுமுழுதாகத் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்து, ஆட்டு வித்தால் ஆடும் நிலையை அடையும் தவமுயற்சி இது. காலாட்படை தன் நோக்கம் எதுவுமின்றித் தலைவன் நோக்குக்கே போரிடுகிறது. கொடி அவன் புகழைக் கூறுகிறது. அஸ்திரம் அவன் ஆணையிட அவன் விருப்புக்கே இயங்கு கிறது. வாகனம் அவனைத் தாங்கி அவன் செலுத்தும் திக்கில் அசைகிறது. இறுதியாக ஆன்மா களவு நிலையை விட்டுப் பரிபூரணமாக அவனுக்கே உடை மையாகிறது. இதனை முருகனது படை, அஸ்திரம், கொடி, வாகனம் என்பவற்றில் வைத்துப்பார்க்கலாம். சூரன், பத்மன் என்ற இரண்டு சகோதரர்கள் முருகனால் ஆட்கொள்ளப்பட்டுக் கொடியாயும், வாகனமாயும் மாறினர். கஜமுகாசுரன் விநா யகப்பெருமானுக்கு எலிவாகனமாக மாறுகிறான். இவ்வாறு 5x5=25 வகையான யோகங்கள் அமிர்த தளத்தோடு தொடர்புடையன எனக் கைலாசபதி அவர்கள் விளக்குகிறார்.

சில கல்விசார் அறிஞர்கள் "எமது நூல்களில் நான்கு புருஷார்த்தங்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. அவற்றுக்கு மேலே சொல்லப்படவில்லையே" என மறுப்புத் தெரிவிப்பார்கள். அதற்குக் கைலாசபதி அவர்களின் விளக்கம் பின்வருமாறு அமைகிறது: "நூல்கள் பொதுவானவை. எனவே 'சில விடயங்களை மட்டும்தான் அவற்றின் மூலம் விளக்கமுடியும். உலகில் வாழ்ந்து உலக பந்தங் களில் இருந்து விடுபட விரும்புவோருக்கு இந்நான்கு புருஷார்த்தங்களையும் அடையும் வழிகளை விரித்துச் சொல்வதோடு நூல் ஆசிரியர்களின் வேலை முடிவடைகிறது. அப்பால் அவரது பக்குவமறிந்து ஏற்றவாறு வழிகாட்டுவது குருவின் (திருவருளின்) வேலை." அமிர்த தளம் பற்றி நூல்கள் சொல்லவில்லை என்று கூறமுடியாது. உபநிடதங்களில் அமிர்தத்துவம் பற்றிய விடயம் பல இடங்களில் வருகிறது.[82] இதன் முக்கியத்துவம் கருதிக் கைலாசபதி அவர்கள் பாரதநாட்டில் அமிர்ததளத்துக்குக் குறைந்த தளங்களை அடைந்தவர்களை மனிதர்களாக மதிப்பதில்லை என அடிக்கடி வற்புறுத்துவார். இத்தளத்துக்கு மெய்கண்டார்,[83] சுந்தரமூர்த்திநாயனார்,[84] அகஸ்தியர்,[85] தட்சணாமூர்த்தி போன்ற வர்களைக் குறிப்பிடப்படுகிறார். மனிதர், ரிஷிகள் வரிசையில் தட்சணா மூர்த் தத்தை வைப்பது சரியா? எனச் சிலர் கேட்பர். இந்து மதங்கள் அனைத்திலும் ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றே, ஒரேவகையின என்றே பேசப்படுகிறது. அவை அவஸ்தா பேதம் பற்றி எண்பத்துநாலு லட்சமாக வகுக்கப்பட்டுள்ளன. சைவத் தில் மலபேதம் பற்றிச் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் போன்ற மூன்று வகையினர் குறிப்பிடப்படுகின்றனர். கைலையங்கிரியில் வீற்றிருந் தருள்புரியும் ஸ்ரீகண்டபரமேஸ்வரர் பிரளயாகலருள் அதிசிரேஷ்டர் என்பர் உரையாசிரியர்.[86] சிவப்பிரகாச உரையில் சப்தகோடி மகாமந்திரர்களில் மூன்றரைக்கோடி பேர் ஊர்த்துவ நோக்குடையவர். அவர்கள் பூலோகத்தைத் திரும்பிப் பாரார். மீதி மூன்றரைக் கோடிப்பேர் அதோமுகம் உடையவர்கள். அதாவது பூவுலகில் பக்குவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களுக்கு அருள்புரியும்படி மானிட உருவெடுத்து (குருவாக) வருவார்கள். எனவே பரிபக்குவமடைந்த - சிவமாந்தன்மைப் பெரு வாழ்வு பெற்ற - ஆன்மாக்களே சிவனின் அருட்செயலைச் செய்கின்றன. மறைத்தலும் அருளலே. மறைத்தல் தொழிலைச் செய்யும் மகேஸ்வரமூர்த்தமாகிய தட்சணாமூர்த்தி நால்வருக்கு ஏற்பட்ட மயக்கத்தை நீக்கினார். அதனால் அவர் "திரிபுவனகுரும் ஈசம் தக்ஷிணாமூர்த்திம் ஈசம் நமாமி" எனத் தியான சுலோகத்தில் துதிக்கப் படுகிறார். அமிர்ததளத்தில் நின்ற 1ம் வகுப்பினராகிய மெய்கண்டார் திருக்கை லாய பரம்பரைச் சுத்தாத்துவித சைவசித்தாந்தத்துக்குப் புறச்சந்தான முதற் குருவாயும், அதில் நின்ற 4ம் வகுப்பினராகிய தட்சணாமூர்த்தி இந்துமதப் பிரிவுகள் பலவற்றுள் லோககுருவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் பொருத்த முடையதே. மேலும் புத்தி முதலிய அந்தக்கரணங்கள் சடம். சடஉட்கருவியின் தளம் ஒன்றில் மூர்த்தி ஒருவரை வைக்கலாமா? என்ற ஐயம் எழும். அமிர்தத் துக்கு மேலே உள்ள புத்திவிருத்தித் தளங்கள் தம் சடத்தன்மையை இழந்துவிடுகின்றன என்றும், அதற்கப்பால் அந்தக்கரணம் என்ற பெயரே அற்று விடும் என்றும் கூறுவர் கைலாசபதி அவர்கள். உரையாசிரியர்கள் கூறும் உதார ணம் உலைக்களத்தில் வைக்கப்பட்ட இரும்பு, நெருப்பு வேறு தான் வேறு என்ற தன்மையை இழந்து விடுவது போல, அமிர்தத்தை அடைந்த புத்தியும் புத்தி என்ற பெயரை இழந்துவிடும்; சித்தாந்த பரிபாஷையில் பசுகரணம் சிவகரணம் ஆகிறது என்பர்.[87]

### *2.2.2.2.15 பதினைந்தாம் தளம்: ஞானம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் 15ம் தளமாக அமைவது ஞானம். ஞானம் என்னும் சொல் 'ஜ்ஞா' என்ற வினையடியாகப் பிறந்தது. இது "அறி" என்னும் பொருளுடையது. ப்ர+ஜ்ஞா; வி+ஜ்ஞா முதலிய வடிவத்தில் விசேட பொருளில் வழங்கும். ஞானத்தில் பல வகையுண்டு. அகங்கார விருத்தியில் சத்தியத்தக்கு மேலே ஞானம் என்ற நிலை உண்டு. பொதுவாக ஒருவரை "ஞானம் பெற்றவர்" என்று குறிப்பிடுவதானால் குறைந்தது இந்த அகங்கார விருத்தியில் ஞானம் அடைந்தவர்களையே குறிப்பிட வேண்டும் என்பது கைலாசபதி அவர்களின் கருத்து. பதிஞானம், பசுஞானம், திருவடி ஞானம் முதலிய சொற்கள் சித்தியார் போன்ற சாஸ்திர நூல்களில் வருகின்றன. கைலாசபதி அவர்கள் இவை புத்திவிருத்தியில் எந்தெந்தத் தளங்கள் சம்பந்தமானவை என்பதைத் தம் ஸ்மிருதியுணர்வினால் கண்டு குறிப்பிடுகிறார். அமிர்த தளத்துக்கு மேலே இந்த ஞான தளம் இருப்பதால் இதனை உணரும் நிலையில் புத்தியைச் சாதாரண சடக்கருவி எனக் குறைத்து மதிப்பிடமுடியாது. திருக்களிற்றுப்படியாரிலும் "மற்றவர்க்கு நந்தம் கரணம் போல் அல்லாமை காண்" (பாடல் - 12) என்று அவை தூய்மையடைந்து பசுகரணம் என்ற நிலை போய், சிவகரணமாய் விட்டன என்ற விளக்கமே உள்ளது. ஞான தளத்துக்கு நிட்டை என்ற பெயரும் உண்டு. இத்தளத்தின் 1ம், 2ம், 3ம், 4ம் வகுப்பாருக்கு உதாரண புருஷர்களாக பிரமா,[88] பதஞ்சலி,[89] சுப்பிரமணியர்,[90] சோமஸ்கந்தமூர்த்தி[91] போன்றோர் குறிக்கப் படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2.2.2.2.16 பதினாறாம் தளம்: சித்தாந்தம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் 16ம் தளமாக அமைவது சித்தாந்தம். சித்தாந்தம் என்பது தனியே நூல் கூறும் மெய்யியற் கட்டமைப்பு மட்டுமன்று. அது ஆன்மீக நிலையை உணரும் ஒரு உணர்வுநிலை. இத்தளத்துக்கு ஆளுடைய பிள்ளையார்,[92] விஷ்ணு,[93] விநாயகர்,[94] சிற்சபேசர்[95] போன்றவர்களைக் கைலாச பதி அவர்கள் உதாரணம் காட்டியுள்ளார்.

*2.2.2.2.17 பதினேழாம் தளம்: முடிந்த சத்தியம்*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் 17ம் தளமாக அமைவது முடிந்தசத்தியம். இத்தளமே ஆளாக நிற்பவர்களுக்கு உதாரணம் காட்டக்கூடிய இறுதித்தளம். இதற்கு மேலே யாரும் நிற்பதில்லை என்பார் கைலாசபதி அவர்கள்.

**முடிந்த சத்தியம் சுத்த வித்தையும் ஈசுரனும் பொருந்தும் பொருத்து.**

**இப்பொருத்துத்தான் கடைசித்தளம்.**[96]

எனச் சிந்தனையில் காட்டப்பட்டுள்ளது. இத்தளத்தின் 1ம்வகுப்புக்குத் தேவியும்,[97] 2ம், 3ம், 4ம் வகுப்புகளுக்கு முறையே காசிவிசுவநாதர்,[98] உருத்திரர்,[99] ஊர்பேர் கழிந்தோர்களும்[100] குறிப்பிடப்பட்டுள்ளனர்.

> **தேவி 1ம் ரைப் எட்டிப்பாராத இனம்; சித் நோக்குத் தெரியும். 2ம் ரைப்: விசுவநாதர் (திருவடி தெரியும்) கொஞ்சம் எட்டிப்பார்ப்பார்கள் 3ம் ரைப் உருத்திரர் (திருவடிதான்). மற்றத் தளத்தாருக்குப்போல் எட்டுவதில்லை. ஊர்பேர் கழிந்தவர் 4ம் ரைப் சிவத்தைத் தெரிந்தவர்.**[101]

*2.2.2.3 மூன்றாம்கட்டுத் தளங்களும் வகுப்புக்களும்.*

புத்திவிருத்திக் கட்டமைப்பில் 3ம் கட்டாக சத், அகண்டாகாரம், சித், முடிந்த ஞானம், அநந்தம், பிரமம், சிவம் ஆகிய தளங்கள் அமைகின்றன. கைலாசபதி அவர்கள் பரநாதம்வரை சைவசித்தாந்த நூல்கள் குறிப்பிடும் தத்துவங்களைச் சொல்லி இறுதியில் பரப்பிரமம் என்ற நிலையையும் குறிப்பிடுகிறார். "பரப்பிரம மிவனென்றும் பரசிவன்றானென்றும் பரஞான மிவனென்றும் பராபரன்றா னென்றும்"[102] எனத்தொடங்கும் சித்தியார் பாடலில் இச்சொற்றொடர் வருகிறது. இம் 3ம் கட்டிலுள்ள தளங்களைக் குறிப்பினால் உணர்த்தலாமே அன்றி வேறு எவ்வித மாகவும் வரைவிலக்கணம் கூறமுடியாது என்பார் கைலாசபதி அவர்கள். சிலர், சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவமூர்த்தி அருவுருவத்துடன் எழுந்தருளி யிருக்கின்றார் எனச் சைவசித்தாந்த சாத்திரங்கள் கூற, கைலாசபதி அவர்கள் மட்டும் அறிய முடியாதது என்று கூறுவது சரியா என வினாவுகின்றனர். நூற் கல்வியின் மூலம் சாதாக்கியத்தைப் பற்றி அறிந்தவர்களுக்கும் ஸ்மிருதியாகத் தம் தூய சிந்தனையில் கண்டவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நூல்கள் மூலம் தீர்க்கமுடியாது என மட்டும் கூறி அமைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2.2.4 புத்திவிருத்தித் துறைகள்

இதுவரை கூறியவற்றால் புத்திவிருத்தியின் 1ம், 2ம் கட்டுக்களிலுள்ள தளங்கள், வகுப்புக்கள் பற்றி ஒரு சிறிது தெளிவான படம் மனதில் வீழ்ந்திருக்கும். ஆயினும், இத்தளங்கள், விருத்திகள் புத்திவிருத்தி என்னும் கடலில் ஒரு சிறு பகுதியே. இத்தளங்களுக்குரிய துறைகள் பற்றிய விளக்கங்கள் சமயம், தமிழ் ஆகிய இரண்டையும் தெளிவாக உணர மிக உதவி செய்யும் என எண்ணுகிறோம். அதனால் புத்திவிருத்தித்துறைகளை இயன்றவரை இப்பகுதியில் ஆராய முனைகிறோம்.

*2.2.2.4.1 தர்மத்துறைகள்*

புத்திவிருத்தியில் முதற்கட்டிலுள்ள ஒன்பதும் (கேவலக்கிடை, சீவனம், சுட்டிப்பானகிரகிப்பு, கலைஞானம், பொதுவிவேகம், நல்லார்வம், நாகரிகம், சம்ஸ்காரம், பண்பாடு) தர்மாங்கமானவை. அதாவது ஒருவன் தர்மம் என்ற தளத்தை அடைய உபகாரமானவை அவற்றிற்கெனத் துறைகள் இல்லை. புத்திவிருத்தியின் 2ம் கட்டிலும், 3ம் கட்டிலும் உள்ள தளங்களுக்கு 51 துறைகள் உண்டு. அவை 51 எழுத்துக்களுடன் சம்பந்தமானவை. அதனைக் கைலாசபதி அவர்கள்,

> எழுத்தாவது ஆன்ம எழுச்சி, 51வகை எழுச்சிகளை 51 வகை அக்ஷரம் குறிக்கிறது. "க்ஷ" என்பதை கூட்டெழுத்தெனக் கொண்டு, 50 அக்ஷரமுங் கொள்வர். 50ம் பத்துப்பத்தாக வகுக்கப்பட்டு 5ஆக அடங்கும். இந்த ஐந்துமே பஞ்சாக்கரம். "ஐம்பதெழுத்துமே ஐந்தெழுத்தாவதும்"[104]

என்கிறார். எழுத்து என்னும் சொல் வரிவடிவ எழுத்தையே எமக்கு நினைவூட்டும். ஆனால் இலக்கணம் கற்றவர்கள் "மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி, எழுத்து" என்ற நன்னூல் சூத்திரத்தின் மூலம் எழுத்தாவது பேசவும், சிந்திக்கவும் உபகாரமான - மொழிக்கு முதற்காரணமாகிய - அணுவின் கூட்டம் என்பர். மொழியின் ஒலிவடிவத்தையும், வரிவடிவத்தையுமே சாதாரண கல்விமான்கள் நமக்குச் சுட்டுவர். ஆனால், கைலாசபதி அவர்கள் "எழுத்து" என்பதற்கு "எழுச்சி" என்ற பொருளையே விசேடமாகக் குறிப்பிடுகிறார். நாம் அன்றாட வாழ்வில் "எழு" என்ற பகுதியடியாகப் பிறந்து "சி" என்ற தொழிற்பெயர் விகுதி பெற்ற சொல்லை "எழுதல்" என்ற பொருளிலும், "து" என்ற விகுதி பெற்று வருவதை வரிவடிவ, ஒலி வடிவங்களைக் குறிக்கும் பொருளிலும் உபயோகிக்கின்றோம். இது பேச்சுமரபு பற்றிய வழக்கு. ஔவை குறள், திருமந்திரம்[105] முதலிய சுத்தத் தமிழ் ஆகமங்களில் கூட எழுத்து எழுச்சி என்ற பொருளிலேயே சிறப்பாக வருகிறது. எண்ணிலிகோடி எழுச்சிகள்-எழுத்துக்கள் எம்மனதில் உதிக்கும். அவை அனைத்தையும் சீர் செய்து ஐம்பது எழுச்சியாகச் சுருக்குவர். கூட்டெழுத்தாகிய "க்ஷ"வையும் சேர்த்து 51 எழுச்சி என்றும் சொல்வதுண்டு. அதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரத்தின் 10 எழுச்சிகளில் ஒவ்வொன்றும் வகரத்தின் 10 எழுச்சிகளோடும் தனித்தனி கூட்ட 100. 100ம் யகர எழுச்சிகளோடு கூட்ட 1000. 1000ம் நகர எழுச்சிகளோடு கூட்ட 10000. 10000 மகார எழுச்சிகளோடு கூட்ட 100000. இந்த இலட்ச எழுச்சிகளும் 84 அவஸ்தைகளோடு சேர 8400000 ஆகும்.[106]

எனக் கைலாசபதி அவர்கள் சுட்டியுள்ளார். எழுத்துக்களின் மூலத்தைக் காண்பதே யோகக்காட்சியில் ஒரு முக்கியமான கட்டம் என்பர்.

எழுத்து என்பதைக் குறிக்கும் மற்றோர் சொல் அக்ஷரம். இது "க்ஷி" என்ற தாதுவினின்றும் பிறந்தது, க்ஷய என விகாரமுற்று எதிர்மறை முன்னொட்டுப் பெற்று அழிவற்றது என்னும் பொருளைத் தருகிறது. எழுத்துக்கள் - எழுச்சிகள் - ஒருமுறை தோன்றினால் தோன்றியவையே; அழிவற்று நிலைத்திருக்கும். அவற்றின் மூலத்தைக் காணுவதே எழுத்தை அறிதல். இதனையே அறிஞர் "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்றார். எழுச்சிகளின் மூலத்தைச் சுட்டிக்காட்டக் கூடிய குருவே இறைவன். குழந்தைப் பருவத்தில் நாம் கொண்ட சாதாரண பொருள் அது. அதாவது எழுத்தை எமக்குப் படிப்பித்த வித்தியாகுரு இறைவ னுக்குச் சமன் என்பது தொடக்கநிலைப் பொருள். பின் அது விரிவடைந்து எழுத்துக்களின் மூலத்தை ஞானக்காட்சியால் காட்டவல்ல தீக்ஷாகுருவைக் குறித்தது. இக் கருத்து ஔவை குறளிலும் சுட்டப்பட்டுள்ளது.[107] கைலாசபதி அவர்கள் தமது புத்திவிருத்தியின் 2ம் கட்டின் கீழ்த்தளமான தர்மத்தில் 9 துறைகளைக் காண்கிறார். தர்மத்தின் வெளித்துறை, அதாவது புத்திவிருத்திப் படத்தில் வலக்கைப்புற இறுதியில் உள்ள துறை, -26 எனப் படத்தில் இலக்க மிடப்பட்டள்ளது. தர்மத்தின் உள்துறை, -18 எனப் படத்தில் இலக்கமிடப் பட்டுள்ளது. இவ் ஒன்பது துறைகளும் "க்ஷ" தொடக்கம் "ர" வரை அக்ஷரங்க ளுக்குரிய இடமாகும்.

| | |
|---|---|
| 18. சத் | ĩ |
| 17. முடிந்த சத்தியம் | ī । |
| 16. சித்தாந்தம் | į ஏ ஐ |
| 15. ஞானம் | ஓ ஔ அம் அஹ் |
| 14. அமிர்தம் | க kha ga gha ங |
| 13. மோட்சம் | ச cha ஜ jha ஞ ட |
| 12. காமம் | $ட_2$ $ட_3$ $ட_4$ ண $த_1$ $த_2$ $த_3$ |
| 11. அர்த்தம் | $த_4$ ந ப $ப_2$ ba bha ம ய |
| 10 தர்மம் | ர ல வ ஶ ஷ ஸ ஹ ள க்ஷ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2.2.2.4.2 அர்த்தத்துறைகள்*

அர்த்தத்தில் எட்டுத்துறைகள் உண்டு. இவை புத்திவிருத்திப் படத்தில், -17 முதல் -10 வரை, வலமிருந்து இடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ் அர்த்தத் துறையை உபாங்கத்துடன் தொடர்புபடுத்துகிறார் கைலாசபதி அவர்கள்:

அர்த்தத்தில் நின்று அர்த்தத்தைப் பார்ப்பது மீமாம்சை; ஆராய்ச்சி (பூர்வம் அபரம்) அர்த்தத்தில் நின்று மோக்ஷத்தை நோக்குவோருக்குப் புராணம் தெரியும். முடிந்த சத்தியத்தை அர்த்தத்தில் பார்க்கிறது நியாயம். அதன் பிறழ்வு நியாயம், வைசேடிகம். அர்த்தத்தில் வைத்துத் தர்மத்தைப் பார்ப்பது மிருதி. மிருதியின் பிறழ்வு சாங்கியம், யோகம்.[108]

என்கிறார்.

*2.2.2.4.3 காமத்துறைகள்*

காமத்தில் ஏழுதுறைகள் உண்டு.[109] இவை புத்திவிருத்திப் படத்தில் -9 முதல் -3 வரை காட்டப்பட்டுள்ளன. இவை ஏழும் தொல்காப்பியம் கூறும் முத்தமிழ் என்ற சங்கத்தமிழுக்கு உரியவை. தர்மத்தமிழ் முதல் அகண்டாகாரத் தமிழ் வரை தமிழ் வேறுபடும் என்பதும், அவற்றுள் இன்றைய ஆய்வாளர்கள் சங்கத்தமிழ் எனக்குறிப்பது காமதளம் சார்ந்த ஏழு துறைகளுடன் தொடர்புடைய முத்தமிழையே; இதற்கு மட்டுமே தொல்காப்பியம் இலக்கணம் என்பதும் கைலாசபதி அவர்களின் கருத்து. அகமும் புறமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.[110] வலக்கை இறுதித்துறை கைக்கிளை. (படத்தில் -9 எனக் காட்டப்பட்டுள்ளது). இடக்கை முதற்றுறை பெருந்திணை. (புத்திவிருத்திப்படத்தில் -3 எனக் காட்டப்பட்டுள்ளது). பெருந்திணைக்குப் புறம் காஞ்சி, காஞ்சி நிலையாமையைக் குறிக்கும். நிலையாமை கண்டவனே சத்தியத்துடன் ஒத்துச் செல்ல அதாவது உடன் போக்கிற்கு, ஆயத்தமாவான். "பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் என்பது பிற்காலச் சமணச்சார்பான இலக்கணநூற் கூற்று.[111] தொல்காப்பிய உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியர் பெருந்திணை பற்றிய சரியான கருத்தைத் தருகிறார். "பெருந்திணை நடுவண் ஐந்திணை ஆகிய எண்வகை மணத்திலும் பிரமம் முதல் தெய்வம் வரை அகத்திணையின்பாற் படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்களிடத்தில் நிகழ்வதாலும் அது பெருந்திணை எனப்பட்டது" என்கிறார். ஆனால், இளம்பூரணர் சமணமதத் தாக்கத்தால் "காமத்துப் பயனின்மை உய்த்து உணர வைத்தவாறு அறிந்து கொள்க" எனச் சமயமரபு பற்றி அறமும் வீடும்போலப் பொருளும் இன்பமும் சிறந்தவை அல்ல என இறுதிப்பகுதியில் குறிப்பிடுகிறார்.[112] கைலாசபதி அவர்கள் பிற்காலத்தில் உலகியற் பொருளிலும் மிகக் கூடியளவு ஆன்மீகப் பொருளையே பின்வருமாறு வற்புறுத்துகிறார்:

பெருந்திணை = மறப்பு (பந்தமறப்பு) மறத்தலை இனம் சகிக்காது.[113]

அக, புறத்துறைகளின் இணைப்பைத் தொல்காப்பியர் கூறுவதுபோலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாலும் வரிசைப்படுத்தும் முறையில் கைலாசபதி அவர்கள் தம்முடைய சாதுரியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

தொல்காப்பியம்: புறத். : சூத்: 22, 6, 1, 14, 9, 18, 25

**குறிஞ்சி, தர்ம நோக்கு, காமத்தை வெட்டுந்துறை முல்லை அர்த்தநோக்கு, காமத்தை வெட்டும் துறை பெருந்திணை காமதளத்தில் ஆக உள்ளீடான துறையாயிருந்து கொண்டு காமநோக்கு பிறக்கிற துறை.**

| | |
|---|---|
| **பண்பாடு காமத்தை வெட்டு** | **நெய்தல்** |
| **சமஸ்காரநோக்கு வெட்டு** | **மருதம்** |
| **நாகரிகநோக்கு வெட்டு** | **பாலை** |
| **நல்லார்வம் நோக்கு வெட்டு** | **கைக்கிளை**[114] |

பின்வரும் புத்திவிருத்தி வரைபடம் மூலமும் இதனைக் காட்டலாம்:


(51ம் பக்கம் பார்க்க)

இவ் அக - புறத் தொடர்பு இலக்கண நூலார் கூறியதுதான். ஆனால் கைலாசபதி அவர்களின் வைப்புமுறைதான் சற்று வேறுபட்டுள்ளது. இவ்வமைப்பு முறை மேல்தளங்களின் தொடர்புபற்றி இங்ஙனம் அமைந்துள்ளது போலும். உதாரணமாக, காமதளத்தின் இறுதித்துறையாகிய கைக்கிளை கீழே தர்மத்தின் 5ம் துறையுடன் (-22) தொடர்புடையது. காமத்தின் 6ம் துறையாகிய பாலை கீழே தர்மத்தின் 4ம் துறையுடன் (-21) தொடர்புடையது. காமத்தின் 5ம் துறையாகிய மருதம் தர்மத்தின் 3ம் துறையுடன் (-20) தொடர்புடையது. மேலேயும் மோக்ஷத்தின் இறுதித்துறையையும் அடைகிறது. காமத்தின் 4ம் துறைக்கு ஊடாகச் செல்லும் கோடு கீழே தர்மத்தின் 2ம் துறையிலிருந்து புறப்பட்டு, நெய்தல் துறையை ஊடுருவி, மோசஷத்தின் 5ம் துறையை முட்டுகிறது. காமத்தின் 3ம் துறையாகிய குறிஞ்சியை ஊடுருவும் கோடு மேலே அமிர்தம் வரையும் கீழே தர்மத்தின் 1ம் துறை வரையும் செல்கிறது. காமத்தின் 2ம் துறையாகிய முல்லையை ஊடுருவும் கோடு கீழே அர்த்தத்தில் 1ம் துறையிலிருந்து புறப்பட்டு மேலே அமிர்தத்தின் 4ம் துறையைத் தொடுகிறது. காமத்தின் 1ம் துறையாகிய பெருந்திணையிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் கோடு ஞானம் வரை சென்று முடியும். (51 ஆம் பக்கப் படம் பார்க்க) இவை கைலாசபதி அவர்களின் புத்திவிருத்திக் கட்டமைப்பில் மிகமுக்கியமான பகுதியாகும். ஏனெனில் சைவநூல்கள் கூறும் சைவத்திறனில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றிற்கு இக்காலத்தவர் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவ்வகையில் கைலாசபதி அவர்கள் காமத்தின் 1ம் துறையாகிய பெருந்திணையில் உலக நிலையாமையாகிய காஞ்சித்திணை மூலம் உலகப் பற்றுக்களைவிட்ட ஒருவன் உண்மையைக் கண்டு உடன் போகிறான். இலக்கியம் கூறும் உடன்போக்கிற்கும், சமயம் கூறும் சரியைக்கும் தொடக்கப்புள்ளி ஒன்றே. உண்மையான சரியையை ஒருவன் உணரவேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.பரநிருபசிங்கம் - புத்திவிருத்திப் படம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானால் காமதளத்தை அவன் அடைந்தவனாக இருக்கவேண்டும். "சர்" என்ற வினையடிக்கும் "போ" என்ற தமிழ் வினையடிக்கும் பொருளில் தொடர்பு உண்டு. சரித் = போக்கு; சர்யா = போதல். வடமொழி ஆகார ஈறு தமிழில் "ஐ" ஆகமாறி, சரியை என மருவுகிறது. இவ்விலக்கிய, சமய ஒப்புமையை நாம் வேறெங்கும் காணவில்லை. முழு நூலிலும் ஆங்காங்கு பரவி வேதக்காட்சிவரை எம்மை இட்டுச் செல்கிற தத்துவம் இக்காமத்துறை சம்பந்தமானது. காமம், ஞானம், முடிந்த ஞானம் ஆகிய மூன்றும் அகங்காரவிருத்தியில் ஞானசம்பந்தமானவை என்பது முன்னரும் கூறப்பட்டுள்ளது.

### *2.2.2.4.4 மோக்ஷத்துறைகள்*

மோக்ஷதளத்தில் **ஆறுதுறைகள்** உள்ளன. அவற்றைக் கைலாசபதி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

> **மோக்ஷம் துறை 6.**
>
> மோசஷதளத்தில் **6 துறை உள்ளீடான** துறை நோக்கு மகலோக ஆரம்பி. மோசஷதளத்தில், **மோசஷ** நோக்கோடு சம்பந்தமான துறை, காம நோக்கோடு சம்பந்தமான துறை, அர்த்த நோக்கோடு சம்பந்தமான துறை, தர்ம நோக்கோடு சம்பந்தமான துறை, பண்பாட்டு நோக்கோடு சம்பந்தமான துறை, சம்ஸ்கார நோக்கோடு சம்பந்தமான துறை. இந்த நோக்குகள் மோசஷதளத்தோடு சம்பந்தப்பட்ட ஆறுதுறைகள் ஆகும்.[115]

மோக்ஷம் பெறவேண்டும். அதாவது விடுதலை பெறவேண்டும் என்று விரும்புகிறவனுக்கே அறு சமயம் வகுக்கப்பட்டுள்ளது. சமயம் ஆறே.[116] அவை பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம், சைவம் என்பன. சிவஞான முனிவருக்கு முற்பட்ட அனைவரும் சமயத்தை அகம், புறம் என இரண்டாகப் பிரித்து இவற்றை அகச்சமயம் எனச் சரியாக வகுத்தனர். கைலாசபதி அவர்கள் அறுவகைச் சமயத்தையும் பின்வருமாறு காட்டுகிறார்:

> ஒரு துறையில் நின்றவர்கள் மற்றத்துறைகளைச் சேர்த்துச் சாதிப்பது சாந்தி விருத்தி ஆறு வகை வரும். மோசஷநோக்குத்துறை சைவம். மோக்ஷ காம நோக்குத் துறையோடு பாசுபதம் மோக்ஷ நோக்கோடு அர்த்த----- இப்படி அறுவகைச் சமயம் (வரும்) $(2^6 - 1) = 63$.[117]

ஆறுவகைச் சமயத்தையும் பெரியபுராணம், தேவாரம் ஆகியன புகழ்ந்து கூறுகின்றன. மனிதனுக்குள்ள காமம், குரோதம்,லோபம், மோகம், மதம், மாற்சரியம், ஆகிய ஆறு உட்கைகளை மாறிமாறிச் சேர்த்தல் மூலம் அறுபத்து மூன்று வகை வரும். அறுபத்து மூவரும் தம் குறைகளைத் தீர்ப்பதற்கு முயன்றனர். அவர்களுக்கு எடுத்துக்காட்டுக்களே பெரியபுராணம் கூறும் அறுபத்துமூன்று நாயன்மார்கள். இக்கணிப்பின் விளக்கத்தைத் திருநெல்வேலி சு. இராஜநாயகம் அவர்களும் தந்துள்ளார்.[118] சிவஞானமுனிவர் தம் காலத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முன்பே இம்மதங்கள் சரியான வழிகாட்டலின்றி இழிநிலை அடைந்ததால் அவற்றில் ஐந்தை அகப்புறச்சமயமாக்கிச் சிவாத்துவித சைவத்துடன் இணைத்து விட்டார். அவர் இவை ஒரு காலத்தில் நல்ல நிலையில் இருந்தவை.[119] ஆனால் பின்னர் வீழ்ச்சியுற்றன என்று கூறியிருந்தால் தவறில்லை. கைலாசபதி அவர்கள் "சைவத்திறன் இங்கு தெரிக்கலுற்றாம்" என்ற வரியைக் குறித்துக்காட்டி இதேபோல பாசுபதம் முதலியவற்றுக்கும் திறன் அதாவது விசேட (கிரியை) நடைமுறை இருந்திருக்கலாம் என அபிப்பிராயப்படுகிறார். தம் குறைகளைப் போக்க அதிதீவிர முயற்சி செய்யக்கூடியவர்கள் இல்லாதபடியால் அத் திறன்களும் அழிந்திருக்கலாம்.

*2.2.2.4.5 அமிர்தத்துறைகள்*

அமிர்தத்தில் ஐந்து துறைகள் உள்ளன. அவை நெற்றியில் சொப்பனம், நெற்றியில் சாக்கிரம், சத்தியலோகம், தவலோகம், ஜனலோகம் என்பன. அதனைக் கைலாசபதி அவர்கள், (நெற்றி = இலாடம் - சிவஞானபோதம்)

> அமிர்தத்துறை 5 வகையுண்டு. 1ம் தர்மம் போய் முடியுமிடம், 2ம் அர்த்தம் போய் முடியுமிடம், 3ம் காமம் போய் வெட்டுமிடம், 4ம் மோசஷம் போய் வெட்டுமிடம், 5ம் அமிர்தத்தில் அமிர்தநோக்குப் பிறக்குமிடம்.[120]

என வகைப்படுத்தினார். இத்துறைகள் யோகசம்பந்தமானவை. ஸ்மிருதிகள் கூறும் பஞ்சமகாயக்ஞங்கள் சம்பந்தமான சாதனை ஒருவகை; 5ம் துறையில் ஆரம்பித்து (புத்திவிருத்திப் படத்தில் "l" என அடையாளம் இடப்பட்டுள்ளது) மற்ற நான்கு துறைகளையும் (k,j,i,h) சூழ்ந்து மீண்டும் 5ம் துறையிலேயே முடியும் சாதனை வகை இது. (பூதயக்ஞம்) இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ம் துறையில் தொடங்கி 4ம் துறையில் முற்றுப்பெறுவது மற்றோர் சாதனை. இச்சாதனையின் பெறுபேறுதான் ஒரு ஆன்மா கடவுளின் பெண்ணாக (சக்தியாக), அஸ்திரமாக, வாகனமாக, கொடியாக, படையாக அவர் கட்டளையை நிறைவேற்றும் வாய்ப்பு. கைலாசபதி சிந்தனையின் ஆரம்பத்தில் அது பின்வருமாறு காட்டப்படுகிறது:

**அந்தக் காரணங்களை ஒப்பித்தோர்,**

**புத்தியை ஒப்பித்தோர் கொடியாகின்றனர்**

**மனத்தை ஒப்பித்தோர் வாகனம் ஆகின்றனர்**

**அகங்காரத்தை ஒப்பித்தோர் காலாள் ஆகின்றனர்**

**சித்தத்தை ஒப்பித்தோர் படையாகின்றனர்.**

**போதத்தை ஒப்பித்தோர் பெண்ணாகின்றனர் .**[121]

3ம் துறையில் தொடங்கி மீண்டும் 3ம் துறையில் வந்து முடியும் சாதனை இன்னொன்று. அது திருக்குறள் கூறும் "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்ற ஐம்பெரு வேள்வி. 2ம் துறையில் தொடங்கி 2ம் துறையில் முடிவடைவது மற்றைய சாதனை. சிவஞானசித்தியாரில் "ஊனமிலாக் கன்மங்கள் தவம் செபம் தியானம் ஒன்றுக்கொன்று உயரும் இவையூட்டுவது யாகம்" எனக் குறிக்கப்படுகின்றன. இவற்றிற்குப் பெரியபுராணத்தில் வரும் தொகை அடியார்களை உதாரணம் காட்டுவார் கைலாசபதி அவர்கள்.[122] முதலாம் துறையில் தொடங்கி மீண்டும் முதலாம் துறையில் முடிவது ஐவகை யோகங்கள். அதாவது ஞானயோகம், தியானயோகம், பிராசாதயோகம், பத்தியோகம், கர்மயோகம் என்பன. இவை ஒவ்வொன்றையும் சாதனையால் அனுட்டித்துப் பயன் பெற்றவர்களுக்குக் கைலாசபதி அவர்கள் உதாரணங்கள் காட்டியுள்ளார். தொகை அடியார்களில் தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமை இல்லாத புலவர், பரமனையே பாடுவார், பத்தராய்ப் பணிவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தோர் இந்த அமிர்தத்துறை சம்பந்தமான சாதகர்கள். இதனைப் பின்வரும் அட்டவணை மூலம் விளக்கலாம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தத்துறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5ல் தொடங்கி 5ல் முடிவது | பூதயக்ஞம் | பிரமயக்ஞம் | மனுஷ்யக்ஞம் | தேவயக்ஞம் | பிதிர்யக்ஞம் |
| 4ல் தொடங்கி 4ல் முடிவது | பெண் | அஸ்திரம் | வாகனம் | கொடி | படை |
| 3ல் தொடங்கி 3ல் முடிவது | தான் | ஒக்கல் | விருந்து | தெய்வம் | தென்புலத்தார் |
| 2ல் தொடங்கி 2ல் முடிவது | ஞானயாகம் | தியானயாகம் | செபயாகம் | தவயாகம் | கர்மயாகம் |
| 1ல் தொடங்கி 1ல் முடிவது | ஞான யோகம் | தியான யோகம் | பிராசாத யோகம் | பக்தி யோகம் | கர்ம யோகம் |

ஒருவன் அமிர்த நோக்கை அடைந்துவிட்டால் அவன் கதியைக் கண்டவன் ஆகிறான். கதி நற்கதி, சிவகதி, மீளாக்கதி, மீளாநெறி எனப் பலவாறு புகழ்ந்துரைக்கப்படும். கதிக்கு வழிகண்டவர்களை வழிபட்டு நாமும் கதி அடையலாம். தர்மதளத்தில் நிற்கும் 1ம் வகுப்பார் அமிர்தநோக்கை ஆழமாகக் காண்பர். உபநிடதங்கள் கூறும் அமிர்தத்துவம் இதனோடு தொடர்புடையது. இதனைப் பரிபூரணமாகச் சாதனை செய்யவேண்டுமானால் சதாசிவ தத்துவம் கூறும் 15 கண்களில் மனோலயம் என்ற கண் வெளிக்க வேண்டும். அருணகிரிநாதர் "சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மா பொருளொன்றும் அறிந்திலனே" என்று கந்தரனுபூதியில் பாடியதும் இதன் அடிப்படையிலேயே.

*2.2.2.4.6 ஞானத்துறைகள்*

ஞானதளத்தில் நான்கு துறைகள் உண்டு. சாக்கிரம், நெற்றியில் துரியாதீதம், நெற்றியில் துரியம், நெற்றியில் சுழுத்தி என்பன.(புத்தி விருத்திப் படத்தில் d e f g ). அவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என ஞான நூல்கள் கூறும் விடயங்களோடு தொடர்புடையவை. அதனைக் கைலாசபதி அவர்கள்,

> **ஞானதளம்: 4 துறை. காமநோக்கு முடியுமிடம் அல்லது கேட்டல் மூடநம்பிக்கை தெரிகிறது. மூலம் தெரியும். பாஷை தெரியும். வியாகரணம் உலகம் விளங்குகிறது.** [123]

என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாங்கங்களின் அதி உயர்ந்ததாகிய வியாகரணம் இத்தளத்தின் வெளித்துறைக்கு முன்னுள்ள துறைக்கு (f) உரியது. அதாவது நிட்டைத் துறைக்குரியது. வெளித்துறை தொல்காப்பியம் சம்பந்தமானது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாத சைவம் காமத்தில் தொடங்கி ஞானத்தில் முடியும் சாதனை. அதனைக் கைலாசபதி அவர்கள்,

> **காமத்தின் நோக்கு ஞானத்தின் முதற்படியில் முடியும். அங்கே ஒரு கேட்டல் நிகழும். அதே பாதையில் அமிர்தத்தில் ஒரு கேட்டல் நிகழும். அதுதான் ஞானபூசையில் கேட்டல். ஞானத்தின் கேட்டலுக்குத்தான் வியாகரணம் அங்கம். இந்த ஞானத்துறைக ளுக்கு ஆறங்கம் வரும். ஞானத்தில், சிந்தித்தலிற் தொழிற்படும் முறை:மோக்ஷநோக்கு, மோக்ஷம் அமிர்தம், ஞானத்தில் 2ம் படி சிந்தித்தல் 6 அங்கம். அந்தத் துறையில் வியாகரணம் தான் வேதாங்கம். சிவனடியே சிந்திக்கும் ஞானம்**[124]

என்கிறார்.

ஞானத்தில் முடியும் கேட்டல் போலவே கீழேயும் அமிர்தம் முதலிய வற்றுக்கும் கேட்டல் உண்டு. அமிர்தத்தில் வரும் கேட்டல் ஞானபூசையில் கேட்டல் என கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார். ஞானத்தின் வெளித் துறைக்கு உள்ளே இருக்கும் துறையில் முடியும் சாதனை ஒன்று உண்டு. அது நல்ல சிவஞானம். அதன் தொடக்கம் மோக்ஷ தளத்தில் உள்ள நல்ல சிவதன்மம். நடுவில் உள்ளது அமிர்ததளத்தில் உள்ள நல்ல சிவயோகம். இம்மூன்றும் திருக்களிற்றுப்படியாரில் எடுத்துப்பேசப்படுகிறது.[125] உரையாசிரி யர்கள் இம் மூன்றையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்களுடன் இணைத்துக்காட்டி இந்நான்கையும் மூன்றுக்குள் அடக்கலாம் எனக்காட்டுகின்றார்கள்.[126] இது பொருத்தமன்று. இதன் தொடக்கம் ஒரு தளம் மேல் அதாவது மோக்ஷதளம். சண்டேஸ்வரரைக் குறிப்பிடும்போது அவர் தந்தை "சிவதன்மம் சிதைத்தான்" எனத் தேவாரத்தில் வருகின்றது. சண்டேஸ்வரர் செய்தது பற்றுக்களை விட்ட மோக்ஷதளத்தில் ஆரம்பமாகும் சிவதன்மம் ஆகலாம். சுழுத்தி ஞான தளத்தின் 4ம் தளத்தில் குறிப்பிடப்படும் நெற்றியில் சுழுத்தியாகலாம். கைலாசபதி அவர்கள் "சண்டேஸ்வரர் கோடரியால் தாதையைத் தாளற வீசியது" பரசுழுத்தி நிலையில் என்பார். அவரது கணிப்பின்படி 5 x 5 x 5 x 5 = 625 சுழுத்தி ஒருவரால் அடையப்படலாம். அதில் பரசுழுத்தி எப்புள்ளியில் உள்ளது என எமக்குத் தெரியாது. அனைத்தையும் உரையாசிரியர்கள் பொதுவாகச் சுழுத்தி என்பர். ஞானதளத்தில் தொகையடியார்களுள் முன்னே குறிப்பிட்ட (2,2,2,4,5) ஐந்து வகையினரை விட எஞ்சியிருக்கின்ற நான்கு வகையினரும் ஞான தளத்தில் சாதனை செய்வோர். இந்த ஒன்பது தொகையடியாரையும் பெரியபுராணம் தொகையடியார் எனச்சுட்டுவது சரி.[127] அர்த்தம் முதல் அமிர்தம் ஈறாக மேல்நோக்கிய சாதனை நோக்கு வைதிகநெறி. அவர்களுக்கு ஆகமங்கள் உதவா. காமம் முதல் ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈறாக உள்ள நோக்கில் மேலே மேலே உயர்ந்து போதல் நாற்பாத சைவம். அவர்கள் உடன்போக்காளர்கள். அதாவது திருவருளுக்கு உடன்பட்டு இறைவனைத் தலைவனாக ஏற்றுக் கூடிப்போவோர். திருவருள் தமிழ் சம்பந்தமானது; ஆகமம் சம்பந்தமானது. ஆகமம் நாற்பாத சைவம் பற்றிப் பேசுவது நான்கு வகை தீக்ஷைகளும் - சமய தீக்ஷை, விசேட தீக்ஷை, நிர்வாண தீக்ஷை, ஆசார்ய அபிஷேகம் ஆகிய தீக்ஷைகள் ஆகமமுறைகளைப் பற்றி நிற்பதால் வெவ்வேறு பதங்களைப் பெறுவிக்கின்றன. உதாரணம் கந்த, சண்ட, கணாதீச, சண்டீச பதங்கள், சித்தியாரில் "தானமியாகந் தீர்த்த மாச்சிரமந் தவங்கள்...."[128] என்ற செய்யுளில் தீக்ஷைக் கிரமத்தின்படி நிற்போர் பதங்களை அடைவர் என்றும், மீண்டும் பூவுலகிற்கு வந்து குருவருளால் ஞானம் பெற்றுப் பரமுத்தி அடைவர் என்றும் விளக்கப்பட்டுள்ளது. இதனைக் கைலாசபதி அவர்களும் விளக்கியுள்ளார்.[129] மேலும் கேட்டல் முதல் நிட்டை வரையான துறைகளை இணைத்துள்ள ஞானநோக்கைச் சொல்வதுதான் ஆகமம் என்றார். சித்தியார் "அருமறை யாகம முதனூலனைத்துமுரைக்கையினான்.....",[130] "கேட்டலுடன் சிந்தித்த றெளித னிட்டை கிளத்தலென வீரிரண்டாங்கிளக்கின் ஞானம்......"[131] என்கிறது. இவற்றை ஆகமக்காட்சி என்கிறார் கைலாசபதி அவர்கள். (அதற்கு மேலே அதனுடன் தொடர்புடையது முடிந்த ஞானம்.)

*2.2.2.4.7 சித்தாந்தத்துறைகள்*

சித்தாந்தத் தளத்தில் மூன்று துறைகள் உள்ளன. அவை முறையே துரியம், சுழுத்தி, சொப்பனம் என்பன.[132] இவ் அவஸ்தைகளை ஐந்து எனச்சில சாத்திர நூல்கள் சொல்கின்றன. ஆனால் உபநிடதங்களில் நான்கே பேசப்படுகின்றன. அதாவது துரியத்துள் துரியாதீதத்தை அடக்கி சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்பவற்றையே உபநிடதங்கள் பேசுகின்றன. திருமூலர் இவ் ஐந்தையும் ஐந்தால் பெருக்கி இருபத்தைந்து அவஸ்தா பேதம் (5x5=25) பற்றிக் குறிப்பிட்டார். சித்தாந்த நோக்கை எட்டிய வியாசர் தமது பிரமசூத்திரத்தில் இவ் அவஸ்த பேதங்களை நன்றாக விளக்கியது பொருத தமே. சிவஞான முனிவர் கீழாலவத்தை, மத்தியாலவத்தை, மேலாலவத்தை என்றெல்லாம் பிரித்துக் கூறினாலும் அவை தெளிவாக விளங்கவில்லை. மாண்டுக்கிய உபநிடத உரையில் ஆத்மா அவஸ்தையில் கீழ்நோக்கி இறங்கியும் மேல் நோக்கி உயர்ந்தும் விடயங்களை அறிவது பற்றிக் குறிப்பிடும்போது விராட், இரணியகர்ப்பர், பிராக்ஞன் போன்ற சொற்களை உபயோகிக்கிறார். திருமந்திரத்திலும் இவை வருகின்றன. ஆனால் அனுபவத்தில் கண்டவர்கள் கூறுவதற்கும் உரையாசிரியர் தரும் விளக்கத்திற்கும் வெகு வேறுபாடு உண்டு.[133] கைலாசபதி அவர்கள் விராட், இரணியகர்ப்பர் போன்றவற்றைச் சரியாக விளக்குகிறார். சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த பொன்வண்ணத்தந்தாதி இரணியகர்ப்பரை நேர்க்காட்சியாகக் கண்ட வர்ணனை எனக் கூறுகிறார் கைலாசபதி அவர்கள்.[134]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### *2.2.2.4.8 முடிந்த சத்தியத்துறைகள்*

முடிந்த சத்தியத்தில் இரண்டு துறைகள் உண்டு. ஒன்று பூதம். மற்றையது துரியாதீதம். பூதத்தில் ஆரம்பிக்கும் சாதகம் அதிசிரேஷ்டமானது எனக்கைலாசபதி அவர்கள் கூறியுள்ளார். அத்துடன் முடிந்த சத்தியத்தில் ஓங்காரம் முன்னிலை ஆனதென்றும் அது சுத்தவித்தையையும், ஈசுவரனையும் பொருத்தும் பொருத்து என்றுங் கூறியுள்ளார்.

வேதாந்த நூல்களில் விரிவாகக் கூறப்படும் ஞானபூமிகள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார்.[134]

(I கைவல்லிய நவநீதம் செய். 150, 151, பக். 434)

II. வராக உப. iv 1 - 2.)




### *2.2.2.4.9 சத் துறை*

சத்தில் ஒரு துறை மட்டுமே உண்டு. அதாவது பொறிபுலன்கள் மட்டுமே. சத் நோக்கை எட்டக்கூடியவர்கள் சமயகுரவர் நால்வர். அவர்களுக்கே மனம், பொறி, புலன்கள் வேறு ஆன்மா வேறு என்ற தெளிவு உண்டாகும். அவர்களுள்ளும் சம்பந்தரும் சுந்தரரும் சித் வரை நோக்காக எட்டுவார். சத்துக்கு மேலே சிவம் வரை ஆளாக நின்று காண இயலாது. ஆகையால் அதனைப்பற்றி விரிவாகக் கூறமுடியாது. 19ம் தளமான அகண்டாகாரம் என்ற அகங்காரத்தையும், 20ம் தளமான சித் என்ற புத்தியையும், 21ம் தளமான முடிந்த ஞானம் என்ற சித்தத்தையும் பிரித்தறிய உதவும் நோக்குகளாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனந்தம் அல்லது திருவடி என்ற தளத்தில் புருடன் தன்னை யார் என்று அறிய உதவும் நோக்காகலாம். சித்தாந்த சாத்திரங்களும், ஆகமங்களும் கூறும் இராகம், வித்தை, காலம், நியதி, கலை ஆகியவை வெறும் நூலறிவாக மட்டுமே உள்ளன. சிவம் வரை நோக்கு எட்டக் கூடியவர்களே இவற்றை அறியவல்லவர். அப்பால் மாயை முதல் பரப்பிரமம் வரை உணர்வில் ஒரேவழி அறியலாமே அன்றி வேறு எவ்வழிகளிலும் அறியமுடியாது.

### *2.2.3 மூன்றாம் கண்: மனோவிருத்தி*

கைலாசபதி அவர்களின் ஸ்மிருதியில் 3ம் கண் மனோவிருத்தி எனப்படும். இதனைத் தவக்கண், நெற்றிக்கண், மானக்கண், ரசக்கண் என்றும் அவர் அழைப்பர். சிவனது நெற்றிக்கண் மறைந்துள்ளதுபோல மனிதர்களுக்கு இதுவும் மறைந்துள்ளது. அதனைக் கைலாசபதி அவர்கள்,

வெளிக்கண் இரண்டும் யாருக்கும் உண்டு

மானக்கண் ரசக்கண் மறைந்துள்ளது.[135]

என்கிறார். மனிதன் அதனை வெளிப்படுத்த அதிதீவிர முயற்சி எடுக்க வேண்டும்

"தவம்" என்ற சொல் "தப்" என்ற வினையடியாகப் பிறந்து "எரி" என்ற பொருளைத் தரும். அதாவது அகத்தில் இருக்கும் அழுக்குகளை எரிப்பதே தவம். மனிதனுக்குள்ள காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய அறுவகைகளை அழிப்பதே அவனது முயற்சி. திருவள்ளுவர் கூட இவை ஆறையும் மூன்றுக்குள் அடக்கி "காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்" (அதி.36. குற.10) என்றார். இதனைக் கைலாசபதி அவர்களும் எடுத்துக்காட்டுகிறார். கந்தபுராணமும் மனோவிருத்தியாகிய தவத்தை வற்புறுத்திக் கூறுவதற்கென்றே எழுந்த நூல் என்பது கைலாசபதி அவர்களின் கருத்து.

#### *2.2.3.1 மனோவிருத்தி நிலைகள்*

மனோவிருத்தியாகிய தவத்தில் 5 x 5 = 25 நிலைகள் உள்ளன. அவை கலைகளோடு தொடர்புடையன. (முன்னரும் கூறப்பட்டது 2.2.2.1.4) சைவசித்தாந்தம் கலைகளை நிவிருத்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என ஐவகைப்படுத்துகிறது. கலைகள் மூலமே இறைவன் ஆன்மாக்களுக்கு அறிவைத் தூண்டுகிறான் இக்கலைகளுக்குரிய அதிதேவதைகள், அதாவது சக்திகள் மனதைத் தூண்ட, மனம் ஆன்மாக்களின் அறிவைப் பிரகாசிக்கச் செய்கிறது என்பார் கைலாசபதி அவர்கள். மனதைத் தூய மேம்பாட்டு வழியில் விருத்தி செய்வதன் மூலம் அடையும் எழுச்சி நிலைகளை 25 வகைகளாகப் பிரித்துக் காட்டுகிறார். அவை பின்வருமாறு அமைகிறன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை ஆகிய பஞ்ச கலைகளும் நிவிர்த்தியில் நிவிர்த்தி, நிவர்த்தியில் பிரதிஷ்டை, நிவிர்த்தியில் வித்தை, நிவிர்த்தியில் சாந்தி, நிவிர்த்தியில் சாந்தியதீதை என ஐவைந்தாகும். இவ்வாறே ஏனைய கலைகளும் ஐவ்வைந்தாகி இருபத்தைந்தாய் அமையும்.

*2.2.3.2 சமய - மார்க்க வேறுபாடு*

மேற்படி பஞ்சகலைகளை ஆதாரமாக வைத்து சமயம், மார்க்கம் என்னும் இரு சொற்களுக்கும் வேறுபாடு காட்டுகிறார் கைலாசபதி அவர்கள். அறுபகைகளைப் போக்கச் செய்யும் சாதகம் சமயம் என்றும், இது மனோ விருத்தியாகிய சாந்தியதீதைச் சாந்திகலையில் அடங்கும் என்றும் கூறியுள்ளார். சிவஞான முனிவர் "மார்க்கர் கண்ட நூல் ஓதி" (சுபக். செய். 3) என்ற சித்தியார் செய்யுளில் "மார்க்கர்" என்ற பதம் ஞானிகளைக் குறிக்கும் என்றார். ஆனால் கைலாசபதி அவர்களோ மார்க்கர் என்போர் "தப்புவதற்கு வழியாது என ஏங்குவோர்"[136] எனப்பொருள் கொண்டார். இது வித்தைச் சாத்தியதீதை கலையில் அடங்கும். அதனை,

> 5 கலை 25 மார்க்கம் வித்தைச் சாந்தியதீதை. வித்தையைச் சாதிப்பது நாற்பாத சைவம். சமயம் சாந்தியதீதைச் சாந்தி விருத்தி.[137]

எனக்கூறிச் சமயத்துக்கும், மார்க்கத்துக்கும் வேறுபாடு காட்டுகிறார். ஆனால் தற்கால கல்விசார் அறிஞர்கள் சமயம், மார்க்கம் எனும் இரு சொற்களுக்கும் ஒரே பொருளையே வழங்குகின்றனர். சிவஞான முனிவர் அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் (புருடன்) இவ்வைந்தும் சடமாதலால் இவைகளைக் கருவியாகக் கொண்டு ஆன்மா எவ்வாறு அறிதலைச் செய்யும் என்று வினாவி, எழுத்துக்கள் சடமாதலால் சிவமூர்த்தங்களான பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய ஐவரும் அதிதேவதை களாக அவற்றைச் செலுத்துவார்கள் என்றும், மேற்கூறிய ஐந்து அந்தக் கரணங்கள், ஐந்து பிராண கலைகள், ஐந்து சிவமூர்த்தங்கள் ஆன்மாவுடன் இணைந்த இடத்து ஆன்மா அறிதல் தொழிலைச் செய்யும் என்றும் கூறினார். "உதித்தொன்றை உள்ளம் உணர்தல்" (4 - 1 - 24) என்ற சித்தியார் செய்யு ளுக்குச் சிவஞான முனிவர் உள்ளம் ஆன்மா என்றார். கைலாசபதி அவர்களின் சிந்தனைகளின் படி உள்ளம் நாம் சாதாரணமாகச் சொல்லும் அந்தக்கரணங் களோடு புத்தியின் உட் கண்ணான ஒரு அந்தக்கரணமாகவே கொள்ளப்படுகிறது. ஆனால் சிவஞான முனிவரைக்கற்ற மாணவர்கள் சிவஞான முனிவர் உள்ளம் என்பதற்குச் சட அந்தக்கரணங்களுடன் வைத்துச் சடமாதலின் என்று சுட்டியதற்கு என்ன விளக்கம் கூறுவார்களோ தெரியாது. இதிலிருந்து கைலாசபதி அவர்கள் கூறுவது போல இவை சடக்கருவிகளாயினும் செலுத்துவோனின் (அதி தெய்வங்களின்) அமலத்தன்மையைப் பொறுத்தும் அதிசிரேஷ்டமான காரியங்களை அறிய வாய்ப்பளிக்கும் என்பது பொருத்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியதீதையில் சாந்தியதீதை என்ற 25ம் நிலையே தவத்தின் உச்சம் அல்லது முடிவு எனப்படும். அதன் விளைவாக ஒருவர் தாதுக்களை, அதாவது பீஜங்களைப் பார்க்கலாம். ஆதலால் அக்ஷரங்கள், மந்திரங்கள், வேதாங்கங்கள் அனைத்தையும் தாதுக்களைக் கண்டவர்களே திடமாக அறியமுடியும். அதனைக் கைலாசபதி அவர்கள்,

தாது தெரிகிறது. மோக்ஷம் - சத்தியம் என்று பார்த்தால்

தாதுக்களிலே சர்வ உலகங்களும் உதிப்பது.[138]

என்கிறார். அதாவது மனோவிருத்தி, புத்திவிருத்தி, அகங்காரவிருத்திகளில் உயர்ந்த நிலைகளை அடைந்தவர்களே தாதுக்களை அறிவார்கள். பிரமா தாதுக்களை முற்றாகக் கண்டவர். ஆதலாற்றான் அவர் சர்வலோகங்களையும் அதிலிருந்து தோற்றுவிக்கிறார் என்கிறார் கைலாசபதி அவர்கள். மேலும் மனோவிருத்தியைச் சுலபமாக விளங்கவோ அல்லது விளங்கப்படுத்தவோ முடியாது என்றுங் கூறியுள்ளார். அதாவது "பெரிய முனிவர்களுக்கே தவம் முடியவில்லை" என்கிறார்.[139] அகங்கார விருத்தி, புத்திவிருத்தி முதலியவற்றில் மனிதன் எவ்வளவு உயர்ந்தாலும் பூலோகத்தைத் தானும் பூரணமாக அறியமுடியாது. பூலோகத்தை ஒருவன் அறிவதாயின் அவனுக்கு மனோவிருத்தி கைவந்திருக்க வேண்டும் என மேலும் கூறினார்:

அகங்கார விருத்தி, புத்திவிருத்தியில் பூலோகத்தை தானும் அடைய முடியாது. மனோவிருத்தியாலே தான் பூலோகப் பிராப்தி.[140]

என்கிறார். இதிகாசபுராணங்களில் சூரபத்மன் கடுமையான தவத்தை மேற்கொண்டு பிருதிவி அண்டங்கள் ஆயிரம் கோடியில் ஆயிரத்தெட்டு அண்டங்களை மட்டுமே ஆளும்உரிமை பெற்றான் என்றும், அவன் வெவ்வேறு உலகங்களுக்குச் சென்று அவ்வவ் உலகங்களில் காணும் அதிதேவதைகளை வென்றான் என்றெல்லாம் கூறப்படுவது வெறும் கட்டுக்கதையல்ல. கலியுகம் தவிர்ந்த ஏனைய யுகங்களில் அவை நடக்கக்கூடியதாக இருக்கலாம் எனக் கைலாசபதி அவர்கள் கூறியுள்ளார். அத்துடன் மனோவிருத்தி, சித்தவிருத்தி, உள்ளவிருத்தி அடைவதால் கிடைக்கக்கூடிய உலகங்களையும் அட்டவணைப்படுத்தியுள்ளார். அவை பின்வருமாறு அமைகின்றன:

| | | |
|---|---|---|
| மனோவிருத்தி | - | பூலோகம். |
| சித்தவிருத்தி | - | புவர்லோகம் |
| மனம் + சித்தவிருத்தி | - | சுவர்லோகம் |
| உள்ளவிருத்தி | - | மகர்லோகம் |
| உள்ளம் + மனோவிருத்தி | - | ஜனலோகம் |
| உள்ளம் + சித்தவிருத்தி | - | தவலோகம் |
| மனம் + சித்தம் + உள்ளவிருத்தி | - | சத்தியலோகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோவிருத்திதான் இறுதி முடிவன்று. அவற்றுக்கப்பால் உட்கண்கள் உண்டு என்றும் கூறியுள்ளார்.

பிரபஞ்சத்தை நோக்கி மனதைத் திருப்பிப் புத்திவிருத்தித் தளங்களை அகங்கார முதல் விருத்தியாகிய பிரேமை, ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம் முதலானவற்றுடன் கீழ்நோக்கியும், மேல்நோக்கியும் சாதித்த லாகிய ஒரு தவநிகழ்ச்சி வர்ணனையாகவே இம்மனோவிருத்தி அமைகிறது எனக்கூறி இப்பகுதியை நிறைவு செய்கிறேன்.

### *2.2.4 பன்னிருவிருத்திகள்: உட்கண்கள்*

கைலாசபதி ஸ்மிருதியில் அகங்காரவிருத்தி, புத்திவிருத்தி, மனோவிருத்தி தவிர்ந்த ஏனைய பன்னிரு விருத்திகளும் சதாசிவமூர்த்தியின் உள்ளீடான கண்களாகவே உருவகித்து விளக்கப்படுகின்றன. அந்தவகையில் அகங்கார விருத்தியின் உட்கண்ணாகச் சித்தவிருத்தியும், சித்தவிருத்தியின் உட்கண்ணாகச் சித்தலயமும், சித்தலயத்தின் உட்கண்ணாகச் சித்தத்தெளிவும், சித்தத்தெளிவின் உட்கண்ணாகச் சித்த அழிவும் இடம்பெறுகின்றன. இவற்றைச் சதாசிவமூர்த்தியின் வலக்கண் எனவும் அழைப்பர். அதேபோல் புத்திவிருத்தியின் உட்கண்ணாக உள்ள விருத்தியும், உள்ளவிருத்தியின் உட்கண்ணாக உள்ள லயமும், உள்ளலயத்தின் உட்கண்ணாக உள்ளத்தெளிவும், உள்ளத்தெளிவின் உட்கண்ணாக உள்ள அழிவும் இடம்பெறுகிறது. இவற்றைச் சதாசிவ மூர்த்தியின் இடக்கண் எனவும் அழைப்பர். அதேபோல் மனோவிருத்தியின் உட்கண்ணாக மனோலயமும், மனோலயத்தின் உட்கண்ணாக மனத்தெளிவும், மனத்தெளிவின் உட்கண்ணாக மன அழிவும், மனஅழிவின் உட்கண்ணாக மனமுளையும் இடம்பெறுகின்றன. இவற்றைச் சதாசிவ மூர்த்தியின் நெற்றிக்கண் எனவும் அழைப்பர். மனோவிருத்தி, புத்திவிருத்தி, அகங்காரவிருத்தி என்பவற்றை விளக்கிய கைலாசபதி அவர்கள் அவற்றுக்கு மேலே உள்ள ஏனைய பன்னிரு விருத்திகளையும் விளக்குவது கடினம் என்பதனால் அங்காங்கே சில குறிப்புக் களை மட்டும் தந்துள்ளார். அந்த வகையில் அவற்றை ஒன்றுதிரட்டி இனி ஆராய்வோம்

#### *2.2.4.1 நான்காம் கண்: சித்தவிருத்தி*

பதினைந்து கண் விருத்தியில் நான்காவது விருத்தியாக அமைவது சித்தவிருத்தி. இதனை அடைந்தவர்களுடைய விழுமியங்கள், மதிப்புக்கள் சாதாரண உலகத்தவர்களிலும் பார்க்க வேறுபட்டிருக்கும். கைலாசபதி அவர்கள் இந்நூற்றாண்டில் இதனை அடைந்தவர்களாக இரத்தினசபாபதி உபாத்தியாயரைச் சுட்டுகிறார்.[141] கைலாசபதி அவர்களுக்கும் 1954ல் இவ்விருத்தி வெளித்தது.[142] அகங்கார விருத்தியைப் போலவே அதன் உட்கண்ணாகிய சித்தவிருத்தியிலும் பிரேமை முதல் பிரமம் வரை எட்டு நிலைகள் உண்டு என்கிறார் கைலாசபதி அவர்கள். சித்தவிருத்தியில் அருள்நோக்கு என்ற நிலையை அடைந்த ஒருவர் மேலே சத்தியம், ஞானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோவிருத்தி

| நிவர்த்தி கலை | பிரதிஷ்டா கலை | வித்தியா கலை | சாந்தி கலை | சாந்தியதீதகலை |
|---|---|---|---|---|
| நிவர்த்தியில் நிவர்த்தி | பிரதிஷ்டையில் நிவர்த்தி | வித்தையில் நிவிர்த்தி | சாந்தியில் நிவிர்த்தி | சாந்தியதீதையில் நிவிர்த்தி |
| நிவர்த்தியில் பிரதிஷ்டை | பிரதிஷ்டையில் பிரதிஷ்டை | வித்தையில் பிரதிஷ்டை | சாந்தியில் பிரதிஷ்டை | சாந்தியதீதையில் பிரதிஷ்டை |
| நிவர்த்தியில் வித்தை | பிரதிஷ்டையில் வித்தை | வித்தையில் வித்தை | சாந்தியில் வித்தை | சாந்தியதீதையில் வித்தை |
| நிவர்த்தியில் சாந்தி | பிரதிஷ்டையில் சாந்தி | வித்தையில் சாந்தி | சாந்தியில் சாந்தி | சாந்தியதீதையில் சாந்தி |
| நிவர்த்தியில் சாந்தியதீதை | பிரதிஷ்டையில் சாந்தியதீதை | வித்தையில் சாந்தியதீதை | சாந்தியில் சாந்தியதீதை | சாந்தியதீதையில் சாந்தியதீதை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநந்தம், பிரமம் என்பவற்றை நோக்காக வைத்து உபாசிப்பதால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற (ஆன்மீக) நிலையை அடைகிறார். இவர் வெளிக்கண்ணாகிய அகங்கார விருத்தியில் அதேபோல் நான்கு நிலைகளை அடைந்தவர்களிலும் பார்க்கக் கூடிய சிறப்புடையவர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அகங்கார விருத்தியில் ஆரியத்துவம் அடைந்து சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் என்ற நான்கையும் உபாசிப்பதால் பெறப்படும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற வர்ணத்தவர்களா அன்றிச் சித்தவிருத்தியில் அருள்நோக்குப் பற்றி வந்த அரசர், அந்தணர், வணிகர், வேளார்களா விசேடமானவர்கள்? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு கைலாசபதி அவர்கள் சித்தவிருத்தி அகங்கார விருத்தியிலும் ஆழங்கூடியது என்றும், அதுவே விசேடமானது என்றும் கூறியுள்ளார். அதனை,

> சித்தவிருத்தியில் அந்தணராதியோர் அகங்காரவிருத்தியில் பிராமணரா தியோரில் விசேடம்.[143]


என்கிறார். அதனைப் பின்வருமாறும் விளக்கலாம் :

**அகங்காரவிருத்தி (1ம் கண்)**




*1படி இறக்கம்*

**சித்தவிருத்தி**




*1படி ஏற்றம்*

தொடக்ககாலத்திலும் இவைபற்றிய ஓரிரு கருத்துக்கள் கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் வந்துள்ளன. எனினும் சிந்தனை முதிர்ச்சியுற்ற காலத்தில் எழுந்த கருத்துக்களையே நாம் இங்கு தந்துள்ளோம். அத்துடன் சித்தவிருத்தி என்ற கண்விருத்திக்கு மேலே உள்ள கண்கள் வரிசைக்கிரமத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிதான் ஒருவருக்கு வெளிக்கும் என்ற நிலையும் இல்லை. திருவருளின் துணைப்படி மேற்கண்ணோ கீழ்க்கண்ணோ வெளிக்கலாம். ஆனால் மேற்கண் வெளித்த ஒருவரைக் கீழ்க்கண் வெளித்தோர் மதிப்புடன் நோக்குவர் என்கிறார் கைலாசபதி அவர்கள்.

### *2.2.4.2 ஐந்தாம் கண்: உள்ளவிருத்தி*

புத்திவிருத்தியின் உட்கண்ணாக அமைந்துள்ள உள்ளவிருத்தி அடைந்த ஒருவராலேதான் அதி தெய்வங்கள் உட்பட அனைத்தையும் அறியமுடியும். இது 15 கண்விருத்தியில் 5ம் இடத்தில் உள்ளது. வெளிக்கண்ணாகிய புத்திவிருத்தி சுவைக்கண் என்றும், அது உலகைச் சுவைக்கும் முறையில் தொழிற்படும் என்றும் கூறிய கைலாசபதி அவர்கள் அதன் உட்கண்ணாகிய உள்ளவிருத்தி தெய்வத்தைக் கண்டு பணிசெய்தல் என்று கூறுகிறார். அதாவது,

**புத்தி உட்கண். (ரசக்கண்ணுக்கு) உட்கண்**
**உள்ளவிருத்தி இதுதான் பணி.** [144]

என்கிறார். அந்த வகையில் தேவார முதலிகளுள் ஒருவரான அப்பரடிகள் "என்கடன் பணி செய்து கிடப்பதே" [145] என்று பாடிய தேவார அடிகள் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது. ஆனால் இச்சொற்றொடரை இக்காலத்தவர் சமூக சேவைக்கு விருது வாக்கியமாகப் (Motto) பயன்படுத்துகின்றனர். கைலாசபதி அவர்கள் இது தவறான ஒன்று என்கிறார். மேலும் அறுபத்து மூன்று நாயன்மார் களும் பணிசெய்யத் தெரிந்தவர்கள் என்றும், அந்தவகையில் அவர்களுக் கிடையே ஒரு பொதுமை நோக்குண்டு என்கிறார். ஆனால் அவர்களெல்லோரும் சீவன் முத்தர்கள் என்பது சரியாகாது என்பதும் கைலாசபதி அவர்களின் கருத்து. "போதோ விசும்போ புனலோ பணிகளது பதியோ" [146] என்று தொடங்கும் செய்யு ளில் கூட மாணிக்கவாசகர் உள்ளம், மனம், சித்தம், உள்ளலயம் என்பவற் றையே குறிப்பிடுகிறார் என்பதும் கைலாசபதி அவர்களின் கருத்து. அவர்

**உள்ளவிருத்தி (பணிகளது பதியோ) ஆளை நேரே காண்பது.** [147]

என்கிறார். அத்துடன்,

**உள்ளவிருத்தி எப்படி இருக்கும் என்பது ஒரு அளவுக்குத் தெரிந்தது (1955)** [148]

என்றும் குறிப்பிட்டுள்ளார். கைலாசபதி அவர்கள் தமது ஆன்மீக (ஸ்மிருதி) விருத்தியொன்றை ஆண்டு குறிப்பிட்டுச் சொல்லுகிறார். கலியுகத்துக்கு விருத்தி மார்க்கம் ஒன்றே உகந்தது. விருத்தி முற்றுப்பெற்றது என்று சொல்லிவிட்டாலும் ஓரளவுக்கு அவ்விடயம் பற்றிக் குறிப்பால் உணரமுடியும் என்ற விடயத்தை இங்கு அப்படியே தருகிறார். அத்துடன் உபநிடதம், பிரமசூத்திரம் அடங்கிய உண்மை வேதாந்தம் சுட்டிக்காட்டும் உயர்நிலை அடுத்த விருத்தியாகிய மனோலயம் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.2.4.3 ஆறாம்கண் : மனோலயம்

மனோலயம் கைலாசபதி அவர்களின் ஸ்மிருதியில் 6ம் கண்ணாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது மனோவிருத்தி என்ற வெளிக்கண்ணின் உட்கண்ணாக அமைந்துள்ளது இவ்விருத்தி. இது உண்மை வேதாந்தம் (உபநிடத வேதாந்தம்) கூறும் இறுதிநிலை. அதாவது "இனி மீளப்பிறப்பானல்லன், இனி மீளப்பிறப்பானல்லன்" என்ற நிலை.[149] இதனைக் கைலாசபதி அவர்கள்,

> மனோலயம் முதலியவைகளெல்லாம் கிரமமாகச் சாதிப்பனஅல்ல. ஒன்றை எடுத்தக்கொண்டு சாதிப்பதே கதியாகும். வேதாந்தம் மனோலயம் என்பர். அது கதி, முடிவல்ல. பிரமசூத்திரம் மீளப்பிறப்பான் அல்லன் என்பதும் சரியே. கதியைப்பற்றின படியால் சேர்ந்து வருகிற கிரமம் லோகப்பிராப்தி மீளுகிறது ஆகலாம். அதனோடு கதியும் ஆகலாம். சாதக விசேஷத்தால் மனோலயம் தன்னளவில் நெற்றியில் சாக்கிரம் இதுதான் வைகுந்தம்.[150]

என்கிறார்.

இக்காலத்தவர், விசேடமாக வெளிநாட்டவர் இந்தியதத்துவ ஞானம் என்றால் சங்கரவேதாந்தமே என்பார். அதாவது உபநிடதத்திற்குச் சங்கரர் கூறிய விளக்கமே எனக் கொண்டு அதற்கு (உபநிடதத்திற்கு) மேலே ஒன்றும் இல்லை என முடிவுகாட்டினர். இதனையே விவேகானந்தர், இராமகிருஷ்ணர் போன்றவர்களும் ஸ்திரப்படுத்தனார். ஆனால் மனோலயத்திற்கு மேலேயும் ஆன்மீக உயர் நிலைகள் உண்டு என்பார் கைலாசபதி அவர்கள். "சும்மாயிரு சொல்லற என்றலுமே அம்மா பொருள் ஒன்று மறிந்திலனே"[151] என்று அருணகிரிநாதர் சுட்டியதும் இங்கு குறிப்பிட்டநிலையையே.

### 2.2.4.4 ஏழாம் கண்: சித்தலயம்

சித்தலயம் பதினைந்து கண்விருத்தியில் ஏழாம் இடத்தில் இருக்கிறது. அகங்கார விருத்தியின் உட்கண்ணின் உட்கண்ணான இதில் எட்டு நிலைகள் உண்டு. அதாவது பிரேமை, ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம், சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் என்ற நிலைகள். விலை, மானம் தெரியும் முறையில் இக்கண் திறந்தவர் அதிஉயர்ந்த அளவுகோலை உடையவராவர். இவ்விருத்தியை அடைந்த உதாரண புருஷராக திருவள்ளுவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.[152]

### 2.2.4.5 எட்டாம் கண்: உள்ளலயம்

புத்திவிருத்தியின் உட்கண்ணாகிய உள்ளலயம் பதினைந்து கண்விருத்தியில் எட்டாம் கண்ணாகும். இதனைச் சிவஞானபோதலயம் என்றும் கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதாவது,

> உள்ளலயம் சிவஞானபோதம். இடக்கண்ணின்
>
> உட்கண்ணுக்கு உட்கண்.[153]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச்சிந்தனைகளில் வருகிறது. இவ்விருத்தி கைவரப்பெற்றவராக மாணிக்கவாசகர் சுட்டப்படுகிறார். "போதோ விசும்போ புனலோ பணிகளது பதியோ" என்ற திருக்கோவையார்ச் செய்யுளில் போதம் என்பது உள்ளத்தைச் சுட்டும் என்கிறார் கைலாசபதி அவர்கள்.

### *2.2.4.6 ஒன்பதாம் கண்: மனத்தெளிவு*

மனோவிருத்தியின் உட்கண்ணின் உட்கண்ணாக இருப்பது மனத்தெளிவு. மனோவிருத்தியில் உள்ளது போல இதிலும் 25 கலைகள் இருக்கின்றன. இவ்விருத்தி தெளிந்தவர்களாக திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் அகத்தியரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[155]

### *2.2.4.7 பத்தாம் கண்: சித்தத்தெளிவு*

அகங்கார விருத்தியின் உள்ளே 4ம் படையில் உள்ள கண் சித்தத்தெளிவு எனப்படும். பதினைந்து கண்வரிசையில் இது பத்தாம் இடத்தில் உள்ளது. மனத்தெளிவுக்கு மேலே இலக்கியம் சொல்லமுடியாது. சித்தம் தெளிந்தவர்களுக்கும் இலக்கியம் காட்டமுடியாது என்கிறார் கைலாசபதி அவர்கள். சித்தம் தெளிந்த ஒருவரின் தன்மை எதுவென்று திருமூலர் தம்குருவை வினாவிய போது அவர்,

> **வித்த கமாகிய வேடத்தர் உண்ட ஊண்**
>
> **அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாஞ்**
>
> **சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்**
>
> **முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே.**[156]

என்று குறிப்பிட்டிருக்கலாம் எனக் கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார்.

### *2.2.4.8 ஏனைய கண் விருத்திகள்*

ஏனைய விருத்திகள், அதாவது சித்தஅழிவு, உள்ளத்தெளிவு, உள்ளஅழிவு, மனஅழிவு, மனமுளை என்பன அதிநுட்பமானவை என்பதனால் கைலாசபதி அவர்கள் தமது சிந்தனையில் இவை பற்றி அதிகம் கூறவில்லை. ஆனால் இவை வெளித்தால் என்னென்ன விடயங்களை அறியலாம். என்பதைக் குறிப்பால் உணர்ந்து சிறிது கூறியுள்ளார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மனத்தெளிவு; | சுழுத்தி |
| சித்தத்தெளிவு; | துரியம் |
| மனத்தெளிவு + சித்தத்தெளிவு; | துரியாதீதம் |
| உள்ளத்தெளிவு; | பூதம் |
| உள்ளத்தெளிவு + மனத்தெளிவு; | மனம், பொறி, புலன். |
| உள்ளத்தெளிவு + சித்தத்தெளிவு; | அகங்காரம் |
| மனத்தெளிவு + உள்ளத்தெளிவு + சித்தத்தெளிவு | புத்தி |
| மனஅழிவு; | சித்தம் |
| சித்தஅழிவு | புருஷன் |
| மனஅழிவு + சித்தஅழிவு | அராகம் |
| உள்ளஅழிவு; | வித்தை |
| உள்ளஅழிவு + மனஅழிவு; | கலை |
| உள்ளஅழிவு + சித்தஅழிவு; | மாயை |
| மனஅழிவு + உள்ளஅழிவு + சித்தஅழிவு | உருத்திரன் |
| மனமுளை; | ஈஸ்வரன் |

என்று விளக்கியுள்ளார். இறுதியில் கூறப்பட்ட மனமுளையே அத்துவிதம் எனக் கைலாசபதி அவர்கள் ஆனந்தக் கண்ணீர் மல்கக் குறிப்பிடுவாராம் என அறிகிறேன்.

## குறிப்புக்கள்


1. சிவஞானசித்தியார், சுபக்கம், செய் 58, ப. 116 மு. திருவிளங்கம் புத்துரை, யா.கூ.த.நூ.வே.க, யாழ்ப்பாணம், 1925.
2. I திருமந்திரம், 7ம் தந்திரம், செய். 1736, பக். 258, வித்துவான் கே.எம். வேங்கடராமையா, செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள், 1968.

   II சிவஞானசித்தியார், சுபக்கம், செய்.86, 1925 மு.கு.
3. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள், பக்.575, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, 1994
4. நிர்மலதேசிகர், அகோரசிவாசார்ய பத்ததி, ஸ்ரீஜ்ஞானஸம்பந்தவிலாஸ யந்திரசாலை, 1929.
5. சிவஞான சித்தியார், சுபக்கம், செய் 298, ப. 544. மு.கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 577. மு.கு.

7. மேற்படி, ப. 65.

8. மேற்படி, ப. 328.

9. ஆசார = ஆ + சர் - (Conduct, Behaviour) "வேதமே அனைத்துத் தர்மங்களுக்கும் மூலமாகும். வேதமுணர்ந்தோரின் தூய சிந்தனைகளில் தோன்றியவையாகிய ஒழுக்கங்களும் அவ்விதமே." (மனுதர்மசாஸ்திரம்)

10. சு.சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 514 மு.கு.

11. கிராமவாசி ஒருவன் பூமியை உழுவதற்கு முன்னரும், பூமிக்குரிய வழிபாட்டு முறைகளைச் செய்வது இதன் சாயல் போலும்.

12. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 164 மு.கு.

13. ச. பரநிருபசிங்கம், கைலாசபதியும் பொருளாராய்ச்சியும், ப. 17, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு 1994.

14. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், ப. 270, (பாடல் தொடக்கம்: "காருரும்–"), திருப்பனந்தாள், 1968.

15. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம், பக். 139, (பாடல் தொடக்கம் "கருந்தடந்தேன்") திருப்பனந்தாள், 1961.

16. திருவாசகம், திருவம்மானை, செய். 184.

17. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 316 மு.கு.

18. இது உபநிடதக்கருத்துக்களுள் மிகப்பிழையாக விளங்கிய கருத்துக்களில் ஒன்று. சம்ஸ்கார பராமரிசம் பற்றிய பிரம்ம சூத்திர பாஷியத்தில் இக்கதை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. உபநிடத மொழிபெயர்ப்புக்களில் இரவீந்திர நாத் தாகூர், இராதாகிருஷ்ணன், நவாலியூர் சோ.நடராஜன் போன்றோர் கீழான கருத்தை இதில் காட்டியுள்ளனர். அன்னை ஜாபாலாவிடம், குருகுலவாசம் செய்யப் போகுமுன் தந்தையாரின் கோத்திரத்தை விசாரித்த தனையனுக்கு நீ தாய் வயிற்றில் இருக்கும் போதே தந்தையார் இறந்து விட்டார். அதன் காரணத்தினால் கோத்திரத்தை விசாரிக்க வில்லை என்றாள். அதில் "பஹுசரந்தீ" என்ற சொற்றொடருக்கு இல்லற தர்மத்தில் அதிகம் அலைந்தமையால் தந்தையிடம் கோத்திரம் விசாரிக்கவில்லை. அவர் இறந்தபின் துக்கம் காரணமாக விசாரிக்கவில்லை என்பதே பொருள். ஆனால் வழிதவறிய பெண்களை மனதில் வைத்துக்கொண்டு ஜாபாலையும் பல வீடுகளில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த போது வழி தவறியவள் என்று இவர்கள் எழுதுகிறார்கள். மரபு வழிவிளக்கத்துக்கு பார்க்க: சாந்தோக்கிய உபநிடம், சங்கரபாஷியம், ஆனந்தகிரி விளக்கவுரை.

19. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 133. மு.கு.

20. மேற்படி, ப. 65, 183.

21. மேற்படி, ப. 576.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ச. பரநிருபசிங்கம், 1994: 21. மு.கு.

23. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 278 மு.கு

24. மேற்படி, ப. 196.

25. மேற்படி, ப. 340.

26. மேற்படி, ப. 164.

27. மேற்படி, ப. 164.

28. சுவாமி இக்னேஷியஸ் இருதயம் தமது இந்திய கிறிஸ்தவ ஞானவாழ்வு என்ற நூலில் தமிழ் வழக்கிலுள்ள அறம், பொருள், ஆகியன தர்ம, அர்த்தங்களிலும் ஆழமான சொற்பிரயோகங்கள் எனக்காட்டியுள்ளார். அதனைக் கைலாசபதி அவர்களும் நுட்பமாகச் சிந்தித்துள்ளார். பார்க்க: சு.சுசீந்திர ராசா, ஆ.சபாரத்தினம், 1994: 53. மு.கு.

29. மேற்படி, ப. 53.

30. மேற்படி, ப. 72.

31. மேற்படி, ப. 558.

32. ச. பரநிருபசிங்கம், 1994: 12 மு.கு.

33. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 176 மு.கு.

34. மேற்படி, ப. 559.

35. மேற்படி, ப. 559.

36. மேற்படி, ப. 559.

37. மேற்படி, ப. 588. புறநடை ப. 255, 256

38. ச. பரநிருபசிங்கம் 1994: 9. மு.கு.

39. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 403 மு.கு.

40. மேற்படி, ப. 557.

41. சீவனநோக்கின் 1ம் வகுப்பினராக அளவெட்டி தம்பிப்பிள்ளை உபாத்தியாயர் என ஒருவர் குறிப்பிடப்பட்டுள்ளார், கைலாசபதி அவர்கள். இந்த உபாத்தியாயருக்கு 6ம் தளமான நாகரிகம் வரை எட்டும், பிறருக்கு சேவை செய்வோரை இத்தளத்தினர் மதிப்பார்கள் என்றார்.

    2ம் வகுப்பினராக சேர். பொன். இராமநாதன் குறிப்பிடப்பட்டுள்ளார். 8ம் தளமான சம்ஸ்காரம் வரை எட்டுவார். அதன் காரணத்தினால் போலும் இந்திய அறிஞரான தற்பரானந்தர் என்பவரைக் குருவாக ஏற்றார். விவேகானந்தர் மேலை நாடுகளில் வேதாந்தம் பரப்பியது போல இவர் சித்தாந்தம் சார்ந்த இந்துமதத்தை விரிவுரைகள் மூலம் விளக்கினார். இறுதிக்காலத்திலும் வீரசைவம் சார்ந்த வாழ்வை அனுசரித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ம் வகுப்பினராக செல்லத்துரை உபாத்தியாயர் என ஒருவர் சுட்டப்படுகின்றார்; பரமேஸ்வராக்கல்லூரியில் படிப்பித்தவர். இவர் புத்திவிருத்தியின் 10ம் தளமான தர்மம் வரை எட்டுவார். அத்துடன் அகங்கார விருத்தியில் அருள் நோக்குக்கவரப்பெற்றவர். அந்த வகையில் கைலாசபதி அவர்களின் சிந்தனை யில் இடம்பிடித்தவர்.

4ம் வகுப்பினராக P.S என அழைக்கப்பெற்ற Dr. S. சுப்பிரமணியம் காட்டப்பட்டுள்ளார். இவர் அன்று புகழ்பெற்ற மாகாண சத்திரசிகிச்சை நிபுணராக (Provincial Surgeon) இருந்தவர். அதனால், P.S என அழைக் கப்பட்டவர். தான தருமங்கள் பல செய்தவர். யாழ்ப்பாணப் பழைய சுப்பிரமணியம் பூங்கா, தங்கம்மா - சுப்பிரமணியம் ஞாபகார்த்த மருத்து வமனை என்பவற்றைத் தர்மமாக நிறுவியவர். கைலாசபதி சிந்தனைகள் ப.459ல் இவரைப்பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

42. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம் 1994: 402. மு.கு.

43. சுட்டிப்பான கிரகிப்பின் 1ம் வகுப்பினராக சைவாசிரிய கலாசாலை அதிபராக இருந்த சி. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிடப்படுகிறார். 'நடத்த நீதி' (சுவாமிநாதன்) எனச் சிந்தனைகளில் சுட்டப்பட்டவர். இவர் 7ம் தளமான நாகரிகம் வரை எட்டிப்பார்ப்பார். அதன் காரணத்தினால் மனிதர்களுடன் நாகரிகமாக நடந்து கொள்வாராம்.

2ம் வகுப்பின் உதாரண புருஷராகக் காட்டப்பட்டவர் கணபதிப்பிள்ளை என்று அழைக்கப் பெற்ற சின்னத்தம்பி என்பவர். இவர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் 1919ம் ஆண்டளவில் அதிபரா னவர். 1993ம் ஆண்டு வெளிவந்த "அருணோதயம்" நூற்றாண்டு மலரில் தாமோதரம் அவர்கள் Our head master "Mr.Sinnathamby, popularly known as Kanapathipillai is a devoted administrator and respected English teacher" எனக் குறிப்பிட்டுள்ளார். இவர் கைலாசபதி அவர்களின் மெய்ஞ்ஞான குருவான இரத்தினசபாபதி அவர்களிடம் சென்று ஞான விடயங்களைக் கேட்டவர். கைலாசபதி சிந்தனைகள் ப.200ல் இவரைப் பற்றிய குறிப்பு வருகிறது.

3ம் வகுப்பினராக காசிப்பிள்ளை உபாத்தியாயர் என ஒருவர் சுட்டப்படுகிறார். இவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியராக சைவவித்தியா விருத்திச் சங்கப்பாடசாலையில் படிப்பித்தவர். கைலாசபதி அவர்களிடம் அளவற்ற அன்பு கொண்ட இவருக்குக் கைலா சபதி அவர்கள் பல அரிய விடயங்களைக் கூறியதாகவும் ஆனால் அவை தனிப்பட்ட உபதேசம் என்ற வகையில் அவர் பிறருடன் பகிர்ந்துகொள்ள வில்லை எனவும் அவருடன் பழகியவர்கள் கூறுகின்றனர். சிந்தனைகள் ப.425ல் இவரைப்பற்றிய குறிப்பு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ம் வகுப்பினரான சு. இராசரத்தினம் அவர்கள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகவும், செயலாளராகவும் பல சகாப்தங்கள் சேவை செய்து 400க்குமேற்பட்ட சைவப்பாடசாலைகளை ஸ்தாபித்தவர். அத்துடன் சட்டசபை அங்கத்தவராகவும் இருந்தவர். வைமன் கதிரவேற் பிள்ளை இவருடைய தாய் மாமனார். சிந்தனைகளில் ப.217ல் இவைரைப் பற்றிய குறிப்பு வருகிறது.

கைலாசபதி அவர்கள் கலைஞான தளத்தின் 1ம் வகுப்பினராகப் பண்டிதை வேதநாயகியைக் குறிப்பிட்டார். வேலணை மேற்கைச் சேர்ந்த இவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டவர். பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்களிடம் பற்றுக்கொண்ட இவர் எழுத்து நடையில் அவரது பாணியைப் பின்பற்றிப் பல கட்டுரைகளை எழுதியவர். இந்து சாதனத் திலும், காரைநகர் மணிவாசகர் சபை ஆண்டு மலர்களிலும் இவரின் பல கட்டுரைகள் வெளிவந்தன. நடுவயதில் ஆசிரியகலாசாலையில் பயிற்சி பெற வந்தவர். உபஅதிபர் கைலாசபதி அவர்களிடம் வகுப்புப் பாடமில்லாத சமயங்களில் நற்பொருளைக் கேட்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தியவர். அவருடைய சம்பாஷணைகள் கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் ஆங்காங்கு காணப்படுகின்றன. உதாரணமாக பக். 616, 630.அவரை "வேலணை மனுஷி" எனக் கைலாசபதி அவர்கள் சுட்டுகிறார். "உபஅதிபர் சூரியன். அவரது ஒளியை நேரே பார்க்க, பெற எங்களுக்குத் தகுதி யில்லை. பண்டிதமணி என்ற சந்திரனூடாகத்தான் அந்த ஒளியைப் பெறுகிறோம்" என்று பண்டிதை கூறுவார்.

கலைஞான தளத்தின் 3ம் வகுப்பினராக திரு வே.நடராசா BSc. என ஒருவர் சுட்டப்படுகிறார். இவர் சைவப்பெரியார் சிவபாத சுந்தரத்தின் மருகர். உரையாசிரியர் மட்டுவில் வேற்பிள்ளையின் மகன். அவர் சரசாலையில் "விறகு வெட்டும் பெண்களால் தமது வேலிகளுக்கு ஆபத்து" எனப் பொருள்படும் பாடல் ஒன்றைக் கட்டளைக் கலித்துறைச் செய்யுளாக இயற்றினார் என்றும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அதனைப் பாடிக் காட்டுவதுண்டாம் என்றும் அவருடன் பழகியவர்கள் மூலம் அறிகிறேன். அவர் பிற்காலத்தில் பரமஹம்ஸ யோகாநந்தாவின் சுயசரித்திரம் படித்து அவர்பால் தீவிர பற்றுக் கொண்டவர். பண்டிதமணியைக் குமாரசுவாமிப் புலவரின் மாணவனாகச் சேர்த்த பெருமை நடராசாவுக்குரியது. இவர் வேறு; சு.நடராசா (சரசாலை) BSc. வேறு; பிற் கூறியவர் சைவாசிரியசாலையில் விரிவுரையாளராயிருந்தவர். சென்னை கிறீஸ்தவக் கல்லூரியில் பட்டம் பெற்றவர். மகாவிவேகி; ஆனால் லௌகீக அறிவு குறைவு. கைலாசபதி அவர்களிடம் கடும் பக்தி கொண் டவர்; ஆனால் விவாதிக்கும் தோழமையும் பூண்டவர். இளமையில் இறந்து விட்டார்.

45. ச. பரநிருபசிங்கம், 1994: 11. மு.கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. பொதுவிவேகத்தின் 1ம் வகுப்புக்கு உதாரணமாக இராமகிருஷ்ணர் குறிப்பிடப்படுகிறார். சிந்தனைகள் பக். 216, 403ல் அவர் நின்ற தளம்பற்றிய குறிப்புகள் உள. பக் 646ல் மனைவியைத் தாய் என்பது தர்மமா என்கிறார்.

பொது விவேகத்தின் 2ம் வகுப்புக்கு உதாரண புருஷராகக் குறிப்பிடப் பட்டவர் நம் நாட்டில் சைவப்பெரியார் எனப் பலர் அறிந்த புலோலியூர் சு.சிவபாதசுந்தரம் அவர்கள். இவரின் உளவியல் படிப்பிக்கும் முறை களும் விதிகளும் போன்ற நூல்கள் ஆசிரிய உலகில் ஒரு காலத்தில் பெருமதிப்புப் பெற்றவை. அத்துடன் யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபை, சென்னை சைவ சித்தாந்த சமாஜத்துடன் தொடர்புடையவராக இருந்தவர். கைலாசபதி அவர்களின் இளமைக்காலக் கல்விக்கு (விக்ரோரியாக் கல்லூரி விடுதியில்) உதவியவர் என அறிகிறோம். கைலாசபதி அவர்களைத் தமது மாணவன் எனப் பெருமையுடன் கூறுவாராம். ஆனால் பரமேஸ்வராக் கல்லூரியில் வேறு ஒரு கணித ஆசிரியரின் இடத்தில் இவர் படிப்பித்த ஒன்றே அவருடன் மாணவத் தொடர்பை ஏற்படுத்தியது எனலாம். எனினும் கைலாசபதி அவர்கள் சிவபாதசுந்தரம் அவர்கள் பாராட்டிய உரிமையை மறுக்காது நடந்து வந்ததாக மூதறிஞர் ஒருவர் மூலம் அறிகிறேன்.

47. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 172. மு.கு.

48. உலகின் தலைசிறந்த சமயப் பெரியார்களில் ஒருவராகக் கணிக்கப்படும் புத்தருக்கு இவ்வளவு குறைந்த இடம் கொடுக்கலாமா? என்ற வினா எழலாம். பஞ்சசீலம், அட்டசீலம் போன்ற அறக்கோட்பாடுகளையும், பிறருக்கு உபகாரம் செய்தல் என்ற சமூக இலட்சியத்தையும் முன்வைத்த அவரைச் சாதாரண உலகம் கொண்டாடுவதில் வியப்பில்லை. அசோகன் காலத்துப் பௌத்தசங்கங்களுக்குப் (Buddhist Council) பிறகே பௌத்தம் இந்தியாவின் பல பகுதிகளுக்குப் பரவியது. ஆனால் புத்தருக்கு முன்னரும் நிரீச்சுரவாத வேதவிரோத பௌத்தக்கருத்துக்கள் நிலவி வந்தன. சித்தார்த்தரே 642வது பிறவி எடுத்து நிர்வாணம் அடைந்தார் என்பர். அதற்கு முந்திய பிறவிகளில் போதிசத்துவர்களாக இருந்து, நல்ல உபதேசங்களைச் செய்ததாகக் கதைகள் உண்டு. கைலாசபதி அவர்கள் நாயன்மார்களுள் சுந்தரர் காலத்தை மட்டுமே (கி.மு.5ம் நூற்) புத்தர் காலம் என்பார். (கைலாசபதி சிந்தனைகள் பக். 285) மற்றையோர் காலத்தால் முற்பட்டோர் என்பர். சமய குரவர்கள் புத்தசமயத்தைக் கண்டித்தமையால் அவர்கள் புத்தருக்கு மிகப் பிற்பட்டவர் என்று ஆங்கில வரலாற்று ஆசிரியர் வழியில் நம்மவர்களும் எழுதிவருகின்றனர். புத்தருக்கு முந்தியே நிரீச்சுர வாதன, வேதவிரோத கருத்துக்கள் முகிழ்ப்புப் பெற்றன என்பது அறிஞர் ஒப்புக்கொள்ளக் கூடியதே. கைலாசபதி சிந்தனைகள், பக். 133, 169ல் இவரைப்பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

49. 1893ல் நான்கு கிறிஸ்தவ மிஷன் குழுக்கள் நடாத்திய சர்வசமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாட்டில் தூமகேது போல உலகின் கவனத்தை ஈர்த்த விவேகானந்தர் அக்கால உலக சிந்தனைச் சூழ்நிலையினால் அதிக முக்கியத்துவம் பெற்றவர். அவரது மின்னல் வேகச் சொற்பொழிவுகள் உலகமக்களையே வியப்பில் ஆழ்த்தின. கைலாசபதி அவர்களின் புத்திவிருத்திக் கட்டமைப் பிலும் அவருக்கு இடங்கொடுக்கப்பட்டுள்ளது. "எண்ணுமிரு நிலத்தெழுந்த பல நதியும் / இருநீர் வேலை மன்னுகின்ற இயல்பது போல" எல்லாச்சமயங் களும் ஒரு பரம்பொருளையே அடைகின்றன என்ற உபநிடதக் கருத்தை வலியுறுத்தி, சமயப் பூசல்களால் இருண்டு கிடந்த ஐரோப்பிய, அமெரிக்க சிந்தனையாளர்களுக்கு ஒரு புது வழியைத் திறந்துவிட்டவர். "விழிமின் எழு மின்" என்ற உபநிடதக்கருத்தை உலகெங்கும் பரப்பியவர். ஆனால் அவர் அமிர்தநோக்கு உள்ளவர் என்றதால்தான் இங்கே சிறப்புப் பெறுகின்றார்.

50. சைவசித்தாந்த மெய்யியல் உலகில் சிகரம் எனப்போற்றப்படுபவர் சிவஞானமுனிவர். இவரைக் கைலாசபதி அவர்கள் நல்லார்வ தளத்தின் 3ம் வகுப்பினராகச் சுட்டியுள்ளார். அமிர்த நோக்கு வரை எட்டக்கூடிய இவர் இக்கால மெய்யியலாளர்களோடு ஒப்பிடுகையில் மகாபெரியவர்.

51. நல்லார்வ தளத்தின் 4ம் வகுப்பினராகிய காந்தி பற்றி ஆயிரம் ஆயிரம் புத்தகங்கள் வந்துள்ளன. எனினும் அவருக்குச் சுதந்திர இந்தியா அரசியல் காரணமாக கொடுத்த மதிப்புச் சற்று மிகை என்றே கருதவேண்டும். 4ம் வகுப்பினரான இவர் அமிர்த தளம் வரை எட்டிப்பார்க்கும் தன்மை கொண்டவர். கைலாசபதி அவர்கள் தமது சிந்தனைகளில் பக். 213, 562, 555ல் அவருக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

52. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 559. மு.கு.

53. ச.பரநிருபசிங்கம், 1994: 11. மு.கு.

54. நாகரிக தளத்தின் இரண்டாம் வகுப்பினரான ஹே. சுப்பிரமணிய ஐயர் பற்றி அத்தியாயம் ஒன்றில் (பக்.08) கூறப்பட்டுள்ளது.

நாகரிக தளத்தின் 3ம் வகுப்புக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட அளவெட்டி பொன்னம்பல உபாத்தியாயர் கைலாசபதி அவர்களின் சகலன் (மனைவியின் அக்காவின் கணவன்) சிந்தனைகள் ப. 615ல் குறிப்புண்டு.

55. சு.சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 30. மு.கு.

56. மேற்படி, ப. 200.

57. மேற்படி, பக். 35.

58. முனிவர்கள் போன்றவர்களையும் தாயுமானவரையும் சமமாக ஒரேதளத்தில் எடை போடலாமா? என்ற கேள்வி எழலாம். ஆன்மீக பரிணாமத்தில் பிரம்மா முதல் கீடம் (புழு) வரை அனைத்தும் கதிநோக்கி பரிணமித்துச் செல்வ னவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 375. மு.கு.

60. மேற்படி, ப. 564.

61. ச.பரநிருபசிங்கம், 1994: 16 மு.கு.

62. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 215. மு.கு.

63. தர்மதளத்தின் 1ம் வகுப்பாருக்கு உதாரணமாக விதுரர் குறிப்பிடப்படுகிறார். இவர்கள் 14ம் தளமாகிய அமிர்தம் வரை எட்டிப்பார்க்கும் தன்மை உடையவர்கள். அதனைக் கைலாசபதி அவர்கள் பின்வருமாறு குறிப்பி டுகிறார்:

விதுரர் தர்மம். இறங்கார் பெரிய சாதிமான்

மேலே அமிர்தம் வரை நோக்கலாம். தர்மத்தில்

நின்ற கச்சியப்பரிலும் விதுரர் உயர்ந்த சாதியாகலாம்.

என்கிறார். விதுரர் 6ம் தளமான நல்லார்வம் வரை இறங்குவார். இதனால் தான் பாண்டவர்களுக்கு உதவவேண்டும். கௌரவர்களாகிய நூற்றுவா களுக்குப் புத்தி சொல்லித் திருத்தவேண்டும் என்ற எண்ணம் இவருக்கு ஏற்பட்டது போலும.

64. தர்மதளத்தின் 2ம் வகுப்பினருக்கு உதாரணமாக கச்சியப்ப சிவாசாரியார் குறிப்பிடப்பட்டள்ளார். இவர் 16ம் தளமான சித்தாந்தம் வரை நோக்கு வார்.

தர்மதளத்தில் ஞானத்தால் காமந் தெரியும் துறை ஒருதுறை (கச்சியப்பர்) சித்தாந்தம் வரை நோக்கும் யோக்கியதையுண்டு. என்று கைலாசபதி அவர்கள் கூறியுள்ளார். அதேசமயம் கச்சியப்ப சிவாசாரியார் 4ம் தளமான கலைஞானம் வரை இறங்குவார். அதன் காரணத்தினால் கந்தபுராணத்தில் "ஆம் பொருள் மூன்றுள" எனப்போதித்தார். ஒரு பொருளேயுள்ளது என்ற மாயாவாதத்தை சுக்கிரன் உபதேச படலத்தில் வைத்து அதன் விளைவு எங்கே முடிந்தது எனக்காட்டினார். அத்துடன் அவர் ஒரு பொருளை மறுத்து வெறும் வேத அறிவால் சக்திகளைப் பெறலாம் என்ற மீமாம்சை உரையாசிரியர் மதத்தையும் மறுத்தார்

65. 3ம் வகுப்பாருக்கு உதாரணமாக இராமர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் 9ஆம் தளமான சத்வரை எட்டுவர். அவர் "தந்தை தாய் வாக்கிய பரிபாலனம் செய்தவன் தசரதகுமார இராமன்" என்று பாராட்டப்பட்டவர். "இன்று போய் போர்க்கு நாளை வா' எனத் தன் மனைவியை அபகரித்த இராவணன் இடத்திலும் தர்மம் தவறாது நடந்தமை இத்தளத்தில் அவர் நின்றமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. கீழே சீவனநோக்கு வரை இவர் இறங்குவார். சீதையின் பிரிவு போன்ற நிகழ்ச்சிகளில் மனம் வருந்துதல் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களை இதற்கு ஆதாரமாகக் கூறலாம். இராமர் தளம் உயர்ந்தது முடிவு காடு என்றால் போய்த்தான் தீர்வார்.

66. மாணிக்கவாசகர் தர்மதளத்தின் 4ஆம் வகுப்பினராக குறிக்கப்பட்டுள்ளார். மாணிக்கவாசகர் தளம் இதுதானா என்று நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. அவருக்கு புத்திவிருத்தியில் தளம் பத்தாக இருக்கலாம். ஆனால் புத்தி விருத்திக்கு மேலே அதி உயர்ந்த நிலையாகிய - ஆறாம் கண்ணாகிய - உள்ளலயம் வெளித்தவர். அந்தவகையில் இவர் மகாபெரியவர்.

67. அர்த்ததளத்தின் 1ம் வகுப்பாருக்கு உதாரணமாக நக்கீரர் சுட்டப்படுகிறார். இவர் ஞானம் வரை நோக்காக எட்டக்கூடியவர். புத்திவிருத்திக் கட்டமைப்பில் ஞானதளத்தில் நிற்பவர் முருகன். எனவே முருகனைக்காண, உபாசிக்க, கூடியவர் நக்கீரர். அதனால் அவர் திருமுருகாற்றுப்படை பாடத்தகுதி பெற்றார் என்பார் கைலாசபதி அவர்கள்.

68. அர்த்ததளத்தின் 2ம் வகுப்பினராக வசிட்டர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் 17ம் தளமான முடிந்த சத்தியம் வரை நோக்கும் திறமை பெற்றவர். அதன் காரணத்தினால் தசரதன் போன்ற சந்திரகுல மன்னர்களுக்கு (இராமர் உட்பட) அறிவு பகரும் மந்திரியாக, குலகுருவாக விளங்கினார் போலும். அத்தகைய மாண்புமிகு மன்னர் பரலோக இராச்சியத்தின் நிழலாக புவி யிலும் நீதியான அரசு நிலைபெற இடைவிடாது பணிபுரிந்தனர். முடிந்த சத்தியத்தை அவர் எட்டமுடிந்தமையாலேயே இராமனது முடிசூட்டு வைபவத்திற்கு நாள் வைத்துக் கொடுத்தும், வைபவம் தடைப்படும் என்ற சம்பவத்தை ஞானகாட்சியால் உணர்ந்தும் அதனைக் கூறாது விட்டார். முடிந்த சத்தியத்தின் உண்மை தெரிந்தோர் பிற உயிர்களின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சிகளில் தலையிட்டு குழப்பம் விளைவிக்க மாட்டார்கள். நியதி நடைபெறுவதைப் பார்த்துக் கொண்டிருப்பர். அதனைக் கைலாசபதி அவர்கள்

> **அர்த்த தளக்காரரும் தர்மத்தில் இறங்கியும் சொல்வார்கள் வசிட்டர் போன்றோரும் இறங்கி தீக்ஷா முகமாகச் சொல்லும் போது சுருதி வரும்.**

என்கிறார்.

69. வியாக்கிரபாதர் அர்த்ததளத்தின் 3ம் வகுப்பினர். இவர் மேலே ஒன்பது இடம் எட்டி அகண்டாகாரம் வரை நேரே காண்பார். அதனால் நடராச தரிசனம் செய்யும் பேறு பெற்றவர். அவர் இல்லறத்தில் நின்று வசிட்டரின் தங்கையை மணம்புரிந்தவர். இல்லறத்தில் நின்று பெறவேண்டியதைப் பெற்ற வியாக்கிர பாதரில் கூடிய பேறு பெற்றவர் யார்? என்று வியப்புடன் கூறுகிறார் கைலாசபதி அவர்கள்.

70. அர்த்த தளத்தின் 4ம் வகுப்பினராகத் திருமூலர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவரது நோக்கு அகண்டாகாரம் வரை உயரும். ஆனால் இவருக்கு 6ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் மறையும். நவீன ஆய்வாளர் இவரைப் பதின்னான்கு சித்தாந்த சாத்திரங்களை இயற்றியவர்கள் போல வகுத்துக் கூறாவிட்டாலும் சித்தாந்த மெய்யியலுக்கு அத்திவாரமான முப்பொருள் முதலிய செய்திகளை ஆங்காங்கு குறிப்பிட்டவர். திருமூலர் என்று சொல்லக்காரணம் இந்த மறைப்பாக இருக்கலாம். ஆனால் அருள்நோக்கு என்ற அகங்கார விருத்திநிலை பூரணமாக கைவந்தவர் என்ற படியால் தமிழையும், ஆகம ரீதியாகச் சைவசமயத்தையும் உணர்ந்த பெருமையுடையவர் திருமூலர். அவரது நூல் தமிழாகமம் என்று உச்சியில் வைத்து பாராட்டுவார் கைலாசபதி அவர்கள். "சித்தந் தெளிந்தவர் சேடம் புசித்திட முத்தியாம் என்று நம்மூலன் மொழிந்ததே" என்று பாடியவராதலால் சித்தத்தெளிவு பெற்றோரை இவரது குருவாகிய மூலன் கண்டிருக்கலாம் என்பார் கைலாச பதி அவர்கள்.

71. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் கற்பியல், கணேசையர் பதிப்பு, சுன்னாகம்.

72. நக்கீரர், களவியல் என்ற இறையனாரகப் பொருள், பக். 10-11, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

73. காமதளத்தின் 1ம் வகுப்பினராக வியாசர் குறிப்பிடப்படுகிறார். அவர் மேல் நோக்கில் சித்தாந்தத்தை நோக்குவார். அதனால்தான் அவரது பிரம்ம சூத்திரம் என்ற உத்தர மீமாம்சை பரிபூரணமாக சித்தாந்தத்தைக் கூறுவது என்பது கைலாசபதி அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இக்கால கல்விசார் ஆய்வாளர்கள் அவருடைய வாக்குக்கு அளிக்கும் முக்கியத் துவத்தை விடக் கூடியளவு அத்வைத, விசிட்டாத்வைத, துவைத ஆசிரியர் களுக்கு கொடுப்பதால் அவர்களுக்கு இக்கூற்று வியப்பளிக்கலாம். உரையாசிரியர்களின் மதங்களை விட்டு சூத்திரங்களையும், அங்கு சுட்டப் படும் உபநிடத வாக்குகளையும், நேரேகாணும் ஆற்றல் பெற்றவர்கள் இதன் உண்மையை உணரக்கூடும். ஆனால் மேல்நாட்டார் இந்து மதம் என்றால் சங்கரர் மதமே என்ற ரீதியில் சிந்தித்தமையால் நீலகண்ட பாடியம் போன்ற வையும் அவர் எடுத்தாளும் வேத உபநிடதப்பகுதிகளும் மதச்சார்புள்ளவை (Sectarian) எனத் தள்ளுவர். நீலகண்டர், அப்பைய தீட்சிதர் போன்றோர் ஏகான்மவாதத்திற்கு அடிபணிந்து விட்டனர் என்பது ஓரளவு உண்மை யாகலாம். சைவசித்தாந்தம் அதி உன்னதமானது எனப்பேசுவோர் சிவஞான முனிவர் கூறிய "மாயாவாத நூல் செய்தான் வியாதன்" என்ற வசனத்திற்கு எவ்வாறு விளக்கம் கூறுவரோ? பிரமசூத்திரத்திற்கும், அதில் எடுத்துக் காட்டப்பட்ட வேத வசனங்களுக்கும் சைவசித்தாந்த பரமாக உரை எழுதி னால்தான் சைவசித்தாந்தத்தை பெரியது என உலகம் ஏற்கும். மேலும் கைலாசபதி அவர்கள்

"வியாசர் சம்ஸ்காரத்திற்கு இறங்குவார்"

என்றும் தெளிவாகக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. காமத்தளத்தின் 2ம் வகுப்பினராக மறைஞானசம்பந்தர் குறிப்பிடப்பட்டுள் ளார். இவர் கீழே 6ம் தளமான எல்லார்வம் வரை இறங்குவார். மேலேயும் 18ம் தளமான சத் வரை நோக்குவார் என்பது கைலாசபதி அவர்களின் கருத்து.

75. காமதளத்தின் 3ம் வகுப்பினராக திருநாவுக்கரசர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் "சித்" வரை எட்டுவார். அதே சமயம் கீழேயும் கலைஞானம் வரை இறங்குவார். "கற்றறியேன் கலைஞானம்" என்றும் பாடியுள்ளார். சமணப் பள்ளியில் சகலகலைகளிலும் வல்லவராகத் திகழ்ந்தவரான இவர் சித்தாந்த தளத்தின் 1ம் இடத்தவரான ஆளுடையபிள்ளையாரும் சித் நோக்குவரை எட்டுவர் என்ற காரணத்தினால் ஒருவரை ஒருவர் மதித்தமை பற்றிப் பெரியபுராணத்தின் வாயிலாக அறிகிறோம். அதேசமயம் தான் நின்ற தளம் குறைவு என்ற காரணத்தினால் சம்பந்தப் பெருமானைச் சிவிகையில் காவும் செயலைப் புண்ணிய கருமமாகக் கருதினார் போலும்.

76. காமதளத்தின் 4ம் வகுப்பினராக கிருஷ்ணர் குறிப்பிடப்பட்டுள்ளார்

கிருஷ்ணர் நின்ற தளம் காமம்.

தர்மம் பிரிந்து தெரியும்.

அர்த்தம் பிரிந்தும் பிரியாமலும் தெரியும்.

காமமும் மோட்சமும் திரளத் தொடங்கும்.

என்கிறார் கைலாசபதி அவர்கள். இவர் சித் வரை நோக்குவர் அதேசமயம் கீழேயும் கலைஞானம் வரை இறங்குவார். புல்லாங்குழலில் பிரியம் உண்டானது இதனால் போலும். 4ம் வகுப்பு என்ற காரணத்தினால் இவருக்கு நாகரிகம் மறையும். அதனால் ரிஷிகள், முனிவர் செய்யாத செயலாகிய கோபியாகளுடன் ஆடுதல் போன்ற கருமங்களில் ஈடுபட்டார். உபமன்யுவிடம் சிவதீட்சை பெற்று சிவோகம் பாவனை கைவரப்பெற்றவர். அதனால் தான் உத்தம சீடனாகிய அர்ச்சுனனுக்கு விசுவரூபதரிஸனம் காட்டவல்லவராயினார். சிவஞானசித்தியார் பரபக்கத்தில் "கொல்லச் செப் பும் வார்த்தை" என அருணந்தியார் குறிப்பிட்டது பலருக்கு அவர் வைஷ் ணவ மதத்துவேஷி என்ற கருத்தைத் தந்துள்ளது. க்ஷத்திரிய தர்மத்தில் நிற்கவேண்டியவன் தான் வாழத்தேவையில்லை, தர்மம் வாழ வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கவேண்டியவன் - குரு, சுற்றம் என்ற பற்றினால் தன் தர்மம் தவறுகின்ற நிலையில் கொல்லச் செப்பும் வார்த்தை அவசியமாயிற்று. தர்ம சங்கடம் உண்டாகும் போது தர்மத்தை நிலைபெறச் செய்யும் நூல் என்ற வகையில் கீதை பல்லாயிரம் மனிதருக்கு மன ஆறுதலைத் தர வல்லது. அதனை முதலில் இருந்து முடிவுவரை பொருள் உண்மையைக் கூறும் பரிபூரண வேதமாக மாற்றியது பின்வந்த சமயாசாரி யார்களின் குறை எனக் கைலாசபதி அவர்கள் சொல்வாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. மோக்ஷதளத்தின் 1ம் வகுப்பினராக சுகர் குறிப்பிடப்பட்டள்ளார்.

சுகர்! சாதி விசேஷம். நின்ற தளம் மோக்ஷம் கீழ்ப்படி

திரும்பிப்பாரார். மேல் சத் தெரிந்தவரோ என்பது சந்தேகம்.

என்கிறார் கைலாசபதி அவர்கள். பிறப்பிலேயே மெய்யியல் அறிஞனான அவரை அரம்பையரின் வசீகரம் அசைக்கமுடியவில்லை. பிரம்மசரியத்தைப் பரிபூரணமாகக் காப்பாற்றியவருக்கு உதாரண புருஷராக இவர் காட்டப் படுகிறார். தாயுமானவர் இவரை "ஓதரிய சுகர் போல ஏன் ஏன் என்ன ஒரு வரிலையோவெனவும் உரைப்பேன்றானே" என விசேடமாகக் குறிப்பிடுகிறார். மேலும் "சுகர் வாமதேவர் முதல் ஞானிகளும் உனை மெச்சுவர்" என மௌன குரு வணக்கத்திலும் பாடுகிறார். இவர் மேலே 5ம் இடம் எட்டி, முடிந்த சத்தியத்தைப் பார்ப்பார். கீழே பண்பாட்டுத் தளம் வரை இறங்குவார். இதன் காரணத்தினால் பண்பாட்டுத் தளத்தில் நின்ற தாயுமானவர் இவரை மதித்தார் போலும்.

78. இத்தளத்தின் 2ம் வகுப்பினராகக் குறிப்பிடப்பட்டவர் திருவள்ளுவர். இவருக்கு அகண்டாகாரம் வரை நோக்கு விரியும். அதனால் தமிழை முற்றாக அறிந்தவர். என்பார் கைலாசபதி அவர்கள். கீழேயும் நாகரிகம் வரை இறங்குவார். திருக்குறள் பற்றிக் கைலாசபதி அவர்கள் ஓரிரு மேடைப்பேச்சுக்களும் நடத்தியுள்ளார். அத்துடன் தமது சிந்தனைகளில் பல குறட்பாக்களையும் எடுத்துக் காட்டியுள்ளர். திருக்குறளைப் பிற சமண சங்கப்பிரிவில் வரும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுடன் தொகுத்தது சமணர் செய்த வஞ்சகம் என்றும், அது நாலடியார் போன்ற தம் நூல்களுக்கு முக்கியத்துவம் ஏற்படுத்தச் செய்த சூது என்றும் அவர் கூறுவாராம்.

79. மோக்ஷதளத்தின் 3ம் வகுப்பினராக ரிஷி வாமதேவர் குறிப்பிடப்படுகிறார். சிவஞான முனிவர் தமது மாபாடியத்தில் வாமதேவர் கர்ப்பத்தில் இருக்கும் போதே ஞானத்திரு உடையவராக விளங்கினார் என்றார். உபநிடதங்களில் கூட அவரைப்பற்றிய விபரங்கள் உள. அவருடைய உயர்ந்த நோக்கு 3ம் கட்டில் 21ம் தளமான முடிந்த ஞானம் வரை செல்லும். அதன் காரணத்தினால் தான் இதிகாச புராண வரலாற்றில் இவர் அதிஉன்னத இலட்சிய புருஷனாக கணிக்கப்பட்டார் போலும்.

80. மோக்ஷதளத்தின் 4ம் வகுப்பினராக திருநந்தி தேவர் குறிப்பிடப் படுகிறார். ரிஷிவாமதேவர் போல இவரும் முடிந்த ஞானம் வரை எட்டுவார். இவர் திருக்கைலாய பரம்பரையில் வந்த சைவசித்தாந்த மரபுக்கு முதற்குரு. 'அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு நம் குரு மரபுக்கு எல்லாம் முதற் குருநாதனாகி" என்று பாடப்பெற்ற பெருமை யுடையவர். உமாபதி சிவாசாரியாரும் "தேவர் பிரான் வளர் கயிலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் பூண்ட திருநந்தியவர் கணத்தோர் செல்வர் பாரில் பாவிய சத்திய ஞான தரிசினிகள் அடிசேர் பரஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணை மேவிய சீர் மெய்கண்ட" என்று தமது மெய்கண்ட சந்தானத்தைப் பாராட்டும் போது தமது பரம்பரையின் தலைமையுடையவரெனப் போற்றுகிறார். தர்ம தளத்தில் நின்ற கச்சியப்ப சிவாச்சாரியார், மோசஷதளத்தில் நின்ற திருநந்தி தேவரையும் காமதளத்தில் நின்ற வியாசரையும் தாரதம்மியம் அறிந்தே பாடினார். "மெய்யறு சூழ்புகழ் வியாதன் தீட்டிய கையடு நந்தி" என்று அவரது சிவபக்தியின் உறுதியினையும், முடிந்த ஞானத்தை நோக்காகப் பெற்ற திறனையும் பாராட்டுகிறார். வியாசர் 18 புராணங்க ளையும் சனற்குமாரரிடம் கேட்டார். எனினும் மாயையின் வசப்பட்டு, அறிவு தடுமாறித் திருமாலே பரம்பொருள் என்று காசியில் கையுயர்த்திச் சத்தியம் செய்த போது அக்கையை அப்படியே நிற்கும்படி சபித்தவர் திருநந்திதேவர். திருமந்திரத்தில் செய் 77, 78, 83, 806 போன்றவற்றில் நந்தி மரபின் தலைவர் பற்றிய கூற்றுக்கள் வருகின்றன.

81. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 218 மு.கு.

82. அண்ணா, 108 உபநிடதசாரம், பக். 2, 24-40 இராமகிருஷ்ண மடம், சென்னை, 1991. "அமிர்த நாத உபநிடதம், அமிர்தவிந்து உபநிடதம் என்ற பெயருள்ள உபநிடதங்களும் உண்டு."

83. அமிர்த தளத்தின் 1ம் வகுப்பாராக மெய்கண்டார் குறிப்பிடப்படுகிறார்.

"மெய்கண்டார் சத் அறிந்தவர்"

"மெய்கண்டார் தளம் அமிர்தம். எட்டிப்பாராத சாதி கீழ் "இறங்கார். சுகரில் கூட என்றும் சொல்லலாம்"

"சத்தெரிந்தவர் மெய்கண்டார். வள்ளுவர் இன்னும் ஆழமாகலாம். நின்ற இடம், சாதி, கலப்பார்கள் தோயமாட்டார்கள்."

என்று கைலாசபதி அவர்கள் தமது சிந்தனையில் காட்டியுள்ளார். அதாவது இவர் மேல் நோக்காக சத்தையும், கீழ்நோக்காக அர்த்தத்தையும் நோக்குவர்.

84. இத்தளத்தின் 2ம் வகுப்பினராக சுந்தர மூர்த்தி நாயனார் குறிப்பிடப் பட்டள்ளார். சைவருட் சிலர் அவர் அநிந்திதை, கமலினி ஆகியோரை விரும்பியதன் காரணத்தினால் பூவுலகிற்கு அனுப்பப்பட்டவர் எனக் குறை கூறுவர். (சைவப்பெரியார் சிவபாத சுந்தரம் முதலியோர்). ஆனால் கைலாசபதி அவர்களோ அவருக்கு முக்கிய இடம் கொடுக்கிறார். இந்த இறக்கத்தை அவர் விளக்கும் போது மேரு என்னும் அண்ட அச்சில் உச்சிப்புள்ளியாக இருப்பது கைலாசம். அங்கு அச்சோடு ஒட்டிய ஒரு எழுச்சிதான் - சிவத்தன்மை மட்டும் தான் உள்ளத்தில் எழலாம். பிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சிகளுக்கு அங்கு இடமில்லை. பூலோகமோ ஐம்பது கோடி யோசனை ஆரை உடையது. அதாவது பூலோகத்தில் உள்ள மனிதர்கள் 50 கோடி விதமான எழுச்சிகளை உடையவர்கள். "உண்பது நாளி உடுப்பது நான்குமுழம் எண்பது கோடி நினைந்து எண்ணுவன" என்பார் ஔவை. கைலையில் விரும்பத்தகாத எழுச்சி உண்டானால் அதை அனுபவிக்க அங்கு முடியாது. ஆனால் அந்த மையல் - மயக்கம் தீர்வதற்கு பூலோகம் ஏற்ற இடம் என்று தெரிந்து, இறைவன் அவரை இங்கு அனுப்பினார். "மாதர் மீது மையல் வைத்தனை ஆதலால் பூவுலகத்துக்குப் போ" என அனுப்புகிறார். அதை விளக்குமிடத்து சேக்கிழார் "தீது இலாத தென்திசை வாழ்ந்திட" என்கிறார்.

இவ்விடத்தில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், திருநாவுக்கரசு நாயனாருக்கும் இடையேயுள்ள தாரதம்மியத்தை நோக்குவது நன்று. பொ. கைலாசபதி அவர்களின் கருத்துப்படி திருநாவுக்கரசு நாயனார் கைலையில் வாகீச முனிவராக இருந்து, இராவணன் தண்டிக்கப்பட்ட போது அவனுக்காக இரங்கினார். இறைவன் அவனுக்கு வாளும், நாமமும் கொடுத்து அனுப்பினார் எனினும், அவனுக்காக இரங்கிய வாகீசமுனிவருக்கு பூவுலகுக்கு போகும்படி தண்டனை வழங்கினார். ஏனெனில் இவர் இரக்கம் இறைவன் திருவருளின் நிறைவினால் இராவணனுக்குக் கொடுத்த தண்டனையை மறுதலித்ததாகும். அது சன்னிதி விரோதம் எனக்கருதப்பட்டது. அதேபோல் சுந்தரர் குற்றமோ உயர்ந்த ஆன்மீகக் காதல் (சிவகாமம்) இருக்க வேண்டிய இடத்தில் சற்று குறைந்த ஆன்மீக நிலை பிறந்தமையே என்பார் கைலாசபதி அவர்கள்.

85. அமிர்த தளத்தின் 3ம் வகுப்பினராக அகஸ்தியர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் சித் வரை எட்டிப்பார்க்கும் தன்மை கொண்டவர்.

86. சிவஞானபாடியம், பக். 68, கழகவெளியீடு, 1936.

87. சிவஞானசித்தியார், சுபக்கம், 1971: 286. மு.கு.

88. ஞானதளத்தின் 1ம் வகுப்பினராக படைத்தற் கடவுளராகிய பிரமா குறிப்பிடப்படுகிறார்.

இவர் தர்மத்துக்கு இறங்கார். ஆனால் நோக்குண்டு. அதுவே அவர் சிருட்டி.

என்கிறார் கைலாசபதி அவர்கள். "ஆப்ரஹ்ம கீடாத்" என்ற சொற்றொடர் இவரும் சகலர் என்ற மும்மலமுடையவரே என்பதைக் குறிக்கும்..

89. 2ம் வகுப்பினராக பதஞ்சலி குறிப்பிடப்படுகிறார். கோயிற்புராணம் பதஞ்சலி சருக்கத்தில் இவரது பெருமையும் நடராச தரிசனப் பேறும் விதந்து கூறப்பட்டுள்ளது. அவருக்கு 3ம் கட்டிலுள்ள முடிந்த ஞானம்வரை நோக்கும் திறன் உண்டு. அவ்வகையில் சனகாதி நால்வர், நந்திதேவர், ரிஷிவாமதேவர் போன்றவர்களே பதஞ்சலியுடன் ஒப்பிடத்தக்க பெருமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவர்கள். திருமூலர் "மன்று தொழுத பதஞ்சலி திருமூலர் வியாக்ரமர்" என இவரை விசேட அடைமொழி கொடுத்துப் போற்றுகிறார்.

90. ஞானதளத்தின் 3ம் வகுப்புக்கு உதாரணமாக சுப்பிரமணியர் கூறப்படுகிறார். இவர் கீழே நாகரிகம் வரை இறங்குவார். அவருக்கு நாகரிகம், பண்பாடு, சம்ஸ்காரம் ஆகிய தளங்கள் விளையாட்டு, வள்ளி நாயகியாரைக் கைதூக்கி விட்ட விளையாட்டு எம்மவர்களால் சிந்திக்க முடியாதது என்பார் கைலாசபதி அவர்கள்.

91. ஞானதளத்தின் 4ம் வகுப்பினராக சோமஸ்கந்த மூர்த்தி குறிப்பிடப்படுகிறார். இவரும் தட்சணாமூர்த்தி போல மகேஸ்வர மூர்த்தங்கள் இருபத்தைந்துள் ஒன்று. இந்திரன் சோமாஸ்கந்த மூர்த்தத்தை விஷ்ணுவிடம் பெற்று வழிபட்டு வந்தாரென்றும், முசுகுந்தச்சக்கரவர்த்தி இந்திரனுக்கு வெற்றி யீட்டிக் கொடுத்து அதே மூர்த்தத்தை வழிபடுபொருளாகப் பெற்றார் எனவும் கந்தபுராணம் கந்தவிரதப் படலத்தில் வருகிறது. சிவசக்தியுடன் முருகனும் சேர்ந்து வழிபடப்படும் சிறந்த மூர்த்தம் இது என்பர்.

92. சித்தாந்ததளத்தின் 1ம் வகுப்பினரான ஆளுடையபிள்ளையார் சைவ இலக்கியத்தில் மகா பெரியவராக மதிக்கப்படுகிறார். திருமுறைப்பகுப்பில் அவருடைய திருப்பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை என்பார் கைலாசபதி அவர்கள். இவர் 20ம் தளமான சித் வரை எட்டுவர். மேலும் கண்விருத்தியில் இவர் 7ம் கண்ணாகிய மனத்தெளிவு அடைந்தவராகவும் குறிக்கப்படுகிறார். இவர் கீழே காமம் வரை இறங்குவார்.

93. சித்தாந்ததளத்தின் 2ம் வகுப்பினராக விஷ்ணு கூறப்படுகிறார். காத்தற் கடவுளாகிய இவர் அதிகார தெய்வம். இவரின் அடிமுடி தேடுபடலக் கதை கருத்துடையது எனக்கைலாசபதி அவர்கள் குறிப்பிடுவார்.

94. 3வது வகுப்பினரான விநாயகர் சகல சாஸ்திர புராணங்களிலும் ஓங்கார சொருபி என விளக்கப்படுகிறார். கைலாசபதி அவர்கள் திருவடி ஞானம் பற்றிக் குறிப்பிடும் போது

"திருவடி ஞானத்தால்" என்பது நேர்ப்பட்டவர்கள் சுப்பிரமணியர்,

விநாயகர் உருத்திரர், தக்ஷிணாமூர்த்தி, விசுவநாதர்

சிவமூர்த்தங்களுடன் விநாயகரையும் சமமாகக் குறிப்பிட்டுள்ளார். இவர் சிவம் வரை எட்டுவார். அதேசமயம் சம்ஸ்காரம் வரை இறங்கும் தன்மையும் கொண்டவர்.

95. சித்தாந்த தளத்தின் 4ம் வகுப்பினராக சிற்சபேசர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவரை ஆடும் பெருமானாக, அருள்புரியும் மூர்த்தியாக, கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. சு.சுசீந்தரராசா, ஆ.சபாரத்தினம், பொ. கைலாசபதி அவர்ளின் சிந்தனைகள் 1994: 406. மு.கு.

97. இத்தளத்தின் 1ம் வகுப்பினராகக் குறிப்பிடப்பட்ட தேவிக்கு மோட்சம் விளையாட்டு. அதாவது கீழே ஐந்து இடம் வரை நோக்கிறங்கும். அதேசமயம் மேலேயும் முடிந்த ஞானம் வரை எட்டுவார்.

"சித் நோக்குப் பிறந்தவர்களில் உத்தமோத்தமமானவர் தான் தேவி." என்கிறார் கைலாசபதி அவர்கள்.

98. முடிந்தசத்தியத்தின் 2ம் வகுப்பினராக காசி விசுவநாதர் குறிப்பிடப் படுகிறார். பாடல் பெற்ற அல்லது வைப்புத் தலங்கள் தோறும் வீற்றிருந்து அருள்புரியும் சிவத்துவம் அடைந்த மூர்த்திகளைத் தனித்தனியே குறிப் பிடுவது கைலாசபதி அவர்களின் வழக்கம். அந்தவகையில் காசி விசுவநாதர் குறிப்பிடப்படுகிறார். மேலே நோக்காக திருவடி வரை இவர் எட்டுவார்.

99. இத்தளத்தின் 3ம் வகுப்பினராக உருத்திரர் குறிப்பிடப்படுகிறார். உருத் திரரும் ஒரு சாதகர் தானே என்று கருதலாம், பிரமவிட்டுணுக்கள் முன்னர் கருதியதுபோல. நாம ரூபம் கடந்த சிவப் பொருள் பரிபூரணமாகப் பிரகாசிப்பது இவரிடத்திலேயே. அப்பொருளை உபாசிக்க முடியாது. நிர்க்குணப் பிரமத்தைப் பொருள் எனக்கருதும் மாயாவாதிகள் உருத்திரரை சகுணப்பிரமம் என்றும் மாயைக்குட்பட்ட ஆன்ம வர்க்கத்தினரால் தற்காலிமாக பூசை செய்யப்படுபவர் என்றும் கூறுவது கருத்தற்றது உருத்திரர் மேலே ஆனந்தம் அல்லது திருவடி வரை நோக்குவர்.

3ம் 4ம் வகுப்பார் ஒன்பது இடம் மேலே நோக்குவர் என்ற பொதுவிதி இங்கு பொருந்தாது; 17ம் தளத்தில் நிற்போர் மேலே ஏறி நிற்பதில்லை. அவ்வாறே கீழே முதலாம் தளத்தினரும் கீழே இறங்குவதில்லை; அதனால் அவர்களும் இப்பொது விதியில் அடங்கார். (முன்னே பக். 32)

சு.சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம் 1994, பக. 255 - 256 மு.கு.

உருத்திரர் தளம் முடிந்த சத்தியம் அர்த்தநோக்கு அமிர்தத்திற்கு மேலே இல்லை. அவருக்கு அர்த்தம் விளையாட்டு காமமும் விளையாட்டு.

100. முடிந்த சத்திய தளத்தின் 4ம் வகுப்பினராக ஊர்பேர் கழிந்தோர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் 24ம் தளமான சிவத்தைக் கண்டு அதில் லயித்துப் போனவர்கள். எனவே கீழே பிரபஞ்சத்தைப் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கென மனிதத்தன்மை இல்லை. இதனையே நூல்கள் சிவமாகி விட்டார்கள் என்று சொல்வதாகலாம்.

101. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 406. மு.கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102. சிவஞானசித்தியார், சுபக்கம், செய்-328, பக். 668. மு.கு.

103. ச. பரநிருபசிங்கம், 1994: 12. மு.கு.

104. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 8. மு.கு.

105. திருமந்திரம், அசபை, செய் 885, 888, 891, 910-913, 951, 952, 954, காசிமடம், 1968. எழுச்சிகளுள் உன்னதமான எழுச்சிகளைக் குறிக்கும் உயிர் எழுத்துக்களை விளக்குகின்றன.

106. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம் 1994: 15 மு.கு.

107. P. பாண்டியன், ஔவைகுறள், குற. 1, சென்னை, 1990.

"ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத் தோதிய நூலின் பயன்"

இங்கு நூல் என்பது முனைவன் கண்ட முதன்நூல் என்ற வரைவிலக்கணத்துக்கு உரிய நூலையே குறிக்கும்.

108. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 300 - 301,554 மு.கு.

110. மேற்படி, பக். 200.

111. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, அன்பினைந்திணை, பக். X, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1983.

112. இதனைப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தொன்மையான ஆன்மீகப்பொருளில் "சாதாரண பாமர உலகத்துடன் பொருந்தாத மனப்பாங்கைத் தருவது" எனப் பாடாண்திணைக்கு ஏற்றவாறு பொருள் தருகிறார். நவீன ஆய்வாளர் கூறும் உலகநடைக்குப் பொருந்தாத (எண்வகை மணத்துள் காந்தர்வம் தவிர்ந்த பிற) மண முறைகளைக் குறிக்கும் என இகழ்ச்சித் தொனியுடன் விளக்குவதை ஒப்புக்கொள்ளார்.

பார்க்க; பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அத்வைத சிந்தனை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1984.

113. இவை நான்கு மணமும் மேன்மக்களிடத்தில் நிகழ்வது பற்றி இவை உலகில் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை என்று கூறப்பட்டது.

பார்க்க; இளம்பூரணம், தொல்காப்பியம், பக். 6, 160, கழகப்பதிப்பு, 1953. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: பக்554.

114. மேற்படி, பக். 199.

115. மேற்படி, பக். 534.

116. A. மேற்படி, பக். 1a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சமயக்கட்டுரைகள், பக். 81, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1961

117. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: பக். 534.

118. சு. இராசநாயகம், 'யக்ஞதரிசனம்', பண்டிதமணி நினைவுமலர், பக். 146, 147, பண்டிதமணி நூல்வெளியீட்டு சபை, 1989.

119. Käpälikas and Kälämukas என்ற நூலில் David Lorenzen என்பவர் இவைகள் ஒருகாலத்தில் அதிதீவிர பக்குவர்களுக்கு விதிக்கப்பட்ட கடும் விரதங்களை உள்ளடக்கியவை. அவர்கள் குறையை நன்கு அறிந்த குரு அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்குத், தன் நேரடி மேற்பார்வையில் இன்னஇன்ன கிரியைகளைச் செய்க என வழிகாட்டிய நிலையில் அவை பெரியோர்களால் மதிக்கப்பட்டிருந்தன. பிற்காலத்தில் தாழ்வுற்று மதிப்பிழந்தன எனச் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

பார்க்க; David, N. Lorenzen, Käpälikas and Kälämukas, Motilal Banarsidass, [Delhi, 1991.]

120. சு.சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: பக்.202

121. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: பக்.98

விசேடவிளக்கம் பக்.131,249,318

122. மேற்படி, பக். 323.

123. மேற்படி, பக். 203.

124. மேற்படி, பக். 195

125. மு.அருணாசலம், திருக்களிற்றுப்படியார் மூலமும் பழைய அனுபூதி உரையும், பக். 14-15, சைவசித்தாந்த மகா சமாஜ 57வது மகாநாட்டு நினைவு மலர், சென்னை, 1962.

126. சித்தியார் உரையில் சிவாக்கிர யோகிகள் சிவதர்மத்தைப் பின்பற்றுபவர்கள் பிராரப்தத்தின் 3 பிரிவில் (தீவிரம், சுத்தம், மந்தம்) சுத்தத்தால் பாதிக்கப்படார் என்கிறார்.

பார்க்க: V.A. Devasenapathi, Saiva Siddhanta (As expounded in the Sivagñana Siddhiyar and its Six Commentaries) University of Madras, Madras, 1974.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127. அ.ச.ஞானசம்பந்தன், பெரியபுராண ஆராய்ச்சி என்ற நூலில் மணிவாசகரை தொகையடியாருள் ஒருவராகச் சுட்டுவது சற்றும் பொருத்தமில்லை. மணிவாசகரின் மார்க்க சாதகம் வேறு எனக் கைலாசபதியும் கூறுகிறார்.

பார்க்க: சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994; 325 மு.கு.

128. சிவஞானசித்தியார், சுபக்கம், செய். 277, யாழ்ப்பாணம்

சூ. த. நூ. வி. க, 1971.

129. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 325 மு.கு.

130. சிவஞானசித்தியார், சுபக்கம், செய். 266, 1971. மு.கு.

131. மேற்படி, செய். 276.

132. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 668.

133. René Guenon, Man and His becoming According to Vedānta, New Delhi, 1981.

134. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 669. மு.கு.

135. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994; 571 மு.கு

136. மேற்படி, 581.

137. மேற்படி, ப. 577.

138. மேற்படி, ப. 599.

139. மேற்படி, ப. 648.

136. மேற்படி, பக். 552 - 553.

140. ச. பரநிருபசிங்கம், 1994: 21 மு.கு.

141. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 576 மு.கு.

142. ச.பரநிருபசிங்கம், 1994: 21 மு.கு.

143. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 619 மு.கு.

144. மேற்படி, ப. 551.

145. திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள், பாடல் 192, ப. 129, தருமபுர ஆதீனம், 1961.

146. மாணிக்கவாசக சுவாமிகள், திருக்கோவையார், செய்.2, ப.12, ஸ்ரீகாசி மடம், திருப்பனந்தாள், 1952.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

147. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 572 மு.கு.

148. மேற்படி, ப. 580.

149. I Swämi Vïreswarănanda, BrahmaSûtram, Page 523, Advaita Äshrama, Almora, 1948.

II செந்திநாதையர், சிவாத்துவித சைவபாடியம், ப. 634, செந்திநாத சுவாமி அச்சகம். 1907

150. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 621 மு.கு.

151. அருணகிரிநாத சுவாமிகள், கந்தரநுபூதி, ப. 5. பாடல். 12, வேத ப்ரவசனமந்திர வெளியீடு, முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை, 1932.

152. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 580 மு.கு.

153. மேற்படி, ப. 551.

154. ச. பரநிருபசிங்கம், 1994: 21 மு.கு.

155. மேற்படி, ப. 21.

156. திருமூலர், திருமந்திரம், 7ம் தந்திரம், பக். 205, செய் 1866, திருவாவடுதுறை ஆதீனம், 1966.

157. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 575, 576 மு.கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் மூன்று

# 3.0. கைலாசபதியும் வேதமும்

### *3.1 வேதத்தின் பெருமை*

வேதம் என்ற சொல் "வித்" என்ற வினையடியாகத் தோற்றம் பெற்றது. "வித்'" என்றால் அறிவு அல்லது அறிதல் என்று பொருள்படும். எனவே வரலாற்றுக்காலம் முதலே பாரதநாட்டில் வேதம் பரிசுத்தமான ஞானசுரங்கம் என்றே போற்றப்பட்டுவந்துள்ளது. அது உள்ளொளி பெற்ற இருடிகளால் காணப்பட்ட கவிதை; அவர்களின் புத்தியின் திறமை கொண்டு கட்டி எழுப்பப்பட்ட சிந்தனா அமைப்பு அல்ல என்ற கருத்தே நிலை பெற்றிருந்தது. என்றும் உள்ள அழியாத பேருண்மையை ரிஷிகள் தமது ஞானக்காட்சியில் கண்டு சொல்வடிவில் தந்தனர். ஆரம்பத்தில் "கவி" என்ற சொல் வேதத்தின் உண்மையைக் கண்டோன் என்ற பொருளில்தான் வழங்கியது. பிற்பட்ட காலத்தில் அது பாடும் புலவன் எவனையும் குறிக்க வந்தமை அச்சொல்லின் பொருள் இழிந்தமையையே காட்டும்.

### *3.2 ஐரோப்பியரின் வேதம் பற்றிய விளக்கம். அதனைச் சுதேசிகள் ஏற்றல்*

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஐரோப்பியர் சம்ஸ் கிருதத்திலும் வேத ஆராய்ச்சியிலும் ஈடுபடலாயினர். மக்ஸ்முலர் (Max müller 1823-1900) என்ற ஜேர்மனியர் பேர்ளின் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதக் கல்வியிலும், பாரிஸில் வேத ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். அவர் இங்கிலாந்தில் ஒக்ஸ்.ஃபோட் பல்கலைக்கழகத்தில் ஒப்பியல் மொழி நூல், ஒப்பியல் பௌராணிகவியல், ஒப்பியல் சமயவியல் ஆகிய துறைகளில் வேதக்கல்வியைத் தொடர்ந்தார். 1849 - 1873 வரையான காலப்பகுதியில் இருக்கு வேதத்தைச் சாயனபாஷியத்துடன் ஆறுபாகங்களாக மொழிபெயர்த்தார். ஆனால் அந்த நூற்றாண்டின் விஞ்ஞான, பகுத்தறவுவாத நோக்கிலேயே இவற்றைச் செய்தார். இந்திய வேத ஆய்வுக்குரிய நிருக்தம், நிகண்டு முதலியனவும் பிற்கால உரையாசிரியர்களும் காணமுடியாத உண்மைகளை மேனாட்டுப் புதுமுறை காட்டவல்லது என்று கூறி, தொன்மையான - இந்திய மரபுரீதியான வேத ஆராய்ச்சியை எள்ளி நகையாடினர். ஆரியர் இரண்டு கிளைகளாகப் பிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கேயும், தெற்கேயும் இடம் பெயர்ந்தனர் என்ற ஒரு கற்பனையை ஆக்கினர். தற்காலத்தில் ஐரோப்பியர் தென், வட அமெரிக்காக்களில் குடியேறியதை மாதிரியுருவாகக் கொண்டு, ஆரியர் புலம் பெயர்தற் கொள்கையை வலியுறச் செய்தனர். அவர் வழிவந்த சிந்தனைகள் இந்திய ஆட்சியாளர்களுக்கும், கிறிஸ்தவமத குருமார்களுக்கும் ஒத்திருந்தமையால் அவர்கள் தாம் ஆக்கிய இந்திய வரலாற்று நூல்களில் இக் கருத்துக்களைப் பரப்பினர். நவீன கல்விமான்களும் இதனை அப்படியே நம்பினர்; ஏற்றனர். யாழ்ப்பாணத்தில் பிறந்து, இந்தியாவிலும், இங்கிலாந்திலும் பட்டம் பெற்றவர்கள் இக்கருத்துக்களை மெல்ல மெல்ல ஏற்கலாயினர்.

### *3.3 கைலாசபதியின் வேதம் பற்றிய விளக்கம்*

மேலை நாட்டவர் இருக்கு முதலிய நான்கு வேதங்களைச் சென்ற நூற்றாண்டு நடுப்பகுதியில் (1852 அளவில்) வடமொழியிலும், ஆங்கில மொழி பெயர்ப்பிலும் பற்பல பாகங்களாக வெளியிடத் தொடங்கினர். ஏட்டிலே எழுதாமல் இருந்த காலம் போய் அச்சிலும் ஆயிரக்கணக்கான பிரதிகள் அம்மிலேச்ச நாடுகளிலிருந்து வெளிவருவதையும் அவை வேதாங்க நெறியில் வராத புதுமையான அளவு கோல்களைக் கொண்டு அளக்கப்படுவதையும் மரபு வழிவந்தோர் ஏக்கத்துடன் பார்த்தனர்.

இத்தகையதோர் பின்புலத்தை வைத்துக்கொண்டே நாம் கைலாசபதி அவர்களின் வேதம் பற்றிய கருத்துக்களை ஆராயவேண்டும். "நடமாடும் கலைக்களஞ்சியம்" எனப் பெயர் பெற்ற கைலாசபதி அவர்கள் அக்கால வழக்கிலிருந்த நூல்கள் முழுவதையும் கிடைத்தவரை கற்றுணர்ந்தவர். அத்துடன் கல்கத்தாவில் இருந்து வந்த "மொடேன் றிவியூ", சென்னை "இந்தியன் றிவியூ" போன்ற சஞ்சிகைகளைப் படித்தவர். அதனால் வேதம் பற்றிய மரபுவழிச் சிந்தனைக்கும் புதிய நோக்குடையவர்களின் கட்டுக்கதைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனக்கண்டார். மக்ஸ்முல்லரின் கற்பனைக்கதையே ஆரியர் குடியேற்றம் என்பதை உணர்ந்தார்.[1] அதேபோல் திராவிடக் கட்டுக்கதையும் கோல்டுவெல் பாதிரியாரின் கட்டுக்கதையே என்றார்.[2] கைலாசபதி அவர்கள் ஆரியம், தமிழ் என்ற இரண்டையும் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார். அவரது தெளிந்த சிந்தனையில் உதித்த மொழி பற்றிய உண்மைகள் எமக்கு அவர் கூறும் வேதம் பற்றிய கருத்துக்களை விளக்க உதவுகின்றன.

"அங்கானி வேதாஸ் சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தரஹ

புராணம் த்ர்ம சாஸ்த்ரம் ச வித்யா ஹ்யேதாஸ் சதுர்தச" (மனு)[3]

என்ற சுலோகத்துக்கு அமையச் சனாதன தர்மம் என்று போற்றப்படும் பாரதநாட்டின் தொன்னெறிக்கு அதிமுக்கியமான நூல்கள் பதினான்கு என்பது தொன்றுதொட்டு வந்த உண்மை. வேதங்கள் நான்கு. வேதாங்கங்கள் ஆறு. உபாங்கங்கள் நான்கு. நவீன மேற்குலக ஆய்வாளரின் கருத்தில் இவை படிப்படியாக ஆரம்ப சிந்தனை நிலையில் இருந்து வளர்ந்தவை என்ற போக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கல்வி உலகில் பிரபல்யமாயிருக்கிறது. அது தொன்மரபு தெரியாதோரின் போக்கு என நாம் கருதலாம். ஆனால் கைலாசபதி அவர்கள் தொன்மை நெறியில் பிறழ்வுகள் ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலையைத் தம் ஸ்மிருதி நோக்கில் ஆராய்ந்துள்ளார். இப்பதினான்கு வித்தைகள் பற்றிய அவர் கருத்தை வேதம் பற்றிய இவ்வத்தியாயத்தில் ஆராய்வோம்.

### *3.3.1 வேதம் நான்கு*

எல்லாக் காலத்துக்கும் பொதுவான சாசுவத தர்மங்களைச் சொல்வது வேதம். அது மூன்றா - நான்கா, முந்தியதா - பிந்தியதா என்ற விஞ்ஞான ஆராய்ச்சி வலுத்துள்ள இக்காலத்தில், "ஆறுமோர் நான்கு வேதமற முறைத்தருளி னானே"[4] என்ற அப்பரது தேவார அடிகளைக் கைலாசபதி அவர்கள் நினைவூட்டி வேதம் நான்கு என்கிறார். காலத்தால் முற்பட்டது எனக்கருதப்படும் இருக்கு வேதம் ஆரம்பகால ஆரியக் கவிஞர்களின் இயற்கை எழிலை மோகித்துப்பாடிய பாடல்கள் என்பதைக் கைலாசபதி அவர்கள் ஒப்புக்கொள்ளார். வேதத்தின் மந்திரசங்கிதை, அவற்றுக்குரிய சாகைகள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் என்பவற்றுக்குரிய உள்தொடர்புகள் ஒன்றிலிருந்து ஒன்று கிளைத்தது என்ற சிந்தனைப் போக்கையும் அவர் எதிர்க்கிறார். இதற்கு "இருட் பெரும் கடலாம் யாமத்து"[5] என்று தொடங்கும் செய்யுளை உதாரணம் காட்டுகிறார்.

வேதம் எண்ணிலி கோடி. அது சமுத்திரம் போல விரிந்தும், ஆழ்ந்தும் இருக்கிறது. அதில் ரிஷிகள் முகந்தவற்றைப் - பொருட்பிரபஞ்சத்தின் அதிதெய்வங்களாக இருக்கின்ற தேவதைகளைத் - தாம் கண்ட அளவில் பாடினர். அவையே இன்று வியாசரால் தொகுக்கப்பட்ட வேதங்களாக உள்ளன என்றார். முதன் மூன்று யுகங்களிலும் வேதரிஷிகள் கண்ட மந்திரத் தொகுப்புக்கள் அனைத்தும் நான்காம் யுகமாகிய கலியுகத்தில், அதாவது தற்காலத்தில், வழங்கமாட்டா; சிற்றறிவு படைத்த மக்கள் மேலான அறிவு தேடுவதை விட்டு, அழியும் பொருள்களில் ஆர்வம் வைத்து அலைகின்றனர். ஆகையால்தான் இக்காலத்துக்குப் பயன்படுபவை மட்டுமே வியாசரால் தொகுக்கப்பட்டன; அதற்காக இந்த (இருக்கு) 1028 சூக்தங்களை மட்டும் தான் வேதம் என்பது தவறு என்கிறார். வியாசர் தொகுத்த விடயத்தினை அவர்,

> மந்திர திருஷ்டாக்களாகிய பிராமணர் (பூமிக்கு) வரார். துவாபரயுக முடிவில் இருக்கு மந்திரம் வகுக்கப்படலாம். அதற்காக வியாசர் வரலாம். ஒரு முறை வசிட்டர் வியாசரானார்.[6]

எனத் தெளிவாகக் கூறியுள்ளார். பற்பல புராணங்களிலும் இவ்விடயம் தெளிவாகப் பேசப்படுகிறது. (அரவிந்தர் கூடத் தமது வேதம் பற்றிய ஆங்கில நூலில் இதனை நன்றாக விளக்கியுள்ளார்.) அவை தள்ளத்தக்க, பயனற்ற, கற்பனைப் பகுப்பாய்வன்று என்பார் கைலாசபதி அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3.3.2 மந்திரபாகம்*

வேதமந்திரங்கள் ஐந்து சுலோகங்கள் முதல் பதினைந்து சுலோகங்கள் வரை சிறியதும் பெரியதுமான மந்திரசூக்தங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை காட்சியாக முனிவர்களுக்குத் தோன்றியவை. "வாக்" என்ற மூல ஒலிவடிவத்தை யோகக்காட்சியினால் கண்ட முனிவர்கள் தம் கருத்தை வெளிப்படுத்திய விதமே மந்திரவடிவங்கள். அவர்கள் தற்காலக் கவிஞர்களைப் போல எழுத்துக்களையும், சொற்களையும் சேர்த்து எழுதியும், வெட்டித் திருத்தியும் நகாசு வேலை செய்து கவிதை படைக்கவில்லை. அதன் காரணத்தினாலேயே நம்முன்னைய சான்றோர், "வேதக்காட்சிக்கும் உபநிடதத்துச்சியில் விளைந்த போதக்காட்சிக்கும்"[7] போன்ற கருத்துக்களின் மூலம் மந்திரதிருஷ்டாக்கள் பார்த்தவை என்று வருணித்தாரேயன்றி எழுதியவை என்றோ அல்லது கவி படைத்தவை என்றோ கூறவில்லை. அப்படிக்கூறும் நவீன ஆய்வாளர்கள் வேதம் எப்படி ஆராயப்பட வேண்டுமோ, எந்த எந்தக் கருவி நூல்களைக் கொண்டு வேதப்பொருட்களைத் தீர்மானிக்க வேண்டுமோ அவற்றை வரன் முறைப்படி ஆராயாதபடியால் வந்த பிறழ்வுகளே நவீன வேத ஆராய்ச்சிகள். மேலே கூறப்பட்ட பதினான்கு சாஸ்திரங்களுள் வேதம் தவிர்ந்த ஏனைய பத்தும் காட்டும் வழியில் ஆராய்வதே நற்பலனைக் காட்டும் என்றும், நவீனர்கள் நிருத்தம் முதலிய கருவி நூல்களைக் கற்பனையான சொற்பிறப்பா ராய்ச்சி என்று தள்ளுவது எப்பயனையும் தராது என்றும் கூறினர். வேதமொழியில் வர்ணம், பதம், மந்திரம் என்ற ஒழுங்கு முறையில் அகக்காட்சியினால் நேரடியா கப்பொருளை அறியும் முறையையே தொன்மையான பாரத நாட்டினர் கைக்கொண்டனர் என்றும் கூறினார் கைலாசபதி அவர்கள்.

பொருள் விளங்கும் முறையில் மெய்ப்பொருளின் உண்மையை அறிய வழிசெய்வது வேதக்கல்வி அதாவது பொருளை அறிவதென்றால் வெறும் சொல்லாக மட்டும் அறிவதன்று. அந்தச் சொல்லுக்குப் பொருளோடு உள்ள அகத் தொடர்பை விளக்குவதாக அமைவதே வேதக்கல்வி.[8] அத்துடன் வேதகாலத்தில் வேதமந்திர சுலோகங்களை அத்தியயனம் செய்யும் முறை மிகவும் முக்கியமானது என்கிறார் கைலாசபதி அவர்கள். அவ்வகையில் வேதமந்திரங்களை அத்தியயனம் செய்யும் மாணவன் ஒருவன் மந்திரதிருஷ்டா ஆகிவிட்டான் என்பது கருத்தல்ல. ஆனால் அவன் அவ்வேத மாதாவை அதற்குரிய மரியாதையுடன் அணுகிச் சிரத்தையுடன் அத்தியயனம் செய்கிறான் என்பதே பொருள். அன்றாடக் கிரியைகள் - சம்ஸ்காரங்கள் மூலமாகத் தன்னைப் புனிதப்படுத்தும் முயற்சிகளைச் செய்கிறான். அதாவது இயம, நியமாதிகளால் தன்னைப் தூய்மைப்படுத்துகிறான். அதனால் அவனுக்கு வாக்குச் சுத்தம் பிறக்கிறது. வெறும் சொற்களாக இருந்த வேதமந்திரங்கள் வாக்கின் மூலத்தை, அதாவது பீஜத்தை உணர்ந்தவர்கள் அருளிச்செய்தது என்ற விளக்கம் மெல்ல மெல்ல வெளிக்கிறது..

ரிஷிகள் வேதமாகிய கடலில் தாம்தாம் கண்ட சிறு பகுதியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்ததாலும், பொருள் உண்மையை ஆராய்ந்ததாலும் மெய்ப்பொருள் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தும் விடயத்தில் அச்சிந்தனைகள் சிறுசிறு வேறுபாடுகளைத் தோற்றுவிக்கலாம். அந்தவகையில் ஒவ்வொரு ரிஷியும் தான்தான் நிற்கும் தளம், எட்டும் நோக்கு என்ற புத்திவிருத்தி சம்பந்தமான அனுபவங்களின் பெறுபேறாக வேதத்தைப் பார்ப்பது ஒரு முகமாக இருக்கும். இதனைக் கைலாசபதி அவர்கள் ,

> I.வேதமுகம் பல: மந்திரமுகம். ஒவ்வொரு சாகைக்கு உரியவரும் ஓதும் மந்திர சங்கிதை உண்டு. II.ஒவ்வொரு சிருஷ்டியிலும் சங்கற்பம் மூலமான வேதம் ஈசுரவாக்கு. அதுதான் அச்சிருஷ்டியில் பிரகாசிக்கும். அதைக்காண முனிவர் முயல்வர்;அது பொருட் பெருங்கடல்.. முனிவர்கள் தம்மாற்றலுக்கேற்பக் கண்ட வேதங்கள் "ஐயா" என்று ஓலமிடும்.[9]

என்கிறார். வேதமந்திரங்கள் குறித்த பொதுவான ஆனால் மிக ஆழமான கருத்துக்களைக் கைலாசபதி அவர்கள் 1955ல் கூறியுள்ளார்.

> சுருதி சொல்லிக் கொண்டிருக்கிறது. கேட்கிறது.[10]

> வேதம் உண்மை நினைக்கிற பகுதி மந்திரம். யோகமுறையில் உபாசிக்கிறது அதில் அழுந்தியிருப்பதற்கு உபகாரமான சில வாக்கு.... மந்திரம் ஒன்று வரும். எதைப்பாவிக்கிறாயோ அது ஆகி றாய். பாவனா உபகாரம் மந்திரம். மந்திரசங்கிதை (4 வேதத்துக் கும் உண்டு).[11]

வேதம் நாதமயமானது; என்றும் உள்ளது. சித்பரவெளியில் என்றென்றும் ஒலித்துக் கொண்டிருக்கும்.[12] கேட்பவர்களிடம் அதைக் கேட்கும் கருவி - ஆற்றல் - இருந்தால் மட்டுமே அதனைக் கேட்கமுடியும். அதாவது சித்தவிருத்தியில் ஆரியத்துவம் கைவந்த ரிஷி வேதத்தைக் கேட்க - காண முடியும். அது ஒரு காலத்திற்கு உண்மையாயும், வேறொரு காலத்திற்குப் பொருத்தமற்றதாயும் மாற்றமுறும் அசத்தியப் பொருளன்று.[13] அதனை நேரே மந்திரமாகக் காண்பவர்கள் அதை நினைத்து, அதில் ஊறி, மனதைப் பதியவைத்து, அது உணர்த்தும் உண்மைப்பொருளை அறிகிறார்கள். அதில் ஆழ்ந்த விருத்தியில்லாதவர்கள் வேத அத்தியயனத்தின் மூலம்தான் அறிந்த மந்திரத்தை உபாசித்து அது குறிக்கும் தெய்வத்தைப் பாவிக்கிறார்கள். அப்படிப் பாவனை செய்வதற்கு உபகாரமாக இருப்பது மந்திரம். அதனையே கைலாசபதி அவர்கள் "பாவனா உபகாரம் மந்திரம்"[14] என்றார். அதற்கு ஆதாரமாக "எதைப்பாவிக்கிறாயோ அது ஆகிறாய்" எனத் தாயுமானவர் பாடல் ஒன்றும் வருகிறது.[15] இது இவ்விடத்தில் சுட்டத்தக்கது.

### *3.3.3 வேதப்பிரிவும் புத்திவிருத்தித்தளமும்*

நான்கு வேதங்களுக்குமுரிய மந்திர பாகமாகிய சங்கிதைகள் பற்றி மாறுபட்ட சில கருத்துக்கள் மக்களிடையே உலாவுகின்றன. மேல்நாட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கு வேதமே வேதம் என்றும், அதில் இருந்து வேறாக எடுத்துத் தரப்பட்ட பெரும் பகுதிகளே சாம வேதத்திலும், யசுர் வேதத்திலும் உள்ளவை என்ற ரீதியிலும் விளக்கம் கூறுவர்.[16] ஆனால் கைலாசபதி அவர்களோ ஒரேவகையான மந்திரங்கள் அமைந்திருக்கும் முறையைத் தம் கண்விருத்தி முறையில் வைத்து விளக்குகிறார். புத்திவிருத்தியில் 10ம் இடமாகிய தர்மம், 11ம் இடமாகிய அர்த்தம், 13ம் இடமாகிய மோட்சம், 17ம் இடமாகிய முடிந்த சத்தியம் ஆகிய நான்கு தளங்களும் சத்திய சம்பந்தமானவை என்கிறார்.[17] அகங்கார விருத்தியின் ஐந்தாம் நிலையாகிய சத்தியம் கைவந்த சாதகன் முடிந்த சத்தியத்தை நோக்கும் நிலையில் இருக்கு வேதத்தையும், மோட்சத்தை நோக்கும் நிலையில் யசுர்வேதத்தையும், அர்த்தத்தை நோக்கும் நிலையில் சாமவேதத்தையும், தர்மத்தை நோக்கும் நிலையில் அதர்வவேதத்தையும் விளங்கிக்கொள்வான் என்றார்:

அதர்வம் சாமம் யசுர் இருக்கு தர்மம் அர்த்தம் மோட்சம் முடிந்த சத்தியம்.[18]

இது அந்தந்த வேதத்திற்குரிய தாதுக்களை அறியும் திறமையினாலேயே உண்டாகும். வர்ணம், பதம் என்பவற்றால் அமைந்த மந்திரங்கள் அவற்றுக்குரிய தாதுக்களைக் கண்டவர்களுக்கு மட்டும்தான் தம் உண்மை இயல்பை வெளிப்படுத்தும். மற்றையவர்களுக்கு அது வெறும் சொற்கூட்டமாக, பாடல்களாகத் தெரிவதில் வியப்பொன்றும் இல்லை.

**தாது பார்க்கும் இடம் - பார்க்கப்படும் இடம். சத்தியபாகம் தர்மம், அர்த்தம், மோக்ஷம், முடிந்த சத்தியம் 4 நோக்கையும் பார்க்கிறது தான் 4 வேதமந்திர பாகம்.**[19]

மேலே கூறப்பட்ட தர்மம், அர்த்தம், மேக்ஷம், முடிந்த சத்தியம் ஆகிய நான்கு புத்திவிருத்தித் தளங்களும் பார்க்கப்படும் இடங்களாகச் சுட்டப்படுகின்றன. நோக்கு வேறுபாட்டால் தான் இம்மந்திர சங்கிதைகள் வேறுபடுகின்றன. யசுர் வேதம் கிரியைகளுடன் தொடர்புடையது. கிரியைகள் சம்ஸ்காரத்திற்கு உபயோகமானவை. கைலாசபதி அவர்கள் முத்தீச் செல்வர் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் அந்தணர்கள் தாம் நித்தியம் ஈட்டிய நல்வினை, தீவினை சார்ந்த கர்மங்களை அக்கினியில் ஆகுதி செய்கிறார்கள் என்கிறார்.[20] விடுதலை பெறவேண்டும் என்று மோட்சத்தை நோக்குபவர்களே உலகியலில் வாழ்ந்தாலும் இவ்வாறு நித்தியாக்கினி வளர்த்தல் மூலம் வீடு பேற்றுக்கு வழிசெய்கிறார்கள். எனவே மோட்சத்திற்கும், மோட்சம் என்ற தளத்தை நோக்குவதற்கும் யசுர் வேதம் அவசியம் என்று கைலாசபதி அவர்கள் குறிப்பது நம்மால் விளங்கக்கூடியதே. அர்த்தம் - பொருள். அர்த்தத்தோடு - பொருளோடு நம்மை ஒன்றுவிப்பதே சாம வேத கீதம். அதாவது இறைவனுடன் ஒன்றுவிப்பது. இதனால் அர்த்த தளத்திற்கும், சாமவேத்துக்கும் உள்ள தொடர்பு ஒருவாறு புலப்படும்.[21] அதர்வ வேதம் தர்மத்தோடு தொடர்புடையது எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபதி அவர்கள் கூறுவதும் கருத்தமைந்த விளக்கமே. புருஷார்த்தம் அனைத்திற்கும் அடித்தளமாக விளங்குவது தர்மம். லௌகிக வாழ்க்கை எனினும், பரமார்த்திக வாழ்க்கை எனினும் எல்லாமே தர்மத்தையே அடித்தளமாகக் கொண்டன. தர்மத்தை விட்டு ஞானம் இல்லை என்பார் கைலாசபதி அவர்கள். இவ்விடயம் புராணங்களிலும் பேசப்படுகிறது. அதர்வவேதத்தில் மனிதன் நீதி நெறியில் வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய அத்தனை விடயங்களும் கூறப்பட்டுள்ளன. நோய் நொடியின்றி வாழ்வது, எதிரிக்கும் இம்சையின்றித் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்வது போன்ற லௌகிக விடயங்கள் அதிலுள்ளதால் அது குறைபாடுடையது எனச் சிலர் கருதுகின்றனர். "திரயீ வித்யா" போன்ற சொற்றொடரால் முதல் மூன்று வேதங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் நம்மிடையே தோன்றிற்று. வேதம் ஒன்றே; அதாவது இருக்குவேதம் மட்டுமே உண்மையான மூல வேதம். மற்றைய வேதங்களெல்லாம் இதிலிருந்தே தோற்றம் பெற்றன என்றும், காலவாராய்ச்சிப்படி இருக்குவேதம் முந்தியது, யசுர்வேதம் பிந்தியது, அதர்வவேதம் அனுபந்தி வேதமாகச் சேர்க்கப்பட்டது என்றெல்லாம் நவீன ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இப்படி ஒரு கருத்து முளைகொள்ளக் காரணம் என்ன என்பது ஆய்வுக்குரியதே.

### *3.3.4 வேத சாகைகள்*

வேதமந்திரங்களின் சாகைகள் பற்றிய விளக்கங்களையும் கைலாசபதி அவர்கள் தந்துள்ளார். "ஆயிரம் சாகைகள்" போன்ற சொற்றொடர்கள் தேவாரங்களிலும் பல இடங்களில் வருகின்றன. இருக்குவேதம் 21 சாகைகளையும், யசுர்வேதம் 109 சாகைகளையும், சாமவேதம் 1000 சாகைகளையும், அதர்வவேதம் 50 சாகைகளையும் உள்ளடக்கியுள்ளன என்பது மரபுரீதியான சிந்தனை. தற்காலத்தில் சில சாகைகள் வழக்கொழிந்து போயின. எனினும் பாரதநாட்டின் சில பிரதேசங்களில் இன்ன இன்ன சாகைகள் இன்ன இன்ன கோத்திரத் தாரிடத்திலே வழக்கில் உள்ளன என்பது பிரசித்தம். இவை பாடபேதங்கள் என்றும், ஒவ்வொரு ரிஷி கோத்திரத்தின் மரபுபேணி வந்த வழியில் ஏற்பட்ட சில மாற்றங்களோடு கூடியவை என்றும் ஆய்வாளர் பலர் பலவித விளக்கம் தருவர்.[22] ஆனால் அவை அறிவுக்குப் பொருத்தம் போலத் தோன்றவில்லை. ஓர் எழுத்தும் ஓர் உச்சரிப்பும் பிழைக்கக் கூடாது என்று கவனம் செலுத்தியவர்கள் ஆயிரம் பேதம் வரக்கூடியதாகப் பாடும் முறையிலோ சொற்களிலோ மாற்றம் செய்வார்களா? சாமவேதத்தில் ஆயிரம் சாகைகள் தோன்றியமைக்கு இசைவேறுபாடு காரணம் எனக் கூறுகின்றனர். ஆனால் மற்றைய வேதங்களான இருக்கு, யசுர், அதர்வம் போன்றவற்றில் சாகை வேறுபாடுகள் எப்படி உண்டாயின? அபௌருஷேயமான மூலவேதத்தில் எப்படி வேறுபாடுகள் தோன்றின? இவை சிந்தனைக்குரியன. இம்மாறுபாடுகள் பற்றிக் கைலாசபதி அவர்கள் தமது தெளிந்த சிந்தனையில் தோன்றிய கருத்துக்களைப் பின்வருமாறு கூறுகிறார்:

ஒவ்வொரு சாகைக்கு உரியவரும் ஓதும் மந்திர சங்கிதை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சிருஷ்டியிலும் சங்கற்ப மூலமான வேதம் ஈசுரவாக்கு. அதுதான் அச்சிருட்டியில் பிரகாசிக்கும். அதனைக்கான முனிவர் முயல்வர். அது பொருட் பெருங்கடல்.[23]

### 3.3.5 வேதத்தில் லௌகிகப் பிரார்த்தனை

வேதத்தில் கூறப்பட்ட மிக நுண்ணிய விடயங்களைக் கூடக் கைலாசபதி அவர்கள் தமது சிந்தனைக்கு உள்வாங்கியுள்ளார். அதாவது உரையாசிரியர் வேதமந்திரங்களில் லௌகிக செல்வங்களாகிய பசுக்கள், தானியங்கள் போன்றவற்றை யாசிக்கும் பாடல்கள் வருவதால் அவை மிகச் சாதாரண பாடல்களே என்றனர். இம்மரபையே மேலைத்தேசத்தவர்களும் கைக்கொண் டனர். ஆனால் கைலாசபதி அவர்களோ அதனை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் அதற்கு நம் கண்களுக்கு முன்னே தோன்றும் இவ்வுலகம் எங்களுக்கு நிஜம் போலத் தெரிகிறது. ஆனால் அது உண்மையில் நிஜம் இல்லை. வயிறு பசிக்கும் போது உடல் இருக்கிறது என்ற உணர்வு வருகிறது. எதை உண்பது என்ற ஆராய்ச்சியும் பிறக்கிறது. இறைவனது திருவருளால் வந்த உடலில் குடியிருந்து கொண்டு, ஆன்மா அந்தக்கரணங்களின் வழியே, அதாவது மெய், வாய், கண், மூக்கு,செவிகளை ஊடகமாகக்கொண்டு புவனங்களை, போகங்களைச் சுவைக் கிறது. அப்படிச் சுவைக்கும் போது அவை யாரிடமிருந்து கிடைத்தனவோ அந்தப் பரம் பொருளுக்கே நன்றி செலுத்திச் சுவைக்க வேண்டும் என்பது மரபு. அந்த வகையில்தான் வேதகாலத்து மக்களும் லௌகிக செல்வங்களுக்கு முக்கி யத்துவம் கொடுத்து அவற்றை யாசித்தனர். அதன் காரணத்தினால் தெய்வங் களிடம் அவற்றை யாசித்துப்பாடப்பட்ட பாடல்களும் சாதாரண பாடல்கள் அல்ல என்பார் கைலாசபதி அவர்கள்.

### 3.3.6 வேதம் வாழ்க்கைநூல்

வேதம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல். அனைத்துத் தர்மத்திற்கும் மூலமானது[24] என்ற மனுவின் கருத்தைக் கைலாசபதி அவர்கள் வலியுறுத்துவது நம் சிந்தனைக்குரியது. சாதாரண உலகியலில் பொருட் செல்வத்தை எப்படிப் பங்கீடு செய்வது என்ற விடயம் கூட வைதிக நோக்கில் ஆராயப்படவேண்டும் என்பார்.

> பிள்ளைக்குப் பொருளைப் பெற உரிமையுண்டு. உரிமை தெரிய வேதம் - முறை கிடக்கிறது. அன்னமயம் நான். தர்மம் படிக்கிறதன்று வேதம் தெரிந்தவனுக்கு இதில் இன்னது செய்யத்தக்கது என்று தெரிகிறது.[25]

அதாவது வேதம் அறிவு நூல் என்றே காலங்காலமாகப் போற்றப்பட்டு வருகிறது. தந்தை தேடிய சொத்தில் தனையனுக்கும் உரிமை உண்டு. அது எப்படி என்ற முறையை விளக்குவதும் வேதம். எனவே உரிமை பற்றிய அறிவுக்கு மூலமாக அமைவது வேதம் என்கிறார். ஒருவன் பெரும் செல்வத்தைச் சம்பாதித்து இறக்கும் சந்தர்ப்பத்தில் அச்செல்வத்தை என்ன செய்வது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமல் குழப்பமடைகிறான். தீய எண்ணங்கொண்ட தனது பிள்ளைகள் அச்செல்வ மிகையினால் தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும், பிறருக்கும் தீமை செய்வார்கள் என்பதை உணர்ந்து தர்ம வழியில் எப்படிப் பொருளைச் செலவழிக்கலாம் என அவன் சிந்திக்கிறான். அதற்கு வேதம் தெரிய வேண்டும் என்பார் கைலாசபதி அவர்கள். வேதத்தைப் பார்க்கமுடியாத கீழ் நிலையில் உள்ளவர்கள் அர்த்த வேதத்தைப் பார்த்து அதன்படி பொருளை நீதியான தர்மங்களில் செலவிடலாம் என்கிறார். எனவே சொத்துப் பங்கீட்டிற்கும் மூலமாக அமைகிறது வேதம் என்பது கைலாசபதி அவர்களின் கொள்கை:

> உலகம் கோடி தலைப்பட்டுக் கிடக்கும். பொருள் - வேதம் - தெரிந்தவனுக்கு சந்தர்ப்பத்தில் தர்மம் தெரியும்.[26]

என்றுங் கூறுகிறார். தர்மம் என்பது இப்படியான சந்தர்ப்பத்தில் இப்படி நடக்கவேண்டும் என்று புத்தகத்தில் படிக்கிறதன்று. அது அகக்கண் முன் தோன்றவேண்டும். வேதம் தெரிந்தவனுக்கு இச்சந்தர்ப்பத்தில் இப்படிச் செய்யலாம் என்று அது நேர்க்காட்சியாகத் தெரியும். அதுதான் உண்மையான தர்மம். அது இயலாத கலிகாலத்தில் புராண இதிகாசங்களை அறிந்து, அதனைப்பின்பற்றி ஆசாரம் பேணி நடப்பதும் செய்யத்தக்கது. "தாடகைக்கு விடுபாணம்" என்று வேதமுணர்ந்த விசுவாமித்திர முனிவர் இராமனுக்குக் கூற, அவர் பெண்ணென நினைத்து ஒரு கணம் தயங்கினார். "நின்சொல் வேதம் எனக்கொண்டு உடனே செய்யாமல் கணநேரம் தரித்தேனே" என வருந்தினார்.[27] எனவே தர்மத்திற்கும் அடிப்படையாக அமைவது வேதமே என்பார் கைலாசபதி அவர்கள்.

3.3.7 வேதம் மூலம்: அநாதிசிருஷ்டி

அநாதி சிருஷ்டியின் இரகசியத்தை அறிய மூலமாக இருப்பது வேதம். அநாதி சிருஷ்டி ஒரு பிரம கற்பம் முடிந்து மீளப்பிரபஞ்சம் விரியும் போது அமைவது. அதன் ஆரம்பம் பற்றிய விளக்கம் அதியுன்னத தேவ ரிஷிகளுக்கும் விளங்காதது. இதன் காரணத்தினாலேயே மெய்கண்டார் "புனருற்பவம் உணர்த்துமாறு நுதலிற்று" எனக் கூறுகிறார். இங்கு "புனருற்பவம்" எனக் கூறியமை கவனிக்கத்தக்கது. பிரமாவின் பகல் ஆகிய ஆயிரம் சதுர்யுகம் முடிந்தவுடன் ஒரு பிரளயம் ஏற்படும். இரவுகழிந்து பிரமா விழித்தெழுந்து மீண்டும் உலகைப் படைக்க முனைவது ஆதி சிருஷ்டி எனலாம். தெய்வ சங்கற்பத்தைப் பூரணமாக உணர்ந்தால் மட்டுமே சிருஷ்டியின் இரகசியம் விளங்கும். அதற்கு வேதம் தெரியவேண்டும். சாதாரண உவமையில் விளக்குவோமாயின் ஒரு இயந்திரத்தை ஆக்கிய பொறியியல் நிபுணன் அதன் அமைப்பையும், செயற்பாட்டையும் தன் கற்பனையில் காணுகிறான். அதனைப் பருப்பொருளாகச் செய்து முடித்தபின், அதை இயக்குபவர்களுக்கு உதவியாகக் கைநூல் ஒன்றைத்,தன் கற்பனையில் இருந்த கருத்துக்களுக்குச் சொல்வடிவம் கொடுத்து ஆக்கி, உபகரிக்கின்றான். இயந்திரத்தை விளக்கிச் செயற்படுத்த அக்கைநூல் உதவுவது போல உலகைப் பயன்படுத்த வேதம் உதவுகிறது. மேலும் தனு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரண, புவன, போகங்களைச் சரியாகப் பயன்படுத்த அவாவும் மனிதனுக்குச் சிருஷ்டியின் இரகசியத்தை அறிய சங்கற்ப மூலமான வேதம் தெரியவேண்டும் என்கிறார்.

### 3.3.8 *மறையும் வேதமும்*

நவீன கல்விசார் அறிஞர்கள் மறை, வேதம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்றே பேசிவருகின்றனர். ஆனால் இவ்விரண்டிற்கும் சற்று வேறுபாடு உண்டு என்பார் கைலாசபதி அவர்கள்.

**மறை வேறு; மந்திரம் வேறு.**[28]

என்றும்

**மறை எண்ணிலி கோடி அதில் கதி பற்றியது வேதம்.**[29]

என்றும் கூறியுள்ளார். தேவாரங்களிற் கூட இவ்விரண்டு சொற்களும் ஒரே வரிசையில் வருகின்றன. எனவே அவற்றுக்கு வேறுபாடு உண்டு.[30] "இருக்கு நான்மறை ஈசனையே தொழும்" போன்ற சொற்றொடர்கள் ஒரே பாடலில் வந்துள்ளன. மேலும் கந்தபுராணத்தில் சனகாதியர் "புடைதொறுமலைப்ப அருட் பெருங்கடலே" என்கின்றனர். மறை எண்ணிலி கோடி; அதாவது அளவிறந்தது, மறைத்துப் பேசப்படுவது, எல்லோருக்கும் இலகுவில் விளங்காதது, அக்கடலில் கதிக்கு வழி என்ன என்று கிலேசிப்பவர்களுக்குக் கதிக்கு வழிகாட்டுவன வேதம் என்று காட்டப்பட்டுள்ளது.[31] ரி.வி. கபாலிசாஸ்திரி அவர்களும் "ஆற்றல் அழியும் என்று அந்தணர்கள் நான்மறையை ஏட்டின் புறத்து எழுதார்" என்று கூறி வேதத்திற்கும், மறைக்கும் சற்று வேறுபாடு காட்டுகிறார்.[32] இந்த நுட்பங்களை வேதாங்கங்களின் உதவியின்றி உணர முடியாது என்பதைத் தமது சிந்தனை களில் கைலாசபதி அவர்கள் கூறியுள்ளார். எனவே வேதாங்கங்கள் பற்றிய அவரது சிந்தனைகளை இனிவரும் பகுதிகளில் ஆராய்வோம்.

## 3.4 *வேதாங்கம்*

மனித உடலுக்கு அங்கங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வாறே வேதக்கல்விக்கு வேதாங்கம் முக்கியமானது. வேதத்தின் மூச்சு சிக்ஷை என்றும், வியாகரணம் வாய் என்றும், சந்தஸ் வேதத்தின் பாதம் என்றும், நிருக்தம் காது என்றும், ஜோதிடம் வேதத்தின் கண் என்றும், கல்பம் கை என்றும் தொன்றுதொட்டுப் போற்றப்பட்டு வருகின்றன. இக்கருவி நூல்களை முற்றற ஓதி அவற்றின் வழியேதான் வேதப்பொருளைச் சிந்திக்கவேண்டும். இவ்வழியைவிட்டு மனம் போனவாறு வேத ஆராய்ச்சி செய்வது மரபுவழிச் சிந்தனையாளர்களின் சிரிப்பிற்கு இடமாகும். காசிவாசி செந்திநாதையர் தம்முடைய பல நூல்களில், விசேடமாக, சிவாத்துவித சைவ பாடியத்தில் இவ்வுபப்பிருங்கணங்களின் முக்கியத்துவத்தை வற்புறுத்திக் கூறியுள்ளார்.[33] கைலாசபதி அவர்களும் இக்கருத்தைச் சுட்டி மிக ஆழமாகச் சிந்தித்துள்ளார். அவரது தெளிந்த சிந்தனையில் புத்திவிருத்தியில் வேதாங்கங்கள் பிறக்குமிடமாகப் பின்வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனவற்றைக் குறிப்பிடுகிறார்:

| வேதாங்கம் | பிறக்குமிடம் |
|---|---|
| 1 வியாகரணம் | ஞானம் |
| 2 ஜோதிடம் | அமிர்தம் |
| 3 நிருக்தம் | மோட்சம் |
| 4 சந்தஸ் | காமம் |
| 5 சிக்ஷை | அர்த்தம் |
| 6 கல்பம் | தர்மம் |

தேவாரங்களில் கூட வேதாங்கங்களின் சிறப்பு விதந்துரைக்கப் படுகிறது. "அங்கமும் வேதமும் ஓதும் நாவர்"[34] என்கிறது சம்பந்தர் தேவாரம்.

"ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி" (அப்பர்)

### *3.4.1 வியாகரணம்*

வேதவியாகரணம் என்பது புத்திவிருத்தியில் ஞானத்தின் 4ம் துறை சம்பந்தமானது என்கிறார் கைலாசபதி அவர்கள். தாதுக்கள் தெரிந்து, அதாவது பீஜம் தெரிந்து, அந்த விடயங்களை அறிவதுதான் உண்மையான அறிவு. சித்தவிருத்தியில் ஆரியத்துவம் வாய்க்கப்பெற்றவனே மந்திரதிருஷ்டா ஆகமுடியும். ஒரு அறிஞனுடைய உள்ளத்தில் சில உணர்ச்சிகள் தோன்றுகின் றன. அவை வைதிகமானவையா? அவைதிகமானவையா? உண்மையான அறிவு நெறி சார்ந்தவையா? பிறழ்வான அறிவுநெறி சார்ந்தவையா? என்பதனை அறிவதற்கு வேதாங்கங்கள் ஆகிய வியாகரணம், சந்தஸ், நிருத்தம் முதலிய வற்றின் துணை வேண்டும் என்கிறார். வேதத்தில் சூரியனைக் குறிக்கும் சொற்கள் நாற்பத்தெட்டுக்குமேல் வருகின்றன. அவை ஒவ்வொன்றும் எவ்விசேட பொருளில் உபயோகிக்கப்படும் என்பதைச் சொல்லையும் பொருளையும் தொடர் புபடுத்திப் பார்க்கும் போதுதான் புலப்படும். எனவே சொல் -பொருள் தெளிவுக்கு வியாகரணம் தெரிதல் மிகமுக்கியமானது. அத்துடன் வேதகாலக்கவிஞன் வேதமந்திரங்களைச் சாதாரண கவிகள் போல வெட்டித்திருத்தி, பொருத்தமான சொல்லைப் பெய்து ஆக்கும் இலக்கிய கர்த்தா அல்லன். அவன் வேதாங்கம் தெரிந்தவன். அதன் காரணத்தினால் அவனது மந்திர திருஷ்டாக் கண்களில் வேதாங்கத்தின் வழி பொருத்தமான சொல் நேரே காட்சியாகத் தோன்ற அதன் மூலம் கவிதை படைத்தவன் என்கிறார்.

#### *3.4.1.1 நவவியாகரணம்*

கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் பக்கம் 692ல் நவவியாகரணம் என்ற தொடர் வருகிறது. வடமொழியில் இவை ஒன்பது இலக்கண நூலைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கும் என்றும், அனுமார் அவற்றைச் சூரியனிடத்தில் கற்றார் என்றும், அதனால் அவர் இராமனால் "நவவியாகரண வேத்தா" எனப் பாராட்டப்பட்டார் என்றும் கதை உண்டு. நவவியாகரணங்களில் ஒன்று ஐந்திரம். கைலாசபதி அவர்களின் புத்திவிருத்திப் படத்தில் மோட்சத்திலிருந்து வரையப்படும் கோடானது ஞானதளத்தின் 3ம் துறையில் முடிவடைகிறது. அதுவே வேதவியாகரண நோக்கு. அந்நோக்கு அநுமார் போன்ற ஆழ்வார்களுக்குக் கைகூடும். அவர் கற்ற நவவியாகரணங்களுள் ஒன்றான ஐந்திரம் இந்திரனால் செய்யப்பட்டது. தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்ற தொடரை உபயோகிக்கிறார்.[35] கைலாசபதி அவர்களின் சிந்தனையின்படி இது கருத்துள்ள ஓர் அடைமொழி. அகத்தியம், ஐந்திரம் முதலிய இலக்கண நூல்கள் அதிஉயர்ந்த மொழிநிலைக்கு மட்டுமே பொருந்துவன. அவர் பதினைந்து வகையான தமிழும், பத்தொன்பது வகையான ஆரியமும் உண்டு என்றும், (இவ்விடயம் தொல்காப்பியம் பற்றிய அடுத்துவரும் அத்தியாயத்தில் ஆராயப்படும்) அம்மொழி நிலையை விளங்குவதற்கு ஆற்றலுள்ளவர்கள் சமுதாயத்தில் அருகிப்போகவே அந்நூல்களும் வழக்கற்றுப்போயின என்றும் கூறியுள்ளார். கைலாசபதி அவர்கள் ஞான நோக்குப் பிறந்து, வியாகரணம் என்ற கருவிநூலை ஆராய ஒருவன் மனங்கொண்டால் மட்டுமே தொல்காப்பியம், ஐந்திரம் முதலியவற்றின் உண்மைப்பொருளைக் காட்சியாகப் பெறமுடியும் என்கிறார். மேலும் அவர் மோட்சத்தில் நிற்பவர்களுக்கு ஞானத்தின் 3ம் துறையாகிய வேதவியாகரணம் நேர்படும் என்கிறார். மோட்சதளத்தில் நிற்கக்கூடிய நிலை எல்லோருக்கும் ஏற்படாது. ஆகவே அதன் கீழ் எந்தெந்தத் தளங்களில் நிற்கிறவர்கள் இவை பற்றிக் குறிப்பாயாயினும் அறியவல்லவர்கள் என்ற வினா எழுகிறது. அதற்கு அவர் புத்திவிருத்தியின் அர்த்ததளத்தில் நிற்கும் 1ம் வகுப்பார் ஞான நோக்குடையவராய் இருப்பார். இதனால் அவர்கள் வியாகரணம் குறித்துத் தெளிவாக உணரலாம் என்கிறார். மேலும் பண்பாட்டுத் தளத்தில் நிற்கும் 2ம் வகுப்பாரும், நாகரிக தளத்தில் நிற்கும் 3ம், 4ம் வகுப்பாரும் ஞானநோக்கை எட்டலாம் என்றும், அவர்களுக்கு மேலும் சிறப்பம்சங்கள் அமையின் அவர்களும் வியாகரணம் என்ற வேதாங்கத்தை உணர முடியும் என்றும் அதற்குக் கீழே உள்ளவர்கள் வெறும் நூலறிவாக மட்டுமே வியாகரணத்தை விளங்கமுடியும் என்றும் கருதுகிறார்.

### *3.4.1.2 வடமொழி - தமிழ் வியாகரணம்*

1944ல் கைலாசபதி அவர்கள் வியாகரணமும் தமிழ் இலக்கணமும் வேறுபாடுடையன எனக் கூறியுள்ளார். இலக்கியத்தின் அமைதிப்பாட்டிற்கு இலக்கிய நூல் இப்படித்தான் ஆக்கப்படவேண்டுமென்ற சட்டகத்தை வரையறுப்பது இலக்கணம் என்கிறார்:

**இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல் வியாகரணம்.**[36]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இலக்கியத்தின் உயிர் போன்றிருக்கும் மைய அம்சம் யாது எனத் தீர்மானிக்க உதவுவது வியாகரணம். அது வேதாங்கங்களுள் ஒன்று எனப் பெரியோர்களால் உச்சியில் வைத்துப் பாராட்டப்படுவது என்ற அளவில் மட்டும் ஆரம்ப காலத்தில் சொல்லியவர், (1944ற்குப் பின் புத்திவிருத்தித் துறைகள், தளங்கள் பற்றிய ஆழ்ந்த காட்சி கிடைத்த பின்னர்), 1952ல்,

ஞானத்தின் கேட்டலுக்குத்தான் வியாகரணம்.[37]

என்ற பெயர் என்கிறார்.

### *3.4.1.3 உயிர்களின் கருத்துப்பரிமாற்ற ஊடகம்*

இக்காலத்தில் பல்லி சொற்பலன் ஆராய்தல் முதலியவற்றை மூடநம்பிக்கை எனச் சிலர் தள்ளிவிடுகிறார்கள். ஆனால் அவை இகழத்தக்கவை அல்ல என்றும், வியாகரணந் தெரிந்தவன் பாஷைகளின் மூலத்தை அறிவான் என்றும் உயிரினமாகிய பல்லியும், காகமும் கூட ஏதோ ஒரு சித்துப்பொருளின் தூண்டுதலால் சில ஒலிகளை எழுப்பும் ஊடகமாக அமைகின்றன என்றும் கைலாசபதி அவர்கள் கருதுகிறார். அந்த ஒலிகளை வியாகரணம் வல்ல ஒருவன் கேட்பின், அவன் அந்த ஒலி மூலம் அந்தச் சித்துப்பொருள் தனக்கு என்ன செய்திகளைத் தருகின்றது என உணர்வான். எனவே வியாகரணம் என்பது வெறும் மொழி இலக்கணம் மட்டுமன்று. அனைத்து உயிர்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கும் ஊடகமான மொழிகள் அனைத்தையும் விளங்கிக்கொள்ளும் காட்சியையும் குறிக்கும். கழறிற்றறிவார் நாயனார் பறவைகள், விலங்குகளின் மொழியை உணரவல்லவர் என்றும் அவர் பூசை முடிவில் நடராஜப்பெருமானின் சிலம்பொலியைக் கேட்கும் பெருமை பெற்றவர் என்றும் பெரியபுராணம் கூறுகிறது.[38]

### *3.4.1.4 வாக்கும் அர்த்தமும்*

எழுத்துக்கள் அக்ஷரங்கள். அதாவது அவை அழிவற்றவை. அவை ஒவ்வொன்றுக்கும் பீஜம் - தாது உண்டு. ஒருவனுக்கு வியாகரண அறிவு இருந்தால் அந்தந்த வேதமந்திரம் சம்பந்தமான துறைச்செய்திகளை ஓரளவுக்காயினும் சொல்லுவான். அது இல்லாதவர்கள் வெறும் சொற்களைக் கொண்டு தம் நுண்மதியால் பகுதி யாது, விகுதி யாது, இடைநிலையாது என ஒரு முடிவைக்கட்டுவர். அதனைக் கைலாசபதி அவர்கள்,


வியாகரணம் பீசம் - தாது - அக்ஷரம் அறியக்கூடியவர்கள் ஒரு சில போக்குத்துறைகளை ஓர் அளவுக்குச் சொல்லுவர்.[39] எனக் கூறினார். (படம் பக். 100)

### *3.4.2 ஜோதிடம்*

வேதாங்கங்களுள் இரண்டாவது முக்கிய இடத்தை வகிப்பது ஜோதிடம். இது வேதத்தின் கண் எனப் போற்றப்படுகிறது. இச்ஜோதிட சம்ஹிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹார்கா், நாரதர், பராசரா் போன்ற இருடிகள் வழிவந்தவை. அது வைதிக கா்மாக்களைச் செய்வதற்குரிய நேரகாலங்களை நிச்சயிக்க உதவும் சாஸ்திரம். நயனம் - கண். "நீ" என்ற வினையடியாகப் பிறந்து, "நய" - வழிகாட்டு என்னும் பொருளைத் தரும். இது வானசாஸ்திரத்தோடு மிகவும் நெருங்கிய தொடா்புடையது. கைலாசபதி அவா்களின் கருத்துப்படி ஜோதிடம் அமிா்த நோக்குச் சம்பந்தமானது. இந்திய சிந்தனையாளா் ஆகக் குறைந்தது அமிா்த நோக்குள்ளவா்களையே மனிதா்களாகக் கணிப்பா். "மிருத்" - மரணமற்ற பெருவாழ்வை, அழிவற்ற பொருளைத் துலக்குவது அமிா்தநோக்கு. அது யோகக் காட்சி சம்பந்தமானது. இதில் 5x5=25 வகையான யோகங்கள் உண்டு என முன்னா் கண்டோம் (2.2.2.4.5) அவற்றுடன் இணைத்துப் பேசப்படும் வேதாங்கமே ஜோதிடம். வைதிகவழி வந்த பெரியோா்கள் இருக்கு, யசுா் வேதங் களுடன் தொடா்புடைய வேதாங்கமாகிய ஜோதிடம் விலக்க வேண்டிய முகூா்த தங்களை மட்டும் கூறுகிறது என்றும், இதைவிட விரிவானதாக இருந்ததெனக் கூறப்படும் அதா்வவேத ஜோதிடம் இல்லாமல் மறைக்கப்பட்டது எனவும் கூறு கின்றனா்.[40] இவை கைலாசபதி அவா்களின் சிந்தனைகளுடன் ஒத்துப் போகின் றன. ஜோதிடத்தை நோ்க்காட்சியாக அமிா்த நோக்கின் தொடா்பால் காணக்கூடி யவா்கள் அருகிப்போனமையால் அவையும் அற்றுப்போய்விட்டன என்ற விளக் கம் பொருத்தமானதே. தற்காலத்தில் வழங்கும் ஜோதிடம் வைதிக முறைக்கு மாறாகவும், வெறும் சாதாரண லௌகிக கருமங்களுக்கு மட்டும் பயன்படுவ தாகவும் இருப்பது அவ் உயா் ஜோதிடத்தின் வீழ்ச்சியையே குறிக்கும்.

### *3.4.3 நிருக்தம்*

வேதாங்கங்களுள் அடுத்து முக்கியம் பெறுவது நிருக்தம். இது வேதத்தின் காது எனப்படுகிறது. வேதத்தில் வரும் சிறப்பான வாா்த்தைகளுக்குரிய பொருளை நிச்சயிப்பதற்கு உதவும் வேதாங்கம் அது. உதாரணமாக ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருப்பது போல மந்திரங்களில் வெவ்வேறு சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பதாக இருக்கின்றன. அந்நுண்ணிய வேறுபாடுகளை அறிவதற்கு நிருக்தம் உதவுகிறது. வேதகவி ஒரு சொல்லை ஓரிடத்தில் உபயோகிக்கிறான் என்றால் அது வெறும் சொல் அழகுக்கோ அல்லது வேறுபாட்டுக்காகவோ அல்ல. அவன் நிருக்தம் தெரிந்தவன் என்பதால் அச்சொல்லின் பொருள் அறிந்தே அதற்குரிய இடத்தில் அச்சொல்லை வைத்துள்ளான் எனக் கொள்ள வேண்டும்.

> நிருக்தம் (நிகண்டு): சொல்லுக்குக் குறித்த இடத்தில் பொருளமைவு கூறுவது. வியாகரணம் காண்டல், "மந்திரா்" எப்படித் தொடங்கிச் சொல்வடிவம் வந்தது என்று காண்பதாகும். மந்திரா் இன்ன இடத்தில் இன்ன சாதகஞ் செய்கிறவா் மந்திரா் என்றறிவது நிருக்தம் ஆகலாம்.[41]

நிகண்டு பிற்கால அகராதிகளுக்கு வழிகோலியதால் அது சாதாரண சொல் அடைவின் மிகுதிப்பாட்டைத் தருவது என்பா் மேல்நாட்டுக் கல்வியாளா். இது பிற்கால நிகண்டுகளைப் பொறுத்தவரையில் சரியாக இருக்கலாம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாங்கமாகிய நிருக்தம் அதற்கு மேலே எத்தனையோ மடங்கு உயர்ந்தது என்பதை மனதில் கொள்ளவேண்டும். மேலே எடுத்துக்காட்டிய கைலாசபதி அவர்களின் சிந்தனையில் பொருளை உணர்வதற்கு நிருக்தமும் வியாகரணமும் எப்படி உதவும் என்பதை "மந்திரர்" என்ற சொல்லில் வைத்து இணைத்துக் காட்டுகிறார்.

### *3.4.3.1 நிருக்தமும் மோட்சதளமும்*

கைலாசபதி அவர்கள் நிருக்தம் மோட்சதளத்துடன் தொடர்புடையது என்கிறார். வீடு பேற்றை, அதாவது முத்தியை அவாவும் ஒருவனே நிருக்தத்தின் இயல்பைக் காணமுடியும். வீடுபெற நிற்கும் கிருகஸ்தனும், அந்த வேதப்பொருளை அறியும் அவாவினால் தூண்டப்படும் நிலையில், ஒருவாறு நிருக்தத்தை ணரத்தொடங்குவான். நிருத்தம் தெரிந்தவனுடைய அகக்கண்ணுக்கு முன் சொற்கள் நடம்புரியுமாம். அதற்குக் கீழ் நிலையிலுள்ளவர்கள் அதை வெறும் அகராதியாகவே படிக்கமுடியும்.

### *3.4.4 சந்தஸ்*

வேதாங்கங்களுள் ஒன்றாகிய சந்தஸ் வேதத்தின் பாதம் எனப்படுகிறது. வேதம் ஒலிமயமானது. அது (இருக்கு, யசுர்) செய்யுள் வடிவத்தில் உள்ளது. எனவே யாப்பிலக்கணம் அதனைத் தாங்கும் பாதம் எனக் குறிப்பது பொருத்தமே.

### *3.4.4.1 சந்தஸும் காமதளமும்*

கைலாசபதி அவர்களின் கருத்துப்படி சந்தஸ் புத்திவிருத்தியின் காமதளத்துடன் தொடர்புடையது. இன்னபொருளை இன்ன யாப்பில் சொல்ல வேண்டுமென்ற காட்சி வேதவிளக்கத்துக்கு முக்கியமானது. யாப்புக்கும், பொருளுக்கும் உள்ள தொடர்பு பற்றித் தமிழ், ஆரியம் ஆகிய இரு மொழிகள் குறித்தும் வெகு ஆழமாக விளக்கியுள்ளார்:

தர்மம்: கற்பம்

இசை: சிட்சை — யாப்பு சந்தஸ் சிட்சை(யாப்பு) தெரிந்தவர் "யாப்பு இடம் கொடாது வேறு விதமாகச் சொல்லியிருப்பர்" என்பர்.[42]

மேலே கூறப்பட்ட சிந்தனையில் யாப்பிலக்கணத்துக்கும் சந்தஸுக்கும் உள்ள பொருத்தப்பாட்டைக்காணலாம்:

**காமத்துறை**

| | | |
|---|---|---|
| கற்பம் | சிட்சை | சந்தஸ் |
| இயல் | இசை | நாடகம்[43] |

கைலாசபதி அவர்கள் தமது அகக்காட்சியில் கண்டவற்றையே தம்மோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிய ஒரு சிலருக்குக் கூறினார் என முன்னரும் குறிப்பிட்டள்ளோம். (1.9, 1.10) அதற்கு மேலே கூறப்பட்ட கூற்றுச் சிறந்த எடுத்துக்காட்டு. அவ்வப்போது காணப் படாத விடயங்களை வெறும் புத்தக அறிவுகொண்டு அவர் சொல்லவில்லை. ஒருபொருள் சித்பாகமாக நிற்கும் போது நிருக்தம் என்றும், சடபாகமாகச் சொல்லும் போது சந்தஸ் என்றும் மிக ஆழமாகக் கூறியுள்ளார்.

### *3.4.5 சிக்ஷை*

சிக்ஷை வேத உச்சரிப்போடு தொடர்புடையது. உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்ற முறையில் வேதத்தை உரிய தொனியில் உச்சரித்துப் பாடுவதில்தான் மந்திரத்தின் சக்தி, அசைவு (Vibration) பரிபூரணமாக வெளிப்படுகிறது. அதன் காரணத்தினாலேயே பரம்பரையாக வந்த வேதமந்திரங்களை உரியமுறையில் உச்சாரணம் செய்யாவிட்டால், பல தீய பிரதிபலன்களும் வரும் என எம் மூதாதையர்கள் காலங்காலமாக வற்புறுத்தி வந்தார்கள். அது ஓர் இனத்தைத் தாழ்த்தும் நோக்காகச் செய்யப்பட்ட விதி அன்று. முறையாக உச்சரிப்பது விஞ்ஞான பூர்வமான யோகமே என்பதில் நம்பிக்கை உள்ளவர் கைலாசபதி அவர்கள். பாணினி கூட வேத அக்ஷரங்களை எப்படி உச்சரிக்கவேண்டும் என்பதற்காக "பாணினீய சிக்ஷா"வில் ஒரு அழகிய சுலோகம் செய்துள்ளார். பாணினி அன்றி வேறு பலரும் சிக்ஷைபற்றிய நூல்கள் யாத்துள்ளனர். எனினும் பாணினி, யாஞ்ஞவல்கியர் போன்றோர் இயற்றிய சிக்ஷை பற்றிய நூல்களே விசேடமானவை. ஆனால் அவை எல்லாம் அர்த்த நோக்குப் பிறந்த ஒருவன் சிக்ஷை பற்றி நேராக - அகக்காட்சியில் காணும் அறிவுக்குச் சமானாகாது.

### *3.4.6 கல்பம்*

கல்பம் வேதத்தின் கை என்பர். வேதகர்மாக்களைச் செய்வதற்குக் கை இன்றியமையாதது போல, வேத கர்மாக்களைச் செய்வதற்கு வழிகாட்டும் நூல் கல்ப சூத்திரம் எனப்படும். அனைத்து வேதாங்க அறிவுக்கும் பயன் வைதிக கர்மாக்களைச் செய்து, இகபரசுகங்களைப் பெறுவதே. அதற்கு வேண்டிய பொருள்கள் யாவை? அதைச் செய்யவேண்டிய இடம் எப்படி அமையவேண்டும்? அக்கர்மாக்களை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் முறை, கர்மாக்களைச் செய்ய வேண்டியவர்கள் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் போன்ற ஆச்சிரமங்களில் நிற்போர் - செய்யவேண்டிய கர்மாக்கள் பற்றிய விபரங் களைக் கூறும் நூல் கல்பம். ஆறு ரிஷிகள் கல்பசூத்திரத்தைச் செய்திருக் கின்றார்கள், புத்திவிருத்தியில் ஞானதளத்தை நோக்காக அறிந்தவனே வியாகர ணமாகத் தொடங்கி ஆறங்கப்பொருள்களில், புத்தியைச் சஞ்சரிக்க விட்டு, இறுதியில் கல்பமாகக் காண்கிறான் என்பார் கைலாசபதி அவர்கள்.

#### *3.4.6.1 கல்பமும் சம்ஸ்காரமும்*

இரு பிறப்பாளர் செய்யவேண்டிய நாற்பது சம்ஸ்காரங்கள் கிருஹ்ய சூத்திரம், ஸ்ரௌத சூத்திரம் ஆகிய இருபகுதிகளிலும் வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்காரங்களே ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள். அவை வெறும் அர்த்தமற்ற சடங்குகள் அல்ல. அவற்றின் பொருள் விளங்காது, ஏதோ முன்னோர் செய்தார்களே என்பதற்காகச் சுமையாகக் கருதி, வேண்டா வெறுப்பாகச் செய்தவர்களால்தான் அவை இன்று இகழத்தக்க நிலையை எய்தின. வேத காலக் கிரியைகள் செய்யப்படுவதன் மூலமாக ஒருவனுக்கு உள்ளத்தூய்மை ஏற்படுகிறது. அதேபோல் அவற்றின் பொருளைச் சிந்திப்பதாலும் ஒருவனுக்கு மனம் தூய்மை அடைகிறது. அதனாலேயே முனிமொழியாகிய பிரமசூத்திரத்தில் "சம்ஸ்கார பராமரிசத்தின் உண்மையானும் அதன் இன்மையானும்"[44] என்று இறுக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

### *3.4.6.1.1 ஞான-கர்ம தாரதம்மியம்*

ஆதிசங்கரரும் தற்கால மத இயக்கங்களான பிரமசமாஜம், இராம கிருஷ்ணமடம் போன்றவையும் ஞானத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு, கிரியைகளை முற்றாகப் புறக்கணிப்பது பொருத்தமற்ற ஒன்று. சைவர்களுள் ஒரு சாராரும் ஞானம் தான் முக்கியம், சரியை, கிரியை ஆகிய இரண்டும் புறக்கணிக்கத்தக்கன என்ற போக்கிலும் பேசுவர். அருணந்தி சிவாசாரியார் அதை மறுத்து, "கிரியை என மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்று - ஞானத்துக்கு வாயில்கள் அவை என்பதால் அவை புறக்கணிக்கத்தக்கவை அல்ல என்று - நினைவூட்டுகிறார். கைலாசபதி அவர்களும் இதனை வற்புறுத்துகிறார்.

### *3.4.6.1.2 கைலாசபதி அவர்களின் விசேட விளக்கம்*

கல்பசூத்திரங்கள் வற்புறுத்தும் முத்தீ வளர்த்தல் - அதனால் விளையும் பலன்கள் ஆகியவை எல்லாம் கைலாசபதி அவர்களின் நுண்ணிய பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் முதல் கிருஹ்ய சூத்திரம் ஈறாக விதந்துரைக்கப்படும் முத்தீ வளர்த்தலின் தத்துவம் என்ன என்பதற்குக் கைலாசபதி அவர்கள் பின்வருமாறு விளக்கம் தருகிறார். அந்தணர் தம் எழுச்சிகளைத் தாம் அன்றாடம் வளர்க்கும் அக்கினியில் ஆகுதி செய்கிறார்கள். அதன் காரணத்தினால் தினம் தினம் அவர்கள் சம்பாதிக்கும் கர்மங்கள், அதாவது வினைகள் அன்றன்றே அக்கினியில் எரிக்கப்படுகின்றன. அத்துடன் கர்மாக்களை முறையாகச் செய்வதால் சித்தசுத்தி நேரடியாகக் கிடைக்கும் என்பன போன்ற விடயங்களையும் கைலாசபதி அவர்கள் தமது சிந்தனையில் பல இடங்களில் சுட்டியுள்ளார். அத்துடன் கார்ஹபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினி என ஒவ்வொன்றும் தனித்தனியே என்னென்ன தத்துவங்களை உள்ளடக்கியுள்ளது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். வைதிகக் கிரியைகளை விளக்குவோர் இவற்றை உயரிய கிரியைமுறை என்ற சூழ்நிலையில் வைத்தே விளக்குகின்றனர். ஆனால் அவற்றின் உள்ளீடான தத்துவார்த்தம் அத்தனை சிறப்பாக விளக்கப்படுவதில்லை. ஒரு சில உபநிடதங்களில் மட்டும் ஓரளவிற்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகம, தமிழ் சாஸ்திரக் கல்வியாளர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரேனும் இவற்றின் தத்துவங்களை கைலாசபதி அவர்களைப் போல நுட்பமாக விளங்கப்படுத்தவில்லை. முக்கியமாகப் பிராமண குலத்தில் பிறக்காமலும், ஆங்கில விஞ்ஞானக்கல்வி கற்றும் கூட, கைலாசபதி அவர்கள் இவ்வளவுக்கு முத்தீச் செல்வத்தைப் பற்றி உயர்த்திச் சொல்வது அவரது சிந்தனையைக் கருத்துடன் வாசிப்பவர்களுக்கு வியப்பூட்டுவதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### *3.5 உபாங்கம்*

வைதிக சமயத்துக்குப் பிரமாணமான பதினான்கு வித்தைகளில் நாலு வேதங்களும், ஆறு வேதாங்கங்களும் போக மீதியுள்ள நான்கும் உபாங்கம் எனப்படும். "உப" என்றால் துணையாக இருப்பது. மீமாம்சை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரம் என்பவையே வைதிகசமயத்துக்கு உபாங்கமாக இருப்பவை. கல்விசார் பேரறிஞர்கள் இவை குறித்து ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.[45] ஆனால் அவை இன்றைய ஆன்மீக வாழ்வுக்குப் பயன்படுவனவா? எவ்வளவு தூரம் பயன்படும் என்பது பற்றிச் சிந்தித்தவர்கள் மிகக்குறைவு. முக்கியமாக நவீன ஆய்வாளர்கள் அவை தற்காலச் சூழ் நிலைக்கு எவ்வகையிலும் பொருந்தா எனக் கண்டித்து வருகின்றனர். ஆனால் கைலாசபதி அவர்களின் கருத்து இதற்குச் சற்று மாறுபட்டதொன்றாகும். அவர், காலத்தால் க்ஷீணித்துப் போனவற்றை விட்டாலும், அவை என்றும் ஆன்மீக சாதகர்களுக்கு அவசியமானவையே என்று கூறி, உபாங்கமான ஸ்மிருதி, புராணம், நியாயம், மீமாம்சை ஆகிய நான்கும் புத்திவிருத்தியில் எந்தெந்தத் தளங்களில் நின்று அறியப்படுவன என்பதைத் தமது மெய்யியல் கட்டமைப்பில் இடம்வகுத்து விளக்குவது நம் சிந்தனைக்குரியது.

உபாங்கம்: மிருதி - புராணம் - நியாயம் - மீமாம்சை

I அர்த்தத்தில் நின்று அர்த்தத்தைப் பார்க்கிறது மீமாம்சை ஆராய்ச்சி (பூர்வம் - அபரம்). இதன் விளக்கம் செய்தார் இருவர். புருஷனாய் நின்று அர்த்தமாயிருக்கிறது - 4.

இரண்டன் பிறழ்வு இருதரிசனம் (வேதாந்தம், மீமாம்சை)

II அர்த்தத்தில் நின்று மோக்ஷத்தை நோக்குவோர்களுக்கு புராணம் தெரியும்.

இருவகை :-

i சித்பாகத்தில் உயர்ந்த நிலையில் <u>புராணம்</u> தெரியும்.

ii சடபாகத்தில் அதற்கு சமமாக உயர்ந்த நிலையில் <u>இதிகாசம்</u> தெரியும். (வியாசர் புராணம் கேட்டார். இதிகாசம் சொன்னார். சைமினி சடபாகம் ஆராய்ந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii முடிந்த சத்தியத்தை அர்த்தத்தில் பார்க்கிறது நியாயம். அதன் பிறழ்வு நியாயம், வைசேடிகம்.


iv அர்த்தத்தில் வைத்து தர்மத்தைப் பார்ப்பது மிருதி. மிருதியின் பிறழ்வு சாங்கியம், யோகம் (18 ஸ்மிருதிகளையே யோகஸ்மிருதி என்ற வழக்கம் உண்டு."[46]

என்கிறார் கைலாசபதி அவர்கள்.




### *3.5.1 உபாங்கமும் புத்திவிருத்தித்தளமும்*

உபாங்கத்தைப் புத்திவிருத்தியில் அறியக்கூடிய நிலை எத்தகையினருக்கு உண்டாகும் என்பதைக் கைலாசபதி அவர்கள் விளக்குவதை ஓர் வரைபடம் மூலமும் நாம் பார்க்கலாம்:




நான்கு உபாங்கங்களுக்கும் நிற்குமிடம் ஒன்றே. அதாவது 11ம் தளமாகிய அர்த்தமே. ஆனால் பார்க்குமிடம் சத்தியசம்பந்தமான தளங்களாகிய தர்மம், அர்த்தம், மோட்சம், முடிந்தசத்தியம் என்பவைகளாகும். அர்த்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று தர்மத்தைப் பார்த்தால் ஸ்மிருதி, அர்த்தத்தில் நின்று அர்த்தத்தைப் பார்த்தால் மீமாம்சை; அர்த்தத்தில் நின்று மோட்சத்தை பார்த்தால் புராணம்; அர்த்தத்தில் நின்று முடிந்த சத்தியத்தைப் பார்த்தால் நியாயம் ஆகியவை பூரணமாகத் தெரியும். மேற்கூறப்பட்ட தளங்களுக்குக் கீழே நிற்பவர்கள் இவற்றைப் பூரணமாக அறியமுடியாது. முடிந்த சத்தியத்தில் தோன்றும் நியாயம் அதிஉன்னதமான உபாங்கம் என்பார் கைலாசபதி அவர்கள். ஆனால் அவை காலப்போக்கில் கருத்துச் சிதைவினால் வரிசையழிந்தன. புராணம், ஸ்மிருதி இரண்டையும் நீக்கிவிட்டு நியாயத்தை நியாயம், வைசேடியம் என இரண்டு தரிசனங்களாகவும், மீமாம்சையை உத்தரமீமாம்சை, பூர்வமீமாம்சை என இரண்டு தரிசனங்களாகவும், சாங்கியம், யோகம் என இரண்டைப் புதிதாக வருவித்து ஆறு தரிசனங்கள் எனப்பெயர் சூட்டி இந்திய மெய்யியல் வரலாற்றில் இவையே அதிமுக்கியமான மெய்யியல் நோக்குகள் என ஆழ்ந்து படிக்கலாயினர்.[47] மேல் நாட்டவர்களும் இவற்றுக்குத்தான் அதிமுக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

18 ஸ்மிருதிகளையே யோக ஸ்மிருதி என்ற வழக்கம் உண்டு.[48]

என்ற வசனத்தைக் கைலாசபதி அவர்கள் தருவது நம் கவனத்துக குரியது. ஸ்மிருதி நெறி வாழ்பவன் யோகவழியில் தீவிரமாக முன்னேறுவான். சாங்கியம் கூட சட உலகை நுட்பமாக ஆராய்கிறது. எனினும் சாங்கியர் ஈஸ்வரனை மறுப்பதால் நிரீச்சுரவாதசாங்கியம் எனக் கணிக்கப்படுகிறது.

### *3.5.2 ஸ்மிருதி*

நான்கு உபாங்கங்களுள் முதலில் வைத்தெண்ணப்படுவது ஸ்மிருதி. "ஸ்ம்ரு" என்ற வினையடியாகப் பிறந்த இச்சொல் "சிந்திக்கப்பட்டது" எனப் பொருள்படும். அதாவது நல்லோர் உள்ளத்தில் சிந்திக்கப்பட்டது. வைதிகநெறி யினர் சுருதிக்கு அடுத்தபடியாக மதிக்கும் நூல் என்ற பொருளில் மனு, யாக்ஞ வல்கியர், பராசரர், நாரதர், விஷ்ணு போன்றோரால் எழுதப்பட்டவற்றை ஸ்மிருதி நூல்கள் என வழங்குகின்றனர். அவற்றைச் சட்டப்புத்தகம் (Law book) என்கின் றனர். ஆனால் கைலாசபதி அவர்களோ அவற்றைச் சட்டங்களுக்கு ஆதாரமான சிந்தனைகளை உள்ளடக்கியுள்ள மூலநூல் என்று சொல்லலாம் என்பார். "ஸ்மிருதந்திரம்" என்ற சொற்றொடரும் நூலையே குறிக்கும். உள்ளத்தூய் மைக்கு ஏற்றவாறு நல்லோர்களுக்கு ஸ்மிருதிக்காட்சிகள் ஏற்படுகின்றன. சுருதி யைக் கேட்க இயலாதவர்கள் தம் தூய சிந்தனையின் மூலம் கண்ட முடிவுகளே அவர்களுக்கு ஸ்மிருதி. இராமனுக்கு வாலியை மறைந்துநின்று கொல்லும் விடயம் ஸ்மிருதியாகத் தெரிந்தது.[49] அந்நிலையில் அவனுக்கு அகக்காட்சியில் ஐயம் எழாது. மெய்ப்பொருளாராய்ச்சியில் அர்த்தத்தில் நிற்பவன் பார்க்குமிடமாகத் தர்மத்தைத் தேர்ந்தெடுத்து அதில் ஊறிக் கண்டதே ஸ்மிருதி எனக் கைலாசபதி அவர்கள் கூறுவது சரியே.[5]

ஆசைக்குத் தான் ஸ்மிருதி.[51]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் கைலாசபதி அவர்கள். மனித உடல் எடுத்த அனைவருக்கும் விருப்புக்கள் உண்டு. பொருள் நித்தியமற்றவை என்று அறிந்தும் கூட, அவற்றில் ஆசை உண்டாகிறது. ஒருவர் சாதகர் என்றாலும் ஏதோ விடயங்களில் ஆசை எழுகிறது. சாதாரண மனிதன் ஒருவனுக்கு ஒரு பொருளை அனுபவித்த உடன் இன்னொரு பொருளுக்கு அற்ப ஆசை எழுகிறது. ஒன்றைச் சுவைப்பது - ஒன்றில் ஆசை வைப்பது பாவம் அன்று. அதனைப் பிழையான வழியில் அடைய முனைவதே பாவத்திற்கு இட்டுச் செல்லும் என்பார் கைலாசபதி அவர்கள். சுவை திருந்த வேண்டும் அதாவது புன்னெறியில் செல்லும் போக்கு மாறவேண்டும். நிலையற்ற பொருள்களைச் சுவைப்பதை விட்டு, நிலையான பொருள்களைச் சுவைக்க முயலவேண்டும். ஆசைப்பட்ட பொருளை நீதியான வழியில் அடைவது எப்படி என்பதைச் சாதகன் ஒருவன் ஆராய்வான் என்கிறார். மேலும் ரிஷிகள் கூடத் தங்கள் குறைகளை அறிந்தவர்கள். அவர்கள் குறை காரணமாக எழும் ஆசையை மறைக்கமாட்டார்கள். அதனை நீதியாகப் பெறுவது எப்படி என்று சிந்திப்பார்கள். அதனால் அவர்களது தெளிந்த உள்ளத்தில் ஸ்மிருதி பிறக்கிறது என்கிறார்.

### *3.5.2.1 ஸ்மிருதியின் இன்றைய நோக்கு*

ஸ்மிருதியைக் கைலாசபதி அவர்கள் வெறும் அறிவு சார் ஆய்வுப் பொழுது போக்காகக் கருதவில்லை. இன்றைய வாழ்வுக்கு அது எவ்வகையில் வழிகாட்டுமெனச் சிந்தித்தார். தம் சொந்த வாழ்விலும் பொருட் பிரச்சனையைத் தர்ம அடிப்படையில் எப்படி நோக்குவது எனக் கூர்ந்து நோக்கினார். சைவ ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் உபஅதிபராக இருந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றின் மூலம் அவர் பொருளைச் சம்பாதிப்பது அறத்தின் வழியிலே என்றும், பொருளைப் பெறுவதற்காகச் சத்தியம் தவறக்கூடாது என்றும் முடிவுகட்டி, அதில் அசையாது இருந்தார் என்று அறிகிறோம்.[51] நிலத்தை உரிமை பாராட்டி விற்பது கூட ஸ்மிருதிக்கு மாறானது என்பார் கைலாசபதி அவர்கள். பணத்தைப் பாதுகாப்பது பற்றி ஸ்மிருதி என்ன கூறுகிறது என்று ஆராயும் கட்டம் ஒன்று கைலாசபதி அவர்களுக்கு வந்தபோது "பொருள்தனைப் போற்றி வாழ்"[52] என்ற ஔவை வாக்கைச் சுட்டி அது உலகியல் பொருளுக்கும், ஞானப்பொருளுக்கும் பொருந்தும் என்கிறார்.

### *3.5.2.2 ஸ்மிருதி வியாக்கியானங்கள் தேய்வின் அறிகுறி*

அறிஞர்கள் ஸ்மிருதி நூல்களுக்குக் காலம் தோறும், இந்திய மாநிலங்கள் தோறும், வெவ்வேறு கருத்து விளக்கம் எழுதிவைத்தனர். இந்தியாவில் நீதித்தீர்ப்பு நடைமுறைகளில் வேறுபாடு ஏற்பட்டதைக் கண்ட ஆங்கிலேயர் அவற்றைத்தொகுத்து "இந்து சட்டம்" என எழுத்தில் பொறித்து வைத்தனர். கடல்கடந்த தென்கிழக்காசியா போன்ற நாடுகளில் இச்சட்டங்கள் மாறுபட்டு வளர்ந்திருப்பது எவ்வளவு தூரம் தர்மம் என்ற உரைகல்லில் உரைத்தலுக்கு நின்று பிடிக்கும் என்பது சிந்திக்கத்தக்கது. மாறும் ஜனநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலகக் கருத்துக்களுக்கு ஏற்ப, சுதந்திர இந்தியாவில் இந்துசட்ட மசோதா (Hindu Code Bill) எழுதப்பட்டதையும், ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தின் மூலமும் இந்துவாரிசுரிமைச் சட்டத்தின் மூலமும் ஸ்மிருதி வழக்கு முற்றாக மாற்றப்பட்ட தையும், ஆன்மீக சாதனைக்கேற்பவே லௌகிகச் சட்டங்கள், குடும்ப வாழ்க்கை, சமூகஅமைப்பு ஆகியவற்றின் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை நம்புபவர்கள் எவ்வாறு மதிப்பிடுவார்கள் என நாம் சிந்திக்க வேண்டும்.

### *3.5.3 மீமாம்சை*

மீமாம்சை பற்றிக் கைலாசபதி அவர்கள் குறிப்பிடும் போது அர்த்தத்தில் நின்று அர்த்தத்தை ஆராய்வது மீமாம்சை என்றார். "மன்" என்ற தாதுவிலிருந்து இரட்டித்து "சன்" என்ற விகுதி சேர்த்து, ஆக்கிய சொல்லே மீமாம்சா. பொருளை, அதாவது அர்த்தத்தை விசாரிக்க மந்திரங்களின் தாத்பரியம், அவை உச்சரிக் கும் விதம் ஆகியவற்றை விளங்க உதவுவது மீமாம்சா என்ற உபாங்கம். மீமாம் சையின் ஆசிரியரான சைமினி, "அருந்தவனாம்-சைமினி" என்று மதிப்புடன் சுட் டப்படுகிறார்.[53] "அதா,தோ தர்ம ஜிஜ்ஞாசா" எனத்தொடங்குகிறது அவரின் மீமாம்சா சூத்திரம். வேதத்தில் கூறப்படும் கர்மாக்களை விளக்குவது என நாம் பொதுவாகப் பொருள் கொண்டாலும், மனிதனது தர்மத்திற்கும், கர்மத்திற்கும் தொடர்புண்டு என கைலாசபதி அவர்கள் சுட்டுவது இங்கு மனங்கொள்ளத் தக்கது. தமது சொந்த வாழ்க்கையில் கூட சில தர்மப்பிரச்சனைகளைப் பற்றி அவர் சிந்திக்கும்போது கங்காநாத் ஜாவின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய சைமினி மீமாம்சா நூலிலிருந்து சில சந்தேகங்களைத் தீர்த்துள்ளதாக அறிய முடிகிறது.[54]

#### *3.5.3.1 மீமாம்சையின் தாரதம்மியம்*

மீமாம்சையை உத்தரமீமாம்சை, பூர்வமீமாம்சை என இரண்டாக்கி, உரையாசிரியர்கள் நூலாசிரியர்களின் மீது தம் கருத்தைக் கட்டி நடத்தியதா லேயே மூலநூலசிரியர்களையும், கண்டிக்கும் வழக்கம் உண்டாயிற்று என்பார் கைலாசபதி. சங்கராச்சாரியாரின் வழிவந்தோர் அவர் மீமாம்சா நிபுணரான மண்டனமிசிரருடன் விவாதித்து வென்றார் என்ற கதையை வைத்துக்கொண்டு, பூர்வமீமாம்சையைக் கண்டித்தனர். சங்கரரும் உத்தரமீமாம்சை ஆகிய பிரமசூத் திரத்திற்குத் தாம் எழுதிய உரையில் கர்மத்தை அதாவது கிரியையைச் சற்றுத் தாழ்த்தியமையும், ஞானத்தை உயர்த்தியமையும், பிற்காலத்தார் வேதத்தினை கர்மகாண்டத்தையும், உபாங்கமாகிய மீமாம்சையையும் குறைத்து மதிக்கும் வழக்கம் பெருகக் காரணமாயிற்று. பிரமசூத்திரத்தை சங்கர பாஷியத்துடன் ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்த போல் டொய்சென் (Dr. Paul Deussen) என்பவரும் நூலை வேறாகவும், உரையை வேறாகவும் கணிப்பிடக்கூடிய நிலை யில்லாமையால் இரண்டும் பல நூற்றாண்டுகள் வேறுபட்டன எனினும், ஒன்றா கவே கருதி, மெய்யியல் நோக்கில் ஆராய்வோம் என்கிறார்.[55] ஆனால் கைலாச பதி அவர்கள் நூலாசிரியர் வேறு, உரையாசிரியர் வேறு எனப் பார்க்கும் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதைத் தமது சிந்தனையில் ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தி வந்துள்ளார். உரையாய்வியல் (Hermeneutics) என்ற புதிய மெய்யியல் துறையினர் உரையாசிரியர்கள், மூலஆசிரியர்களை மேலும் விளக்கி, அவர்கள் கருத்தை மேலும் விரிவடையச் செய்துள்ளனர் என்று கருதுகின்றனர். ஆனால் கைலாசபதி அவர்கள் மூலநூலாசிரியர்களின் நோக்கை எட்டமுடியாதவர்கள் எப்படி அவர்கள் கருத்தை விசாலமடையச் செய்யலாம் என ஏளனம் செய்வார்.

### *3.5.3.2 உத்தரமீமாம்சையும் உரைகளும்*

உத்தரமீமாம்சை அதியுயர்ந்த மெய்யியல் எனக் கணிக்கப்பட்டாலும், சங்கரர் மூலமாக அதைப் பார்க்கும் போக்கு இன்றுவரை மேல்நாட்டு அறிஞர் களிடையேயும், இந்திய அறிஞர்களிடையேயும் ஏன் நம்நாட்டு அறிஞர்களிடை யேயும் கூட நிலைபெற்றே உள்ளது. இராமானுஜர், மத்துவர், பாஸ்கரர், நீல கண்டர் போன்றோரின் உரைகள் தற்போது வெளிவந்தும் கூட அவை சங்கரரின் தாக்கத்தை இன்னும் வெல்லவில்லை. இராதாகிருஷ்ணன் கூடப் பிரமசூத்திர ஆங்கில மொழிபெயர்ப்பில் சங்கரருக்கு கொடுத்திருக்கும் முக்கிய இடத்தை வேறு எவருக்கும் கொடுக்கவில்லை. சிவாத்துவித சைவபாடியத்தை ஆங்கிலத் தில் ஆராய்ந்த எஸ்.எஸ். சூரியநாராயண சாஸ்திரியார் கூட சங்கர அத்வைதம் என்ற கண்ணாடி ஊடாகவே அதனை விமர்சித்துள்ளார். இவர்களின் நிலைப்பா டுகள் மூலநூல்களையும், உரை நூல்களையும் வேறுபடுத்திக் காணவேண்டு மெனக் கைலாசபதி அவர்கள் கொண்ட வாதமே சரி என எமக்குச் சுட்டிக்காட்டு கின்றன.

ஆராய்ச்சி வேறு, மீமாம்சை அர்த்தத்தை அர்த்தத்தில்.[56]

நின்று பார்க்கிறது என்கிறார் கைலாசபதி அவர்கள். மேலும் அதே பக்கத்தில்

அர்த்தத்தில் நின்று அர்த்தத்தைப் பார்க்கிறது ஆராய்ச்சி, பூர்வம் - அபரம்.[57]

என்கிறார். இன்று மீமாம்சை என்றதும் கற்றோர் பூர்வ மீமாம்சையையே நினைக்கின்றனர். ஆனால் அதன் மறுபக்கமாகிய பிரம (அல்லது சாரீரக) மீமாம்சையை, அதாவது உத்தர மீமாம்சையை ஏதோ அதீதமான பொருள் என்றே நம்புகின்றனர். எடுத்துக்கொண்ட பொருளை ஆராய்ந்து உரிய கிரமத்தில் எடுத்துரைப்பதற்கு உதவுவது மீமாம்சா தர்க்கமுறை என்பது கைலாசபதி அவர்களது கருத்து.

### *3.5.4 புராணம்*

புராணம் என்பது வேதத்துக்குப் பூதக்கண்ணாடி போன்றது. பூதக்கண்ணாடி சிறியதைப் பெரிதாகக் காட்டுவது போல புராணமும் சிறிதாகக் காணப்படும் தர்மவிதிகளைக் கதைகள் மூலம் பெரிதாகக் காட்டுவது. இதிகாசம், புராணம் ஆகிய இரண்டும் இன்றுவரை பாரதநாட்டில் சாதாரணமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் செல்வாக்குடன் திகழ்கின்றன. மேல்நாட்டு ஆய்வாளர் இந்துமதத்தின் தொடர்ச்சி நிலையைக் கருத்தில்கொள்ளாது, அதனை வேதகாலமதம், பௌராணிக இந்துமதம் என வேறுபடுத்திப் பார்க்கின்றனர். ஆனால் கைலாசபதி அவர்கள் பாரததர்மம் ஒரே தொடர்ச்சியானது; புராணங்கள் எழுதப்பட்ட நடை "பாஷா" எனப்படும் தொல்பெரும் சம்ஸ்கிருதமாக (Classical Sanskrit) இருந்தாலும் கருத்துத்தொடர்ச்சி உண்டு என்பார். அவர் புராணக்காட்சிக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கிறார். தேவார திருவாசகங்களில் புராணம் உயர்த்திப் பேசப்பட்டமையும் நோக்கத்தக்கது.

### *3.5.4.1 புராணக்காட்சியும் போக்கும்*

சனற்குமாரர் போன்ற மகா தவத்தர்களே புராணத்தை நேரில் கண்டு வியாசர் போன்றவர்களுக்குக் கூறினார் என்றும், வியாசரிடம் புராணம் கேட்ட வைசம்பாயனர் போன்றோர் ஆச்சிரமங்களில் புராணப்பிரசங்கம் செய்தனர் என்றும் நூல்கள் கூறும். தமிழில் புராணப் போக்குத் தெரிந்தவர் இருவர்; ஒருவர் கந்தபுராணம் பாடிய கச்சியப்பசிவாசாரியார்; மற்றையவர் கோயிற்புராணம் பாடிய உமாபதி சிவாசாரியார். சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தில் திருநகரச்சிறப்பு, கண்ணப்ப நாயனார் புராணம் இரண்டும் பரிசுத்தமானவை என்றும் புராணம் முழுவதிலும் சேக்கிழார் அருளிய பாடல்கள் சில நூறு இருக்கலாம் என்றும் கைலாசபதி அவர்கள் கருதுவார். எனினும் அறுபத்துமூவர் வரலாறு கூறும் நூல் என்ற வகையில் அது திருமுறையாக இடம்பெறலாம் என்பார். செந்திநாதையர் உபதேசகாண்டம், வாயுபுராணம் போன்ற சில நூல்களில் மாயாவாதிகளின் இடைச்செருகல்கள் உண்டு என்று சுட்டிக்காட்டுவதை கைலாசபதி அவர்கள் ஒப்புக்கொள்வார் போலும். பண்டித மணி. சி.கணபதிப்பிள்ளை தமது சமயக்கட்டுரைகளில் இவை போன்ற விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.[58]

### *3.5.5 நியாயம்*

உபாங்கங்களுள் அதிஉன்னதமானது நியாயம் என்பது கைலாசபதி அவர்களின் கருத்து. முடிந்த சத்தியத்தை நோக்கும் ஆற்றல் வாய்ந்த ஒருவர் அர்த்தத்தில் வைத்து அதனை ஆழ்ந்து பார்க்கும் முறை நியாயம் என்பார். அதனை,

> தார்க்கீகர் எல்லாவற்றையும் 3 காரணத்துள் முடிக்கப் பார்க்கிறார்கள். நிமித்தத்தைத் துணையுள் அடக்கவும் பார்க்கிறார்கள். அர்த்தத்தில் வைத்துக்கொண்டு அர்த்த நிச்சயம் செய்ய, முடிந்த சத்தியத்தை ஆராய்ந்தது தான் நியாயம். நியாயம், வைசேடியம் உபாங்கத்தில் உச்சப்படி. முடிந்த சத்தியத்தின் நோக்குத் தெரிந்து தான் நியாயம் ஆராய வேண்டும். சித்தாந்தம் போதாது. தொடர்புகள், முதல்,துணை, நிமித்தத்துள் அடங்கா. வழக்குத் தொடர்புகள் ஆராயக்காணும். ஆனால் சாதகம் அவ்வளவே. (பிரமாணங்கள்?) [59]

என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.5.5.1 நியாயதர்க்கம் இன்றைய நோக்கு

மேல்நாட்டுத் தர்க்க வல்லுனர் கூட இந்திய தர்க்க சாஸ்திரம் உலகிலேயே பழமையானது என்பர். முடிந்தசத்தியம் புத்திவிருத்தியில் சத்துக்குக்கீழே உள்ளது. சத்தைக் காணாவிடினும், சத்தின் இருப்பை நிரூபிப்பதற்கு முடிந்த சத்திய நோக்கில் கிடைக்கும் நியாயக்காட்சி, அதாவது தரிசனம் ஓரளவு உதவி செய்யும். எனவே உபாங்கத்தில் அதிஉந்நத இடம் நியாயத்திற்கு வழங்குவது சரியானதே என்பர் கைலாசபதி அவர்கள். ஆனால் இன்று நியாயம் என்ற உடன் ஆறு தரிசனங்களுள் ஒன்றாகிய நியாய தரிசனத்தையும், அதற்குப் பக்கத்திலுள்ள வைசேடியத்தையுமே மெய்யியல் உலகம் நினைக்கிறது. கிரேக்க, அதாவது அரிஸ்டோட்டலின் தர்க்க முறையையும் இந்திய முறையையும் ஒப்பிட்டுப் பார்ப்போர், மயிரைப்பிளந்து ஆராயும் (வரட்டு விவாதமுறை) அளவையியல் என மதிக்கப்படும் இக்காலத்தில், நியாய சாஸ்திரம் எப்படிப் பொருள் உண்மைக்கு உபகாரமாக இருக்குமென அதிசயப்படலாம். ஆத்மசாதகர்கள் அது தம் நெறிக்குச் சற்றும் உதவாது எனக்குறை கூறுவதும் உண்டு. நீர்வேலி சங்கரபண்டிதர் "இலக்கணப் பிரமாணங்களால் வஸ்து சித்தியாம் என்பது நியாயசாஸ்திர சித்தம்" என வரையறை செய்துள்ளார்.[60] சாதாரண சடப்பொருளுக்கு வரைவிலக்கணம் கூறி அது விடயமாகப் பேசுபவனும், சிந்திப்பவனும் ஒரு ஸ்திரமான மனப்படத்தைப் பெறுவதற்கு வகைசெய்வது போல, சடமல்லாத பொருட்களுக்கும் இலக்கணம் வகுத்து அதை இன்ன இன்ன பிரமாணங்களால் அளந்து நிச்சயிக்கலாம் எனக்கூறுவது நியாயசாஸ்திரம்.

### *3.5.5.2 அறிவாராய்ச்சியியலும் நியாயசாஸ்திரமும்*

விவாதிக்கும் இருபகுதியினர் தத்தம் அறிவாராய்ச்சி நிலைப்பாட்டை (Epistemological Standpoint) முதலில் வரைவு செய்து கொண்டு விவாதத்தைத் தொடங்குவது இந்திய தர்க்க முறையில் ஒரு விசேட அம்சமென மக்ஸ்முல்லர் சுட்டிக்காட்டியதைக் கைலாசபதி அவர்கள் மதிப்புடன் எடுத்துக்காட்டுகிறார்.[61] ஒரு பிரமாணத்தை ஒத்துக்கொள்ளாதவன் முன்னிலையில் அதை முன்வைத்துப் பேசுவது தான் எடுத்துக்கொண்ட ஒரு பொருளை நிச்சயப்படுத்த உதவாது. உதாரணமாக, சிவஞானமுனிவர் சிவஞானபோத முதலாம் சூத்திரத்தில் 'மூவி னைமையின்' என்ற தொடருக்கு காட்சிப்பிரமாணத்தாலும், உலகம் தோன்றி நின்று அழிவதை நிரூபிக்கலாம் என உலகாயதனுக்கு நிரூபிக்க முற்படுகிறார். அவனோ எங்கள் வாழ் நாளில் உலகத் தோற்றத்தையோ அழிவையோ முழுமையாகக் காணவில்லை. (பிரவாகாநாதி போல) எனவே இதற்கு நான் "அனுமாநாதி எடேன்" எனக் காட்சிப் பிரமாணம், அனுமானப்பிரமாணம் இரண்டை யும் மறுக்கிறான். ஆகவே சிவஞான முனிவரின் விவாதம் அப்பிரமாணங்களை ஒத்துக்கொள்ளாதவன் முன் செல்லாது. அதனால் சிவஞானமுனிவர் இவ்விடயத்தைத் தர்க்க ரீதியாக முடித்துக்காட்டவில்லை என்று பிறர் குறைகூறக் காரணமாயிற்று.[62]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *3.5.6 உபாங்கப் பிறப்பும் புத்திவிருத்தியும்*

கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் நூலின் பக்கம் 554ல் நான்கு உபாங்கங்கள் பிறக்கும் முறையும் அவற்றுடன் தொடர்புடைய எழுச்சிகளும் கூறப்பட்டுள்ளன. நியாய சூத்திரத்தில் ஓர் அம்சமாகிய அனுமானம் பற்றி அவர் குறிப்பிடும் போது.

> அனுமானம்: இன்ன இடம்தான் பொருத்தமென்று உண்மையின் சார்பைக் கண்டு பேசுகிறவனே அனுமானம் தெரிந்தவன்.[63]

என்றும்,

> அர்த்தத்தின் உள்ளீடானதுறை, "பொருந்துமாறு" சம்பந்தப்பட் டிருக்கும். பொருந்துமாறு அமைவதாய் இருக்கும். அனுமானத்தாலே ஒன்றை நிச்சயிக்கும்போது, அனுமானம் பொருந்துமாற்றோடு கூடியதாக இருக்க வேண்டும். அதனாலேதான் அர்த்தம் தெளிவான்[64]

என்றும் கூறியுள்ளமை நாம் மனங்கொள்ளத்தக்கது. இறையியல் வல்லார் பதியொருவனே என்பதற்கு எத்தனையோ நியாயங்களைக் காட்டி வாதிடுவர். அதற்கு ஆதரவாக கைலாசபதி அவர்கள் 'முக்கிய நியாயம்' என்ற தலைப்பில் மிக நீளமான விவாதம் ஒன்றை மிக ஆழ்ந்த ஆன்மீக அனுபவத்தோடு காட்டுகிறார்.[65]

### *3.5.7 முடிவுரை*

வேதம் பற்றிய இப்பகுதியில் தொன்மையான தர்மப்பிரமாணங்கள் ஆகிய நான்கு வேதங்களும், ஆறங்கங்களாகிய சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிடம், கல்பம் என்பனவும், உபாங்கங்களாகிய மீமாம்சை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரம் என்பனவும் பற்றிய கைலாசபதி அவர்களின் பொதுவான கருத்துக்கள் இயன்றவரை காட்டப்பட்டுள்ளன. இவற்றுடன் தொடர்பு படுத்தி தமிழ் நூல்கள், இலக்கியங்கள் பற்றிய சிந்தனையும், இவற்றுக்கும் வேதத்தின் பிற்பகுதிகளாகிய பிராமணம், ஆரணியகம், உபநிடதம் ஆகியவற்றுக்கும் உள்ள உள்தொடர்புகள் பற்றியும் இன்னும் ஆழமான கருத்துக்கள் ஆங்காங்கு விரவிக் காணப்படுகின்றன. எழுச்சிகள் சொல்லுமிடம், சொல்லப்படுமிடம், நோக்குகளின் விம்பம், பிரதிவிம்பம், தளங்களின் பொருள், சாயை, தளங்களின் பிம்ப, பிரதிபிம் பங்களோடு தொடர்புபடுத்தியும் மனோவிருத்தி, அகங்காரவிருத்திப்படி நிலைகளோடு தொடர்புபடுத்தியும் மிக ஆழமாகக் கூறிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டும். ஆங்காங்கே பிற்பகுதிகளில் அவை வருமிடங்களில் சிறிது விளக்க முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்

1. மக்ஸ்முலர் (Max muller) இந்தியவியலுக்கு செய்த நன்மையையும், தீமையையும் சரியாக அளந்து காட்டுகிறார். பார்க்க: சங்கராசாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல், இரண்டாம் பாகம், பக். 234-236 (அடிக்குறிப்பு) வானதி பதிப்பகம், சென்னை, 1978.

2. என். எஸ். ஜகந்நாதன், கணையாழி, "கால்டுவெல்லின் ஒப்பாய்வு," ப. 44 - 46, ஜுலை, 1998.

3. சங்சராச்சாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல், II. ப.203, வானதி பதிப்பகம், 1991.

4. திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத்திருப்பதிகங்கள், 4ம் திருமுறை, பாடல் 490, ப. 354, தருமபுர ஆதீனம், 1957.

5. கச்சியப்பசிவாசாரியார், கந்தபுராணம், மேருப்படலம், செய். 6, ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1952.

6. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், பொ.கைலாசபதி அவர்களின் சிந்த னைகள், பக். 618, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, 1994.

7. கச்சியப்பசிவாசாரியார், கந்தபுராணம், செய்.127,ஆறுமுகநாவலர் பதிப்பு, சென்னை, 1952.

8. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 593 மு.கு. பொருளைச் சொல்வது வேதம் (4+3=7) எனக் கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் அமைகின்றன.

9. மேற்படி ப. 131 - 132 (9.3.1951)

10. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 594 (20.10.1955) மு.கு.

11. மேற்படி, ப. 596. (25.10.1955)

12. S.G. Dyczkowski, The Doctrine of Vibration, Delhi, 1989.

13. நவீன சமூகவியலாளர் மாக்ஸியக் கண்கொண்டு வேதத்தை ஆராய்ந்து அதில் ஏற்றத்தாழ்வுகளையும், பொருளாதாரச் சுரண்டல்களையும் காண்பது பௌதிகவியல் நூலில் இரசாயனவியல் உண்மையைத் தேடுவதை ஒக்கும். பார்க்க: Jeyant Gadkari, Society and Religion, Bombay, 1996.

14. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 596 மு.கு.

15. தாயுமான சுவாமிகள் திருப்பாடல், மூலமும் பொழிப்புரையும், பக். 99-100, சிவதொண்டன், சிவதொண்டன் நிலையம், செங்கலடி, இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. இந்திய மத்திய அமைச்சின் உதவியுடன் வெளியிட்ட S.V.G.Kanapati அவர்களின் Sämaveda, Motilal Banarsidass, Delhi, 1983, என்ற நூலில் இருக்கு வேதம் பிந்தியது, அது யசுர் வேதத்திலும், சாமவேதத்திலும் இரவல் எடுத்த மந்திரங்களையே கொண்டுள்ளது என மரபுக்கு மாறுபட்ட பல கருத்துக்கள் காணப்படுகின்றன.

17. ச.பரநிருபசிங்கம், கைலாசபதியும் பொருளாராய்ச்சியும், பக். 12, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1994.

18. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 594. மு.கு.

19. மேற்படி, ப. 596.

20. மேற்படி, ப. 132.

சாதிமான்கள் ஸ்ரீ முத்தீச் செல்வர்கள். அவர்கள் தீவளர்த்தால் பிசகுகள் சாம்பராய் விடும். பிசகுகள் - மிலேச்சக்கிரமங்கள் மிலேச்சகீர்த்திகள் - அணுகா; வேதவிசாரத்துடனிருப்பார்கள்.

ஒப்பு: சாந்தோக்கிய உபநிடதம் 5.24.3

21. எம். ஆர். ஜம்புநாதன், சாமவேத மொழி பெயர்ப்பு, பக். 287 - 288, 1936.

22. சங்கராச்சாரிய சுவாமிகள், 1978: 429, 431. மு.கு.

23. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 131 - 132 மு.கு.

24. ஓரளவு தொன்மையான வழியில் வேதம் பற்றிச் சிந்தித்த அரவிந்தர் வழியில் வேத மந்திரங்களுக்கு உளவியல் விளக்கங்களைக் கூறிவரும் டாக்டர் டேவிட் ஃப்றோலி மனித சமுதாயத்தக்கு ஒன்றிணைந்த அறநெறியைச் சுட்டிக்காட்டி, வாழ்வாங்கு வாழ, வழி செய்வது வேதநெறி என்கிறார். பார்க்க: Dr. David Frawley, Gods, Sages and Kings, Motilal Banarsidass, Delhi, 1995. P.42. The Rig Veda shows us a spiritual origin for human civilization… The Rig Veda possesses, perhaps, the largest scope of any of them and is worthy of examination by those of us who are concerned with this greater truth of humanity

25. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 0.47 மு.கு.

26. மேற்படி, ப. 471.

27. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கம்பராமாயணக் காட்சிகள், பக். 125 - 129, முத்தமிழ் வெளியீட்டுக்கழகம், யாழ்ப்பாணம், 1980.

28. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 359 மு.கு.

29. மேற்படி, ப. 139.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. I "அங்கமாயாதியாய் வேதமாகி அருமறை யோடைம்பூதந் தானேயாகிப்------" T.M. குமரகுருபரன்பிள்ளை, மூவர் தேவாரம், பக். 1515, திருப்பனந்தாள், காசிமடம், 1968.

II "மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி" T.M. குமரகுருபரன் பிள்ளை, 1968: 1434. மு.கு.

III "இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்து" T.M குமரகுருபரன் பிள்ளை, 1968: 1509 மு.கு.

IV "பொய்யுரையா மறை நால்வர் விண்ணோர்க்கென்றும் வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ" T.M. குமரகுருபரன், 1968 914. மு.கு.

31. கச்சியப்பசிவாசாரியார், செய். 6, 1952. மு.கு.

32. M. P.Pandit, Versatile Genius, Kapali Sastriar,Page.102; Sri Aurobindo Ashram, Pondicherry, 1991.

33. I காசிவாசி. செந்திநாதையர், உபநிடத உபக்கிரமணிகை, ப. 7, பிரம்ம சூத்திர பாடியம் முகப்பு, செந்திநாதையர்சுவாமிகள் அச்சியந்திர சாலை, திருப்பரங் குன்றம், 1907.

II "சிவபுராணங்கள் எல்லா வேதத்திற்கும் உபப்பிருங்கணமாய் வேதப் பொருளையே விரித்தெடுத்து ஓதுதலில் அது சிறந்த பிரமாணமாம்" பார்க்க: சிவஞானமுனிவர், சிவஞானபாடியம், 1ம் சூத், ப. 89, சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், சென்னை, 1936.

34. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப்பதிகங்கள், திருமருகல், பாடல் 1, பக். 424, திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, 1950.

35. "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்" என்ற பாயிர அடி குறிக்கும் ஐந்திரம் வைதிக இலக்கணம் என்றும், தற்போது ஐந்திரம் என்ற பெயரால் வழங்கும் சில சூத்திரங்கள் ஜைனநிபுணர் ஒருவரால் எழுதப்பட்டன என்றும் சொல்வர்.

36. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 434. மு.கு.

37. மேற்படி, ப. 195.

38. I "யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும்" பார்க்க: சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், பக். 560, சைவசித்தாந்த மகாசமாஜம், 1937.

II நாவலர், பெரியபுராண வசனம், பக். 313, வித்தியாநுபாலன யந்திர சாலை சென்னை, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 210. மு.கு.

40. சங்கராச்சாரியார் சுவாமிகள், 1978: 564. மு.கு.

41. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 630.

42. மேற்படி, ப. 373.

43. மேற்படி, ப. 376.

44. I காசிவாசி செந்திநாதையர், சூத்திரம் 1 - 3 - 36, 1907: 299. மு.கு.

II மு.அருணாசலம், பிரம சூத்திரம், தர்மபுர ஆதீனம், 1972, ப. 26

45. I Shastri, Bhagawat Kumar Goswami, the Bhakti Cult in Ancient India Choukhamba Sanskrit Series Office, 1965.

II The Laws of Manu, Tr. by G. Buhler, Delhi, Oxford University Pess, 1886.

III Nyaya Sastra of Gautama, Tr. By S.C. Vidyabhushan, Delhi, 1990.

IV Mimamsa Darshana of Jaimini, Ananda Ashram, Pune, 1980.

46. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 300 - 301. மு.கு.

47. ஷட்தரிசன சங்கிரகம் என்ற தொகுப்புநூல் வந்தபிறகே இக்கருத்து ஸ்திரமானது போலும்.

48. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 301. மு.கு.

49. சு.ராஜநாயகம், வித்துவான் பொன்.முத்துக்குமாரன் (பதிப்பாசிரியர்) "செந்தமிழ்த் தேன", பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை "கம்பன் கண்ட வாலி", வடஇலங்கை ஆசிரியர் சங்கம். (NPTA)

50. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 422. மு.கு.

51. சைவாசிரிய கலாசாலையில் கைலாசபதி அவர்கள் உபஅதிபராகப் பணிபுரிந்த காலத்தில் மாதாந்தம் சிறுதொகைப்பணமே சம்பளமாக வழங்கப்பட்டது. மிகுதி வருடமுடிவில் தரப்படும் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தாம் அந்தந்த மாதத்திற்குரிய பணத்தை அந்தந்த மாதமே பெற்றதாகப் பற்றுச்சீட்டில் ஒப்புதல் வாங்கி, அதனை அரசிடம் சமர்ப் பித்த பின்பே, வருட முடிவில் கலாசாலைக்குரிய உதவி நன்கொடைப் பணத்தை அரசு வழங்கும். அதன் பின்பே ஊழியர்களுக்குரிய மிகுதிப் பணம் வழங்கப்படும். அதன்படி ஒருமுறை சைவவித்தியா விருத்திச் சங்க எழுதுவினைஞரான கந்தப்பசேகரம் என்பவர் கைலாசபதி அவர்க ளிடம் பற்றுச் சீட்டில் ஒப்புதல் வாங்கச்சென்ற சமயம் அவர் மௌனமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததாகவும், பின் சங்கத்தலைவர் இராசரத்தினம் கைலாசபதி அவர்களிடம் இப்பொழுது முழுத்தொகையைத் தந்தாலும் ஒப்புதல் அளிக்க மாட்டீரா எனக் கேட்க அவர் மறுத்ததாக, மூதறிஞர் ஒருவர் மூலம் அறிகிறேன். உடனாசிரியரான சரசாலை ஆர். நடராசா என்பவர் "வீணாகப் பணம் முழுவதும் அரசுக்கே போகப்போகிறதே" எனக்கூறிய போது கைலாச பதி அவர்கள் "அதற்காக ஏன் ஒரு பொய் சொல்ல வேண்டும்" என்று கூறினாராம். எனவே கைலாசபதி அவர்கள் நடைமுறை வாழ்க்கையிலும் ஸ்மிருதியையே கடைப்பிடித்துள்ளார் எனலாம்.

52. ஔவையார்,ஆத்திசூடி,குறும்பா.86,பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு.

53. சிவஞானசித்தியார், பரபக்கம், செய்.203,ப.295, திருவாவடுதுறை ஆதீனம், 1991, மு.கு.

54. நேர்க்காட்சி, குருவின் போதனைகள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் அறிவுசார் பெரியோர்களைக் காணக்கிடைக்காத இக்காலத்தில் அச்சுப்புத்தகம் ஓரளவு உதவும் எனக் கைலாசபதி அவர்கள் கூறியுள்ளார்: அச்சு(யந்திர) காலம் ; - ஆட்கள் இல்லை. ஆகை யால் அச்சு வேண்டும். ஆட்கள் இல்லாதபடியால் இயந்திரம் வேண்டும்.

சாத்திரங்கள் : அக்கால ஆட்கள் (அளவறிந்து சொல்வர்.)

அச்சுத் தேவை. கறிப்பறியச் சடமாக அச்சில் சாத்திரம்.

நேரே கேட்பது வேறு.

55. Paul Deussen, Tr. By Charles Johnston, The System of the Vedanta, Page. 27, Motilal Banarsidass, Delhi, 1972

56. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 521. மு.கு.

57. மேற்படி, ப. 300, 521.

58. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சமயக்கட்டுரைகள், 1961: பக். 66 - 84. மு.கு.

59. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 411 மு.கு..,பக்.372ல்

:.பிரத்தியட்சம்- அநுமானம்- ஆகமம்- மிருதி- சுருதி- கலை (எழுச்சி)- சாட்சாத்காரம். சம்ஸ்காரநோக்கில் தர்மத்துறை, பிரத்தியட்சம்- பண்பாட்டின் நோக்கோடு கூடிய அர்த்தத்துறை அநுமானம் லாகவம். தர்மநோக் கோடு கூடிய காமத்துறை ஆகமம். முதிர்ந்தோர் ஆப்தத்துவ ரகசியம் அறிவர்.

அர்த்த நோக்கோடு கூடிய மோக்ஷத்துறை மிருதி. (இவ்வாறு சிந்திக் கப்பட்டது.or யோசிக்கப்பட்டது . பெரிய பிரமாணம்) (ஈறினல்லறம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திசைத்தேன்) காமநோக்கோடு கூடிய அமிர்தத்துறை சுருதி. மோக்ஷநோக்கோடு கூடிய சித்தாந்ததுறை சாட்சாத்காரம். (செப்புங் கலையளவே யாகும்..........இவன் விருத்தி கலையளவேயாகும். வாக்கடையலாம். செப்புங்கலை. ஆண்களுக்கு. காரிகையர்களுக்கு மூப்பு (முலை: முல்லை) கலை: துள்ளுதல் . அது சுத்தமானால்,நடத்தும். சுருதியிலும் கலை சுத்தப் பிரமானம். (பொ.கை சூத்திரம் )இதனை விரித்து ச.பரநிருபசிங்கம் எழுதிய கட்டுரை "ஈழநாடு" 24-06-1984 இதழில் பண்டிதமணியின் 86ம் பிறந்த தினத்தை ஒட்டி அவர் பெயரால் வெளியிடப்பட்டது (பார்க்க: அநுபந்தி : 1)

60. சங்கரபண்டிதர், சைவப்பிரகாசனம், ப.1 சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநேல்வேலி, 1925.

61. பொ. கைலாசபதி, ஞாயிறு, "தமிழகத்து தருக்க நூல் வளர்ச்சி", பக். 61 - 64, 338 - 340, 437 - 439, கலாநிலையம், யாழ்ப்பாணம், 1933,1934 இதன் மீள் பதிப்பு "சிந்தனைச்செல்வர்பொ.கைலாசபதி- -ஆளுமையும் ஆக்கமும் (2002), பக் 101 - 110 ல் உள்ளது.

62. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 564. மு.கு.

63. மேற்படி, ப. 565.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் : நான்கு

# கைலாசபதி அவர்களின் தமிழ்பற்றிய, விசேடமாகத் தொல்காப்பியம் பற்றிய, கருத்துக்கள்.

### *4.1 தமிழ்: பொதுநோக்கு*

தமிழ் மொழியில் இலக்கியம், இலக்கணம் - சிறப்பாகத் தொல்காப்பியம் பற்றிய கைலாசபதி அவர்களின் கருத்துக்களைக் குறிப்பிடுவதும், தமிழிலக்கியம், இலக்கணம் என்பவை கற்றோராலும், மற்றோராலும் எவ்வளவு பிறழ்வாக உணரப்பட்டும் உபயோகிக்கப்பட்டும் வருகின்றன என்பதை ஆராய்வதும் இவ்வத்தியாயத்தின் நோக்காகும்.

### *4.2 மொழிகள் இரண்டு*

முதலில் மொழியின் தோற்றமும் பயன்பாடும் பற்றிய கைலாசபதி அவர்களின் சிந்தனைகளை ஆராய்வோம். அது அவரது தமிழ் பற்றிய பிற்காலச் சிந்தனையின் ஆழ அகலத்தையும் அதன் ஆன்மீக பரிமாணத்தையும் விளங்க உதவும். அவர்,

ஆரியம், தமிழ்

என மொழிகள் இரண்டே என்று குறிப்பிட்டுள்ளார்[1]. இது வெறும் மொழி அபிமானத்தால் எழுந்த சிந்தனையன்று. ஆத்மீக அனுபவத்தால் எழுந்த சிந்தனை. மனோன்மணியம் தந்த சுந்தரம்பிள்ளை முதல் பாரதி, பாரதிதாசன் போன்றோர் வரை பொங்கியெழுந்த மொழி அபிமானத்தைக் கைலாசபதி அவர்கள் வெறுப்பார். மொழிப்பற்று மூடநம்பிக்கையில் தோன்றி, வெறும் அபிமானம் என்ற நீரில் வளர்ந்து, மொழி வெறி (Linguistic Chauvinism) யாகிய நச்சுக்கனி தருவதை அவதானித்த கைலாசபதி அவர்கள் தம்முடன் பழகிய ஒரு சிலருக்கு அதன் தாக்கங்கள் பற்றிக் கூறியதாகவும் அறிகிறோம்.[2] அவர் திருமந்திரத்தைச் சுத்தத் தமிழாகமம் எனவும் அருள்நோக்கால் எழுதப்பட்டது எனவும் கொள்வர். அதனால் திருமந்திரத்தில் மொழிகள் பற்றிக் கூறியவற்றைத் தமது சிந்தனையில் உள்வாங்கி ஆங்காங்கு அவற்றைச் சுட்டிக்காட்டியும் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே[3]

என்ற செய்யுளை ஆதாரம் காட்டி இறைவனைப் பாடுவதற்குத் தமிழே வாய்ப்பான மொழி என்பார் கைலாசபதி அவர்கள். அத்துடன்,

"மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது"[4]

"ஆரியமுந் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே"[5]

"தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே"[6]

போன்ற அடிகளை உதாரணம் காட்டி அதன் மூலம் தமிழ், ஆரியம் என்ற இருமொழிகளும் உலகியல் விடயங்களுக்கு அப்பாற்பட்ட உயர்குறிக்கோள் உடையவை என்பதை வற்புறுத்துகிறார். திருமுறைகளில் கூட,

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"[7]

"வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும் ஆயவன்"[8]

"ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்"[9]

"கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்"[10]

போன்ற அடிகளின் மூலம் சமயகுரவர் நால்வரும் இவ்விரு மொழிகளும் தெய்வீக நெறிக்கு மனிதனை இட்டுச் செல்லும் என்ற கருத்தையே வற்புறுத்துகின்றனர் என்கிறார்.

### *4.2.1 சொல்லை விட்டுப் பொருளில்லை*

இந்திய ஆன்மீக நூல்களும், இலக்கண நூல்களும் ஐயமின்றிக் கூறிய மொழியின் பிறப்புப் பற்றிய கருத்தைக் கைலாசபதி அவர்களும் ஏற்கிறார். அத்துடன் நாததத்துவத்தில் இருந்து மொழிகள் ஆரம்பிக்கின்றன என்ற கருத்தையும் ஒப்புக்கொள்கிறார். மேல்நாட்டார் சென்ற நூற்றாண்டில் மொழியின் தோற்றம் பற்றி முன்வைத்த விஞ்ஞானரீதியான கருத்துக்கள் வெறும் ஊகங்களே என்பார் கைலாசபதி அவர்கள். அவர் உலகின் படைப்பு சொல்லாயும், பொருளாயும் நிகழ்ந்தது என்பதை மனங்கொண்டு,

சொல்லை விட்டுப் பொருளில்லை

என்கிறார். அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி - கருத்து - அறிவு மூன்றன் கூட்டரவே பாஷை .

உணர்ச்சி மிகுதிப்பட்டது தமிழ். கருத்து மிகுதிப்பட்டது ஆரியம்.[11]

என்கிறார். ஒலிவடிவான மொழிக்கு அங்கங்களான வர்ணம் (எழுத்து), பதம், மந்திரம் ஆகிய மூன்றும் சொற்பிரபஞ்சம் என்றும், இவை ஒன்றிலொன்று தங்கியுள்ளன என்றும் தொன்றுதொட்டு வந்த இந்தியக்கருத்து கைலாசபதி அவர்களின் சிந்தனைக்கு அடிப்படையாகிறது.

கிருதயுகத்தில் வாழ்ந்த மக்கள் படைப்பின் குறிக்கோளை விளங்கி மொழியைத் தந்த இறைவனுக்கு மாறில்லாமல் நடந்தனர். அதாவது தூய உள்ளத்தில் தோன்றும் தூய கருத்துக்களை மரபு வழுவாமல் வெளிப்படுத்தி வந்தனர். அடுத்தடுத்த யுகங்களில் சிந்தனைப் பிறழ்வுக்குத்தக்கபடி மொழிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அதனால் பாரத நாட்டிலே வெவ்வேறு மொழிகள் தோன்றின. அதாவது பாகதம் (பிராகிருதம்), சங்கதம் (சம்ஸ்கிருதம்) போன்ற மொழிகள் தோன்றின. அதேபோல் சாதாரண மக்கள் மத்தியிலே அபப்ரம்சம், பைசாசி போன்ற மொழிகள் முகிழ்த்தன. இதனை நவீனருட் கற்றோர் கருத்திற் கொள்ளவில்லை. "பாகதத்தொடு சங்கதம்" எனச் சம்பந்தர் தேவா ரத்தில் பாடியது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

### *4.3 பதினெட்டு வகைத்தமிழ்*

கைலாசபதி அவர்கள் தமிழ் மொழியை ஆன்மீக அடிப்படையில் பதி னெட்டு வகையாக வகைப்படுத்துகிறார். அகங்கார விருத்தியில் அருள்நோக்குத் தமிழ் சம்பந்தமானது. அவ்விருத்தியில் உயர்ந்து மூன்றாம் நிலையாகிய அருள்நோக்கை அடைந்தவன், புத்திவிருத்தியின் ஒவ்வொரு துறையையும் நோக்கும்போது அவனுடைய கருத்துக்கள் எந்தெந்த வடிவில் வெளிப்படும் என்பதைக் கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார். அவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு தமிழை ஆன்மீக அடிப்படையில் பதினெட்டாக வகைப் படுத்தினார்.

புத்திவிருத்தியின் ஐந்தாம் தளமாகிய பொதுவிவேகத்தில் நிற்கும் ஒருவன் அகங்கார விருத்தியில் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் தர்மதளத்தை நோக்குவான். அப்போது அவன் தர்மத்தமிழை அறியவல்லவன் ஆகிறான். அதேபோல் ஆறாம் தளமான நல்லார்வத்தில் நிற்குமொருவன் அகங்கார விருத் தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் அர்த்தத்தமிழை அறியவல்லவ னாகிறான். புத்திவிருத்தியின் ஏழாம் தளமான நாகரிக தளத்தில் உள்ள ஒருவன் அகங்கார விருத்தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் காமத்தமிழை அறிய வல்லவனாகிறான். அதனை அவர்,

நாகரிகப் படியில் (தளத்தில்) அஃதாவது உலகத்தோடு ஒட்டும் பிடியில், அருட்குணம் இருந்த படியைக் கண்டது காமத்தமிழ்.[12]

என்கிறார். புத்திவிருத்தியின் 8ம் தளமான சம்ஸ்காரத்தில் நிற்கும் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்கார விருத்தியில் அருள்நோக்குக் கைவரப் பெற்றால் மோக்ஷத்தமிழை அறியவல்லவனாகிறான். கைலாசபதி சிந்தனைகளில் அது,

> சம்ஸ்கார தளத்தில் சீவிக்கிற சாதியார், அதில் நின்று அருட் குணத்தைப் பார்த்தவழியே, மோக்ஷதமிழ் எட்டும். அது கோயில் நாகரிகம். தேவாரம். "முழவதிர........... மந்தி முகில் பார்க்கும்.." *பண்தமிழ்*[13]

எனச் சொல்லப்பட்டுள்ளது. அதேபோல் 9ம் தளமான பண்பாட்டில் நிற்கும் ஒருவன் அகங்காரவிருத்தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் அமிர்தத் தமிழை அறிவான் அதனை,

> அமிர்தத் தமிழ் (திருமந்திரம்) தரும அங்கத்தில் அருட் குணத்தைப் பார்த்தது.[14]

என்கிறார். இந்த ரீதியாக எண்ணிக்கொண்டால் தர்மத்தமிழ் தொடக்கம் சிவத்தமிழ் ஈறாக பதினைந்து வகைத்தமிழ் வரும். அவற்றுள்ளும் மூன்றுவகைத் தமிழுக்குக் கைலாசபதி அவர்கள் தனிமகத்துவம் கொடுக்கிறார். புத்தி விருத்தியின் அர்த்ததளத்தில் நின்று அகங்கார விருத்தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் புத்திவிருத்தியின் பதினாறாம் தளமான சித்தாந்தத்தின் உள்துறையைச் சாதிக்கலாம். அதனை அவர் "ஆமைத்தமிழ்" என்றார். "ஐந்த வித்தான் ஆற்றல்"[15] என்று திருவள்ளுவர் குறிப்பிடும் நிலையைப் பூரணமாக எய்தியவன் மேற்கூறப்பட்ட ஆமைத்தமிழை நன்கு அறிவான். புத்திவிருத்தியின் 12ம் தளமான காமத்தில் நின்று அகங்கார விருத்தியின் அருள்நோக்கு கைவரப்பெற்று புத்திவிருத்தியின் 17ம் தளமான முடிந்த சத்தியத்தைச் சாதிப்பது ஊமைத்தமிழ் எனப்படும். அதேதளத்தின் உள்துறையை நோக்குவது ஓமைத்தமிழ் எனப்படும்.

மேற்கூறப்பட்ட ஆமைத்தமிழ், ஊமைத்தமிழ், ஓமைத்தமிழ் ஆகிய மூன்று நிலைகளிலும் பேச்சில்லை. அதன் காரணத்தினால் மொழி எங்கே? என்று ஒருவர் வினா எழுப்பலாம். அது பேசாத மொழி, மௌனமொழி. ஆன்மீக உணர்வுடையவர்கள் இம்மூன்று மொழிமூலமும் கருத்துப்பரிமாற்றம் செய் வார்கள். நம்மாழ்வார், உருத்திரசன்மன் போன்றோர் ஊமைச்சாதகர்கள் என்பார் கைலாசபதி அவர்கள். திருமந்திரத்தில் கூட "சூனிய பாஷை" என்ற ஒன்று உண்டு[16] என்பதையும் நாம் இவ்விடத்தில் நினைவுகூருவோம். இப்படியாகப் புத்திவிருத்தியில் அகண்டாகார நோக்குப் பெற்ற ஒருவர் அகங்கார விருத்தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் புத்திவிருத்தியின் 24ம் தளமான சிவத்தைச் சாதிக்கலாம். அந்நிலையில் ஒருவன் சிவத்தமிழை விளங்கலாம் என்றார். மேலே கூறப்பட்ட பதினைந்து தமிழும் மேல்நோக்கிய தமிழ் அல்லது ஊர்த்துவ தமிழ் எனப்படும். அப்படி மேல்நோக்கால் பதினைந்து வகைத்தமிழைப் பார்ப்பதுபோலக் கீழ்நோக்காலும் மூன்றுவகைத் தமிழைப் பார்க்கலாம். புத்திவிருத்தியின் 17ம் தளமான முடிந்த சத்தியத்தில் நிற்கும் ஒருவன் அகங்கார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் புத்திவிருத்தியின் 12ம் தளமான காமத்தைக் கீழ்நோக்கிப் பார்க்கும்போது பிறப்பது முத்தமிழ். புத்திவிருத்தியின் 16ம் தளமான சித்தாந்தத்தில் நிற்கும் ஒருவன் அகங்கார விருத்தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றால் புத்திவிருத்தியின் 11ம் தளமான அர்த்தத்தைக் கீழ்நோக்கிப் பார்க்கும் போது பிறப்பது புராணத்தமிழ். அதேபோல் புத்திவிருத்தியின் 15ம் தளமான ஞானத்தில் நிற்கும் ஒருவன் அகங்கார விருத்தியின் அருள்நோக்குக் கைவரப்பெற்றுப் புத்திவிருத்தியின் 10ம் தளமான தர்மத்தைக் கீழ்நோக்கிப் பார்க்கும் போது பிறப்பது வாகடத்தமிழ் என்கிறார் கைலாசபதி அவர்கள். அதனை,

> கீழ்ப்பூமியிலிருந்து அருளைப் பார்த்தபோது தர்மத்தில் முடிந்ததமிழ்
>
> வாகடத்தமிழ். சோதிடத் தமிழ்; *(இதற்கு இலக்கணமில்லை)*[17]

என்கிறார். இவற்றைப் பின்வருமாறு வரைபடம் மூலமும் காட்டலாம் :

(வரைபடம் பக். 125ல் பார்க்க)

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே[18]

என்ற செய்யுளில் கூட திருமூலர் பதினெட்டுப் பாடையும் என்று சுட்டுவது பதி னெட்டு வகையான தமிழையே. தற்போது வழக்கிலுள்ள வங்கம், மலையாளம் முதலிய மொழிபேதங்களை அல்ல. இவை இன்று நாம் படிக்கும் நூல்களில் இல்லாத, கைலாசபதி அவர்களின் விசேட சிந்தனைகள் ஆகும்.

### *4.4 ஆரியம் - தமிழ் ஆன்மீக மொழிகள்*

அகங்காரவிருத்தியின் எட்டு நிலைகள் பற்றிக் கூறியபோது தமிழ்நோக்கு என்ற அருள்நோக்கு விழிக்கப்பெற்றவனே தமிழைப் பற்றிப் பூரணமாக அறிய வல்லவனாகிறான் என்கிறார் அவர்.


கைலாசபதி அவர்களின் கருத்துப்படி தமிழ், ஆரியம் என்னும் இரண்டும் ஆன்மீக வாழ்வுக்கு உறுதுணையான இரு தெய்வீக மொழிகள். அவை உலகில் வழங்கும் மற்றைய மொழிகள் போல மனிதர் தம் கருத்தை வெளிப்படுத்த உபயோகிக்கும் சாதாரண ஊடகம் மட்டுமன்று. தற்கால மொழியியல் அறி ஞர்கள் கூறுவதுபோல, எமது பண்டைய மூதறிஞர் மொழியை விலங்கு போன்ற வாழ்க்கையில் கருத்துப்பரிமாற்றத்தைச் செய்வதற்கு ஏற்ற வெறும் பயன்பாட்டுக் கருவியாக மட்டும் கருதவில்லை. பயன்பாட்டுப் பெறுமதிக்கு (Utilitarian Value) மேலே ஆன்மா ஐம்புலன்களால் பெறும் அறிவோடு மட்டும் நின்றுவிடாமல் ஆன்மீகப் பெறுமதி (Spiritual Value) மிக்க அறிவுத் தளங்களில் உயர்ந்து தெய்வநிலைக்கு இட்டுச்செல்லும் கருவியாகவே கருதினர். ஆன்மீக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இருபத்திநான்கு வகை.

மேல்நோக்கிய (ஊர்த்துவ) தமிழ் ஏழு + எட்டு

24. சிவம்
23. ஆதிப்பிரமம்
22. ஆனந்தம்
21. முடிந்தஞானம்
20. சித்
19. அகண்டாகாரம்
18. சத்
17. முடிந்தசத்தியம்
16. சித்தாந்தம்
15. ஞானம்
14. அமிர்தம்
13. மோக்ஷம்
12. காமம்
11. அர்த்தம்
10. தர்மம்
09. பண்பாடு
08. சம்ஸ்காரம்
07. நாகரிகம்
06. நல்லார்வம்
05. பொதுவிவேகம்
04. கலைஞானம்
03. சுட்டிப்பான கிரகிப்பு
02. சீவனம்
01. கேவலக்கிடை.




கீழ்நோக்கிய (அதோமுக)
தமிழ் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குக் கைலாசபதி அவர்களின் கருத்துக்கள் அர்த்தமற்றவையாக இருக்கலாம். ஆனால், நாகரிகத்தின் கீழ்ப்படியில் உள்ள மக்கள் முதல் அதிஉன்னத பண்பாட்டு நிலையில் உள்ள மக்கள்வரை ஏதோ சில ஆன்மீக விழுமியங்களை ஏற்றுக்கொண்டு அவற்றிற் காகச் சில சாதனைகளையும் மேற்கொள்ளுகின்றனர். அப்படியானவர்கள் கைலா சபதி அவர்களின் மொழி பற்றிய கருத்துக்களைப் பொதுவாகவும் தமிழ், ஆரியம் பற்றிய கருத்துக்களைச் சிறப்பாகவும் மதிக்க வேண்டிய நிலை எதிர்காலத்தில் ஏற்படலாம் என எண்ணுகிறோம்.

### *4.5 சங்கத்தமிழ்: முத்தமிழ்*

முத்தமிழ் எனக் கைலாசபதி அவர்கள் குறிப்பது சங்கத்தமிழையே. அதற்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்குவது தொல்காப்பியம். சிலர் சங்க இலக்கியம் என உயர்த்திக் கூறப்படும் எட்டுத்தொகை நூல்களில் இயற்றமிழ் மட்டும் தானே உள்ளது; இசைத்தமிழ், நாடகத்தமிழ் இல்லையே எனக் குறிப்பிடலாம். பரிபாடல் போன்ற நூல்களில் பண் ஆகிய இசைத்தமிழ் உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை . அவர் சமயம் வேறு, தமிழ் வேறு என்று பிரித்துப் பார்ப்பதில்லை. இரண்டையும் ஒன்றிணைந்த பார்வையில் (Integral View) நோக்கினார். அதாவது தந்திரம், மந்திரம், உபதேசம் என்று சமயங்கள் சொல்வதை இயல், இசை, நாடகத்துடன் அவர் இணைத்துப் பார்க்கிறார். அதனை அவர்,

> ஐந்திணை (மனநிலை) களவிலும் நிகழலாம் கற்பிலும் நிகழலாம்.
> தந்திரம் = இயல்.
> மந்திரம் = இசை.
> உபதேசம் = நாடகம்.[19]

என்கிறார். அத்துடன் சமயம் கூறும் சரியையையும், அகப்பொருள் இலக்கணம் கூறும் உடன்போக்கையும் ஒரு புள்ளியில் வைத்துக்காட்டுகிறார். வேத வியாகர ணத்தையும், தமிழ் வியாகரணத்தையும் ஒரே தளத்தின் இருதுறைகளாகக் குறிப் பிடுகிறார். தமிழில் உள்ள திருக்குறளுக்கும் வடமொழியில் உள்ள ஸ்மிருதிக ளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இக்கால ஆராய்ச்சியாளர் கூறுவ தைக் கைலாசபதி அவர்கள் ஒத்துக்கொள்ளார். அதேசமயம் ஆசியா முழுவதற்கும் பொதுமொழியாக இருந்த சம்ஸ்கிருதம் பல்வேறு சிதைவுகளுக் குள்ளாகிவிட்டது என்றும் கூறியுள்ளார். இப்படியாகக் கைலாசபதி அவர்கள் முன் வைத்த சில தமிழ் பற்றிய கருத்துக்களை முன்னுரையாக வைத்துக்கொண்டு தமிழின் சிறப்பு நூலாகிய தொல்காப்பியம் பற்றி அவரின் சிந்தனைகளில் உதித்தவற்றை ஆராய்வோம். அதன் பின் சங்க இலக்கியங்கள் என நக்கீரர் போன்ற சான்றோர்களால் கருதப்படும் நூல்களைப் பற்றியும், ஈற்றில் மரபு வழிவந்தவையும், மரபினின்றும் அதிகம் பிறழாதவையுமான கம்பராமாயணம் முதலியன பற்றியும், பிரபந்தங்கள் பற்றியும் அவர் கொண்ட கருத்துக்களைச் சுருக்கமாக ஆராய்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.6 தொல்காப்பியம் : அன்றும் இன்றும்

"ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம்" தன் மகிமை குன்றி, விளங்கிக் கொள்பவர் குறைந்துபோன காலத்தில், அதாவது, கடைச்சங்கத்தின் இறுதியில் இறையனார் களவியல் தோன்றியது என நக்கீரரின் உரைவாயிலாக அறிகிறோம்.[20] அந்நிலை பின்னும் தேய்ந்து, உரையாசிரியர் காலத்தில் தொன்மரபு, ஆழ்சிந்தனை முற்றாக அற்றுப்போய், நூலைக் கைவிடும் நிலை ஏற்பட்டது. உரையாசிரியர்கள் ஏதோ தமக்குத்தெரிந்த உரையை எழுதிவைத்தனர். தென்னிந்தியாவில் கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இலைமறைகாய்போல் ஓரிருவர் மட்டுமே தொல்காப்பியத்தின் சொற்பொருளைக் கற்பிக்கவல்லோராக இருந்தனர். 1848ல் மழவை மகாலிங்க ஐயரும், பின் 1858ல் எஸ். சாமுவேல்பிள்ளையும், 1868ல் ஆறுமுகநாவலர் உதவியுடன் சி.வை. தாமோதரம்பிள்ளையும் தொல்காப்பியத்தை அச்சில் பதிப்பித்தனர். அதன் பின் பண்டித, வித்துவான் பரீட்சைகளுக்குக் கற்போர் பரீட்சை நோக்கில் மட்டும் தொல்காப்பியத்தைப் பயின்றனர். கடந்த சில தசாப்தங்களாகத் தென்நாட்டில் தொல்காப்பிய மகாநாடுகளும், ஆய்வுகளும் பெருகியுள்ளன. எல்லோரும் நன்னூல் போன்ற சாதாரண இலக்கண நூல்களைப் போலவே தொல்காப்பியத்தையும் படிக்கின்றனர். நவீன மொழியியல் வளர்ச்சியினால் அதனை மேனாட்டு நவீன மொழியியல் ரீதியில் பாணினீயத்தைப் போன்று ஆராயும் போக்கும் காணப்படுகிறது. ஆனால் எவராயினும் அதனை வேதாங்கமாகிய வியாகரணத்துடன், அதாவது பாணினீயத்துக்கு முற்பட்ட வைதிக இலக்கணத்துடன் ஒப்பிட்டும், சமப்படுத்தியும், ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கியும் சிந்தித்தது கிடையாது. (பி.சா. சுப்பிரமணிய சாஸ் திரியார், புறநடை: தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.) கைலாசபதி அவர்கள் வேதம் போலவே வேதாங்கமாகிய வியாகரணமும், தமிழ் இலக்கண மாகிய தொல்காப்பியமும் ஆன்மீக அடிப்படையில் அமைந்தவை; அவை உயர்தனிச் சிறப்புப் பெறவேண்டியவை என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். இதனை முற்றாக விளக்குவது கடினம். எனினும் இயன்றவரை அவரது ஸ்மிருதி யின் புதுமை அம்சத்தைக் காட்ட முயற்சிக்கிறோம்.

### 4.6.1 கைலாசபதியின் தொல்காப்பிய அறிவுநுட்பம்

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தமது கட்டுரை ஒன்றில் கைலாசபதி அவர்கள் பற்றிப் பின்வருமாறு வியந்துள்ளார்:[21] ஒரு விடுமுறை நாளில் கைலாசபதி அவர்கள் தமக்கு ஆங்கிலமும், தாம் கைலாசபதி அவர்களுக்குத் தொல்காப்பியமும் படிப்பிக்கத் திட்டமிட்டுக் கீரிமலை சென்றதாகவும் அங்கு தாம் (பண்டிதமணி) விரைவில் புத்தகத்தை மூடி வைத்து, கைலாசபதி அவர்கள் தொல்காப்பியம் பற்றி முன்வைத்த புதுமையான பல கருத்துக்களைக் கேட்டு வியந்ததாகவும் கூறுகிறார். இலக்கணக் கடல் எனப்போற்றப்படும் அ.குமாரசு வாமிப் புலவரிடம் படித்த மாணவனாகிய பண்டிதமணி அவர்கள் அதிசயிக்கும்படி கைலாசபதி அவர்கள் கண்ட தொல்காப்பியர் எத்தன்மையர் என்பது சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்களுக்கு நல்விருந்தாகும். கைலாசபதி அவர்களின் கருத்துக்களும், சிந்தனைகளும் தொடக்க காலத்தில் இருந்ததிலும் பார்க்கக் கூடிய ஆழம் உடையனவாகப் பின் எப்படி மலர்ச்சி உற்றன என்பதும் கற்றோர் கவனத்துக் குரியது.

### *4.6.1.1 தொல்காப்பியம் சங்கத்தமிழ் இலக்கணமே*

கைலாசபதி அவர்கள் அருள் நோக்கு, ஆரியத்துவம் என்ற அகங்கார அந்தக்கரண விருத்தியின் நிலைகளுடன், புத்திவிருத்தியின் 15ஆம் தளமாகிய ஞானத்தின் மூன்றாம், நான்காம் துறைகளை இணைத்துத் தொல்காப்பியம் பற்றிய சிந்தனைகளை முன்வைக்கின்றார். தொல்காப்பியப் பொருளதிகாரம் பற்றிய அவரின் நேரடியான விளக்கம் தொடங்குமிடமே நம்மவர்களுக்கு வியப்பை ஊட்டுவதாக அமைகிறது. அவர்,

> பொருளதிகாரம் நுதலிய பொருள் உணருமாறுணர்த்துதனுதலிற்று.[22]

என்கிறார். நுதலிய பொருள் என்பது கருதப்பட்ட அல்லது கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள். அதை ஒருவன் உணருமாறு அதாவது விளங்கும் வகையில் உணர்த்துதலைக் கருத்தாக உடையது தொல்காப்பியம். இதை வித்தாக வைத்துக்கொண்டு நுதலிய பொருளை அகம், புறம் என இருவகைப் படுத்துகிறார் கைலாசபதி அவர்கள். அதனை,

> நுதலிய பொருள் இருவகை அகம், புறம். அகம் இன்பம் நுதலிற்று; அநந்நியப்பட்டுக் காண்டலின் அகமெனப்பட்டது.[23]

ஒருபொருளில் ஈடுபாடு பிறப்பதற்கு அப்பொருளைக் காண்போன், காட்சி, காட்சிப் பொருள் என்ற பேதமில்லாமல், அதாவது காண்போனாகிய தான் வேறு காட்சிப் பொருளாகிய மெய்ப்பொருள் வேறு என்ற பாவனையை விட்டு அந்நியப்பட்டுப் பிறிதாக நில்லாமல் - அநந்நியப்பட்டு ஏகமாகி நின்று காணப்பெறுவது எதுவோ அதுவே அகம் என்கிறார் கைலாசபதி அவர்கள். "காண்டல்" என்பது இங்கு ஐம்புலன்களால் பெறப்படும் அறிவைக் குறிக்கும். இது உடல் மட்டத்தில் ஐம்பொறிகளை வாயிலாகக் கொண்டு அறிவதற்கும், அவை சாராமல் உட்கருவிகளின் வழியே பெறும் உயர் அனுபவ அறிவுக்கும் பொருந்தும். புறம் பற்றிக் கூறும்போது,

> புறம் அநந்நியப்படாது தானேயாய் நின்று மற்றொன்றின் பெருமை முதலியவற்றைக் காண்பது.[24]

> புலமையாவது ஈடுபாடு; அது அறிவின் தூய்மைக்கு ஏற்றவாறு வேறுபடும்.[25]

என்கிறார். நக்கீரர் போன்ற சங்ககாலப் புலவர்கள் தர்மத்தை அறிந்து அர்த்த தளத்தில் நிறபவர்கள். அவர்கள் காமதளத்துக்கு ஏறியும், தர்மதளத்துக்கு இறங்கியும் பொருள் ஆராய்ச்சி செய்யும் திறமை உடையவர்கள். அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தாம் அறிந்த பொருளில் ஈடுபாடுற்று, அந்த இன்பத்தில் மூழ்கி, அந்நியப்படாது நின்று காணும்போது அகத்தைப் பாடினார்கள். அந்நியப்பட்டு நின்று காணும்போது புறத்தைப் பாடினார்கள். சங்கச்சான்றோர் வள்ளல்களின் கொடையையும், அறத்தின் காவலரான மன்னரின் அறக்கருணையோடு கூடிய வீரத்தையும், தாங்கள் பார்வையாளராக, - புறத்தவராக - நின்று பாடினார்கள். அதாவது தன்னை இழந்த நிலையில் பிறப்பவை அகப்பாடல்கள் என்றும் தன்னை இழக்காது புறத்தே நின்று பொருளின் பெருமையில் ஈடுபட்டுக் காணும்போது பிறப்பவை புறப்பாடல்கள் என்றும் சுருக்கமாகக் கூறலாம்.

### *4.6.1.2 அக வகை*

அகத்தையும் இரண்டு வகைப்படுத்துகிறார் கைலாசபதி அவர்கள்.

> அகம் இருவகை: களவு, கற்பு. ஐந்திணைகள் களவிலும் வரலாம். கற்பிலும் வரலாம். ஒரு துறை தானே நிலை வேறுபாட்டால் பல திணைப்படலாம்.[26]

என்கிறார். மேலும்,

> தமிழ் நுதலியது யாது? பொருளைக் கூறும் நூல்கள் சாத்திரங் கள் வடமொழியில் உள்ளவை. பொருளறிவின் முதிர்ச்சியில் உண்டான அமைதிப்பாடே தமிழ். தமிழ் பொருள் நிருபணஞ் செய்ததெனக் கொண்டு ஆராய்வது தவறு. ஒருவர் கூறிய தமிழ் நோக்கி, அவரெய்திய பொருளறிவின் முதிர்ச்சியை ஆராயலாம்.[27]

சங்கத்தமிழுக்கு இலக்கணம் செய்தவரும், தாமே அதனை இலக்கி யமாகச் செய்தவரும் ஆகிய தொல்காப்பியர் கூறிய தமிழை நோக்கியே, அவர் எய்திய பொருளறிவின் முதிர்ச்சியை ஆராயலாம்.[28] தொல்காப்பியர், காணப்பட்ட உலகில், தன்னைச் சுற்றித் தோன்றி நின்று அழியும் பொருள்களைக் கண்டு, அவற்றின் இயல்பை, பொருட்டருமத்தை - பொருளின் தருமத்தை - ஓர்ந்து, உலகியல் வாழ்வைச் சீராக அறவழியில் நடத்துவதன் மூலம் இவ்வுலக இன்பத்தைத் துய்த்து, இவற்றின் நிலையாமையை உணர்ந்து பேரின்பத்திற்கு உரிய வழியைத் திசைகாட்டுகிறார். இதனை உரையாசிரியர்கள் ஓரளவிற்குக் காட்ட முனைந்தனர்.[29]

### *4.6.1.3 நால்வர்ணமும் - நாற்பாலும்*

தொல்காப்பியத்தில் வரும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நாற்பால் பகுப்பு முறையையும், ஸ்மிருதிகள் கூறும் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வர்ணப் பாகுபாட்டையும் கைலாசபதி அவர்கள் தமது தனிவழியில் விளக்குவது நமது சிந்தனைக்குரியது. அவர்,

> அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் அறத்தைக் கண்டதால் வந்த சாதி வேறுபாடு. பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி பற்றிய சாதிவேறுபாடு.[30]

என்கிறார். அதாவது இவை ஆன்மீக அடிப்படையில் ஏற்பட்ட வகுப்பு முறை என்பதில் கைலாசபதி அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர். பிற்கா லத்தில் தமது மெய்யியல் தரிசனம் தெளிவடைந்த போது, இதனை இன்னும் நுட்பமாக விளக்குகிறார். அதாவது அகங்காரம் என்ற அந்தக்கரணம் விரிவ டையும் போக்கில் எட்டு நிலைகளை வகுத்து அவை பற்றிய உள்ளீடான ஆன்மீக விருத்தியே இப்பாகுபாடு என்கிறார். அவ்விருத்தியில் ஒருவன் உயர்ந்து உயர்ந்து பிரேமை, ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம், சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் என்ற எட்டு நிலைகளை எய்த முடியும். இவற்றில் மூன்றாவ தாகிய அருள்நோக்கில் நிற்பவர்கள் சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் ஆகிய நான்கையும் நோக்கும் வகையில் நாற்பாலாகிறார்கள்.

அருள்நோக்கு →
- சத்தியம் - வேளாளர்
- ஞானம் - வணிகர்
- அநந்தம் - அரசர்
- பிரமம் - அந்தணர்.

அதேபோல் ஆரியத்துவத்தில் நிற்பவர்கள் சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் ஆகிய நான்கையும் நோக்கும் வகையில் நாலு வர்ணத்தவராகிறார்கள்.

ஆரியத்துவம் →
- சத்தியம் - சூத்திரர்
- ஞானம் - வைசியர்
- அநந்தம் - க்ஷத்திரியர்
- பிரமம் - பிராமணர்.

எனவே தொல்காப்பியம் காட்டும் நாற்பால் வகுப்பினரும் ஸ்மிருதிகள் பேசும் நான்கு வர்ணத்தினரும் தம்முள் நோக்கு, குறிக்கோள் பற்றிய விடயத்தில் ஒற்றுமை உடையவர்கள்[31] என்பதை அறியலாம். எனினும் நிற்கும் நிலை, அதாவது தளம் பற்றிய வேறுபாடு உடையவர்கள் என்பது உண்மையாகிறது.

### *4.6.1.4 ஆன்மீக - அந்தக்கரண நிலை வேறுபாடு*

கைலாசபதி அவர்கள் அகங்கார விருத்தியில் மூன்றாவதாகிய அருள்நோக்கு விருத்திப்பட்டவன் பிரமத்தை அடையும் குறியுடன், அதாவது இலட்சியத்துடன் வாழும்போது, அந்தணன் ஆகிறான் என்பர். அவனே அகங்கார விருத்தியில் ஆரியத்துவத்துள் ஏறிநின்று அதேகுறியுடன் பிரமத்தை அடையும் இலட்சியத்துடன் - வாழும்போது அவன் பிராமணன் ஆகிறான் என்கிறார். எனவே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியம் கூறும் வேற்றுமை தெரிந்த நாற்பாலும், ஸ்மிருதிகள் கூறும் நான்கு வர்ணமும் ஆன்மீக சாதனை பற்றி வந்த வகுப்புக்களே. நவீனர் கூறுவது போலத் தொழிலால் வந்த பிரிவுகள் அல்ல. அதனை அவர்,

**ஒரு அந்தணன் பிராமணன் ஆகலாம். வேளாளன் சூத்திரன் ஆகலாம்.**[32]

என்கிறார். தொல்காப்பியரும், ஸ்மிருதிகாரரும் ஆன்மீக சாதனையோடு கூடிய வாழ்வுக்கு வாய்ப்பான தொழில்களை மனிதரது உள, உடல் நிலைகளுக்கு ஏற்ப வகுத்துவைத்தனர் என்பது கைலாசபதி அவர்கள் கண்ட ஸ்மிருதி. தொல்காப்பிய, வைதிக வகுப்பு முறைகளை ஒப்பிடும் போது வைதிக சாதிப்பிரிவைப் பற்றிக் கைலாசபதி அவர்கள் கூறியவற்றைச் சற்று ஆழமாகப் பார்ப்பது நாம் எடுத்துக்கொண்ட தொல்காப்பிய நாற்பால் பிரிவை விளங்கிக் கொள்ள உபகாரமாக இருக்கும். வேதவிதிப்படி ஒழுகுபவன் வைதிகன். அவனது ஆசாரம் கிருஹ்ய சூத்திரங்களின் வழிவந்து, ஸ்மிருதி நூல்களில் விதந்துரைக் கப்பட்டுள்ளது. பிராமண, க்ஷத்திரிய, வைசியர் மூவரும் உபநயனம் செய்வதற் குரியவர். ஆதலால் இவர்கள் "துவிஜர்" அதாவது இருபிறப்பாளர் எனப்பட்டனர். அவர்கள் கதிக்கு வழிகண்டோர். "கதி" என்பது சிவநெறி, சிவகதி, செல்நெறி, நெறி எனப் பலவாறு தமிழ் நூல்களில் பேசப்படுகிறது. அது மீளாவழி. பிரமசூத் திரத்தின் இறுதிச் சூத்திரத்தில் "அவன் மீளப்பிறப்பானல்லன்; அவன் மீளப்பிறப் பானல்லன்" என இருமுறை வற்புறுத்திக் கூறியதும் அதுவே. மீளப் பிறவாத நெறிக்கு வழிகண்டவர்கள் விடயத்தில் மதிப்புடையவர்களாகிய 4ம் வர்ணத்த வரான சூத்திரர் ஏனைய வர்ணத்தவர்களைப்போலத் தமக்குச் சத்திய நெறியில் செல்ல வாய்ப்பில்லையே எனக் கிலேசிப்பர். தாம் பிறந்ததன் பயனை அடைய முடியவில்லையே என ஏங்குவர். அந்நிலையில் செய்யத்தக்கது கதிக்கு வழிகண்ட பிராமண, க்ஷத்திரிய, வைசியர்களைப் பின்பற்றி அவர்களுக்குத் தொண்டு செய்து அவர்களது ஆசாரத்தை விளங்கிக் கொள்வதே. அதனைக் கைலாசபதி அவர்கள்,




**மேற்படி நான்கு வைதிகர்களிலும் மதிப்புடையோன் 5ம் சாதி. அவனும் வைதிகனே.**[33]

என்றார். இது தொல்காப்பியர் கண்ட நாற்பாலுக்கும் பொருந்தும்.

### *4.6.1.5 நாற்பாலாரின் பண்பு*

தொல்காப்பியர் கண்ட நாற்பாலின் இலட்சிய நிலையை ஞானச்சாதி என்ற தலைப்பில் விளக்குகிறார் கைலாசபதி அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அந்தணர் - அரசர் - வணிகர் - வேளாளர்.சீவியம் (குணம்) எல்லாரும் வாழ வேண்டும் என்பான் அந்தணன். (மற்றவர் வாழ்வுக்கு மறுப்பில்லை) இறைமைக்கு மாறாக நடவான் அரசன். நீதியில் நிற்போன் வணிகன். விருந்தயர்வான் வேளாளன். ஸ்கீம் இல்லை .[34]

நாற்பாலாரின் பண்புகள் பற்றிக் கைலாசபதி அவர்கள் கூறும்போது அந்தணன் என்போன் எல்லோரும் வாழவேண்டும் என்கின்ற உள்ளங்கொண்டவனாக, தன்னுடைய வாழ் நாள் முழுவதும் மற்றையவர்களின் வாழ்க்கைக்குத் துணையாக, அறுபகையுள் கொடியதாகிய பொறாமை சற்றும் இல்லாதவனாக விளங்கவேண்டும் என்கிறார். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்"[35] என்ற குறள் அடிகளும் இவ்விடத்தில் சுட்டத்தகும். "இறைமை" என்று மேலே கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டது திருக்குறள் இறை மாட்சி அதிகாரம் 39 தரும் கருத்துக்களை உள்ளடக்கும். அரசனுக்குரிய அம்சங்கள் அனைத்தும் தத்தம் இடத்தில் பொருந்த அவன் இறைமைக்கு மாறில்லாமல் ஆட்சியை நடாத்துவான். "நீதியில் நிற்போன் வணிகன்" என்ற அவரின் சிந்தனை பட்டினப்பாலையின் செய்யுளுக்கு ஒத்ததாக அமைகிறது.

> கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது
> பல்பண்டம் பகர்ந்து வீசும்.[36]

என்கிறது பட்டினப்பாலை. கைலாசபதி வேளாளன் பற்றிக் குறிப்பிடும் போது **'விருந்தயர்வான் வேளாளன்'** என்கிறார். அதாவது விருந்திருக்கத் தான் உண்ணாதவன் வேளாளன். தமது சிந்தனையின் பிற்பகுதியில் இதனை இன்னும் சற்று ஆழமாக விளக்கியுள்ளார். அதாவது விருந்து என்பது "புதுமை" என்ற பொருளைத்தரும். வருபவன் பலமுறை வந்தாலும், அன்றுதான் புதிதாக வந்தவன் என நினைத்து, அவனை உபசரித்தல் வேண்டும் என்கிறார். தைத்திரிய உபநிடதத்திலும் இது சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது: "மாத்குதே$_3$வோ ப$^4$வ,$_{38}$ பித்ருதே$_3$வோ ப$^4$வ, ஆச்சார்ய தே$_3$வே ப$^4$வ, அதிதி$_2$ தே$_3$வோ ப$_4$வ"[37] இது ஓரளவுக்கு உரையாசிரியர்கள் காட்டும் பொருள். அதற்கு மேலே வேளாளன் என்போன் வேளை ஆண்மை செய்பவன் என்கிறார். அவன் மன்மதனை அடக்கக்கூடியவன்; அதாவது தன் காமத்தைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடியவன் எனவும் பின்னாளில் கூறியுள்ளார்.

> மனுஷன் நீதியை நடத்தினால், நீதி மனுஷனை நடத்தும், முன்னையதற்குச் சாதி வேண்டும் பின்னையதற்குச் சாதி யில்லை. அது வைதிகம். இது சைவம். வைதிகத்தை மதிப்போர் சங்கரசாதி.[38]

எனவும் சிந்தனைகளில் குறிப்பு வருகிறது. "மனுஷன் நீதியை நடத்தினால் நீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுஷனை நடத்தும்" என்ற வாக்கியம் கைலாசபதி அவர்க ளின் சிந்தனைகளில் மூழ்கிய சிறு சாதகர் குழுவினரால் வெகுவாகப் பாராட்டப்பட்ட ஒன்று என மூதறிஞர் ஒருவர் மூலம் அறிகிறேன். ஔவையாரின்,

"சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையில் - மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்

பட்டாங்கி லுள்ள படி"[39]

என்ற செய்யுள் கூறும் கருத்தைப் பிரதிபலிக்கின்றது கைலாசபதி அவர்களின் சிந்தனை.

### *4.6.1.6 திணை ஏழும், துறை ஏழும்*

புத்திவிருத்தியின் 12ம் தளமாகிய காமம் ஏழு துறைகளை உள்ளடக்கியுள்ளது. வெளித்துறையில் கைக்கிளை ஆரம்பித்து ஐந்திணை மத்தியில் நிற்க, பெருந்திணை உள்துறையில் முடியும்.[40] இப்பெருந்திணையின் புறம் காஞ்சி. அது உலக நிலையாமையை உணர்த்துவது.[41] பெருந்திணை "பொருந்தாக் காமம்"[42].அதனை ஆன்மீக ரீதியில் சிந்தித்தால் அழியும் பொருள்களின் நிலையாமையை உணர்ந்து, பொருள் அல்லாதவற்றைப் பொருள் என்று உணரும் மருள் நீங்கப்பெற்ற நிலையில் தன்னுயர்ந்த தலைவனாகிய ஆன்மநாயகரின் அழைப்பை ஏற்கும் பக்குவம் அடைந்த நிலை. ஆனால் கர்மவசத்தால் "நீறு பூத்த நெருப்புப் போல" அவ்வான்மா தன்னை விளங்கிக் கொள்ள இயலாத நிலையில் சிறிது காலம் இருக்கலாம். எனினும் ஆன்ம நாயகருக்கு, ஆன்மா தற்காலிகமாக ஆன்மீக உறக்கநிலையில் இருப்பது தெரியும். திருவருட் சக்தி பதிதற்கு எது உரிய கணம் என்பதை ஆன்மநாயகரே அறிவர். அச்செயலைத் தொல்காப்பியக் களவியலுரை மூத்தாள் மாட்டும், துயின்றாள் மாட்டும், களித்தாள் மாட்டும் சேர்வது எனக் கூறுகிறது. இது பைசாசம் அதாவது பேய்நிலை.[43] பேய் பிடித்த ஆள், பிடித்த பேய் வசப்பட்டு நடக்கிற நிலை. "மூத்தாள்" உலகியல் அறிவு மிகுந்தும் - அபரஞானம் தலைப்பட்டும் - பரஞானம் அல்லது அருள்ஞானத்தை எதிரொளிக்கப் பக்குவம் இல்லாத நிலை. ஆயினும், அந்நிலையை அண்மியவள் என்ற முறையில் திருவருள் அவளைச் சாருகிறது. அது ஆன்மீக உறக்கநிலை. இத்தகைய ஆன்மாக்கள் திருவருள் மயமாகிய தலைவனைச் சார்தல் பைசாச மணம் என உருவகிக்கப்படுகிறது. மாணிக்கவாசகர் கூட "பக்குவமற்ற நிலையில் என்னை ஏன் ஆட்கொண்டாய்; பிறகு ஏன் மற்ற அடியார்களுடன் இணைந்து பரலோகம் புகலிடாமல் உலகத் துன்பங்களின் மத்தியில் பரிதபிக்க விட்டாய்; ஐம்புலன்கள் தாக்க நான் நாங்கூழ்துடிப்பது போலத் தவிக்கிறேனே" என அழுவது பக்குவம் மறைந்திருக்கும் நிலையில் ஆட்கொள்ளப்பட்டதை அதாவது பைசாச மணத் தைக் குறிப்பதாகலாம்.[44] இங்கும் அநந்நியத்துவம் - விறகில் தீ போல -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றாதிருந்தமையாலேயே அதுவும் அங்கீகரிக்கப்பட்ட மணமாகி நிலைத்தி ருக்கக் கூடியதாயிற்று. இதுபோலவே ஆசுரம், இராக்கதம் போன்றவையும் விளக்கப்படலாம். அவற்றின் பெயர் நவீன மொழி வழக்கில் பயம், வெறுப்பு முதலிய இயல்பூக்கங்களைத் தூண்டும் பொருளைத் (Emotive meaning) தருவதால் அவை இப்பொழுது எமக்கு இகழத்தக்கனவாகத் தோன்றுகின்றன. ஆனால், அச்சொற்களின் மூலப்பொருளை உணர்தல் மிக முக்கியமானதாகும். தொல்காப்பியம், இறையனார் களவியல் (நக்கீரர் உரை) கூறும் கருத்துக்களை வைத்துக்கொண்டு கைலாசபதி அவர்கள் சிந்தித்துள்ளார். பெருந்திணையில் உலக நிலையாமையை உணர்ந்த ஆன்மா உடன்போக்கிற்கு ஆயத்தமாகிறது. "அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள். அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை"[45] என்றபடி தன்னை மறந்து தன்னாமம் கெட்டுத் திருவருள் சென்ற வழியே உடன் நடக்கிறாள். இதனைச் சமய நூல்கள் சரியையின் ஆரம்பம் என்கின்றன. கைலாசபதி அவர்கள் சமய நூல்களில் வரும் சரியையையும், அகத்துறை நூல்களில் வரும் உடன்போக்கையும் பொருத்திக்காட்டுவது அவரது ஒன்றிணைந்த நோக்கின் பூரணத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. மனோவிருத்தி யாகிய கண்ணின் இருபத்தைந்து கலைப் படிகளில் புத்திவிருத்தித் தளங்களில் மேல்நோக்கி உயரும் வகையாகிய பிரதிட்டைச் சாந்தியதீதை என்பதன் ஆரம்பம் சரியை. அது கிரியை, யோகம், ஞானம் என மேல்நோக்கி எழுந்து முற்றும். எனவே, நாற்பாத சைவம் ஆரம்பிக்கும் இடமும் காமத்திணையே. *(பார்க்க: வரைபடம் பக். 100)*

திணை நிலத்தைக் குறிக்கும் என்றதும் இன்று சாதாரண கல்வியாளர் மத்தியில் பரவலாகக் காணப்படும் எண்ணம். திணை என்பது ஒழுக்கம். குறிஞ் சித்திணை என்றதும் மலையும் மலைசார்ந்த இடமுமாகிய புவியியல் சூழலையே நினைக்கிறோம். அது பின்னே நிற்க முன்னே தெரிய வேண்டியது அதற்குரிய புணர்தலும் புணர்தல் நிமித்தமுமே. அதனைக் கைலாசபதி அவர்கள்,

> (திணைகள்) 'சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' தலைவன் தலைவியர்களின் மனநிலை முற்றொடர்பு இவற்றுக் கேற்பத் திணை தொடங்கும். எல்லாத் தலைவன் தலைவியர்களுக்கும் ஒழுக்கம் குறிஞ்சியில் இருந்துதான் தொடங்க வேண்டுமென்ற நியதி இல்லைப் போலும்.[46]

என்கிறார். புணர்தல் என்ற சொல் இன்று அதற்குரிய முதன்மைப் பொருள் (Primary meaning) குன்றி, இரண்டாம் பட்சமான (Secondary meaning) உணர்ச்சிப் பொருளிலேயே (Emotive meaning) வழக்கிலுள்ளது. புணர்தல் என்பதற்கு அகராதி தரும் முதனிலைப் பொருள் இசைதல், இணைதல், இணங்கல், சார்தல், விளங்கல் என்பன. வள்ளுவர் கூட "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்"[47] என்கிறார். புறநானூறும் "இன்றே போல்க நும் புணர்ச்சி"[48] என்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *4.6.1.7 புணர்ச்சி ஐந்திணைக்கும் பொது*

புணர்ச்சி (உள்ளப்புணர்ச்சி) ஆதார சுருதியாகையால் அது ஐந்திணை ஒழுக்கத்துடனும் மறைந்திருக்கும். குறிஞ்சி நிலத்தில் மட்டும்தான் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய ஒழுகலாறு தோன்ற முடியும் என்ற கருத்துத் தவறானது. மலையும் மலை சார்ந்த இடமும், அதன் கண்ணுள்ள நிலம், பொழுது, கருப்பொருள் முதலியன அதன் உரிப்பொருளான புணர்ச்சிக்கு வாய்ப் பான சூழலை உருவாக்குகின்றன என்பது மெய்யே. எனினும், அந்நிலத்தில் புணர்தல் என்ற திணை ஒழுக்கம் மட்டுமே நிகழவேண்டும் என்பதில்லை. இதனை வலியுறுத்தவே கைலாசபதி அவர்கள்,

> ஐந்திணையும் புணர்ச்சிக்குரியனவே. தொடர்பு வேறுபட்டவை.[49]

என்றார். ஆயினும், நிகழ்ச்சியின் தொடர்ச்சிகள் நிலத்துக்கேற்ப மாறுபட்டி ருக்கலாம். அவர்,தொடர்ந்து

> இதனாலேதான் குறுந்தொகை, கலித்தொகை முதலிய கோப்பில் வேறுபட்டன.[50]

என்கிறார்.

அகத்துறைப்பாடல்கள் எவ்வடிப்படையில் தொகுக்கப்பட்டன என்பது பற்றிப் பல்வேறு கல்விசார் ஆய்வாளரும் பல்வேறு விளக்கங்களை முன் வைத்தனர். அடி எல்லை பற்றி வந்த பாகுபாடே என்பர் சிலர்.[51] அதாவது குறுந் தொகை 4அடி முதல் 8அடி வரை; ஐங்குறு நூறு 3அடி முதல் 5அடி வரை; குறும்பாடலில் முதலும், கருவும் விரிவாக இடம்பெறுவதில்லை. உரிப்பொருள் சிறந்து காணப்படும் என்றனர். இவற்றை ஆய்ந்த சங்கஇலக்கிய வல்லுனர்கள் கைலாசபதி அவர்களின் கருத்தை, அதாவது "தொடர்பு வேறுபட்டவை: இதனால் கோப்பில் வேறுபட்டன" என்பதனை, ஊன்றிச் சிந்தித்து விரித்துரைத்தால், சங்க இலக்கியத் திறனாய்வின் மற்றொரு பரிமாணத்தைக் கற்போர் காணமுடியும் என்பது எனது நம்பிக்கை.

தலைவன் தலைவியர் எல்லோரும் குறிஞ்சித்திணை ஒழுக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதில்லை. இதனை அரண் செய்யும் வழியில், தொன்மரபு பிறழாத முறையில், மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரைச் சான்று காட்டுகிறார் கைலாசபதி அவர்கள்.

> திருக்கோவை குறிஞ்சியில் தொடங்கிய தலைவன் தலைவியின் ஒழுகலாற்றை, முற்றமுடியக் கண்டதாகலாம். ஒவ்வோர் பகுதியைச் சங்கப்பாடல்கள் கண்டன. அதனால் அந்தப் புலவர் களுக்கு முதலிறுதிகள் எப்படியாகலாம் என்று தெரியும்.[52]

என்கிறார் கைலாசபதி அவர்கள். சங்கப்புலவர்கள் சங்கத்தொகை நூல்களில் தலைவன் தலைவியின் ஒழுகலாற்றின் ஒருபகுதியைப் படம்பிடித்துக் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறார்கள். அதனால் அத்தலைவன் தலைவியர் செல்லும் நெறியின் தொடக்கமும் முடிவும் எப்படியிருக்கும், அவர்களின் காதல் எதிலே தொடங்கி எதிலே முடியும் என்பதைக் கண்டார்கள். தாமும் இருளில் இருந்துகொண்டு, தாம் படைக்கும் இலக்கியப் பாத்திரங்களையும் இருளில் வழி தெரியாது அலையவிடும் படைப்பாளிகள் அல்லர் அவர்கள்.[53]

### *4.6.1.8 திணை - ஒழுக்கவைப்பு முறையின் ஆழம்*

கைலாசபதி அவர்கள் ஆழமான காட்சி அனுபவங்களைப் பெற்றபின் புத்திவிருத்தியின் காமதளத்திலுள்ள ஏழு துறைகளில் வைத்து ஏழு திணைகளையும் வரிசைப்படுத்தினார். அதன் விபரத்தைப் புத்தி விருத்திப்படத்தில் அவதானிக்கலாம். மேலும் அவர்

மந்திரகலை (இயல்); தந்திரக்கலை (இசை) உபதேசகலை (நாடகம்) (பிரகாசிப்பது)

கற்புச்சாதகம்

i. கொல்லாமை (அறிவைக்கொல்லாமை; உபதேசத்தைப் பேணுவது)

ii. விரும்பத்தகாததை விரும்பாமை (தகாததில் இசையாமை)

iii. நம்பத்தகாததை நம்பாமை (இயல் போன்றது பொருள் நிச்சயம்)

காமசாதகம்

தமிழ் 3

கலை (மந்திர, தந்திர, உபதேச) 3

கற்பு (கொல்லாமை, விரும்பாமை, நம்பாமை, 3 [54]

என்கிறார். சிவஞானசித்தியார் அளவை கூறும் பகுதியில் மேற்கூறப்பட்ட மூன்றுகலை விடயம் பேசப்படுகிறது. (செய்.3,19) கைலாசபதி அவர்கள் ஆகமரீதி, தமிழ்ரீதி என்ற வகையில் இவற்றை நோக்குகிறார். (கலை - கலிப்பு; எழுச்சி - நினைப்பு) கலை அல்லது கலிப்பு எண்ணத்தின் வெளிப்படு நிலை. மந்திரகலை இயற்றமிழ் போன்றது. தந்திரகலை இசைத்தமிழ் போன்றது. உபதேசகலை நாடகத்தமிழ் போன்றது. இக்கலையைக் காமசாதகத்தில் வரிசைப்படுத்துகிறார் கைலாசபதி அவர்கள். புத்திவிருத்தியில் காமநோக்குக் கைவரப்பெற்றவன் அகங்கார விருத்தியில் அருள்நோக்குக் கைவந்தால் அவன் முத்தமிழைச் சாதிக்கலாம். அர்த்தம் அல்லது காமதளங்களில் நிற்பவர் (நக்கீரர் முதலிய சங்கப்புலவர்) முத்தமிழைச் சாதிக்கும் போது ஆழமாகச் சாதித்து உண்மையை உணர முடியும். இக்காம சாதகத்தினருக்கு மந்திர, தந்திர, உபதேச கலைகள் மூன்றும் உயிரினோடு இயைந்து உணர்வாகத் தெரிவதை சிவஞானமுனிவர் ஒரோவழி விளக்குகிறார். ஆனால், புத்திவிருத்தியின் கீழ்த்தளங்களில் நிற்போர் காம தளத்தில் நிற்போரின் வாய்மொழியை, அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளை விளக்க முற்படும் போது அன்னார்க்கு காமத்தமிழாகிய அகமும் புறமும் வெறுங்காதலும் வீரமுமாகவே தெரியும். கற்புச்சாதகம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆன்மீக சாதனை என்ற முறையில் பொருத்தமானதே. அதற்குக் கொல்லாமை, விரும்பத்தகாததை விரும்பாமை, நம்பத்தகாததை நம்பாமை ஆகிய மூன்று பண்புகள் உள என்பது கைலாசபதி அவர்கள் கண்ட ஸ்மிருதி. கொல்லாமை என்பது ஊரும் எறும்புக்குக் கூடத்தீமை செய்யாமை என்ற சமண, பௌத்த "அஹிம்ஸா பரமோ தர்மம்" என்றே நாம் அறிந்தது. ஆனால், கைலாசபதி அவர்களோ கொல்லாமை என்ற சொல்லை அறிவைக் கொல்லாமை, தான் பெற்ற உபதேசத்தைப் பேணுவது என்ற விரிந்த பொருளிலேயே உபயோகிக்கிறார். கற்புச்சாதகத்தில் இரண்டாவது அம்சம் விரும்பத்தகாததை விரும்பாமை. தக்கது இது, தகாதது இது என அறிந்தும் அதன் படி நடவாதவன் அதாவது தகாததற்கு சொல், செயல், சிந்தனை மூன்றிலும் இடங் கொடுப்பவன் மனிதருட் கயவன். இசைத்தமிழ் இறைவனுடன் ஆன்மாவை இசைவிப்பது. இசைவு, ஒத்துச் செல்லுதல், ஒத்திசைதல் என்பன தமிழ்ப்பண்பின் தன்மை. அதனை உள்ளத்தில் வளர்ப்பவன் கற்புடைமையின் ஓர் அம்சத்தை வெளிப்படுத்துகிறான். கற்பின் மூன்றாம் அம்சம் நம்பத்தகாததை நம்பாதிருத்தல். இது இயற்றமிழ் போன்றது. பெண்ணுக்கு இது இயல்பாய் அமைந்தது என நவீன உளவியலாளர் கூறுவர். தன்னை நோக்கும் ஒருவனது பார்வையில் பொதிந்துள்ள தீய எண்ண அலைகளை ஒரு பெண் உள்ளுணர்வினால் அறிகிறாள். அதனால் நம்பத்தகாததை நம்பமாட்டாள். இந்த நல்ல அம்சத்தைக் கற்புச்சாதகனான ஆடவனும் கைக்கொள்ளவேண்டும். ஆன்ம சாதனைக்குப் பெண்மை பிறக்கவேண்டும். அதாவது அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற பெண் குணங்கள் விருத்திப்பட வேண்டுமென்ற உன்னத கருத்தை முன்வைக்கிறார் கைலாசபதி அவர்கள். இவ்வாறு நம்பத்தகாததை நம்பாத ஒருவன் பொருளை நிச்சயிக்கும் ஆற்றலைப் பெறுவான். அவன் மெய்ப்பொருளுக்கும், பொய்ப் பொருளுக்கும் பேதமறிவான். பொருள் நிச்சயம் பிறந்தால் பொருளல்லாதவற்றைப் பொருளென மதிக்கும் மருள் நீங்கப்பெற்று, நம்பத்தக்க அம்மெய்ப் பொருளை நம்பிக் கற்புடையவனாகிறான். "**பேதமில்லதோர் கற்பு அளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே**"[55] என்ற அடிகள் காமத்தமிழை நானூறு துறைக்கூடாகக் கண்ட மணிவாசகர் கூற்று.

### *4.7 சொல் - பொருள் தொடர்பு*

அந்தக்கரணங்களுள் அகங்கார விருத்தியில் ஐந்தாம் நிலையாகிய சத்தியம் கைவந்த பெரியோரே வேதமென்றால் என்ன? "வித்" ஆகிய அறிவின் மூலம் யாது? என்று அறியவல்லவர். அவர்களே பாஷைகளின் இயல்பை அறியக்கூடியவர்கள். அதாவது பொருள் எப்படிச் சொல்லாகிறது என்பதை அறிவார்கள். உதாரணமாக, காடு என்ற சொல் உளது. அதைக் குறிக்கும் பொருள் உளது. இச்சொற் - பொருட் சம்பந்தம் பேசுவோனின் மனதில் மட்டும் உளதன்று; அது இயற்கையிலேயே அமைந்திருந்து வருகிறது. இதனை உணர்ந்தவனே வியாகரணம் உணரவல்லவன். அப்படி சொல்லை, மரபுநிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியாது யாப்பறி புலவர் உபயோகித்து வந்த முறையை, உணர்ந்து உபயோகிப்பதே அறிவு தேடும் மாந்தரின் கடன். சொன்னவர் கருதியது என்ன? அவர் உள்ளத்தில் அச்சொல்லுடன் தொடர்புடைய பொருளை அறிந்துள்ள முறையென்ன என்று நிச்சயித்தவனே மரபுநிலை திரியாது தானும் அச்சொல் மூலம் பொருளை அறியும் ஆற்றல் பெறுவான் என்கிறார் கைலாசபதி அவர்கள். பொருள் அறிய வேதாங்கம் தேவை. வேதாங்கங்களுள் உயர்ந்தது வியாகரணம். வியாகரணங்களுள் தமிழ் வியாகரணமும் வேதவியாகரணமும் ஞானதளத்தில் நிற்பவர்களுக்கு அல்லது ஞான நோக்குள்ளவர்க்கே விளங்கும் என்றார். அகத்தியருக்கு ஓத்துரைக்கும் அருள்ஞான மதலையாகிய குன்றமெறிந்த குமரவேளும் தலைச்சங்கத்திலிருந்து தமிழ் ஆராய்ந்தனர் என்பது கருத்துள்ள கதை. அது கற்பனையன்று தொல்காப்பியர் இடைச்சங்கத்திற்கு உரியவர் என்று கூறுவது காமம், ஞானம் ஆகிய தளங்களுக்குரிய துறைகளில் சட - சித் பாகங்கள் தொழிற்படும் பெருமைவாய்ந்தவர் என்பதனாலேயே. இடைச்சங்க, கடைச் சங்கங்கள் தேய்ந்து மறைந்தபின் 4ம் தமிழ்ச்சங்கம் முதலிய சமண பௌத்த நிழல்களும் அற்று விட்ட பின், தோன்றிய உரையாசிரியர்களுக்கு எழுத்து, சொல், பொருள் பற்றித் தொல்காப்பியர் என்ன கருதினார் என்ற கருத்துத் தெளிவில்லாமலே அவர்கள் உரைவகுக்க முற்பட்டனர். வேதாங்க அறிவு அவர்களுக்கு மூலக்காட்சியாகக் கிடைக்காமையால், சொல்லொடு பொருளாக ஏதோ எழுதி அறியாமை இருளில் மூழ்கிய மக்களுக்குத் தமிழில் ஏதோ கிடக்கிறது என்ற எண்ணத்தை உண்டாக்கினர். நூல் அழியவிடாது காத்தனர் என்ற மதிப்பு ஒன்றை மட்டுமே நாம் அவர்களுக்கு வழங்கலாம். உரையாசிரியர் களால் மொழிவளர்ந்தது. சிந்தனை வளர்ந்தது என வியாக்கியான இயல்[56] (Hermaneutics) வல்ல நவீன ஆய்வாளர் கருத்து கைலாசபதி அவர்களுக்கு இல்லை. தனித்தனி தொல்காப்பிய உரையாசிரியர்கள் பற்றி அவர் விசேடமாகக் குறிப்பிடுவது ஈண்டும் கவனிக்கத்தக்கது.

### *4.8 கைலாசபதியும் உரையாசிரியரும்*

தொல்காப்பியம் பற்றிய சிந்தனைகளுடன் தொடர்புடையது என்ற வகையில் உரையாசியர்களுக்குரிய இடத்தையும் இங்கு நோக்குவது அவசியமென எண்ணுகிறோம். கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் இது தொடர்பான அதிமுக்கிய கருத்துக்கள் ஆங்காங்கே பரவிக் காணப்படுகின்றன.

உரையாசிரியர்கள் வரிசையில் நக்கீரருக்குக் கொடுத்த இடத்தைப் போல் வேறு யாருக்கும் கைலாசபதி அவர்கள் கொடுக்கவில்லை. அதனை அவர்,

நூலுக்குரை என்றால் நக்கீரர் உரைதான்.[57]

என்கிறார். இத்தொடர் பிரமசூத்திரத்திற்குக் கூட நூலின் உட்பொருளை விளக்கும் வகையில் உரையொன்றும் இதுவரை வெளிவரவில்லை என்பது கைலாசபதி அவர்களின் கருத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமசூத்திர உரை முதலியன நூலோடு தொடர்பற்றவை. நடையும் நூலும் கிளப்பம் செய்தது பரிமேலழகருக்குச் சங்கரரின் பிரமசூத்திர உரை போல.[58]

எனக் காட்டப்பட்டுள்ளது. பிற்காலத்தில் அதாவது 13ம், 14ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த உரையாசிரியர்களுள் சேனாவரையருக்கு மட்டுமே சற்று மதிப்பைக் கொடுக்கிறார் கைலாசபதி அவர்கள். அது சிந்தனைகளில்,

தமிழுக்கும் சிறப்பிலக்கணம் உண்டு என்ற கருத்து சேனாவரையருக்கு உண்டு. சிவஞானமுனிவர் போல் இல்லை.

தமிழுக்கும் உண்டு பிரிக்கக் கூடாதென்றது (கணேசையா) நன்று.[59]

எனக்குறிக்கப்பட்டுள்ளது. இது கைலாசபதி அவர்களின் நடுவு நிலைமையை எடுத்துக்காட்டுகிறது. மேலும் அவர்,

சேனாவரையருக்கு திட்ப நுட்ப நடைவரும். சிவஞானமுனிவருக்கு தெளிவு கூட[60]

என்கிறார். அதாவது சேனாவரையரை ஓரளவு உயர்த்திக் கூறினாலும் சிவஞான முனிவர் எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாகச் சொல்லுமாற்றல் உள்ளவர் என்பதை ஒத்துக்கொள்கிறார்.

நூலுக்குள் ஏதோ இருக்கலாம் என்று எண்ணியவர்கள் சிவாக்கிர யோகிகள் முதலியோர்.[61]

எனச் சிவாக்கிரயோகிகளையும் குறிப்பிடுகிறார். சைவசித்தாந்த உரையாசிரியர்களுள் இவர் எழுதிய வடமொழி சிவஞானபோத உரை இன்று ஆங்கிலத்தின் மூலம் உலகெங்கும் பரவியுள்ளது. சித்தியார் அறுவர் உரையிலும் அவரது உரை பிரபலம் அடைந்துள்ளது.[62] பரிமேலழகருக்குக் கைலாசபதி அவர்கள் மதிப்புக் கொடுப்பதற்குக் காரணம் அவரின் உரைநடையும் அவர் உரை எழுத எடுத்துக்கொண்ட நூலின் உயர்வுமே. இது திருவள்ளுவரைப் பரிமேலழகர் ஊடாகப் பார்க்கும் பக்தர்களுக்குக் கோபத்தை ஊட்டுவதாகவும் அமையலாம். ஆனால், இக்காலத்தில் நடைக்கு (Style) மட்டுமே மதிப்புக் கொடுக்கிறோம். தமிழ் இலக்கணத்தில் - குறிப்பாக தொல்காப்பியத்தில் - இலக்கண நுட்பங்களைப்பற்றியும் கைலாசபதி அவர்கள் ஓரிருவாக்கியங்களில் குறிப்பிட்டுள்ளார். ஆனால்; அவை இலக்கண வித்தகர்களால் ஆராயப்பட வேண்டுமே அன்றி எம்போன்றவர்களால் விரித்துக் கூற முடியாதவை.

பகுதி விகுதி சேர்த்துப் பொருள் காண்பதன்று.[63]

என்ற சிந்தனை மூலம் கைலாசபதி அவர்கள் வெறும் சொல்லிலக்கண காரரின் ஆராய்ச்சிகளை மதிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளலாம். மேலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கணம் தொல்காப்பியம் இன்ன இடத்து பொருள் சிறக்கும் என எடுத்துக்கூறுவது. (தமிழ் பொருள் சொல்வது)[64]

என்று குறிப்பிட்டது தொல்காப்பியத்தின் அனைத்து அம்சத்தையும் உள்ள டக்கிய சிந்தனையாக உள்ளது. நிருக்தம் என்ற வேதஇலக்கணம், தொல்காப்பியம் என்பவற்றை அகக்காட்சிப் பொருளாகக் கைலாசபதி அவர்கள் கருதுவது மீண்டும் நினைவுகூரத்தக்கது.

## *4.9 கம்பராமாயணமும் கைலாசபதியும்*

இறுதியாக, காலங்காலமாக மரபுவழிவந்தவையும் மரபினின்றும் அதிகம் பிறழாதவையுமான கம்பராமாயணம் முதலியன பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம். தமிழுக்குக் கதி கம்பனும், வள்ளுவனும் என்று மேடையில் பேசுபவர் இவ்விருவரையும் சமமாக மதிப்பது இன்றைய வழக்கு. (கதி என்ற சொல்லில் "க" என்பது கம்பனையும் "தி" என்பது திருவள்ளுவரையும் குறிக்கும்) ஆனால், கைலாசபதி அவர்களின் கருத்து இதுவன்று. அதாவது அவர் திருவள்ளுவர் வேதம் தமிழ் செய்தவர் என்றார். கம்பரோ கதிக்கு வழிகண்ட ஆழ்வார்களின் அடிச்சுவட்டில் இராமனைப் பார்த்தவர்; அந்த வகையில் கம்பனின் காவியம் அதிகம் பிழையற்றது என்பார். வான்மீகி, கம்பர், வசிட்டர் ஆகிய மூவரும் இராமனைப்பார்த்த விதம்பற்றி அவர் விசேடமாகச் சுட்டிக்காட்டுகிறார். அதாவது,

கம்பர் அர்த்தத்தை - இராமனைக் கண்டு சொன்னவர் அல்லர்; மரபையிட்டுச் சொன்னார். அவருக்குத் தருமசங்கடமும் வரலாம்.[65]

என்கிறார். பொதுவாகக் கம்பராமாயணம் கொள்ளத்தக்க நூல் ஆயினும் அகலிகை சாபம், வாலிவதம் போன்ற இடங்களில் கம்பன் சரியான முடிவைப் பாடியிருந்தாலும் இடையில் பிழையான சுவையை உண்டாக்கிவிட்டான் என்பது கைலாசபதி அவர்களின் கருத்து. சிலப்பதிகாரம், மணிமேகலை பற்றி இன்று இரட்டைக் காப்பியங்கள் என வானளாவப் புகழ்கிறார்கள். ஆனால், கைலாசபதி அவர்களோ சங்கம் அழிந்த பின் பிறழ்ந்த மூவேந்தர் காலத்தில், தனக்கும் தமிழ் தெரியும் என நடித்து இளங்கோ இயற்றிய போலிக்காப்பியமே சிலப்பதிகாரம் என்பார். அதற்கு அழகு கொடுப்பது வேட்டுவவரி, கானல்வரி போன்ற பொரு ளாழம் மிக்க மரபுவழிவந்த பாட்டுக்களே என்பது அவர் கருத்து. ஆனால், மணி மேகலையில் குறிப்பிடக்கூடியளவுக்கு ஒன்றுமேயில்லை என்பார். அது வெறும் பௌத்த பிரசார நூல்மட்டுமே. ஆயினும், கைலாசபதி அவர்கள் தர்க்கசாத்திரம் கற்றவர் என்ற முறையில் மணிமேகலையில் கூறப்படும் தர்க்கம் இந்து, பௌத்த தர்க்க சாத்திரத்துக்குப் பிறிதான ஒரு சிறப்பான அம்சம் உடையது எனக் கருதினார் (1933).

இவ்வாறு தமிழை அடியில் இருந்து நுனிவரைப் பார்த்து அவ்வவற்றுக்கு உரிய இடத்தை வகுத்த பெருமை கைலாசபதி அவர்களையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்

1. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள், ப. 1, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1994.
2. கைலாசபதி அவர்கள் 1958ல் கொழும்பு காலிமுகத்திடலில் நிகழ்ந்த அரசியல் சார்ந்த அனர்த்தங்களின் தொடர்பில் பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளைக்குக் கூறினாராம்.
3. திருமூலர், திருமந்திரம், செய். 81, காசிமடம், ஸ்ரீவைகுண்டம், 1968.
4. மேற்படி, செய். 99.
5. மேற்படி, செய். 65.
6. மேற்படி, செய். 66.
7. மூவர் தேவாரம், அப்பர் திருத்தாண்டகம், ப. 1056, காசிமடப்பதிப்பு, 1968.
8. மேற்படி, திருச்சிவபுரம், பதிகம், பாடல் 1.
9. மேற்படி, சம்பந்தர் திருவாலவாய்ப் பதிகம், ப. 1073.
10. மாணிக்கவாசகர், திருக்கோவையார், செய். 20, ப. 30, நாவலர் 5ம் பதிப்பு, சென்னை, 1932.
11. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 53, மு.கு.

12.13.14. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 161. 162 மு.கு

(முக்கியத்துவம் கருதி பக்கங்கள் 161,162ஐ முழுமையாகத் தருகின்றோம்)

நாகரிகப் படியில் (தளத்தில்) அஃதாவது உலகத்தோடு ஒட்டும் பிடியில், அருட்குணம் இருந்த படியைக் கண்டது முத்தமிழ் - காமந் தெரியலாம்.

தர்மப் பிடியில், அருட்குணம் இருந்த படியைச் சொன்னது ஞானத் தமிழ். திருமுருகாற்றுப்படை. (ஓங்காரத்திலிருந்து உலக நோக்கமாகக் கூறியது முத்தமிழ் ; (விரிசடைக் கடவுள், அகத்தியர், சம்பந்தர்)

ஊர்த்துவமாயும் அதோமுகமாயும் வந்தது (முத்தமிழ் ; )

கீழ்ப் பூமியிலிருந்து, அருளைப் பார்த்தபோது தர்மத்தில் முடிந்த தமிழ் வாகடத் தமிழ் ; சோதிடத் தமிழ். இதற்கு இயல் அங்கம்.

அருட்குணத்தைப் பார்த்ததுதான் தமிழ். அருளைப் பெறத் தமிழ்தான் சாதகம்.

ஆரியத்து வேத சாதகம் போல; வேத சாதகத்தால் யக்ஞ பலம் பெறுகிறார்கள்.

புராணத் தமிழ் (இயல் இசை இரண்டையும் அங்கமாகக் கொண்டது) சூதரிடங் கேட்டதும், நாங்களும் இப்படியிருந்தோமே, இருக்கிறோமே என்று பரிதபித்து, உலகத்தோடிசையுங் குணம் உண்டாம். இசைந்து நடந்த வழி நாடகம். சம்ஸ்கார தளத்தில் சீவிக்கிற சாதியார், அதில் நின்று அருட்குணத்தைப் பார்த்த வழியே மோக்ஷம் எட்டும். அது கோயில் நாகரிகம். தேவாரம். (முழவதிர..மந்தி முகில் பார்க்கும். (சம்பந்தர், திருவையாறு) பண்தமிழ். நாடகத்தோடு பண்ணும் சேரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தத் தமிழ் (திருமந்திரம்) தரும அங்கத்தில் அருட்குணத்தைப் பார்த்தது.

15. திருவள்ளுவர், திருக்குறள், அதி. 3, குறள். 5.

16. திருமூலர், திருமந்திரம், 9ம் தந்திரம், செய். 2866 - 2935, ஸ்ரீவைகுண்டம், 1968.

17. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 161 மு.கு.

18. திருமூலர், திருமந்திரம், செய். 59. மு.கு.

19. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 27 மு.கு.

20. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, செந்தமிழ்க்களஞ்சியம், "களவு நுதலியது தமிழ்," ப. 1 - 18, பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, 1987.

21. ச.பரநிருபசிங்கம், "எட்டினதும் எட்டாததும், பண்டிதமணி, நினைவு மலர், பக். 45, பண்டிதமணி நூல் வெளியீட்டு சபை, 1989.

22. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 26 மு.கு.

23. மேற்படி, ப. 26.

24. மேற்படி, ப. 26. மேலும் பக். 138,139,140

25. மேற்படி, ப. 2,3 (29.01.1949)

புலமையாவது ஈடுபாடு; அது அறிவின் தூய்மைக்கு ஏற்றவாறு வேறுபடும்; தூய அறிவு தான் மதிக்காததை நோக்கும் விதம் வேறு; அங்கே புலமையின் முழுத் தோற்றத்தையும் காண்டலரிது: ஆண்டுத் தோற்றம் விசார முறையில், இரக்க முறையில் வேறுபட்டுத் தோன்றும்.

26,27. மேற்படி, ப. 27.

i. சங்கச் செய்யுட் பொருள்கள் ஒவ்வோர் நிலையில் புலவர்களால் அநுபவத்தில் கண்டவை.

ii. அன்பு கட்டுப்படுத்தாது.

iii. அரசன் ஒப்பந்தத்தை நிறைவேற்றுபவன்.

**4.6.1941** பாஷைசொல்லைப்பற்றியதன்று ; நடையைப் பற்றியது.

இயல்: இசை: நாடகம் : அருள் வாக்கு

**10.6.1941** பொருளதிகாரம்: நுதலிய பொருள் உணருமாறுணர்த்து தனுதலிற்று. நுதலிய பொருள் இருவகை : அகம், புறம்.

அகம்: இன்ப நுதலிற்று; அநந்நியப்பட்டுக் காண்டலின் அகமெனப் பட்டது.

புறம்: அநந்நியப்படாது தானேயாய் நின்று, மற்றொன்றின் பெருமை முதலியவற்றைக் காண்பது.

அகம் இருவகை : களவு, கற்பு. ஐந்திணைகள் களவிலும் வரலாம்; கற்பிலும் வரலாம். ஒரு துறைதானே நிலை வேறுபாட்டால் பல திணைப் படலாம். தமிழ்நுதலியது யாது?

**18.6.1941**

i. பொருளைக் கூறும் நூல்கள் சாத்திரங்கள்; வடமொழியில் உள்ளவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. பொருளறிவின் முதிர்ச்சியில் உண்டான அமைதிப்பாடே தமிழ்.

iii. தமிழ் பொருள் நிருபணஞ் செய்ததெனக் கொண்டு ஆராய்வது தவறு. ஒருவர் கூறிய தமிழ் நோக்கி,அவரெய்திய பொருளறிவின் முதிர்ச்சியை ஆராயலாம்.

iv. '*மண் தின்ற பாணமென்ற வாய்*' இதில் '*மண் தின்ற பாணம்*' என்ற தொடர், காளமேகத்தின் பொருளறிவின் முதிர்ச்சியை இரட்டையர்க்குக் காட்டியது.

28. ஒப்பிடுக E.S. Varatharaja Iyer, Tolkappiam Porulathikaram, Vol I Part II, Anna malai University, Annamalainagar, 1948.

29. இளம்பூரணம், தொல்காப்பியம், பொருளதிகாரம், 6, 160, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1953.

30. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 33. மு.கு.

31. இளம்பூரணம், 1953: 615 - 629. மு.கு.

32. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 34 மு.கு.

33. மேற்படி, ப. 65. K.Sivaraman(Ed.) Hindu Spirituality, Kenneth H.Post Spiritual Foundations of Caste. p.89. "Four main divisions, who from best to worst Brahmin, Ksatriya, Vaisya, and Sudra. The first three of these are called the twice - born castes and are "caste" proper. Chandalas and the untouchables are sometimes considered to be castes and to be continuous with Sudras,

34. மேற்படி, ப. 67.

35. திருவள்ளுவர், திருக்குறள், அதி. 3, குறள். 10.

36. கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை, பாடல் 210.

37. Swämi Sarvänandä, Taittiriyopanishad, Page 64, Sri Rämakrishna Math, Mylapore, Madras, 1949.

38. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994; 68. இதனைத் தொடர்ந்து "மனுஷன் நீதியை நடத்தினால், நீதி மனுஷனை நடத்தும்." முன்னையதற்குச் சாதி வேண்டும். பின்னையதற்கு சாதியில்லை. அது வைதிகம். இது சைவம். வைதிகத்தை மதிப்போர் சங்கரசாதி.
முதல் மூவர் ஏது நெறி (எனத்) தேடிக் கதிக்கு வழிகண்டோர் சூத்திரன் நெறி தேடிக் கிலோசிப்போன். ஐவரும் வைதிகர். அவைதிகரைத் தீண்டாதவர்கள். ஆகவே வைதிகத்தில் தீண்டாமையில்லை. சைவத்தில் 5ம் சாதி சைவத்துக்கு வாராத வைதிகர்கள். தீண்டுதற்குரியோர். "அவைதிகனை வைதிகன் தீண்டான்." சைவன் தீண்டாமை சொல்லாமலே அமையும்.

39. ஔவையார், நல்வழி.

40. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா 1.

"*கைக்கிளை முதலாய் பெருந்திணை இறுவாய்*

*முற்படக் கிளந்த எழுதிணை என்ப*"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா - 18.

*காஞ்சிதானே பெருந்திணைப் புறனே*
*பாங்கரும் சிறப்பிற் பன்னெ றியானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே*

42. I மொ. அ.துரையரங்கனார், நம்பியகப்பொருள் சூத். 4, பக். 238.
II பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, தக்ஷகாண்டஉரை, பக். XXVII - XXVIII, பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடு, 1967.

43. மொ. அ. துரை அரங்கசாமி, தொல்காப்பிய நெறி, ப. 236, மதுரை, 1963.

44. மாணிக்கவாசகர், திருவாசகம், 'நீத்தல் விண்ணப்பம், செய். 25.

45. அப்பர் தேவாரம், திருவாரூர்த் திருத்தாண்டகம் செய். 7.

46. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 41 மு.கு. (16.01.1942)

47. திருவள்ளுவர், திருக்குறள், குற. 785.

48. ஔவை துரைசாமிப்பிள்ளை உரை, புறநானூறு, செய். 58, அடி28, கழகப் பதிப்பு, 1947.

49,50. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம்,1994: 41,42,43 மு.கு.

(திணைகள்) ' சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே '

தலைவன் தலைவியர்களின் மனநிலை, முற்றொடர்பு இவற்றுக்கேற்ப திணை தொடங்கும்.எல்லாத் தலைவன் தலைவியர்களுக்கும் ஒழுக்கம் குறிஞ்சியிலிருந்து தான் தொடங்க வேண்டுமென்ற நியதி இல்லைப் போலும்.

ii. ஐந்திணையும் புணர்ச்சிக்குரியனவே ; தொடர்பு வேறுபட்டவை.

iii. இதனாலேதான், குறுந்தொகை, கலித்தொகை முதலிய கோப்பில் வேறுபட்டன.

iv. ஒவ்வொரு தலைவன் தலைவியின் ஐந்திணையொழுக்கமும் தொடக்க முடிபுகள் வேறுபடலாம்.

v. திருக்கோவை குறிஞ்சியில் தொடங்கிய தலைவன் தலைவியின் ஒழுக்கலாற்றை முற்ற முடியக் கண்டதாம்.

vi. ஒவ்வோர் பகுதியைச் சங்கப் பாடல்கள் கண்டன. ஆனால், அந்தப் புலவர்களுக்கு முதலிறுதிகள் எப்படியாகலாம் என்று தெரியும்.

vii. அகப்பாட்டுப் பலவாதற்குக் காரணம், பலவேறு தலைவன் தலைவியர் களின் மனநிலையை ஆராய்ந்தமையாம். எல்லாம் புலவர்களின் அநுப வத்தில் பட்டனவே.

viii. சங்கப்பலகை: அநுபவத்தில் நுண்ணிய, சாதகர்களுக்கு அப்பாற்பட்ட அநுபவங்களைத் தீர்க்கவே பலகை ஏற்பட்டதுபோலும்.

ix. பொருளதிகாரம் பொருளமைதியைப் பலமுகமாக ஆராய்ந்திருக்க லாம். i. திணைமுகமாக ஆராய்ந்த பகுதி முற்பகுதி.
ii. அடுத்த பகுதி கைகோள்முகம்போலும்.
(கணவனுடன் முற்றாக ஓம்படாத நிலை களவு) (வெளிப்படாத அறமுமாம்)
iii. மெய்ப்பாடு தோன்றுமுகம் 10. யாப்பு முகம். அணிமரபு. இவையும் முகங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x. தமிழ் எப்படிப்பட்ட பொருளைச் சொல்லுவது என்று அறிந்தாற்றான், தொல்காப்பியம் இன்னதைச் சொல்ல வந்தது என்பது தெரியும். தமிழ்? இயற்றமிழ்?
முதல் - கரு - உரி

25.6.42 தமிழிலக்கியம் நால்வகைப்படலாம்.

i. மரபு பற்றிப் பாடியவை. (சிவஞானமுனிவர் போல்வார் பாடியவை)
ii. அபிமானம் பற்றிப் பாடியவை.(கம்பராமாயணம் போன்றவை)
iii. அறங் கிடந்தவாறு கண்டு பாடியவை. (சங்கச் செய்யுள்கள்)
iv. தன்னையிழந்து பாடியவை. ( அருட்பாக்கள்)

51. i. கா.காளிமுத்து, தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும், பக்.40, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1983.

ii. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு ப. 30ல் தொடங்கும் பகுதி)

52. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 41,42 மு.கு.மேலே குறிப்பு 49,50,VI)

53. ஜேர்மன் மகாகவி கேத்தே (Goethe) 24 வயதில் சொந்த அனுபவத்தில் எழுதிய "Goetz Von Berlichingen" (1773) என்ற நாடகம் பேர்ளினில் மேடையேற்றப்பட்டுப் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. முடிவுறாக் காதலால் வருந்தி, நீண்டகாலம் எப்படிக் கதையை முடிப்பது என்று கலங்கியிருந்த கேத்தே, கதாபாத்திரம் தற்கொலை செய்வதாகக் கதையை முடித்தார். வெற்றிக்கொடி நாட்டிப் பிரபலமடைந்த இந்நாடகம் பெரும் சமூகப் பாதிப்பை ஏற்படுத்தியது; ஆறு மாதத்துக்குள் பல இளைஞர்கள் கதாநாயகன் போலச் சுட்டுத் தற்கொலை செய்தனர். காதலில் தோல்வியுற்ற கேத்தே சொந்த வாழ்க்கையில் ஒரு தீர்மானம் எடுக்க முடியாமல் இருந்ததை நாடகத்தில் வக்கிரமாகப் பிரதிபலிக்கச் செய்தார்.சமூக விளைவு பெரும் பாதகமாக முடிந்தது. இது ஒரு மிலேச்ச இலக்கியப் படைப்பின் முடிவு. ஒரு இலக்கியகர்த்தா தான் கற்பனை செய்த பாத்திரங்களின் தொடக்கமும் முடிவும் எப்படி அமைய வேண்டுமென்பதை தூரதிருஷ்டியுடன் காணும் ஆற்றல் இல்லாமல் படைக்கும் இலக்கியம் இப்படியான சமுதாய தீமைகளை விளைவிக்கும் என்பதைப் பண்டிதமணி தனது சக பாடிகளுக்குக் கூறுவாராம்.

பார்க்க: "பண்டிதமணியும் மேனாட்டு இலக்கியச்சிந்தனையும்", பண்டிதமணி நினைவு மலர். ப. 179, பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, 1989.

54. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 83,345, 346,347 மு.கு.

பக்கம்.345 கேள்வி, புலவீர்காள் ஆர்? 'காமத்திலேநேர் துறையில், சிற்பாகத்தைச் சாதிக்கத்தக்கவராயிருந்து, (சாந்திப் பிரதிட்டை). அதில் இரு 3 கட்டு அப்பால் ஆழம் போய்ப் பார்த்தவர்களை விசாரித்துத்தான், நீங்கள் மூலத்தை நோக்கலாமே என்றபடி. சடபாகச் சாதி எப்படி ஏறும் கட்டுகளில்? மருவின கட்டு அயற்கட்டு பிரேமை ஆசாரங்களாலும் இக்கட்டுக்கள் சாதிக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாலும் (தமிழாசாரம்) சாதிக்கலாம். ஆரியத்துவம் or அத்துவசுத்தி யாலும் --------------

அச்சோடு மருவிய கட்டு, காமத்தில் இயலிசை நாடகம் பார்க்கிறது போலிருக்கும்.

சங்கப்புலவர் முத்தமிழ் சொல்லியிருக்கலாம்.

| | |
|---|---|
| தந்திர கலை | இயல் |
| ஆதாரம் மந்திர கலை | இசை |
| உபதேச கலை | நாடகம் |

கலைகளை அறிகிறது ஆதாரமான கட்டு, ஆழமாகப் பார்ப்பதால் அவை ஆதாரக்கட்டு. சடம் உயர்ந்த சாதி. பிரதிட்டை. இன்னும் ஆதாரக்கட்டுச் சொன்னால்;

கற்பு

கற்புக்கேடு எப்படிப் பிறக்கும்? 1. அறிவைச் சொல்லுகிறது ஒன்று. உபதேச கலையைப் பேணுகிறது தான் கற்பு : கொல்வது கேடு.

மந்திரங்களை (சிந்திக்கப்பட்டது) பேணி நடப்பது தான் இன்னும் அசத்தி பாரமான கற்பு.

விரும்பத்தகாததை விரும்புதல் இன்னொரு கற்புக் கேடு.

மந்திரம் பேணாமை.

விரும்பத்தக்கதோடிசைகிறது இயல் (பொருளியல்) இனமாக, கற்பிலே நம்பத்தகாததை நம்புகிறது 3வது கற்புக் கேடு.

தந்திரம் இயல். நியாயம் பார்த்து, இருந்தால் நம்பவேண்டும்.

கற்பின் சாதகம் இன்னும் ஆதாரக்கட்டு.

கற்பின் அத்திபாரத்தையும் அடையலாம். அறிவைக்கொல்லக் கூடா தென்று உணர்ச்சி வரலாம்.

திறமையின்றேல் இறக்கம். அடைந்த ஞாபகம் இருக்கும். பேணி நடக்க வேண்டும். பெரிய கற்பாஸ்திரிகளுக்குத் திறமை, 3வது கட்டிலேயே தொடங்கத்தக்கதாயிருக்கும். 7க்குக் குறையாததாயிருக்கும்.

(உலகநடையில் தொடக்கம் நாடகம். பொருளியல் கூட்டம்) இன்னும் ஒரு படி கூடவானால் இசையும் நடக்கும்.

பேர்கள் வேறு வேறு இனம். கற்பு நிலை, இவற்றுக்குப் பங்கமற்றது.

புராணம் இதிகாசத்தில் கற்பாஸ்திரிகள் காமத்தின் துறைகளை, ஆரியத்துவத்துடன் சாதித்தவர்கள்.

மேல் சாதியை அடையலாம்.

55. மாணிக்கவாசகர், திருவாசகம், திருக்கழுக்குன்றப்பதிகம், செய். 6.

56. The New Encyclopedia Britannica, 'Hermuanetics', 1989.

57 – 61 சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 277,278 மு.கு

*இப்பகுதியின் முக்கியத்துவம் கருதி முழுவதையும் இங்கு தொடர்ச் சியாகத் தருகிறோம்:*

தமிழுக்கும் சிறப்பிலக்கணம் உண்டென்ற கருத்து சேனாவரையர்க்குண்டு. சிவஞானமுனிவர் போலில்லை.

தமிழுக்குமுண்டு பிரிக்கக்கூடாதென்றது (கணேசையா) நன்று.

அதை வைத்துக்கொண்டு தமிழை எப்படிச் சொல்லலாம்.

சரி பிழை

கட்டில் ஒரு அம்சத்தைப் பிடித்துக்கொண்டு மற்றதை மறுக்கிறதுதான் பிழை. மறுப்பில்லாமல் சொல்வதுதான் சரி.

ஆரியந் தான் ; தமிழுமல்ல ; எதிருமல்ல.

சரி, மறுப்பில்லாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம், தோற்றம் இறுதி தெரிந்து சொல்வது. சரி தெரியும்.
சேனாவரையருக்கு திட்ப நுட்ப நடை வரும். சிவஞானமுனிவருக்குத் தெளிவு கூட.
நூலுக்குரையென்றால் நக்கீரருரை.
நூலுக்குள் ஏதோ இருக்கலாம் என்றெண்ணியவர்கள் சிவாக்கிரயோகிகள் முதலியோர்.அடுக்க சிவஞானமுனிவர். அடுக்க சேனாவரையர் முதலியோர்? பிரமசூத்திர உரை முதலியன நூலோடு தொடர்பற்றவை.
நடையும் நூலும் கிளப்பம் செய்தது பரிமேலழகருக்கு, பிரமசூத்திர உரை போல.

62. V.A Deväsenāpathi, SaivaSiddhänta, (As expounded in the Sivagñana Siddhiyär and its six commentaries) University of Madras, 1974.

63. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 277.

64. மேற்படி, ப. 276.

65. மேற்படி, ப. 141.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஐந்து

# 5. 0 மரபுவழியல்லாத புதிய சிந்தனைகள் சில

*5.1 முன்னுரை*

இவ்வத்தியாயத்தில் கைலாசபதி அவர்கள் கூறிய பொதுவான சில விடயங்களை, இக்கால தேவை கருதி, எடுத்து நோக்குவோம். இவை வரன்முறைப்படி அவ்வத்துறைகளில் ஆழ்ந்து சிந்தித்து நாம் நிரைப்படுத்தியவை எனக் கூறமுடியாது. ஆயினும் அவரது சிந்தனைகளை ஒட்டுமொத்தமாக நோக்குபவர்கள் அவர் சுட்டிப்பாகக் கூறிய ஒவ்வொரு விடயத்தையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு அவரது சிந்தனைப்போக்கு கீழ்க்குறிப்பிடப் படும் துறைகளில் எப்படி அமையும் என்பதை ஓரளவு ஊகித்துக்கொள்ள இப பகுதி உதவும் என எண்ணுகிறோம். இதில் அரசும் அரச அங்கங்களும், தர்க்க மும் அறக்கோட்பாடுகளும், விஞ்ஞான, கணித சிந்தனைகள் போன்றவற்றை இயன்றவரை விளக்க முனைகிறோம்.

*5.2 அரசும் அரச அங்கங்களும்*

அரசு, அரசன், ஆட்சிமுறை பற்றி இக்காலத்தில் மிகவும் விசாலமாகப் பேசப்படுகிறது. மேலைநாட்டு வரலாற்றில் ஊறிய கல்விசார் அறிஞர்கள் கிரேக்க அறிஞர் பிளேற்றோ "குடியரசு" (Republic) என்ற பெயரில் எழுதிய அரசியற் கருத்துக்களுக்கு முதலிடம் அளிக்கின்றனர். அத்துடன் நவீன வரலாற்றுக் காலப்பகுதியின் ஆரம்பமாகிய 15ம் நூற்றாண்டில் தோன்றிய மக்கியவெல்லியின் (Machiavelli 1469 - 1527) "அரசகுமாரன்" (Prince) என்ற நூலில் பலவான் ஒருவன் சிறு அரசுகளை விழுங்கி, பலமான பேரரசு ஒன்றை அமைக்கலாம் என்று எழுதியிருப்பதையும், இந்திய மௌரியப் பேரரசுக் காலத்தின் ஆரம்பத்தில் கௌடில்யர் எழுதிய "அர்த்தசாத்திரம்" என்ற நூலில் பெரிய மீன் சிறிய மீனை விழுங்குவதுபோல பலமான அரசு பலமற்ற அரசை வெற்றிகொண்டு பேரரசு அமைக்கலாம் என்ற கருத்துக்களையும் ஒப்பிட்டுப்பார்க்கின்றனர். வணிகநோக்கில் உலகை வலம் வந்து, பின் சாம்ராஜ்ய வெறிகொண்டு பல நாடுகளைக் கவர்ந்த ஐரோப்பிய இனத்தவர்கள் தம் கால அரசுகளை மாதிரியாக வைத்துக்கொண்டு இந்திய அரசியல் தத்துவங்களை நோக்கினர். பிரெஞ்சுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிக்கு வித்திட்ட ரூசோவின் ஜனநாயகக் கருத்துக்கள் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்ட காலத்தில் அதாவது 19ம் நூற்றாண்டில் கல்விகற்று வெளியேறிய மாணவர்கள் நிர்வாக அதிகாரிகளாக இந்தியாவை ஆண்டபோது இந்திய அரசியல் நூல்களில் தமக்கு விளங்கிய கருத்துக்களைத் தேடிக்கண்டு அதனைப் பிரபலப்படுத்தினர். உதாரணமாக லண்டன் பல்கலைக் கழகத்தில் அரசில் விஞ்ஞான கலாநிதிப்பட்டம் பெற்ற பெனி பிரசாத் (Beni Prasäd) எழுதிய "புராதன இந்தியாவில் அரசியல்" என்ற நூல் வடமொழி மூல நூல்களை எல்லாம் புதிய கண்ணோட்டத்தில் ஆராய்ந்தது. ராகுல சாங்கிருத்தியாயனன், D.D.கோசாம்பி, றொமீலா தாபர் போன்றோர் மாக்ஸீய நோக்கில் புராதன இந்திய வரலாற்றை நோக்கிய பின் அனைத்து இந்திய அரசியல், பொருளாதார சிந்தனைகளையும் பொதுவுடைமை நோக்கில் வியாக்கியானம் செய்யும் போக்கு பரவலாகக் காணப்பட்டது.

இத்தகையதோர் நீண்ட அடிப்படையிலேயே கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் இடம்பெறும் அரசு, அரசன் பற்றிய கருத்துக்களை ஆராயவேண்டும். நவீன மேல்நாட்டுக் கல்வி பயின்ற கல்விசார் அறிஞர்கள் (Academics) ஏற்றுக்கொள்ளும் வகையில் இதனை விளக்குவது மலையுச்சி நோக்கிக் கல்லை உருட்டும் பணி என்பதை அறிவோம். ஆனாலும் திருவள்ளுவர் வழி, திருமூலர் வழி அரசன், ஆட்சிமுறை பற்றிச் சிந்தனைகளில் மனதைச் செலுத்திய கைலாசபதி அவர்களின் ஸ்மிருதியில் ஆன்மீக அடிப்படையில் வாழவேண்டும் என்று நினைக்கும் சின்னஞ்சிறு கூட்டத்தார் பெருமகிழ்வு எய்தும் கருத்துக்கள் பல இருப்பதைக் கற்றோர் உலகுக்கு எடுத்துக்காட்டுவது எம்கடமை எனக் கருதுகிறோம்.

### *5.2.1 நாடு - வரைவிலக்கணம்*

அறம், பொருள், இன்பம், வீடடைதல் என்ற புருஷார்த்தங்களைக் குறிக்கோளாக உடையவர் கூடிவாழ்வது நாடு என்கிறார் கைலாசபதி அவர்கள். சிந்தனைகளில் அது

**நாடு தர்மத்துக்கமையா விட்டால், காடு.**[1]

எனக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் திருவள்ளுவர் கூறிய

*"படை குடிகூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்*

*உடையான் அரசருள் ஏறு"*[2]

என்ற குறளையும் அவர் தமது சிந்தனைக்கு விருந்தாக்கியுள்ளார். மேலும் அவர் மக்களின் கூட்டுச் சிந்தனைகளிலேயே (Collective will) கோனினது ஆட்சி தங்கியுள்ளது என்கிறார். அதாவது நாட்டிலுள்ள நல்லோர் தம் வாழ்வை நடத்தும் போது ஏற்படக்கூடிய தடைகளை விலக்கி தம்மைப் பாதுகாக்கத் தக்க, அறம் தெரிந்த, ஒரு தலைவனை மக்கள் ஒப்புக்கொள்கின்றனர். அத்தலைவனின் தனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கும் அவனது படை, அமைச்சு முதலிய சுற்றத்துக்கும் வேண்டிய செலவை அவர்கள் தம் வருவாயில் 1/6 பங்கு (வரி) கொடுத்து தலைவனைப் போஷிக்கின்றனர். எனவே கோனின் ஆட்சி மக்களின் கூட்டுச்சேர்க்கையிலேயே தங்கியுள்ளது. சிறந்த ஓர் அரசு, தர்மம் என்ற பொதுவிதியால் இறுகப் பிணைக்கப்பட்டு மக்கள் அதனைப் பின்பற்றுபவர்களாய் இருப்பதால், அதில் பிணக்குகள் எழ முடியாது என்றும், அவ்வாறான ஓர் அரசனின் ஆட்சியில் மக்கள் இல்லற, துறவற நெறிகளைத் தம் எண்ணப்படி அனுட்டிக்கலாம் என்றும், அவ்விருவருக்கும் பாதுகாவலானாக இருப்பவன் கோனே என்றும் கருதுகிறார் கைலாசபதி அவர்கள். அதனாலேயே அரசன், அரச நீதியினின்றும் தவறினால் மக்களுக்குக் காடே கதி என்கிறார் போலும். சிறந்த அரசில் சிறு கூட்டம் தீயோர் தீமை செய்தால் மன்னனின் மாற்று நடவடிக்கைகள் தார்மீக அடிப்படையில் அமைய வேண்டும். அப்படிச் சமநிலையைப் பிறழச்செய்யாது பாரதநாட்டினின்றும் வெளியேறிய சிறு கூட்டத்தினரே காலந்தோறும் பாரசீகம், மத்தியகிழக்கு என்று பரந்து, ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் வாழத் தொடங்கியிருக்கலாம். அதனால் தான் கைலாசபதி அவர்கள் தமது சிந்தனைகளில் "கருத்துக்கள் பிறழ்ந்ததால் பாஷைகளும் மாறின" என்கிறார் போலும். அப்படி மாறியவையே காலப்போக்கில் இந்தோ ஆரிய மொழிகளாயிருக்கும் என அவர் சிந்தித்தார். இக்கருத்து ஆய்வாளர்களுடைய எழுத்துகளிலும் இடம்பெறுகின்றது.

### *5.2.2 அரசவாழ்வில் சூது - இரு நோக்குகள்*

மன்னர்களின் பொழுதுபோக்கு விளையாட்டுக்களில் ஒன்றான சூது பற்றி யும் கைலாசபதி அவர்கள் தமது சிந்தனைகளில் ஆங்காங்கு சுட்டிக்காட்டி யுள்ளார். இதிகாசங்களில் கூட அரசன் (நளன், தர்மன்) சூதாடி நாடுநகரை இழந் தான் என்ற கதை வருகிறது. வேதத்திலும் சூதாடிய மன்னனின் துயரம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இது இந்தியவியல் அறிஞர்களுக்கு விளக்கமுடியாத புதி ராகவே உள்ளது. ஆனால் கைலாசபதி அவர்களோ மன்னன் சூதாடுவதற்கு இரண்டு வகையான விளக்கம் தருகிறார்.

அரசர் வெற்றிக்களிப்பில் நாட்டம் உடையவர். போரில் தாம் ஈட்டிய வெற்றியைக் கொண்டாடி மகிழ்வதைப்போல சூதும் உதவுகிறது. ஒருவனது **"சுவையைக் கொல்வது வேதமன்று"**. எனவே அரசன் தன் வெற்றிச் சுவைக்கு உணவாக சூதாடுவதில் தவறில்லை என்கிறார். போரில் வெற்றி பெற்ற அரசன் திறைப்பொருளைப் பெறுவதைப்போல, சூதாட்டத்திலும் வெற்றி பெற்றவன் பொருளைப் பெறலாம் என்றும், அது பொருளாசையால் வந்த அபகரிப்பு முறையல்ல என்றும் கூறியுள்ளார்.

அரசன் ஞானப்பாதையில் செல்பவன். அவனது மனம் அந்தர்முகப்பட்டு, அதாவது உள்முகப்பட்டு அரசகருமங்களில் நாட்டம் இல்லாமல் போகும்போது, சூதாடலாம் அதாவது அரசன் தன் உயிர் உள்ளவரை, அல்லது வானப்பிரஸ்தத்துக்குச் செல்லும் வரை, அரசகருமங்களில் ஒரு சிறிதளவேனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுவாது நடக்கவேண்டும். அவனது மனம் லௌகிக கருமங்களில் ஈடுபட மறுத்தால் அது அரச நீதிக்குப் பங்கமாகும். தனது அரச கடமை முடியும்வரை தியானம், சமாதி போன்ற உயர் யோகநிலைகளை ஓரளவிற்குப் பின் தள்ளி வைக்க வேண்டும். எனவே அரசன் சூது போன்ற விளையாட்டுக்களில் சிறிது நேரத்தைச் செலவிடலாம் என்கிறார் கைலாசபதி அவர்கள். (உபநிடதத்தில் வரும் ஜனக மகாராஜா போன்ற ஜீவன்முத்தர்களின் நிலை வேறு; அவர்கள் அரசகருமங்களைப் பார்த்துக்கொண்டே - "முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்றபடி இருப்பர்.) மேலும் சிந்தனைகளில்,

**சூது; நன்மைக்குத் தோன்றிய குறிப்பாகலாம். முனிவரின் பெருமை**

**தெரிந்தவர் தர்மர். ராச்சிய ஆசையுமுண்டு.**[4]

என்றும் கூறப்பட்டுள்ளது. தர்மர் சூதாடியதன் அடிப்படையை கைலாசபதி அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். சகுனியின் தூண்டுதலால் துரியோதனன் தருமரைச் சூதாட அழைக்கிறான். சூதாட்டத்தால் நாடு நகரை இழக்கலாம் என்ற தத்துவத்தைத் தெரிந்த தருமர் அச்சந்தர்ப்பம் தனக்கு ஒரு ஆத்மீக நன்மைக்குத் தோன்றிய குறிப்பாகலாம் என்பதை நிழல் போல் உணர்ந்தார். அதாவது இராச்சியமாளும் பொறுப்பை விட்டு, காடுகள் தோறும் திரிந்து, முனிவர்களின் அருள் உரைகளையும், ஆசீர்வாதத்தையும் பெற அப்படியொரு சந்தர்ப்பத்தைத் திருவருள் தனக்கு வழங்குகிறது என்பதை குறிப்பால் உணர்கிறார். இது ஒரு கட்டாய விடுமுறை. (Compulsory leave). இந்தச் சந்தர்ப்பம் மகிழ்ச்சிக்குரியதே. அதேசமயம் இராச்சியம் ஆளும் விருப்பும் தர்மருக்கு உண்டு என்கிறார் கைலாசபதி அவர்கள். அதனால்தான் 13 ஆண்டுகள் முடிந்தபின் கிருஷ்ணரைத் தூதனுப்பி இராச்சியம் கேட்கிறார். அது பேராசையினின்றும் எழுந்தது அன்று என்பார். ஒருவன் தன் உரிமையைக் கேட்பது தர்மமே. தர்மத்திற்கு மறுப்பாக நிற்பவனைத் தண்டிப்பதும் க்ஷத்திரிய தர்மமே. தற்காலப் போர்எதிர்ப்புக் கொள்கை (Pacifism) வைதிகமன்று. க்ஷத்திரியன் தான் வாழத்தேவையில்லை. தர்மம் வாழ வேண்டும் என்று சிந்திப்பவன். **தர்மத்தின் பாதுகாப்புக்கு அஞ்சாது நிற்பவன்தான் உண்மையான க்ஷத்திரியன்** என்பார் கைலாசபதி அவர்கள். ஆகவே தர்மரது சூதும் அவரது போரும் இலட்சிய அரசின் செயல்களாக ஏற்றுக்கொள்ளப்படலாம். திருவள்ளுவர் கூட சூதாட்டத்தைப் பொருட்பாலில் கண்டித்தாரே அன்றி, அறத்துப்பாலில் கண்டிக்கவில்லை. இது சிந்திக்கத்தக்க விடயம்.

### *5.2.3 க்ஷத்திரியரும் மானமும்*

க்ஷத்திரியரின் மானம் பற்றிய கருத்துக்களையும் கைலாசபதி அவர்கள் முன்வைத்துள்ளார்.

**க்ஷத்திரியன் = அரசன்**

**மானம்**[5]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் பற்றித் திருக்குறளும் பேசுகிறது.[6] இது போலிக் கௌரவ உணர்வு அன்று. விடயங்களின் பெறுமானத்தை அறிந்து உரியவற்றிற்கு உரியமதிப்பை அளிப்பது. அவ்வகையில் க்ஷத்திரியன் மானத்தைப் பேணுவான். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா" போன்றவன். பெரியபுராணம் திருநகரச் சிறப்பில[7] (மனுநீதி கண்ட புராணம்) கூறிய கதை பெரியபுராணத்தின் உயிர் நாடியான பகுதி என்பார் கைலாசபதி அவர்கள். அது வேதநெறி காட்டும் அரச தர்மத்தை வலியுறுத்தும் ஒப்பற்ற புராணப்பகுதி.

> **மனுநீதி கண்ட சோழர் சொன்ன போது மந்திரிமார் அன்புக்காற்றாது தீக் குளித்தனர். வேதம் தமிழ்நாட்டில் நடந்ததென்பதற்கு இது உதாரணம். தமிழை நாடினவர், தமிழை விடாமல் வேதம் நடத்தினர். வேதம் தமிழ் செய்த பூமி தமிழ் நாடு. ராச கட்டளையை நிறைவேற்ற முடியாத தமிழன் உயிர்விட்டான். ஸ்மிருதிப்படி மந்திரிமார் ராசகுமாரனை நெரிக்க வேண்டியவர்.[8]**

என்கிறார் கைலாசபதி. சோழனின் மந்திரிமார் திருக்குறள் கூறும் அமைச் சனின் இலட்சணங்கள் அனைத்தும் உடையவர். அரசகட்டளையை நிறைவேற்ற அவர்களுக்கு மனம் இடங்கொடுக்க வில்லை. காரணம் அவர்களது தமிழ் நோக்கு - அருள்நோக்கு. கட்டளை நிறைவேற்றாதவன் அமைச்சனல்லன். எனவே மந்திரிக் குரிய தர்மத்தை நிறைவேற்றாதிருப்பதிலும் பார்க்க உயிர்விடுவதே சாலச் சிறந் தது. அத்தர்மச் செயல் காரணமாகவே ஆன்கன்று, மன்னுரிமைத்தனிக்கன்று, மந்திரி எல்லாம் உயிர்த்தெழுந்தன. திருக்குறளையும், மனுவையும் ஒப்பிட்டு முன்னையதை உயர்த்தியும் பின்னையதை தாழ்த்தியும் பேசுவது இன்றைய தமிழ்க்கல்விமான்களின் வழக்கமாகி விட்டது. ஆனால் கைலாசபதி ஆட்சிமுறை பற்றிய கருத்தில் தமிழ் வேதம் சொல்லும் அரசதர் மத்தையும், ஆரியவேதத்தைக் கண்டோர் உணர்ந்த அரச தர்மத்தையும் ஒரு சிறு பந்தியில் விளக்குகிறார்.

> **தமிழருக்கு வேதம் சொல்வதெப்படி? திருவள்ளுவருக்குத்தான் தெரியும்? நட்பு குடி தமிழ் அமைவு (ராச தர்ம மென்பர்) பூரண தர்மம் தெரிந்தது ஆர்ய தர்மம். அதன் பிறழ்வு அநாரிய தர்மம். வைதிகத் தமிழ் எப்படி யிருக்கும்? ராமராச்சியம் கூலி உத்தியோகத்தரை வைத்த இராச்சிய மன்று. உண்மை நட்பில்லாத இறைமை சுவைக்கத்தக்கதன்று. அது தமிழன் சுவையன்று.[9]**

என்கிறார். வேதம் கண்ட ரிஷி ஒருவர் அவ்வுண்மைகளை தமிழால் செய்ய முடியுமானால் எப்படிச் செய்வாரோ அந்தரீதியிலே திருவள்ளுவர் திருக்குறளைச் செய்துள்ளார். அதாவது மந்திரம் ஆரிய மொழியில் உள்ளது. அதனைத் தமிழ ருக்கு - தமிழ் வாழ்க்கை வாழ்பவர்களுக்கு தமிழ் மொழியில் எப்படிச் சொல் லலாம் என்பதைத் திருவள்ளுவர் மட்டுமே அறிவார் என்று வள்ளுவருக்குத் தனிப் பெரும் புகழ்மாலை சூட்டுகிறார் கைலாசபதி அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழன் தான் ஒரு நாளைக்கு ஆரியன் ஆகலாம். விதுரருக்குச் செஞ் சோற்றுக் கடனில்லை. நோக்கு வேறு.**[10]

என்ற குறிப்பும் சிந்தனைகளில் வருகிறது. விதுரர் மகாபாரதத்தில் நன்மந்திரியாக விளங்கியவர். அவர் விதேக முத்தியடைந்தவர் என்பர். தக்கது எது? தகாதது எது? என்பதை உணர்ந்த மெய்ஞ்ஞானியே அரசியலுக்கு வழி காட்ட வல்லவன், (இராமாயணத்தில் வசிட்டர் மந்திரி போல) அருள்நோக்கு என்ற பண்பு நிறைந்திருந்த போது விதுரர் பாண்டவ கௌரவரில் அன்பும், பற்றும் உடையவராக இருந்தார். தன்னால் இயன்றவரை நல்வழி காட்டினார். அவரே தர்மராதியோரைச் சூதுக்கு அழைத்துச் சென்ற போது மந்திரியாகவும், தூது வராயும் பணியாற்றியதோடு நில்லாமல், ஆரியத்துவம் கைவரப்பெற்றவராக அக்கினி போல சரி எது? பிழை எது? என்பதை உணர்ந்து தர்மனுக்கு சகுனியின் வஞ்சகச் சூதாட்டத்தைக் குறிப்பால் உணர்த்திவிட்டுச் சென்றவர். அவரைச் செஞ்சோற்றுக்கடன் கழிக்காத ராசதுரோகி எனக் குற்றஞ்சாட்டுவது பொருத்த மன்று. அவருக்கு செஞ்சோற்றுக்கடனில்லை என்பார் கைலாசபதி அதாவது அவ ரது நோக்கு இறைவனில் (பிரமத்தில்) லயித்திருந்தது. எந்தஇறைவன் இந்த அரச னுக்கூடாகத் தனக்குச் சோறு தருகிறான் என்பதை அறிந்த அவர், அந்த இறை வனுக்குத் தான்பட்ட கடனைக் கழிக்கத் தெரிந்தவர் என்கிறார். மேலும் அவர்,

**திறமையைக் கூலியாக விட்டவர். ஒப்பந்தம். ஒன்றை நாடியவர்களுக்கு அவ்வழியில் யாரும் துணை செய்தால், அது நன்றி. ஒப்பந்தம் வேறு, நன்றி வேறு. விபீஷணன் ஆரியன் கும்பகர்ணன் தமிழன் கிருஷ்ணன் ஆரியன். அருச்சுனன் தர்மரைக் கொன்றிருக்கலாம் தானும் இறந்தே தீருவான். தமையனைக் கொன்று வாழான்.**[11]

என்கிறார். இதில் நன்றிக்கும் ஒப்பந்தக்கூலிக்கும் வேறுபாடு காட்டுவதன் மூலம் ஒரு அர்த்தசாத்திர உண்மையைக் கைலாசபதி அவர்கள் வெளிப்படுத்தி யுள்ளார். ஒப்பந்தப்படி சம்பளங்கொடுப்பது வேறு. நன்றியினால் அளவுக்கு மீறிய பரிசில்களையும், நிலங்களையும் வழங்குவது வேறு. கும்பகர்ணன் தமையன் தனக்குப் பேருண்டியும், பெரும்பதவியும் அளித்ததற்கு அன்பும், நன்றியும் உடையவனாக வாழ்ந்தான். அதாவது ஒரு தமிழனாக வாழ்ந்தான். அவன் சேனா திபதியாய் தமையனுடன் மூவுலகையும் வென்றதற்குக் கூலியோடு அவன் மீது தம்பி என்ற முறையில் அளவு கணக்கில்லாத அன்பு செலுத்திய இராவணனை வெறும் அண்ணனாகப் பார்க்காமல், தமக்கு நன்றி செய்தவனாகப் பார்க்கிறான். தர்மத்திற்கு மாறாக நடந்தபோது அதை உணர்ந்தும் அது குறித்து எச்சரித்து நிற்பதுடன் நின்று விடுகிறான். அதாவது க்ஷத்திரியனுக்குரிய தர்மப்படி சரியைச் செய்யவும் பிழைக்குத் துணைபோகாது நின்று விடவும் அவனால் முடியவில்லை. ஆனால் விபீஷணனோ அண்ணனுக்குச் சேவகம் செய்தும், நன்றியுடன் வாழ்ந்தும் உரிய காலத்தில் அறிவுரைகள் சொல்லியும் வந்தவன். இராவணன் எல்லை மீறிப்போன போது அதாவது க்ஷத்திரிய தர்மத்தில் நின்றும் வழுவியபோது அவனுக்குத் துணைபோகாது தான் சத்தியத்தின் பின்னே சென்றான். விபீஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னனை நன்றி கெட்டவன் என்று பேசுபவர்கள் அவனது க்ஷத்திரிய நிலையை உணரத் திறனற்றவர்கள் என்பார் கைலாசபதி அவர்கள். "தமிழன்", "ஆரியன்" என்ற சொற்களை கைலாசபதி அவர்கள் விசேட - ஆத்மீகக் கருத்தில் உபயோகிக்கிறார் என்பதை மறந்த சிலர், "இராமன் தமிழன்", "கிருஷ்ணன் ஆரியன்" போன்ற சொற்றொடர்கள் கருத்தற்றவை என்ற ரீதியில் விமர்சிக்கின்றனர்.[12] இக்கால சாதாரண உலகில் இச்சொற்களை உபயோகிக்கும் கருத்தில் மட்டுமே அவர்கள் அறிந்துள்ளார்கள் என்பது தேற்றம். "இராமன் தமிழன்[12] என்ற நூற்பா அவன் ஆரியத்துவ நிலையில் மட்டும் நிற்காது, அருள்நோக்கு என்ற அன்பு நிலைக்கு இறங்கிய தன்மையைக் குறிக்கும். ("இன்று போய்ப் போருக்கு நாளை வா")ஆனால் கிருஷ்ணனோ ஆரியதர்மப்படி கொண்ட விரதத்தை மீறாதிருப்பவன். அதனையே கைலாசபதி அவர்கள்,

> **அருச்சுனன் தருமரைக் கொன்றிருக்கலாம் தானும் இறந்தே தீருவான். தமயனைக் கொன்று வாழான்.**[13]

என்கிறார். அதாவது அர்ச்சுனன் தன் காண்டீபத்தைப் பழித்த தர்மரைக் கொல்லுவது கடமையே எனச் சிந்தித்து இருக்கலாம். ஆனால் விரதத்தைப் பேண அண்ணனைக் கொன்றுவிட்டு, இனப்பற்றினால் தானும் இறந்தொழிவான் என்பதை உணர்ந்த கிருஷ்ணன் அவனைக் கருவியாகக் கொண்டு ஆரியதர்மத் தைப் பேணத் தீயோரை அழித்து நல்லோரை வாழவைக்கத் தெய்வ சங்கற்பம் செய்து வந்த அர்ச்சுனனை இறக்க விடக்கூடாது என்றும், அவனது விரதம் பங்க மடையாதிருக்கவும் வழிகாட்ட வேண்டுமென்றும் நினைத்தான். ஆதலால் மூத்தோரை அவமதித்தல் அவர்களைக் கொன்றதற்குச் சரியென்ற வேதவிதியை ஞாபகமூட்டி, தர்மரை ஏசும்படி வழிகாட்டுகின்றான். அருச்சுனனும் அவ்வழிகாட்ட லின்படி நடந்து தனது விரதத்தை நிறைவேற்றி, ஏசியதற்கு மனவருத்தமும் அடைகிறான். இப்படியாகவே க்ஷத்திரிய அரசதர்மம் நடைபெற்றது என்பார் கைலாசபதி அவர்கள். மேலும்,

**1. பொருட்பால்.**

> **உடையான்:- அமைந்தவன் அரசன். இராமனுக்கு வந்து அமைந்தன: இறைமை சித்திக்கும் நாட்டமிருந்தது. சேராவிட்டால் - நாட்டமிருந்தால் - தவம் செய்வார். உலகர் அடையத்தானே வேண்டும்**[14]

என்றுங் கூறியுள்ளார். "ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்ற குறளைச்சுட்டி அதற்கு ஒரு விசேட பொருளும் காண்கிறார் கைலாசபதி அவர்கள். அரசனுக்கு சிறந்த அரசாட்சி நடைபெற வேண்டுமானால் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பன இயல்பாக அமையவேண்டும். இராமன் தனக்கு அரசு பிதிரார்ஜிதமாக வந்ததுதானே என்று வலிந்து பிடித்துக்கொள்ளவில்லை. அது இயல்பாகவே அவனுக்கு அமைந்தது. அது கைநழுவிப் போகும்போது அவன் அதற்காகக் கவலைப்படவில்லை. மூத்தமகன் என்று தன் உரிமையை அவன் வற்புறுத்தவில்லை. அதேசமயம் "இறைமை சித்திக்கும் நாட்டமிருந்தது".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் ரிஷி முனிவர்களின் தொடர்பை நாடினாலும் இராமர் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தமையால் அரசனாய் இருந்து ஆட்சியனுபவிக்கும் விருப்பம் அவனது உள்ளத்தில், ஒரு புறத்தில், குடிகொண்டிருந்தது. அதன் காரணத்தினாலேயே பதினான்கு ஆண்டுகள் வனவாசம் அனுபவித்தான் என்றார். அதாவது தான் நாடிய அரசு சித்திக்கா விட்டால் அல்லது தன்னை அரசு சேர்க்காவிட்டால், தொடர்ந்து ஆட்சிபுரியும் நாட்டம் இருந்தால், நல்லோர் தவம் செய்து அதனைப் பெறுவர் என்ற விதிக்கமைய இராமர் செயற்பட்டார் போலும்.

### *5.2.4 நவீன இந்தியரின் இலட்சிய புருஷர்கள்*

இந்நூற்றாண்டில் அரசியல் உலகில் பிரபலம் பெற்றவர்கள் மேனாட்டுச் சிந்தனைகளில் ஊறியவர்களே. அவர்கள் மேல்நாட்டுச் சரித்திர புருஷர்களையே தம் இலட்சிய புருஷர்களாகக் கொண்டனர். அதனைக் கைலாசபதி அவர்கள்,

காந்தி கீதை நெப்போலியன் பார்வை.[15]

என்கிறார். மகாத்மாகாந்தி மேல்நாட்டில் கல்வி கற்றுத் திரும்பியவர். எவ்வளவு தான் தன்னை இந்திய மயமாக்கிக் கொண்டாலும், பகவத்கீதையைத் தன் ஞானநூலாக எடுத்துக்காட்டினாலும், அவரது சிந்தனைப் போக்கு மேல்நாட்டுப் பாணியிலே அமைந்தது. அவர் கீதை பேசுவார். ஆனால் நெப்போலியன் பார்வையே அவருக்குண்டு. இளமைப்பருவத்தில் காந்தி அக்கால வழக்கப்படி நவீன ஐரோப்பிய வரலாற்றைப் பாடசாலை மட்டத்தில் கற்றிருப்பார். அதில் அவர் நெப்போலியன் பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை என்றும், அப்புரட்சியின் மூலமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்துக்களை முன்னெடுத்துச் சென்றவர் என்றும் அறிந்திருப்பார். அதனால் நெப்போலியன் மாவீரனாக அவரது சிந்தனையில் தோன்றியிருக்கிறான். (இதனை சத்திய சோதனையில் நோக்குவது நல்லது). கைலாசபதி அவர்களின் கணிப்புப் பாரபட்சமானது என்று கூறுபவர்கள் வரலாற்றுத் தத்துவப் பேராசிரியரான ரொயின்பி (Toynbee) எழுதிய காந்தி பற்றிய கருத்துக்களை நோக்குக.[16]

அரவிந்தர் கூட இந்நூற்றாண்டின் தொடக்க தசாப்தங்களில் தீவிர அரசியல் வாதியாக விளங்கியவர். வேதம், கீதை வழியில் தீவிரமாகச் சென்றவர். எனினும் ஹெராக்லிற்றஸ் (Heraclitus) போன்ற கிரேக்க வீரபுருஷர்களைப் பாடியுள்ளார். டார்வினின் பரிணாமக் கொள்கையை முற்றாக ஏற்காவிட்டாலும் அந்த ரீதியில் மனிதன் பரிணமித்து ஆத்மீக மனிதனாக - அதிமனிதனாக (Superman) உயர்வடைய வேண்டும் என்பதைத் தமது "தேவஜீவனம்" என்ற மெய்யியல் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே அரவிந்தர் கூட மேல்நாட்டுச் சிந்தனையில் பாதிக்கப்பட்டவர் என்று கைலாசபதி அவர்கள் கூறுவது பொய்யன்று. புதிய ஹிந்து மதத்தின் பிதா என்று பாராட்டப்படும் விவேகானந்தரின் இராம கிருஷ்ணமிஷனின் அமைப்பு முறையும் புனித இக்னேஷியஸ் லோயலாவின் யேசுசபையை அனுசரித்தே ஏற்படுத்தப்பட்டது. இப்படியாக கைலாசபதியவர்களின் அரசு பற்றிய கருத்துக்கள் அமைகின்றன. தற்கால அரசியல் சிந்தனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், கடந்தகால அரசியல் தண்டநீதி, சட்டம் போன்ற சிந்தனைக்கும் உள்ள தொடர்புகளை அரசியல் அறிவுபெற்றவர் ஆராய்ந்து அவற்றைக் கைலாசபதி அவர்களின் கருத்துக்கள் என்ற உரைக்கல்லில் உரைத்துப்பார்ப்பது ஆன்ம சாதகர்களுக்கு உவப்பாகும். பிளேற்றோ தன்நாட்டைத் துறந்து இத்தாலி சென்று, அங்கு ஒரு அரசகுமாரனுக்குக் கல்வி கற்பித்து, அவன் முடி சூடியபின், அவனது துணையுடன் தனது இலட்சிய அரசாங்கத்தை அமைக்க முயன்றபோது, அவர் உயிருக்கு ஆபத்து வரும் நிலை ஏற்பட, அவர் மீண்டும் தன் தாய்நாட்டிற்கு திரும்பினாராம் மேற்கு உலகக் கல்வியில் நம் புத்தி ஜீவிகள் மத்தியில் எமது கருத்து விலை போகுமோ ?.

## *5.3 தர்க்கம் பற்றிய சிந்தனைகள்*

மெய்ப்பொருள் காண்பதற்குச் சாதனமாய சிந்தனையினை அறிவிக்கும் நூல் தருக்கம் எனப்படும். எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைகளினால் உலகப் பொருள்களை அளந்தறிவது போல, பதி முதலியவற்றைப் பக்குவான்மாக்களுக்கு அளந்து அறிவிக்க உதவுவது தர்க்கசாஸ்திரம் இத் தர்க்கத்தினை விளக்கும் முறையினை அறிவிக்கும் நூல் இலக்கணம். அதாவது ஒரு கருத்தை நிச்சயித்ததற்குத் துணையாக அமைவது இலக்கணம். இதனால்தான் தர்க்கத்தையும், இலக்கணத்தையும் கருவி நூல்கள் என்கிறார். தருக்கத்தை எண்ணெனவும், இலக்கியத்தை எழுத்தெனவும் கூறும் கைலாசபதி அவர்கள் இவ்விரண்டும் தமிழுக்குக் கண்ணென விதந்தார். எண், கணிதம் என பொருள் கொள்ளுதல் தவறு என 1933 லேயே சுட்டிக்காட்டினார்.

**பண்ணிலாற் கில்லாத பாட்டிற் பயன்போன்றும்**

**கண்ணிலாற் கில்லாக் கவின்போன்றும் - எண்ணிலா**

**அஞ்சொ லளவை அறியா தவற்கில்லை**

**செஞ்சொ லளவின் சிறப்பு.**[17]

என்ற பாடலையும் நோக்குக.

### *5.3.1 கல்விசார் சிந்தனைகள் - மணிமேகலை*

இக்காலத் தமிழ் வாசகர்களிடையே நிலவிவரும் தருக்க நூல்கள் பல வடமொழித் தருக்க நூல்களின் மொழி பெயர்ப்புக்களாகவும், மேலைத்தேச தருக்க நூல்களைத் தழுவியனவாகவும் காணப்படுகின்றன. அன்றியும் பௌத்த காவியமான மணிமேகலை முதலிய காவியங்களிலும், சிவஞானசித்தியார் முதலிய சமய நூல்களிலும் தருக்க நூற்கருத்துக்கள் பல உள. தருக்க நூல் விஷயங்களை எடுத்துக்கூறிய மிகப்பழமையான தமிழ்நூல் மணிமேகலை. அக்காவியத்தின் இருபத்தேழாம், இருபத்தொன்பதாம் காதைகளில் மூன்று இடங் களில் தருக்கம் பற்றிய கருத்துக்கள் முன்வைக் கப்பட்டுள்ளன. “சமயக்கணக்கர் தந்திறங் கேட்ட காதை” எனத்தொடங்கும் இருபத்தேழாம் காதையிலே, “வேத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாதனுங் கிருத கோடியும்" என்னும் அடி தொடக்கமாக "இவையே யிப்போ தியன்றுள வளவைகள்" என்னும் அடி இறுதியாக (81 அடிகள்) அளவை வாதமும், "பொய்தீர் பொருளுங் குணமுங் கருமமும்" என்னும் அடி தொடக்கமாக "சாதலும் நிகழ்தலும் அப்பொருட்டன்மை, ஒன்றணு கூட்டம் குணமும் குணியும்" என்பது இறுதியாக (20 அடிகளில்) வைசேடிக வாதமும் கூறப்பட்டுள்ளன என்றார். அத்துடன் "தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை" எனப் பெயரிய இருபத்தொன்பதாம் காதையிலே "ஆதி சிநேந்திரன் அளவை இரண்டே" என்னும் அடிமுதலாக "காட்டு மநுமான ஆபாசத்தின், மெய்யும் பொய்யும் இத்திற விதியால், ஐயமின்றி அறிந்து கொள்ளாய்ந்தென்" என்பது இறுதியாக (426 அடிகளில்) பிரத்தியட்சம், அநுமானம் என்னும் பிரமாணங்களும் அவைபற்றிய ஆபாசங்களும் மிக விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவர் தருக்கம் சம்பந்தமாக மணிமேகலையில் கூறப்பட்ட மூன்று பகுதிகளுக்குள்ளே முதலிற் கூறப்பட்ட "வேத வியாதனுங் கிருத கோடியும்" எனும் அடிதொடக்கம் "இவையே யிப்போ தியன்றுள வளவைகள்" எனும் அடி இறுதியாகக் கூறப்பட்ட அளவை வாதத்தில் காண்டல், கருதல், உவமம், ஆகமம், அருத்தாபத்தி, இயல்பு, ஐதிகம், அபாவம், மீட்சி, உண்டாநெறி என்னும் பத்துப் பிரமாணங்களும், சுட்டுணர்வு, திரியக்கோடல், ஐயம், தேராது தெளிதல், கண்டுணராமை, இவ் வழக்கு, உணர்ந்ததையுணர்தல், நினைப்பு என்னும் ஆபாசங்களெட்டின் தன்மை களும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. அன்றியும் வேதவியாசர் பத்துப்பிர மாணமும், கிருதகோடி எட்டுப்பிரமாணமும், சைமினி முனிவர் ஆறு பிரமாணமும் கொண்டனர். உலோகாயதர் பிரத்தியட்சத்தையும், பௌத்தர் பிரத்தியட் சத்துடன், அநுமானத்தையும், சாங்கியர் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமத்தை யும், நையாயிகர் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், உவமானத்தையும், வைசேடிகர் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி யையும் பிரமாணமாகக் கொள்வர்.

இரண்டாவதாகக் கூறப்பட்ட "பொய்தீர் பொருளுங் குணமுங் கருமமும்" என்னும் அடிதொடக்கமாக "சாதலும் நிகழ்தலும் அப்பொருட்டன்மை, ஒன்றணு கூட்டம் குணமும் குணியும்" என்பது இறுதியாகக் கூறப்பட்ட வைசேடிக வாதத்தில் பதார்த்தங்கள் (Categories) பொருள் (திரவியம்) குணம், கருமம், சாமானியம், விசேடம், கூட்டம் (சமவாய மென்பார் வடநூலார்) என்பதும் அது. ஞாலம், நீர், தீ, வளி, ஆகாயம், திசை, காலம், ஆன்மா, மனம் என ஒன்பது வகை என்பதும், அவற்றுள் ஞாலம் - சத்தம், ஸ்பரிசம், ரூபம், இரசம், கந்தம் எனும் ஐந்து குணமுடையதென்பதும், நீர் சத்தம் முதலாய் இரசமீறாய் நான்கு குண முடைய தென்பதும், தீ சத்தம் முதல் மூன்று குணமுடைய தென்பதும், வளி சத்தம், பரிசம் எனும் இருகுணமுடைத் தென்பதும், ஆகாயம் சத்தகுண மொன றேயுடைய தென்பதும், குணங்கள் சத்தம் முதலாகப் பலவென்பதும் பிறவும் கூறப்படுகின்றன. மேலும் அவர் இக் கொள்கைகளை உடைய வடமொழி வைசேடிகநூல்கள் தற்காலத்தில் வழக்கிலுள்ளனவா? என்பது ஆய்வுக் குரியதென்கிறார்.மூன்றாவதாகக் கூறப்பட்ட தருக்கநூற் கொள்கைகள் அடங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகத்தில் பௌத்தர்களாற் கொள்ளப்படும் பிரமாணங்கள் பிரத்தியட்சம், அநுமானம் என இரண்டென்பதும், இப்பிரமாணங்களின் வகைகளும், இலட்சணங் களும் இவை என்பதும், அவை பற்றி வரும் போலிகளின் வகைகளும் இலக்கணங்களும் இவை என்பதும் மிக விரிவாக எடுத்து விளக்கப்படுகின்றன. இவ்வாறாக மணிமேகலை என்ற பௌத்த காவியத்தில் மூன்று வெவ்வேறு இடங் களில் கூறப்படும் தருக்க விஷயங்கள் தமிழ் மொழிக்கு ஒரு தனிச்சிறப்பு என் கிறார் கைலாசபதி அவர்கள். மேலும் "தமிழிலே நந்தி தேவனார், சம்பந்தனார், திருமறை ஞானதேசிகர், முதலிய சான்றோர்கள் நியாய விற்பத்திமான்கள் என றும், அளவை விளக்கம் முதலிய நியாய நூல்கள் செய்தோர்களென்றும் விளங் குகின்றது" என வில்லியம் நெவின்ஸ் அவர்கள் தமது நியாயவிலக்கண நூலில் கூறியதையும் கைலாசபதி அவர்கள் உள்வாங்கியுள்ளார். மேலும் நெவின்ஸ் அவர்கள், "தமிழிலே நியாய நடையில் சிறந்த நூல்கள் எனச் சிவஞானசித்தியார் சுபக்க, பரபக்கங்கள், சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவப் பிரகாசம் முதலியனவும்; நீலகேசி, குண்டலகேசி, சூத்திரபிடகம், சித்தாந்தத் தொகை முதலிய நூல்களும் நியாயஞ் சிறந்த நூல்கள்" என்று தமது நூலில் குறிப் பிட்டதை கைலாசபதி அவர்கள் விதந்துரைத்துள்ளார்.

### *5.3.2 சித்தியாரில் அளவையியல்*

சிவஞானசித்தியாரில் "அளவை காண்டல் கருதலுரை அபாவம் பொரு ளொப் பாறென்பர்" என்னுஞ் செய்யுள் முதலாக "ஈண்டு பக்கப் போலிநான் கேதுப் போலியொரு மூன்றாய், வேண்டுமெமு மூன்றாகும்" என்னுஞ் செய்யுள் இறுவா யாகப் பதின்னான்கு செய்யுட்களில் அளவை இலக்கணம் கூறப்பட்டுள்ளது என்கி றார் கைலாசபதி அவர்கள். மேலும் அவர் சைவசாஸ்திரங்களிலே கூறப்படும் பதி, பசு, பாசங்களினி லட்சணங்களையும், சிவப்பேறு அடைவார்க்குரிய சாதனங்க ளையும் சிவப் பேற்றினியல்பினையும் எடுத்துக்கூறுவதற்கும், உலோகாயுதம், பௌத்தம் முதலாஞ் சமயவாதிகள் மதங்களைக் கண்டித்தொதுக்குவதற்கும் எழுந்த சித்தியாரில் பிறர் மதம் களைதற்கும், தம்மதம் நாட்டுதற்கும் ஆதார மான பிரமாணங்கள் அளவை என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளன என்கிறார்[18]

### *5.3.3 கைலாசபதி அவர்களின் அளவைப்பிரமாணம்*

பின்னாட்களில் கைலாசபதி அவர்கள் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், ஸ்மிருதி, சுருதி, கலை, சாட்சாத்காரம் முதலிய ஏழு பிரமாணங்களையே குறிப்பிடுகின்றார்.(பக்.118ம், அநுபந்தம் Iம் பார்க்க) இவற்றுள் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் பற்றிச் சித்தியார் போன்ற நூல்கள் அதிகம் பேசுவதால் நாம் அவற்றுக்கு அதிக விளக்கம் கொடுக்கத் தேவையில்லை.[19]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.3.3.1 புத்திவிருத்தியும் அளவைப்பிரமாணமும்

புத்திவிருத்தித் தளத்தில் வைத்து அளவைப் பிரமாணத்தைக் கைலாசபதி அவர்கள் காட்டியதும் நம் சிந்தனைக்குரியது. அதாவது,

> 7 பிரமாணம்
>
> பித்தியட்சம் - அநுமானம் - ஆகமம் - மிருதி - சுருதி - கலை (எழுச்சி) - சாட்சாத்காரம்.
>
> சம்ஸ்கார நோக்கில் தர்மத்துறை பிரத்தியடசம்.
>
> பண்பாட்டின் நோக்கோடு கூடிய அர்த்தத்துறை அநுமானம்.
>
> அத்துறை நோக்கு முதிர்ந்தவழி அநுமானம் லாகவம் தர்மநோக்கோடு கூடிய காமத்துறை ஆகமம்.
>
> முதிர்ந்தோர் ஆப்தத்துவ ரகசியம் அறிவர். அர்த்த நோக்கோடு கூடிய மோக்ஷத்துறை மிருதி. (இவ்வாறு சிந்திக்கப்பட்டது அல்லது யோசிக்கப்பட்டது. பெரிய பிரமாணம்) "ஈறினல்லறம் பார்த்திசைத்தேன்."
>
> காமநோக்கோடு கூடிய அமிர்தத்துறை சுருதி.
>
> மோக்ஷநோக்கோடு கூடிய ஞானத்துறை சிந்தித்தல், கலை.
>
> அமிர்த நோக்கோடு கூடிய சித்தாந்தத்துறை சாட்சாத்காரம்.[21]

என்கிறார். இதனைப் பின்வரும் வரைபடம் மூலமும் நாம் காட்டலாம்:

(பக்.160 ஐ பார்க்க)

### 5.3.3.2 புத்திவிருத்தியும் உபாங்கமும்

கைலாசபதி அவர்களின் ஏழு பிரமாணங்களை விளங்குவதற்கு அடித்தளமாக அவர் உபாங்கங்கள் பற்றிக் கூறியகருத்துக்களைச் சிறிது உற்று நோக்குதல் வேண்டும். உபாங்கங்களுள் நியாயம், ஸ்மிருதி என்பன எமது விசேட கவனத்துக்குரியவை. புத்திவிருத்திப்படத்தில் 10ம் தளமான தர்மம், 11ம் தளமான அர்த்தம், 13ம் தளமான மோட்சம், 17ம் தளமான முடிந்த சத்தியம் ஆகிய நான்கும் அகங்கார விருத்தியின் சத்தியசம்பந்தமானவை.[22] சத்தியம் சம்பந்தமான அகங்காரவிருத்திப் படியில் விளக்கம் பெற்ற ஒருவரே புத்திவிருத்தியிலுள்ள இந்த நான்கு தளங்களையும் பற்றிய விரிவான விளக்கத்தைப் பெற முடியும். அதனைக் கைலாசபதி அவர்கள்,

> அர்த்தத்தை ஸ்திரப்படுத்த தர்மம், அர்த்தம்,மோக்ஷம் முடிந்தசத்தியம் நாலையும் பார்த்தது உபாங்கம்.[23]

என்றார். அர்த்தம் பொருளோடு சம்பந்தமானது. பொருள் என்பது மெய்ப்பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திவிருத்தித் தளங்கள்

**ஏழு பிரமாணம்**

சித்தாந்தம்

ஞானம்

அமிர்தம்

மோக்ஷம்

காமம்

அர்த்தம்

தர்மம்

பண்பாடு

சம்ஸ்காரம்

நாகரிகம்

நல்லார்வம்


பொதுவிவேகம்

கலைஞானம்

சுட்டிப்பான கிரகிப்பு

சீவனநோக்கு

கேவலக்கிடை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட சகல பொருள்களையும் குறிக்கும். பொருள்பற்றிய தெளிவற்ற பார்வை எமக்குப் பல சந்தேகங்களையும், ஆன்மீகப்பிரயாணம் செய்வதற்கு தடைக ளையும் ஏற்படுத்தும். அதனால் அதனை ஸ்திரப்படுத்த வேண்டும். அதற்கு உபகாரமான உபவேதம் மீமாம்சை. அது பூர்வ மீமாம்சை, உத்தரமீமாம்சை என இருவகைப்படும். இரண்டும் (பூர்வம், உத்தரம்) ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல ஒன்றுக்கொன்று ஆதாரமானவை. பூர்வ மீமாம்சையைச் செய்தவர் சைமினி. ஆனால் "சைமினி செப்பும் நூல்" என சித்தியார் குறிக்கும் நூலுக்கு உரை செய்த பாட்டன், பிரபாகரன் ஆகியோர் மாறிப் பொருள் கொண்டு கண்டிக்கத்தக்க மதங்களாக்கினர். இன்றைய கல்விமான்கள் கூட சைமினியின் நூலை இவ்விருவரின் கண்களின் ஊடாகப் பார்த்துக் குறைத்து மதிப்பீடு செய்கிறார்கள். இதற்கு அடிகோலிய சங்கராச்சாரியார். அவர் தமது உத்தரமீமாம்சா பாஷியத்தில் சைமினியின் நூலை சற்றுத் தாழ்த்தியுள்ளார். சங்கரர் சமகால மீமாம்ச வித்தகராகிய மண்டன மிசிரரை வாதில் வென்றார் என்ற கதையும் உண்டு. சங்கரருக்குப் பின் ஷட் தரிசனங்கள் என்ற பகுப்புத் தோன் றியது. உண்மையில் உபாங்கங்களில் புராணத்தையும், ஸ்மிருதியையும் நீக்கி விட்டு நியாயத்தை நியாயம், சைசேடிகம் என இரண்டாகவும், மீமாம்சையை பூர்வம், உத்தரம் என இரண்டாகவும் வகைப்படுத்தினர். அது உபாங்கம் பற்றிய நோக்குப் பிறழ்வால் ஏற்பட்டது என்பார் (இதன் விரிவு 3.5 பக்கம் 105, 106 இல் உண்டு. படவிளக்கத்தையும் நோக்குக)

உபாங்கங்களுள் அதிஉன்னத ஸ்தானத்தை நியாயத்திற்கு வழங்கு கிறார் கைலாசபதி அவர்கள். சத்தியம் தெரிந்த ஒருவன் அர்த்தத்தை ஸ்திரப்ப டுத்த முடிந்த சத்தியத்தை நோக்கியதால் பெறப்பட்ட காட்சியே நியாயம். பிற் கால அறிஞரோ அக்காட்சியில்லாது கௌதமரின் நியாய சூத்திரங்களையும் கணாதரின் வைசேடிய சூத்திரங்களையும் உரையாசிரியர்களின் விளக்கத் தின்படி பொருள் கொண்டு கண்டிக்கலாயினர். சிவஞானமுனிவர் போன்ற உரை யாசிரியர்களும் இப்போக்கில் சென்று தமது உரையில் இடையிடையே இம் மதங்களைக் கண்டிக்கின்றனர். அதற்குக் காரணம் என்ன என்பதற்கு கைலாச பதி அவர்கள்,

> **முடிந்த சத்தியத்தின் நோக்குத் தெரிந்துதான் நியாயம் ஆராய வேண்டும். சித்தாந்தம் போதாது.**[24]

என்றார். சித்தாந்தப் போக்கே இல்லாமல் வெறும் புத்தகப் படிப்பால் பெற்ற அறிவைக் கொண்டு சித்தாந்த சாத்திரங்களுக்கு உரை எழுதும்போது நியாயம் சம்பந்தமான பிழைகளை உரையாசிரியர்கள் விட்டுள்ளனர். கைலாசபதி அவர்களின் மேல் கூறப்பட்ட சிந்தனை சரியெனவே தோன்றுகிறது.

பிரமாணங்களான பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் பற்றிய விடயங்க ளைப் பல நூல்கள் பலவாறாக எடுத்தியம்புகின்றன. க. சிவானந்தமூர்த்தி அவர் களும் தமது முதுகலைமாணி ஆய்வுக்கட்டுரையில் இவைபற்றிய விரிவான விளக்கத்தைத் தந்துள்ளார்.[25] எனவே அவைபற்றிய மேலதிக விளக்கத்தைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்து ஸ்மிருதி முதல் சாட்சாத்காரம் வரையான நான்கு பிரமாணங்களைப் பற்றிக் கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டதை எம் சிற்றறிவுக்கு எட்டியவரை சிறிது விளக்க முனைகிறோம்.

### *5.3.3.3 ஸ்மிருதி*

நூலறிவு மட்டும் உடைய நாம் ஸ்மிருதி என்றவுடன் மனுமுதலிய 18 ஸ்மிருதிகளையே நினைக்கிறோம். ஆனால் கைலாசபதி அவர்களோ மூலக்கருத்துக்குச் சென்று, தூய உள்ளத்தால் நினைக்கப்பட்டது ஸ்மிருதி என வரைவிலக்கணப் படுத்துகிறார். அதனை மு.கந்தையா அவர்களும் "ஸ்மிருதி சிந்தனையிலே பட்டது; சாதாரண சிந்தனைக்கு அப்பாற்பட்ட விஷயம் காட்சியாகத் தெரிவது தான் ஸ்மிருதி ஆகும். எனவே ஸ்மிருதி ஒருவர் கண்டது; அவருக்கு அது ஆகமப் பிரமாணத்திலும் விசேஷமானது" என்றார்.[26]

மனோவிருத்தியாகிய தவம் முற்றியவர்களுக்கே மனம் தூய்மையுறும். அப்படித் தூய்மை அடைந்தவர்களின் சிந்தனைகள் பிரமாணமாக முனிவர்களால் கணிக்கப்பட்டன. மனு போன்ற தர்மநூல்கள் முனிவர்களுக்கு நேரடியாக வந்த ஸ்மிருதி எனினும், அவை சீடர் வழி வரும்போது ஆகமப்பிரமாணமாக, அதாவது நூற்பிரமாணமாகவே கணிக்கப்படும். நூல்வடிவிலுள்ள ஸ்மிருதியையும், கைலா சபதி அவர்கள் கூறும் ஸ்மிருதியையும் நாம் வேறுபடுத்திக் காணத்தெரிய வேண் டும். இராமாயணத்தில் இராமனின் தூய உள்ளத்தில் வாலிக்கு மறைந்து நின்று பாணம் விடவேண்டும் என்பது ஸ்மிருதியாகத் தோன்றியது. ஸ்மிருதியின் தத்துவத்தை விளங்காதவர்கள் இராமரைக் குறைசொல்லி விவாதிப்பர். விளங் கியவர்கள் நிறை கூறுவர். இதேபோலத்தான் கைலாசபதி அவர்களின் ஸ்மிரு தியும்.

### *5.3.3.4 சுருதி*

சித்தவிருத்தியில் ஆரியத்துவம் கைவரப்பெற்றவரே மந்திரதிருஷ்டா ஆகின்றனர். அவர்களுக்கே சுருதி கேட்கும். எனவே சுருதியே உண்மையான பிரமாணம் என்பது கைலாசபதி அவர்களின் கருத்து. அதனால்தான் கடல் போலப்பரந்து கிடக்கும் நாத மயமான வேதத்தைக் கேட்கும் அவர்களுக்கு வேதம் மிகப்பெரிய பிரமாணம் என விளக்கியுள்ளார். சுருதியோடு ஸ்மிருதியை ஒப்பிடும் போது ஸ்மிருதி 2ம் பட்சமான பிரமாணம் என்பர். ஆனால் இன்று சுருதி என்றவுடன் எழுதப்பட்டு அச்சிலுள்ள வேதமந்திர பாகத்தையே நம் ஆய்வாளர் நினைக்கின்றனர். அத்துடன் இக்கலியுகத்தில் மந்திரதிருஷ்டாக்கள் பூவுலகத் திற்கு, வாரார் என்ற உண்மையறியாது ஏன் இன்று சுருதி கேட்கக் கூடியவர்கள் இல்லை என்று ஐய வினா எழுப்பி இவை எல்லாம் வெறும் போலி விளக்கம் எனத்தள்ளி விடுகின்றனர். தர்க்க சாஸ்திரம் படித்தோர் அரிஸ்ரோட்டலினதும், நியாய வைசேடிய தரிசனங்களினதும் பிரமாணங்களைப் பாடமாக ஒப்புவிக்கக் கூடியவராக இருக்கின்றனரே அன்றி அதற்கு மேலே சிந்தனையாளர்கள் அகக் காட்சியினால் கண்ட பிரமாணங்களை ஒப்புக்கொள்ளத் தயங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் வெளிவந்த புத்தகங்களில் சுருதி பற்றிய சுமாராக மதிக்கத்தக்க கருத்துக்கள் தெய்வத்தின் குரல் ஐந்து பாகத்திலும் ஆங்காங்கு காஞ்சிப் பெரியவர்களால் விளக்கப்பட்டுள்ளன. கைலாசபதி அவர்கள் 1950க்கு முன்னரே எண்வகைப் பிரமாணங்களைக் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் அதாவது 1952ற்குப் பின் ஆழமான சிந்தனை எட்டிய போது, காமநோக்கோடு கூடிய அமிர்தத்துறை சுருதி என்கிறார்.

### *5.3.3.5 கலை*

தற்காலத்தில் கலைகள் என்ற பதம் ஆடல் பாடல் கலைகள் உட்பட 64 கலைகளையே குறிக்கின்றது. ஆனால் கைலாசபதி அவர்களோ இன்னும் ஒரு படி உயர்ந்து கலை என்பதற்கு கலிப்பு அல்லது எழுச்சி என்ற விசேட பொருள் கொள்கிறார். அதாவது உள்ளிருந்து எழுவது எதுவோ அதுவே கலை அல்லது கலிப்பு என்றார். தேவாரங்களில் கூட "எட்டெட்டுக்கலைகள்", என்ற தொடர்கள் வருகின்றன. அங்கு பேசப்படும் கலைகளுக்கும், இங்கு சாதாரணமாகப் பேசப் படும் கலைகளுக்கும் வேறுபாடு உண்டு அவர்,

**பஞ்சகலை முறை சோடச கலா பிராசாதம்**

**38 கலாப் பிராசாதம்: கலைகளே பலவகை**

**5கலை தனித்தும், மற்றும் நாலோடும் சேர்ந்து 25 ஆகும்.**

**25ம் எழுச்சி. பிறகு எழுச்சிகள் சேர்ந்து வரும் சாதகம் தாதுக்கள் போல.**[27] என்கிறார்.

### *5.3.3.6 சாட்சாத்காரம்*

கைலாசபதி அவர்கள் தமது பிரமாணங்களில் இறுதிப்பிரமாணமாக சாட்சாத்காரத்தைக் கூறுகிறார். சாட்சாத்காரம் அனுபூதி என்றும் சத்துவாபத்தி என்றும் விளக்கப்படுகிறது. இது ஸ + அக்ஷ + √க்ரு என்ற சொற்களை அடிப்ப டையாகக் கொண்ட பெயர்ச்சொல். கண்முன்னே நேரே தெரியப் பண்ணுவது என்ற பொருளைத்தரும். அதாவது நம் ஊனக்கண் முன்னே உலகப் பொருட்கள் நேரடியாகத் தெரிவது போல ஞானக்கண் முன்னே விடயங்கள் நேரடிக்காட்சி யாகத் தெரிவது சாட்சாத்காரம் எனப்படும். இது திருவருளின் நேரடி ஒளியின் வழியாக அறிவது. ஐயா என அலறியுங் காண முடியாத வேதங்கள் வர்ணம், பதம், மந்திரம் ஆகிய சொற்பிரபஞ்சத்தைச் சார்ந்தவை. நாதமயமான சொற் பிரபஞ்சத்துக்கு மேற்பட்டதாகிய சிவத்தின் பரிபூரண கிருபாகடாட்சம் பெற்றவனே சாட்சாத்காரம் என்ற பிரமாணத்தின் மூலப்பொருளை அறியவல்லவன். சொற் பிரபஞ்சத்துக்கு உட்பட்ட நாங்கள் விளக்கமுடியாது. அவர் புத்திவிருத்தியின்

**அமிர்த நோக்கோடு கூடிய சித்தாந்தத்துறை சாட்சாத்காரம்.**[28]

என்கிறார். புத்திவிருத்திப் படத்தில் அமிர்தத்தின் 1ம் துறையில் தொடங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடு சித்தாந்த நோக்கை முட்டுவதைக் காண்க. இத்தளத்தில் நிற்கும் திறமை பெற்றவர்களே சாட்சாத்காரத்தை பிரமாணமாகக் கொள்ளமுடியும். அவர்களே மெய்ப்பொருளை நேரேகாணும் வல்லமை பெற்றவர்கள்.

## *5.4. விஞ்ஞான, கணித சிந்தனைகள்*

17ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தெக்காட் (Decartes) போன்ற சிந்தனை யாளர்கள் சடஉலக ஆராய்ச்சியில் ஈடுபட்டு சித்துலகைப் பற்றிய சிந்தனையை முற்றாகக் கைவிட்டனர். அத்தகைய கணித தத்துவ மரபின் வழியில் கல்வி கற்ற கைலாசபதி அவர்கள் அதன் குறைபாடுகளை நன்கு உணர்ந்து புதுமையான சில விஞ்ஞான கணித சிந்தனைகளை முன்வைத்துள்ளார். அதனை இப்பகுதி யில் சிறிது விளக்கலாம் எனத் துணிகிறோம்.

### *5.4.1 விஞ்ஞான நோக்கு - விமர்சனம்*

உலகம் பற்றிய கருத்துக்களைக் கைலாசபதி அவர்கள் கூறும்போது,

> **பலர்க்குமொப்ப முடிந்த முடிபுகளே சாத்திர முடிபுகள் என்பது விஞ்ஞா னிகள் கொள்கை. பிரகிருதி முதலிய ஆன்ம தத்துவங்கள் விகிர்திகள் பலர்க்கு மொப்ப முடிந்தவைகள். பலருடைய நோக்கு ஒருவிதப்பட்டி ருக்கிறது என்றபடி.**[29]

என்கிறார். வைதிகன் சடப்பொருள்களை இயக்கும் தெய்வங்களை உபாசித்து அவற்றின் அருள்கொண்டு சடசக்திகளைத் தன்வசமாக்குகிறான். மிலேச்ச விஞ் ஞானியோ தன் சொந்தப் புத்தியில் பூரணநம்பிக்கை வைத்து இயற்கைச் சக்தி களை அடக்கி தனக்குப் புகழ் தேடுகிறான். சிலசமயம் அவன் ஒன்று நினைக்க அதற்கு எதிர்ப்பலனும் ஏற்படுவதும் உண்டு. ஆனால் வைதிகன் வேதவழியில் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள சம்பந்தத்தைக் கண்டு சொல்லின் மூலத்தை - பீஜத்தை உணர்ந்து அதன் காரணமாக சடசக்திகளைத் தன்விருப் பப்படி வசப்படுத்துகிறான். வேதம் கூறும் வழியில் - அறிவு மார்க்கத்தில் - செயல் புரியத் தெரியாதவன், பேயை மந்திரசக்தியால் அடக்கி வேலைவாங்குபவன், சிலசமயம் அப்பேயினாலேயே உயிரிழப்பது போல விஞ்ஞானமும் தன்னை ஆக்கினவர்களுக்கே சிலசமயம் பாரிய தீமைகளையும் கொடுக்கலாம் என்றார்.[30]

### *5.4.2 ஆயுர்வேதம்*

மருத்துவம் பற்றிக் கைலாசபதி அவர்கள் கூறும்போது ஆயுர்வேதத்துக்கு முன்னுரிமை கொடுக்கிறார். அதாவது ஐரோப்பிய விஞ்ஞானிகள் விஞ்ஞான வளர்ச்சி காரணமாகக் கிருமிகளே நோய்களுக்குக் காரணம் என்ற லூயிபாஸ்டரின் கொள்கையை மனங்கொண்டு கிருமி அழிக்கும் மருந்துகளைக் கோடிக்கணக்கில் உற்பத்தியாக்கினர். சில காலத்தின் பின்னர் அம்மருந்துகள் சில சக்தி இழந்துவிட்டன எனக் கவலையுற்றனர். ஆனால் கைலாசபதி அவர்களோ மருந்து என்றால் ஆயுர்வேதமே என்றும் அது எக்காலத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும் என்றும் உறுதியாகக் கூறுகிறார். ஆயுர்வேதம் உபவேதங்களுள் ஒன்று. அது தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆயுர்வேத வைத்தியம் புத்தி விருத்தியில் அதி உயர்ந்த நிலையில் நிற்கும் ரிஷிகளினால், அதாவது அகத்தியர் போன்றவர்களால் தர்மசிந்தனையோடு செய்யப்பட்டது. அதேபோல் சித்த வைத்தியமும் தர்மத்துக்குக் கீழே சீவனநோக்கில் நிற்போரை மனதில் வைத்துத் தர்மம் தவறாமல் எழுதப்பட்டது. அதாவது கேட்போரைக் கருத்தில் கொண்டு இலகு நடையில் - கொச்சைப்பாஷையில் - எழுதப்பட்டது என்றார். வேதம் அறிந்த ரிஷிகள் மூலிகைகளின் இயல்பை அகக்காட்சியில் கண்டு இரக்க மேலீட்டால் தகுதியானவர்களுக்கு அதன் மகிமையைக் காட்டிச் சென்றனர். அக்காட்சி பெற்ற பெரியோர் அருகிப் போன கலிகாலத்தின் பிற்பகுதியில் இந்திய ஆயுள்வேத நூல் உரையாசிரியர்கள் பரிசோதனை முறைகளையும், செயல் முறை அனுபவத்தையும் சேர்த்து வாகடங்களை ஆக்கியிருக்கலாம்.

*பொருண்மோ கித்து வாங்கியிடும் புன்மை யாளர் கலை மறையின்*

*அருள்பாத் துணை வறியாதார் மருந்தொன் றறியாரவனிதனில்*

*மருளாய்ப் பொருளிற் றடுமாறு மனிதர் பிணியின் வகையதுவும்*

*தெருளா ரவர்கை மருந்துண்போ ரொழியா நோயிலுழல்வர் தினம்*[31]

என்ற பரராசசேகர மரபை அறிந்தவர். ஆனால் காலத்தின் போக்கை உணர்ந்த கைலாசபதி அவர்கள் புகழ் பெற்ற வைத்தியன் தன் செலவிற்கு நீதியான பெறுமதியைக் கேட்டுவாங்குவது நியாயம் எனப் பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளைக்குக் கூறியதாக முதறிஞர் ஒருவர் மூலம் அறிகிறோம்.

### *5.4.3 எண்கொள்கை*

வேதரிஷிகள் பைதகரசின் தேற்றம் முதலிய கேத்திரகணித உண்மைகளையும், வானசாஸ்திரத்துக்கு வேண்டிய அட்சரகணித உண்மைகளையும் அறிந்தேயிருந்தனர். அப்படிப்பட்ட ரிஷிகள் ஏன் யூக்கிளிட் போலவோ அல்லது தற்கால கணித நிபுணர்களைப் போலவோ கணிதத்தை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவில்லை எனக் கேள்வி எழலாம். அதற்குக் கைலாசபதி அவர்கள் வைதிகன் ஒருவிடயம் தன்னை மரணமற்ற பெருவாழ்வுக்கு, அதாவது அமரத்துவத்துக்கு, இட்டுச்செல்லுமோ என்பதைக் குறியாக உடையவன். அதனால் அவன் வெறும் அறிவு வியப்புக்கு (Intellectual Curiosity) மட்டும் வழி வகுக்கும் விஞ்ஞானத்தில் தன்னை ஈடுபடுத்தமாட்டான் என்கிறார். விடயங்களைப் பல நூல்கள் பலவாறாக எடுத்தியம்புகின்றன. நவீன கால நிபுணர் (இராமானுஜம் உட்பட) எண்கொள்கை பற்றி எல்லையின்றி ஆராய்ந்துள்ளனர். அவர்கள் முடிவிலி (Infinity) பற்றி அதிகம் எழுதியுள்ளனர். இந்திய சிந்தனைகளில் சங்கம், பதுமம், மகாபதுமம் என்று பதினெட்டுப் பூஜ்யம் உள்ள இலக்கம் வரை தான் கணித்துள்ளனர். அவர்களது வானசாஸ்திர கணிப்புக்கு இவ்வெல்லை போதும். முடிவிலியில் சிந்தனையைச் செலுத்துவது பயன்பாட்டுக்கு (Utility)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாதது என்பார் கைலாசபதி அவர்கள். கணிதமேதை இராமனுஜம் பற்றிக் கைலாசபதி அவர்கள் குறிப்பிடும் போது, நியூட்டனுடன் சேர்த்து, அன்னமய எழுச்சியில் வைத்து விளக்குகிறார். அன்னமயம் என்பது புத்திவிருத்திப் படத்தில் காட்டப்பட்ட எழுச்சிகளில் ஒன்று.

> **நியூட்டன் அன்னத்தை ஒரு துறையாக ஆராய்ந்தவர். அன்னத்துக்கு இடம் பல. எது பெரிது? எது சிறிது? இராமானுஜம் வியக்கத்தக்கவர். மற்றொரு நோக்குள்ளவன் மதிக்காமல் இருக்கலாம்.[32]**

என்றும்,

> **இராமானுஜம் திறமை கூட ஆழத்தில் தொடக்கம். இங்கே முடிக்கும் திறமையும் இருந்தது. அதனால் விட்டுக் கொடுக்காமல் அமைந்தது. இன்னும் ஆழத்தில் தொடங்குவோரிருக்கலாம். இங்கே இருக்க முடியாது.[33]**

என்றும் கூறியுள்ளார். நியூட்டன் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை மெய்யியல் பேராசிரியர் (Professor of Natural Philosophy) பதவி வகித்தவர். அக்காலத்தில் கணிதம் இயற்கை மெய்யியலின் ஒரு அம்சமாகவே கருதப் பட்டது. அதற்கெனத் தனித்துறை இருக்கவில்லை. அவர் இயற்கைப் பொருளின் ஆராய்ச்சியில் அன்ன எழுச்சியில் இவ்வுடலினது ஐம்புலன்களை அடிப்படை யாகக் கொண்டே ஆராய்ந்தவர் என்பதையே "அன்னத்தை ஒரு துறையாக ஆராய்ந்தவர்" என்கிறார் கைலாசபதி அவர்கள். அன்னம் என்பது இங்கு ஆராய்ச் சியைக் குறிக்கிறது. இவ்வாராய்ச்சிகள் சடப்பொருள் தொடங்கி மேலே மேலே நுட்பமான பொருள்களையும் ஆய்ந்து செல்லும். இதனோடு தொடர்புபடுத்தியே "இராமானுஜம் வியக்கத்தக்கவர்" என்கிறார். கணித மேதைகள் எப்படி மற்றவர்க ளினால் அறிய முடியாத உண்மைகளை அறிந்தார்கள் என்பது இற்றைவரை கணிதமெய்யியலில் ஒரு முக்கிய பிரச்சனையாகவே இருக்கிறது. அதற்கு பேட்றன்ட் றசல், (Betrand Russell) A.J.அயர் (Ayer) போன்றவர்கள் "எந்த மேதைகளுக்கும் மற்றவர்களிலும் பார்க்க விசேடமான விவேகமோ அல்லது மனமோ இல்லை" என்றும் அவர்கள் விலங்குகள் எப்படி இயற்கையிலேயே சில காட்சிகளைப் பெற்று வாழ்க்கையை நடத்துகின்றனவோ, அப்படியே விவேகி களின் கண்டுபிடிப்புக்களும் இயற்கையின் இயல்பூக்கமாகும் என்கிறார்கள். கன்று ஒன்று பிறந்த சில மணிநேரத்துக்குள் தாயின் முலையைத் தேடிப் பால் குடிப்பதைப் போலவே, விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்களும் எனக் கருது கின்றனர். ஆனால் நியூட்டனுக்கும் ஐன்ஸ்ரைனுக்கும், கன்றுக்கும் ஒரேவகை யான கண்டுபிடிப்பாற்றலா உண்டு? அதனை புறோவர் (Broewer) போன்ற சிந்தனையாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் 1912ல் கணித உட்பார்வை (Mathematical Intuition) என்ற ஒன்று உண்டு என்றும், அதுவே கணித மேதை கள் அற்புதமாகக் கண்டுபிடிக்கக் கூடிய உட்பார்வையை அவர்களுக்குத் தருகி றது என்றும் கூறினர். உயிர் அறிவை எவ்வாறு பெறுகின்றது என்ற ஆராய்ச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்ட முன்னவர்களை (றசல், அயர்) தார்க்கிக குழுவினர் என்றும், பிற்கூறிய புறோவர் போன்றவர்களை உட்காட்சிக் குழுவினர் என்றும் வகைப்படுத்துவர். ஆனால் இன்று புறோவரின் கருத்துக்களே செல்வாக்குப் பெற்று வருகின்றன. கைலாசபதி அவர்கள் இராமானுஜம், நியூட்டன், ஐன்ஸ்ரன் போன்றவர்கள் கண்டு பிடித்த விஞ்ஞான கணித உண்மைகளைப் புத்திவிருத்தியில் அந்தந்தத் துறைகளில் அதி உயர்ந்த படித்திறமைகளை அடையும்போது தோன்றுவன என்கிறார். அது தர்க்கரீதியாக, சீமெந்துக்கற்களை ஒவ்வொன்றாக அடுக்கிக் கட்டப்பட்ட சுவர் போன்றதல்ல; ஓர் அகப்பார்வையின் வீச்சில் உண்மை நேரே காணப்பட்டது.

### *5.4.4 அண்டவியற் கருத்துக்கள்*

சென்ற நூற்றாண்டுத் தொடக்கத்தில் அண்டவியல் (Cosmology) பற்றிய சிந்தனையில் பூமியும் ஏதோ சில கிரகங்களும், நட்சத்திரங்களுமே உண்டு என விஞ்ஞானிகள் நம்பினர். ஆனால் இந்நூற்றாண்டின் ஆரம்ப 1/4 பகுதிகளில் அண்ட அமைப்புப் பற்றிய கருத்துக்கள் மாறின. அதன் காரணமாகக் கண்ணால் பார்க்க முடியாத கிரகங்கள், நட்சத்திரங்கள் பற்றிய கருத்துக்கள் முகிழ்த்தன. மணிவாசகர் கூட, அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் / அளப்பு அரும் தன்மை வளப்பெரும் காட்சி / ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில்பகரின் / நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன.[34]

என்கிறார். வானசாஸ்திரம் ஜேம்ஸ் ஜீன்ஸ் முதல் ஹோக்கின்ஸ் வரை அதி வேகத்துடன் முன்னேறியுள்ளது. மாணிக்கவாசகரின் "நூற்றொரு கோடி" வெறும் கற்பனை என்று இன்றைய இளைய தலைமுறையினர் குறிப்பிடலாம். ஆனால் கைலாசபதி அவர்களோ காலமும் இடமும் பற்றி அதிகம் சிந்தித்தவர். சிந்தனைகளில்,

I இடமும் காலமும் வேறு வேறு எனக் கொண்டிருந்தனர். இடவேறு பாடுகள் வேகத்தைப் பொறுத்தவை. வெகு தூரத்துள்ளவைகள் என்று நாம் வைத்துக் கொண்டே பொருள்கள் அதிவேகிக்கு ஓரிடத்துத் தோன்றுகின்றன. இங்ஙனமே வேறுபட்ட காலங்களும் ஒன்றுபடுகின்றன.

II வேகத்தாற் காலஞ் சுருங்க இடமுஞ் சுருங்குகின்றது. ஆகவே, காலமும் இடமும் தம்முள் ஒன்றுபட்டவை. இது ஐன்ஸ்ரைன் கொள்கை போலும்.

III துருவ வெள்ளியை நோக்கி வடக்குதிசை சொல்லுகிறோம். துருவத்தை அடைந்தவனுக்கு வடதிசை யாது? அத்திசை மேல் திசையாய் மாறு கிறது.

IV பூவுலகதிசையை வைத்துக்கொண்டு அதனையடக்கிய அண்டத்துக்குத் திசைகூற முடியாது; பூவுலகத்துட்பட்ட தீவின் திசையை வைத்துக் கொண்டு, பூவுலகத்துக்கு திசை கூறமுடியாது.

என்றும், மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டத்தின் கூறே பிண்டம். பிண்டத்தை அறிந்தவன் அண்டத்தை அறிகிறான். அண்டத்தை ஆராய்கிறவன் இப்பிண்டம் எங்கிருந்து எப்படி வந்தது என்று ஆராய்கிறான்.[35]

என்றும் கூறியுள்ளார். சிவஞான முனிவரும் தமது மாபாடியத்தில் அண்டங் களினியல்பு பற்றி எழுதியுள்ளார். அவர் "கற்பந்தோறும் படைப்பு வேறுபடுதல்" பற்றி, ஆகமங்களிற் பிரமாண்டத்தின் வகையளவு சிறுபான்மை ஒன்றற் கொன்று வேறுபடக் கூறுமாயினுந் தொகையளவு நூறு கோடி யோசனை யென்பது "எல்லா வாகமங்கட்குந் துணிபெனக் கொள்க" என்கிறார். இதே கருத்தைக் கைலாசபதி அவர்களும் உள்வாங்கி வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் அற்ப வேறுபாட டால் சிறிது சிறிது வேறுபடும் என்கிறார். இட, காலத் தொடர்பு (Spacio - Temporal Context) பற்றி 20ம் நூற்றாண்டில் சிந்தித்த - ஐன்ஸ்ரைனுடைய கருத்துக்களைக் கைலாசபதி அவர்கள் சுட்டியுள்ளார். அவர் பூமியில் நாம் கொண்டுள்ள திசைபற்றிய சிந்தனைகளை வைத்துக்கொண்டு அண்டத்துக்கு மேல்திசை, கீழ்த்திசை என்ற வேறுபாடுகளைக் கூறமுடியாது என்கிறார்.

அண்டம், புவனம் என்பதற்கு சாத்திரங்களைக் கற்றோர் வேறுபாடு காட்டுவது அரிது. ஆனால் கைலாசபதி அவர்களோ புவனங்கள் அண்டங்களின் வேறானவையல்ல. உரத்துத்தரிக்கையில் பல வேறுபாடுகள் உண்டு. அதனைக் குறிப்பது புவனம். பிருதிவிக்கு 108 புவனம். திசைக்குப் பத்தாக பத்துத்திசைக்கு 100 புவனம். 8 புவனம் பொதுவானவை. (காலாக்கினி உருத்திர புவனம் முதலானவை)

கிழக்குத் திசைக்கு 10 புவனத்தில் ஒன்றை எடுத்துக் கொண்டால் அது ஏனைய 9 திசையிலுள்ள ஒவ்வோர் புவனத்தோடு கூடியிருக்கும். ஆகவே பத்து அம்சமுடையதாம். அது பொது எட்டோடும் கூடியிருக்கும். இப்பதினெட்டு அம்சமுங் கூடினவன் பிருதுவி அண்டமொன்றிலுள்ள மனிதன். பத்துத் திசையி லுள்ள பத்துப்புவனங்கள் தம்முள் மாறிக் கூடுவதால் $10^{10}$ ஆகின்றது. ஆகவே ஆயிரங்கோடி பேதம் உரத்துத்தரிக்கையில் உண்டாகிறது. ஆயிரங்கோடி பேத முள்ள மனிதர்கள் பிருதிவியில் தோன்றுகிறார்கள். ஒவ்வொருவர்க்கு ஒவ்வோர் அண்டமாக ஆயிரங்கோடி அண்டமாகிறது.[36]

என்கிறார். இத்துறையில் மிகமிக நவீன விஞ்ஞான சிந்தனைகளைக் கைலாசபதி அவர்கள் கூறியதால் ஏதோ உண்மையிருக்கலாம் என நம்பி ஆராய்ச்சியை மேற்கொண்டால் அதனால் ஒப்பற்ற பயன் விளையும் என நம்பு கிறோம். இதுபோலவே அவரது கணிதக் குறிப்புக்களும் ஆழ்ந்து சித்தித்தற் குரியவை. அவை தகவுடையோர் சிந்தனைக்குரியவை ஆகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்

01. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், பொ.கைலாசபதி அவர்களின் சிந்த னைகள், ப.606, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1994.

02. திருவள்ளுவர், திருக்குறள், அதி. 39.

03 i) Francois Gautier, Rewriting Indian History, Vikas, Delhi, 1996

ii) கொன்றாட் எல்ஸ்ற் அயோத்தியியும் பின்னரும், 1991

பிரிவினை வாதத்தை எடுத்துக்கொள்வோம். கைபர் கணவாய் ஊடாக ஆரியர் படையெடுத்து வந்தனர் என்ற வரலாற்றுத் திரிபு மதச்சார்பற்ற வாதம், சாதீயம்.'.அப்பெக்காரிசும் என்ற கருத்தியல்களின் மீது கனமான தாக்கத்தை விளைவித்துள்ளது.

உலக வரலாற்றிலேயே, வேறெங்காவது வரலாறு எழுதுதல் இப்படி நீண்ட கால அரசியல் தத்துவத்துடனும், குறுகிய அரசியற் சமன்பாடுகளுடனும் பின்னிப்பிணைந்திருக்கவில்லை. இதற்கொரு காரணம் இந்திய வரலாற் றில் பெரும் பகுதி அடிப்படையிலேயே பிழையானது என்றும் விவாதத்துக் குரியவை என்றும் கணிக்கப்பட்டுள்ளது; அது சரியான 'படவரைவு'க் குட்படுத்தப்படவில்லை. சிந்துவெளி எழுத்துக்கள் சரியாக வாசிக்கப்பட் டால், எத்தனையோ அறியப்படாத விடயங்கள் குறித்து ஒரு நிமிடத்தில் திடீர் முடிவுகள் எடுக்கப்படலாம். அன்றியும் பக்கச்சார்பான கருத்தியல் அடிப்படையில், நிச்சயமான முடிவுகளும் மறைக்கப்படுவதும் மறுக்கப்படு வதும் வேறு எந்த நாட்டு வரலாற்றிலும் காணமுடியாது. கருத்தியல் வற் புறுத்தல் காரணமாக இங்குதான் வரலாற்றுக்குள் இல்லாதவைகளையும் வலிந்து கண்டுபிடிக்கும் போக்கு அதிகமாய் இருக்கின்றது. காரணம் அவ்வளவு பெரியளவு வரலாறு தீர்மானிக்கப் படாமலிருப்பதும் மறுக்கப் படுவதும் இங்கே தான்.

Koenrad Elst ,Ayodhya and After,P. 117,Witness the cruicial role of the Aryan invasion theory in the seculari stand casteist/Ambedkarist ideologies, as earlier in the missionary and colonial ideologies. In fact I cannot think of any situation in world history where history writing was so intertwined with both long-term political philosophy and short-term political equations.

This is partly because an unusually large chunk of India's history is fundamentally under debate, either because it has not yet been mapped (so many unknowns may be decided on overnight once the Indus Script is conclusively deciphered), or because it has been questioned for ideological reasons even while well- established(like the denial of Islam's utterly destructive role.)Nowhere else can be read into history


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

according to one's ideological compulsions, because nowhere else is so much history so undecided and disputed.

p.354 The cherished belief of Hindu "chauvinists" that the Aryans were not outsiders who overran the Indus civilization...... The linguistic arguments for putting the home of the "Aryans" in Central Asia or Europe, have been found wanting, and the construction of a Dravidian interpretation of the Indus Script is not at all convincing. There is absolutely no archaeological proof for the Aryan theory. All the argumentations that had been given are, on closer analysis, cases of petitio principii. And there is the internal evidence of the Vedas, which seems to exclude aforeign homelandwithen human memory. Even the secularists and other enemies of Hindu Society who have been having so much propagandist fun with the Aryan invasion theory, will have to recognize its untenability, soon.* So India can uninhibitedly pride on a civilizational continuity since about 5000 years or more.

(* It is telling that the pioneering work on this topic by K.D.Sethna has been thoroughly ignored by India's politically-motivated historians. See his " The Problem Aryan Origins", "Karpasa in Prehistoric India...,1981, & Ancient India in a New Light,1990.)

04. சு.சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994, 70. மு.கு.

05. மேற்படி, ப. 72.

06. திருவள்ளுவர், திருக்குறள், அதி. 94.

07. சேக்கிழார், பெரியபுராணம், சமாஜ வெளியீடு, சென்னை, 1937, பக்.14- 20.

08. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 142 மு.கு.

09. மேற்படி, ப. 142.

10. மேற்படி, ப. 142.

11. மேற்படி, ப. 143.

12. பண்டிதர் மு. கந்தையா, சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி, யாழ்ப்பாணப் பல்கைலக்கழக வெளியீடு, 1998, பக். 354 - 356.

13. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 143 மு.கு.

14. மேற்படி, ப. 462.

15. மேற்படி, ப. 389.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. Toynbee, Study of History, Summery by D.C.Somervi11e, Vol. II page 266 Oxford University Press, 1955.

17. மு. திருவிளங்கம், சிவஞானசித்தியார், சுபக்கம், அளவையியல், யாழ்ப்பாண கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம், 1971, ப. 39.

18. ஞாயிறு, கலையாக்கம் கருதிய வெளியீடு, யாழ்ப்பாணக் கலாநிலையம், 1933.

19. மு. திருவிளங்கம், சிவஞானசித்தியார், செய். 7, பக். 14, மு.கு.

20. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம் 1994: ப. 372.

21. ச.பரநிருபசிங்கம், கைலாசபதியும் பொருளாராய்ச்சியும், பக்.12, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு, 1994.

22. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 412 மு.கு.

23. மேற்படி, பக். 300, 301.

24. மேற்படி ப. 411.

25. க.சிவானந்தமூர்த்தி, "சிவஞானசித்தியார் அடிப்படையில் சைவசித்தாந்தக் காட்சி" முதுகலை மாணிக்கட்டுரை ஆய்வு, (அச்சில் வராதது) 1988.

26. மு. கந்தையா, 1998: 479. மு.கு.

27 சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 411, 412 மு.கு.

28. மேற்படி, ப. 372.

29. மேற்படி, ப. 31.

30. ஆறுகளுக்குக் குறுக்காக அணைகட்டக்கூடாது என்பது ஸ்மிருதிக்ருத்து. அதற்கு ஆதரவாக "நியூஸ்வீக"(வார) சஞ்சிகையில் சூழல் என்ற பகுதியில் அன்ட்றூ மோர் (Andrew Murr) அவர்கள் பின்வருமாறு எழுது கிறார்: கெனபெக் (Kennebec) ஆற்றின் எட்வேர்ட் (Edwards) அணைக் கட்டுக்குக் கீழே அமைக்கப்பட்ட 60 அடிக்குகை வழியூடாக இவ் வாறு பாய்ந்து கடலை அடைகிறது. மின்கம்பனிக்குச் சொந்தமான அவ்வ ணையை உடைக்கும்படி அரச அதிகாரிகள் கட்டளையிட்டுள்ளனர். அமெ ரிக்காவிலுள்ள 75000 அணைக்கட்டுக்களில் பல உடைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் இன்னும் பல உடைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. காரணம், கிடைக்கும் அற்ப மின்சார இலாபத்துடன் ஒப்பிடுகையில் கிடைக்கும் நட்டம் மிகப்பெரியது என அரசாங்கம் உணர்ந்ததே.

31. பரராசசேகரம், சுரரோகநிதானம், பாடல் 108, லங்கா ஆயுர்வேதக் கல்லூரி, 1999.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. சு. சுசீந்திரராசா, ஆ.சபாரத்தினம், 1994: 348. மு.கு.

33. மேற்படி, ப. 382.

34. மாணிக்கவாசகர், திருவாசகம், திருஅண்டப் பகுதியின் 1 - 24 அடி.

35. சு. சுசீந்திரராசா, ஆ. சபாரத்தினம், 1994: 30, 31, 32. மு.கு.

36. மேற்படி, பக். 30, 31.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - ஆறு

# 6.0 நிறைவுரை

தொன்மையான காலத்திலிருந்தே இலங்கை சைவ பாரம்பரியம் மிக்க நாடாக விளங்குகின்றது. காலத்துக்குக்காலம் பல்வேறு காரணிகளால் அதற்குத் தளர்ச்சி ஏற்படலாயிற்று. அந்நிய மதமான கிறிஸ்தவ சமயத்தின் பல்வேறு பிரிவுகளும் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய நிலையில், மக்களைக் காப்பாற்றி சைவ பாரம்பரியத்தை நிலைநிறுத்தத் தோன்றியவரே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இவரது தன்னலமற்ற சமயப்பணிகள் சைவசமய மரபில் புதிய பாரம்பரியங்களை வளர்த்துச் செல்லக் காரணங்களாக அமைந்தன. நாவலர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட புதிய நடவடிக்கைகள் அவரினதும், அவர் தம் மாணவ பரம்பரையாலும், அபிமானிகளாலும் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. நாவலர்தம் பாரம்பரியங்களை வரன்முறையாகப் பேணிய மாணவ பரம்பரையில் தோன்றியவர்களுள் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும்ஒருவர். இவரது சிந்தனைகளைச் செழுமைப் படுத்தியவர் உப அதிபர் பொ.கைலாசபதி அவர்கள்.

கைலாசபதி அவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் தாம் பெற்ற அறிவினை ஒருங்கு திரட்டி விஞ்ஞானத்தினைக் கொண்டு ஆராய்ச்சி செய்தவர்,அதனிலும் மேலாக ஆன்மீகக் காட்சியையும் பெற்றவர். அச்சிந்தனைகளின் சொல்லுருவங்களுக்கு எழுத்துருக் கொடுத்தவர் பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை அவர்கள். தமிழ் இலக்கண இலக்கியத்தில் துறைபோன பண்டிதமணியைச் சைவசித்தாந்த சாகரத்தில் மூழ்கி முத்தெடுக்கச் செய்தவரும் அவரே. இப்படிப் பண்டிதமணி அவர்களைக் கவர்ந்த கைலாசபதி அவர்களை இன்றைய தலைமுறையினரும் உணரும் வகையில் இவ்வாய்வேடு அமைகிறது.

"கைலாசபதி அவர்களை யாரும் விளங்கவில்லை", "அவரது சிந்தனைகள் மூலமன்றி வேறு எவ்வகையாலும் அவரைப்பற்றிப் தெளிவான விளக்கம் பெறுதல் அரிது", "பண்டிதமணிக்கே விளங்காத அச்சிந்தனைகள் நமக்கு விளங்குமா"? போன்ற, - பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் பதிப்பாசிரியர் பேராசிரியர் சு.சுசீந்திரராசா அவர்கள் சுட்டிய ☐ கருத்துக்கள் இவ்வாய்வு பற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கத்தூண்டின.. பொருத்தமான வழிகாட்டலில் கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் இழையோடிக் கொண்டிருக்கும் ஆன்மீக தத்துவத்தை இயன்றவரை இவ்வாய்வேடு இனங்காண முற்படுகிறது.

மூன்று தசாப்தங்களாக திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் உபஅதிபராக இருந்த கைலாசபதி அவர்கள் தற்கால மேனாட்டுக் கல்வியில் சமகாலத்தவர் வியக்கும் அளவுக்கு திறமையும், பட்டமும் பெற்றவர். அவரது சிந்தனைகள் நவீன உலகத்தால் விளங்கமுடியாதவற்றுக்கு உண்மையான ஆத்மீக அடிப்படையில் விளக்கம் தருகின்றன. அவற்றை நாம் பன்முகப் பார்வையில் நோக்க வேண்டும்.

கைலாசபதி அவர்களின் சிந்தனைகளின் பகுப்பாய்வில் மொழி, சமயமும் மார்க்கமும், வேதம், வேதங்களை விளங்க உதவும் கருவிகளான வேதாங் கங்கள், வேத அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் அறிவில் உயர்வதற்கு உதவும் உபாங்கங்கள், வேத அடிப்படையில் சமூகத தையும் அரசியலையும் தமது உலகியல் வாழ்க்கைக்கு உறுதுணையாகக் கொள்ளும் உபவேதங்கள், வேத அறிவுக்கு உபகாரமான வழிநூல்கள், இயன்ற வரை தற்காலம் மட்டும் நெறி தவறாது எழுதப்பட்ட சார்பு நூல்கள், பகுத்தறிவின் அடிப்படையில் வளர்த்தெடுக்கப்பட்ட நூல் அறிவாளர்களுக்கு மட்டும் சுவை பயக்கும் அவைதிக நூல்கள், தற்காலக் கல்விமான்களைப் பாதிக்கும் மேற்புல மெய்யியல், தர்க்க, விஞ்ஞான, கணித சிந்தனைகள் ஆகிய அளவிடமுடியாத பரப்பளவைக் கொண்ட கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் முகிழ்த்த கருத்துக்கள் இயன்றவரை இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இன்னும் காட்டப்படாதவை பல.

கைலாசபதி அவர்களின் சைவபாரம்பரியம் நாவலர் அவர்களின் கல்விப் பரம்பரையில் தோன்றி, மெய்ஞ்ஞான குருவான இரத்தினசபாபதி உபாத்தியாயருடன் சங்கமித்து, பெரு நதியாக உருமாறியதன் பெறுபேறே கைலாசபதி அவர்களின் சிந்தனைகள். கல்விசார் நிலையில் இந்துப்பண்பாடு பற்றிய ஆய்வுகள் விரிவடைந்து வரும் இற்றைக் காலச் சூழ்நிலையில் கைலாசபதி சிந்தனைகள் பற்றிய ஆய்வு எமது பிரதேசப் பண்பாட்டிற்கு அவராற்றிய பங்கின் ஒரு பரிமாணத்தை இனங்காண உதவும் என நம்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலநூல்கள்

01. சுசீந்திரராசா .சு, சபாரத்தினம் .ஆ, பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1994.

02. பரநிருபசிங்கம் .ச, கைலாசபதியும் பொருளாராய்ச்சியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1994.

## ஏனைய தமிழ் நூல்கள்

01. அருணகிரிநாத சுவாமிகள்., கந்தரநுபூதி, வேதப்ரவசனமந்திர வெளியீடு, முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை, 1932.

02. அருணாசலம், திருக்களிற்றுப்படியார் மூலமும் பழைய அனுபூதி உரையும், சைவசித்தாந்த மகாசமாஜ 57வது மகாநாட்டு நினைவுமலர், சென்னை, 1962.

03. அண்ணா, 108 உபநிடதசாரம், இராமகிருஷ்ணமடம், சென்னை, 1991.

04. அவ்வை துரைசாமிப்பிள்ளை உரை, புறநானூறு, கழகப்பதிப்பு, 1947.

05. அப்பர் தேவாரம், குமரகுருபரன் பிள்ளை, ரீ.எம், ஸ்ரீவைகுண்டம், 1961

06. இளம்பூரணம், தொல்காப்பியம், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1953.

07. இராசநாயகம், "யக்ஞதரிசனம்", பண்டிதமணிசி. கணபதிப்பிள்ளை நினைவு மலர், பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை, 1989.

08. ஔவையார், ஆத்திசூடி, பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு. (ஆண்டு குறிப்பிடவில்லை)

09. ………… நல்வழி, பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு. (ஆண்டு குறிப்பிடவில்லை)

10. கணேசையர் .சி, தொல்காப்பியம், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1948.

11. கணபதிப்பிள்ளை .சி, தக்ஷகாண்ட உரை, பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடு, 1967.

12. …………………… சிந்தனைக்களஞ்சியம், பாராட்டு விழாச்சபை வெளியீடு, யாழ்ப்பாணம், 1987.

13. …………………… அன்பினைந்திணை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1983.

14. ………., அத்வைத சிந்தனை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1984.

15. …………சமயக்கட்டுரைகள், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1961.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ............... கம்பராமாயணக்காட்சிகள், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1980.

17. கச்சியப்பசிவாசாரியார், கந்தபுராணம், ஆறுமுகநாவலர் பதிப்பு, சென்னை, 1952.

18. கந்தையா.மு, சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி, யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1994.

19. கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1956.

20. காசிவாசி செந்திநாதையர், உபநிடத உபக்கிரமணிகை, செந்திநாதைய சுவாமிகள் அச்சியந்திரசாலை, திருப்பரங்குன்றம், 1907.

21. காளிமுத்து.கா, தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1983.

22. குமரகுருபரன் பிள்ளை, ரி. எம், மூவர்தேவாரம், திருப்பனந்தாள், காசிமடம், 1968.

23. கைலாசபதி .பொ, பாராட்டுவிழா மலர், பாராட்டு விழாச்சபை வெளியீடு, யாழ்ப்பாணம், 1958.

24. சங்கரபண்டிதர், சைவப்பிரகாசனம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 1925.

25. சங்கராசாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல், வானதி பதிப்பகம், சென்னை, 1978.

26. சபாரத்தினம்.ஆ, "பண்டிதமணியும் மேனாட்டு இலக்கிய சிந்தனையும்", பண்டிதமணி நினைவுமலர், (மேல் 07)

27. சிவஞான முனிவர், சிவஞான சித்தியார், பரபக்கம், திருவாடுதுறை ஆதீனம், 1991.

28. சிவஞான முனிவர், சிவஞான சித்தியார், திருவிளங்கம் .மு, புத்துரை, யா. கூ. து. நூ, வி. க. யாழ்ப்பாணம், 1925.

29. சிவஞானபாடியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1936.

30. சிவானந்தமூர்த்தி .க, "சிவஞானசித்தியார் அடிப்படையில் சைவசித்தாந்தக் காட்சி", முதுகலைமாணிக் கட்டுரை ஆய்வு, 1988.

31. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், திருப்பனந்தாள், 1961.

32. செந்திநாதையர், சிவாத்துவித சைவபாடியம், செந்திநாத சுவாமி அச்சகம், 1907.

33. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், சைவசித்தாந்த மகாசமாஜம் சென்னை, 1937.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும், சிவதொண்டன் நிலையம், செங்கலடி, இலங்கை (ஆண்டு குறிப்பிடப்படவில்லை)

35. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள், திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, 1950.

36. திருமந்திரம், ஸ்ரீ வைகுண்டம், 1968.

37. திருமந்திரம், 7ம் தந்திரம், திருவாவடுதுறை ஆதீனம், 1966.

38. திருக்குறள், சச்சிதாநந்த அச்சியந்திரசாலை, கோமளேசுவரன் பேட்டை, சென்னை, 1919.

39. திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள், தருமபுர ஆதீனம், 1961.

40. துரை அரங்கசாமி .அ.மொ, தொல்காப்பிய நெறி, மதுரை, 1963.

41. நக்கீரர், களவியல் என்ற இறையனாராகப் பொருள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.

42. நாவலர், பெரியபுராணவசனம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, 1947.

43. நிர்மல தேசிகர், அகோரசிவாசார்ய பத்ததி, ஸ்ரீஜ்ஞானஸம்பந்தவிலாஸ யந்திரசாலை, 1929.

44. பரநிருபசிங்கம்.ச, "எட்டினதும் எட்டாததும்", பண்டிதமணி நினைவு மலர், (மேல் 07)

45. பரராசசேகரம், சுகரோகநிதானம், லங்கா ஆயுர்வேதக்கல்லூரி, 1999.

46. பாண்டியன் .பீ, ஔவை குறள், சென்னை, 1990.

47. மாணிக்வாசக சுவாமிகள், திருக்கோவையார், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1932.

48. மாணிக்கவாசகர், திருவாசகம், ரிப்பன் பிரசுரம், 1947.

49. மூவர் தேவாரம், காசிமடப்பதிப்பு, 1968.

50. ஜம்புநாதன் .ஆர்.எம், சாமவேத மொழிபெயர்ப்பு, 1936.

## சஞ்சிகைகள்

01. ஞாயிறு, யாழ்ப்பாணக் கலாநிலையம், 1933.

02. சுசீந்திரராசா .சு, "பண்டிதமணியும் உபஅதிபர் கைலாசபதியும்", தினகரன் வாரமஞ்சரி, 16.03.1992.

03. ஜகந்நாதன் .எஸ்.என், கணையாழி, ஜூலை, 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில நூல்கள்

01. Buhler .G. (Tr. by) The Laws of Manu, Oxford University Press, 1896.
02. Deussen Paul, Tr. by Charles Johnston, The System of the Vedänta, Motilal Banarsidass, Delhi, 1972.
03. Devasenäpathi, V.A, Sivasiddhänta (As expounded in the Sivagñana Siddhiyär and its six commentaries), University of Madras, Madras, 1974.
04. Dyczkowski, Mark, S.G, The Doctrine of Vibration (An analysis of the doctrine and practices of Kashmir Saivism), Motilal Banarsidass, Delhi, 1989.
05. Koenrad Elst ,Ayodhya and After ,Delhi 1991.
06. Frawley, David (Dr.), Gods, Sages and Kings, Motilal Banarsidass, 1995.
07. Gadkari, Jeyant, Society and Religion, Popular Prakasham, Bombay, 1996.
08. Gautier , Francois , Rewriting Indian History, Vikas, Delhi, 1996
09. Jaimini, Mimamsää Darshanä, Ãnanda Ãshram, Pune, 1980.
10. Kanapati, S.V, Samaveda, Motilal Banarsidass, Delhi, 1983.
11. Lorenzen, David, N, The Käpalikas and Kälämukas, (Two Lost Saivite sects. 2nd Rev. ed) Motilal Banarsidss, Delhi, 1991.
12. Pandit, M.P, Versatile Genius Kapäli Sästriar, T.V, Sri Aurobindo Ãshram, Pondicherry, 1986.
13. Réne Guenon, Man and his becoming According to the Vedänta, New Delhi, 1981.
14. Shastri, Bhagawate Kumär Goswämyi, The Bhadti Cult in Ancient India, Choukhamba Sanskrit series Office, 1965.
15. Sarvananda, Swami, Taittiriyopanisad R Bhagawate Kumär Goswämyi, makrishna Math, Mylapore, Madras, 1949.
16. Toynbee, Study of History, Summery by Somerville, D.C, Oxford University Press, 1955.
17. Urban .M. William, "The philosophy of Language," in The Philosphy of Ernst Cassirer, 1949.
18. Vireswarãnanda Swami, BrahmaSütram Advaita Ashrama, Almora, 1948.
19. Vidyäbhüshan, S.C, (Tr. by), Nyäya sutra of Gowtama, Delhi, 1990.
20. Varatharajah aiyer, E.S, Tolkappiam Porulakhidaram, Annamalai University, Annamalainagar, 1948.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபந்தம் 1

# பிரமாணங்கள்
## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

உப அதிபர் அவர்கள் [திரு பொ. கைலாசபதி] பிரமாணங்களை ஏழு வகையாகக் கூறுவார்கள். அவை வருமாறு: 1.பிரத்தியட்சம், 2.அநுமானம், 3.ஆகமம், 4.ஸ்மிருதி, 5.சுருதி, 6.கலை, 7.சாட்சாத்காரம் 'பிரமாகரணம் பிரமாணம்',பிரமைக்குக் காரணம்,அதாவது உணர்ச்சி பிறப்பதற்குக் கருவியாயுள்ளது என்றவாறு. இப்பிரமாணங்கள் ஒன்றிலொன்று விசேடமானவை,

[1] ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றால் சந்தேக விபரீதங்கட்கிடமின்றி, நேரே காண்டல் பிரத்தியட்சப் பிரமாணம் எனலாம். பிரத்தியட்சப் பிரமாணமும் அவரவர்களின் கருவி கரணங்களின் திறமைக்குத் தக்கபடியும் அநுபவத்துக்குத் தக்கபடியும் விஸ்தாரமாகவும் ஒடுக்கமாகவும் இருக்கும்.

[2] அநுமானம்: "அவிநாபாவம் பேசுறும் ஏதுக்கொண்டு மறை பொருள் பெறுவதாகும்". என்பது அருணந்தி சிவாசாரியார் வாக்கு அஃதாவது, மறைந்து நின்ற பொருளை அதனை விட்டு நீங்காது, யாண்டும் உடனாய் நிகழும் ஏதுவைக் கொண்டு உணர்தலே அநுமானப் பிரமாணமாகும். அவிநாபாவம்விட்டு நீங்காத தொடர்பு. அருணந்தியாரை விஞ்சி அநுமாணத்துக்கு இலக்கணம் கூறியவர் இலர் என்பது உப அதிபரின் கருத்து.
நேரே காணமுடியாத பொருள்களை அவற்றை விட்டு நீங்காத தொடர்புகளைக் கொண்டு ஐயந் திரிபற உணர முடிதலின் கருதலளவை காண்டலளவையின் விசேடமுடைத்து.

[3] ஆகமப் பிரமாணம் என்பது ஆப்த வாக்கியம். என்மனார் புலவர் என்பது வாய்பாடு. பெரியோர் சொன்னது இவனுக்கும் தைக்கக்கூடியதாக இவனுடைய உணர்ச்சிக்கும் மாறுபாடில்லாமலிருக்கும் பொழுது ஆகமப் பிரமாணம் கைகூடுகிறது.
உலகத்தாருண்டென்பதில்லென்பான் வையத்துள் அலகையா வைக்கப்படும்' என்ற தேவர் வாக்கு ஈண்டுச் சிந்திக்கற்பாலது. இவ்வாற்றால் ஆகமப் பிரமாணம் அநுமானத்திலும் விசேடமுடைத்து.

[4] ஸ்மிருதி சிந்தனையிலே பட்டது. சாதாரண சிந்தனைக்கு அப்பாற்பட்ட விஷயம் காட்சியாகத் தெரிவது தான் ஸ்மிருதி எனலாம்.
எனவே ஸ்மிருதி ஒருவர் கண்டது அவருக்கு அது ஆகமப் பிரமாணத்திலும் விசேடமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[5] சுருதி நேரேகேட்பது. அது ஸ்மிருதியிலும் விசேடமானது.


[6] கலை கலிப்பு. எழுச்சி தூண்டுதல்.
ஒரு எழுச்சி எழுந்து நடப்பதைத் தன் அநுபவத்திலே காண்பதுதான் கலை என்ற பிரமாணம் அது சுருதியிலும் விசேடமானது.

[7] சாட்சாத்காரம் - நேரடி அநுபவம். பொறியானறிதலனறு. அறிவால் அறிதல். இதுவே எல்லாவற்றுள்ளும் தலையாது.
ஒருவர் ஸ்மிருதியாக" சுருதியாக, கலையாக, சாட்சாத்காரமாகக் கண்டதைப் பிறருக்குச் சொல்லும் பொழுது, கேட்பவருக்கு அவையெல்லாம் கேள்வியறிவளவேயாகும். எனவே ஆகமத்துக்கு மேலே உள்ளவையெல்லாம் ஆகமப்பிரமாணத்துள் அடங்கும் எனலாம்.
(இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது எண்பத்தாறாவது பிறந்த தினம் 27.6.84 புதன் ஆகும். அதனையொட்டி இக்கட்டுரையை அனுப்பி உதவியவர். ஆ.பஞ்சாட்சரம்.)

*ஈழநாடு - வாரமலர். ஞாயிற்றுக்கிழமை 24.6.1984, ப.12*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபந்தம் 2 (A)


அன்புள்ள பேராசிரியர் அவர்கள்,

அன்புள்ள

Received on 10.01.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சைவசித்தாந்தநோக்கில் பொ.கைலாசபதி ஸ்மிருதி" என்ற நூலின் ஆசிரியர் மு.கந்தையா(D, Litt.) அவர்கள் லலிதாமினியின் ஆய்வுக் கட்டுரையின் பெரும்பகுதியைப் படித்தவுடன் பேராசிரியர் சு. சுசீந்திரராசாவுக்கு அனுப்பிய கடிதம் . (கிடைத்த திகதி 10.1.2001)**

*அன்புள்ள பேராசிரியர் அவர்கள்,*

கை நிறையப் பணம் வைத்துக் கொண்டு காசு கடன் மாறக் காடுமேடெல்லாம் உழன்ற கதையாய் விட்டது கலைப்பீடத்தின் கடந்தகால முயற்சி.

அகில பாரதக் கலை, கலாசார, லௌகிக, ஆத்மிக, இலக்கிய விழுமியங்களிற் கால அசைவில் நேர்ந்த கருத்துப் பிறழ்வுகளை நிமிர்த்தி உள்ளும் புறமும் நேர்பட அலசிக் காட்டும் ஒரு ஊடாகவியலாகச் சிந்தித்தியற்றப்பட்டது கைலாசபதி ஸ்மிருதி.

அதன் முழுமையான சுவபாவம் உரிய தரத்தில் உரிய ஆய்வு முறையில் உரிய ஒவ்வொருவர் முயல்வால் இன்று வெளி வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

ஆ.சபா அகண்ட கல்வி கேள்வி ஞானமுள்ள ஒரு நல் அறிஞர். அவருக்கு என் வாழ்த்துக்கள். இது அப்போதே வெளிவந்திருந்தால் முன்பு இதிற் சம்பந்தப்பட்டிருப்போரின் உழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். திரு.பரநிருபரின் வெறுப்புக் காளாகா திருக்கும் பாக்கியமும் நேர்ந்திருக்கும்.

பரம் நூல் முழுவதும் பார்த்து, அதில் நான் சம்பந்தப்பட்டது தவறு எனத் தன் நண்பர் ஒருவருக்கு எதியுள்ளாராம். பரத்தினுடைய மற்றொரு தேவை சம்பந்தமாக இங்கிருக்கும் அவரது மருமகனொருவர் என்னைச் சந்திக்க வந்ததன் சார்பில் அறிய வந்த செய்தி இது.

அது ஒரு நோக்கில் தவறுமாகலாம் என்பதை நானே ஒருபுறம் ஒத்துக்கொண்டு அது எழுதப்பட வேண்டி வந்த எனது பிரத்தியேக நோக்கத்தையும் முன்னுரையில் தெளிவாகக் குறித்துள்ளேன் அந்நோக்கில் என்னை நீங்கள் மன்னிக்கலாம் என்று எழுத்தில் கொடுத்துள்ளேன்.

குறிப்பிட்ட தேவை ஒன்றில்லாமல் எதுவும் நடப்பதில்லை என்பதற்கிணங்க, எங்கள் முயற்சிக்கும் ஒரு தேவை இருந்தேயாகும். கலப்பற்ற சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கும் ஒரு சைவசித்தாந்தநூல் பல்கலைக்கழகத்தின் பேரால் வெளி வரவேண்டும் என்ற தேவையே அதுவாயிருக்கலாம் என்பது என் துணிபு.

***அன்புள்ள***
***மு. கந்தையா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபந்தம் 2 (B)

4-1-2001.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

பக்கங்கள்:

III — XIV

1 — ௨1

௨3 — 50

105 — 139

175 — 186

198 — ௨06.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2001 தை 4இல் அனுப்பிய லலிதாமினியின் ஆய்வுக்கட்டுரையின் பெரும் பகுதியை படித்தவுடன் எழுதியது.**

**7.1.2001**

*அன்பர் ஆ.சபா,*

கைநிறையப் பணமிருப்பவும் காசு கடன் கேட்டுக் காடும் மேடும் அலைந்த கதையாயிற்று, கலைப்பீடத்தின் கடந்தகால நிகழ்ச்சி. கலைப்பீடத்தின் தேவைக்கு உரியது உரியமுறையில் உரியவரிடமிருந்து இப்போதான் வெளிவந்திருக்கிறது. அறிவியல், ஆய்வியல், லௌகிகவியல், ஆத்மிகவியல், புராதனம், நவீனம் அனைத்தையும் ஊடும் பாவுமாக உள் நுழைந்து துழாவும் அறிவுக் கருவூலம் கைலாசபதி ஸ்மிருதி என்ற அந்தரங்க விளக்கமும் சம் பந்தப்பட்டவரின் - உரைஞர் - கால காலத்தேட்டங்களாகிய இலக்கண, இலக் கிய, சரித்திர, கலாசார, இதிகாச, புராண, விஞ்ஞான, மெய்ஞ்ஞானத் துணிபொருள் விளக்கங்களும் ஒரே பார்வையிற் புலப்படத் துலங்கும் அருமை யான ஆக்கம் இதுவாக உரித்த என் புதுக் கண்ணுக்குக்[1] கூட இதமளிப்பதா யிருக்கும் அருமையை மெச்சுகிறேன்.

இது அப்போதே வெளிவந்திருந்தால் கலைப்பீடத்தின் நோக்கம் கையோடு நிறைவுற்றிருக்கும். முன்னைய நூற் பிரசுரத்தால் நேர்ந்த அனாவசிய உதப்புகளும் இழப்புகளும் நேராதிருந்திருக்கும். அத்துடன் பரநிருபத்தின்[2] வெறுப்புக்காளாகாதிருந்திருக்கும் பாக்கியமும் வாய்த்திருக்கும். போனது போகட்டும்.

பரநிருபம் தான் முன்னைய பிரசுரம் பார்த்ததாகவும் அதில் நான் ஈடுபட்டது பிழையென்றும் பண்டிதர் நாகலிங்கத்துக்கு எழுதிய தகவல் ஒன்று பரத்தின் மருமகன் மூலம் நான் அறியவந்துள்ளது. சமீபத்தில் மருமகன் தேவையொன்றை முன்னிட்டு என்னைச் சந்தித்தபோது, பரம் அவருக்கு எழுதிய கடிதத்தையும் பார்க்க நேர்ந்தது.

பிழை பிழைதான். அதை நானே ஒருபுறம் உடன்பட்டுக்கொண்டு, எழுதமுனைந்ததன் காரணமும் முன்னுரையில் தெளிவாக விளக்கியுள்ளேன். அந்நோக்கிலும் அதன் சார்பிலும் நீங்கள் என்னை மன்னித்தல் தகும்; மன்னிக்கலாம் என எழுத்தில் கொடுத்துள்ளேன்.

உங்கள் நல் முயல்வுக்கு என் நல் வாழ்த்துக்கள்.

மேலும் ஒன்று அவசியம் கவனிக்கத்தகும்.

செல்வி[3] கொண்டுவந்த கோவையில் பக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| III | | XIV |
|---|---|---|
| 1 | - | 21 |
| 23 | - | 50 |
| 105 | - | 139 |
| 175 | - | 186 |
| 198 | - | 206 |

மட்டும் உள்ளன.

செய்த உதவியோடு உதவியாக மீதியையும் அனுப்பிவைக்கவும். எனக்கு அதை ஒரு சிறுவெகுமதியாக அனுமதித்தால் பயன்நூக்கார் செய்த நன்றியாக அது என் நெஞ்சில் நிதமளியாத இத நினைவாக நிலை பெறுவதாகும்.

பதில்

மு. கந்தையா

ஆ. சபாரத்தினம்
செல்வி ஊடாக

[1] சில நாட்களுக்கு முன்னர் தான் பண்டிதர் அவர்கள் கண்படல அறுவைச்சிகிச்சை செய்திருந்தார்.

[2] அளவெட்டி ச. பரநிருபசிங்கம்

[3] ஏழாலை தமிழ்ச் செல்வி அப்பொழுது பல்கலைக்கழக மாணவியாய் இருந்தார். அவர் மூலம் பண்டிதர் அவர்கள் கடிதங்கள் அனுப்புவது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவு : ஒன்று


அகஸ்தியர் 40
அநுமார் 98
அப்பர் 141,144,175
அரதத்தசிவாசாரியார் 30,38
அரவிந்தர் 30,89,115,155
அரிச்சந்திரன் 23
அரிஸ்டோட்டில் 112,162
அருணகிரிநாதர் 23,55,65,86,175
அருணந்திசிவாசாரியார் 41,77, 104
ஆழ்வார்கள் 30,39
ஆறுமுகநாவலர்39,114,127, 173,176
இராசரத்தினம் - சு 07,31,71
இரணியகர்ப்பர் 57
இரத்தினசபாபதி (உபாத்தியாயர்)4,5,6,8,17, 41,62,70
இராதாகிருஷ்ணன்,ஸேர் 6,68,110
இராமகிருஷ்ணர் 31,65,72
இராமநாதன், சேர்.பொன் 31,69
இராமன் 74,154
இராமானுஜர் 110 இந்திரன் 81
ராஜநாயகம்,சு. 53
உமாபதிசிவாசாரியார் 30
உருத்திரங்கண்ணனார்,கடியலூார் 143,176
உருத்திரசன்மன் 123
உருத்திரன் 40, 46, 60, 67,81,82
உரையாசிரியர்2,24,44,45,49,56,57, 71,74,76,87, 94,109,110, 127 129, 132, 138, 139, 161,165,190
கச்சியப்பசிவாசாரியார் 23,38,41,42,74,79,111,114,116,176
கபாலிசாஸ்திரி, ரி.வி. 96
கழறிற்றறிவார் நாயனார் 99
கங்காநாத் ஜா 9,109
கணபதிப்பிள்ளை.சி(பண்டிதமணி) 5,7,8,9,10,11,14,16,17,31,70,71,83, 111, 115,117,118,127,142,144,173, 175,180
கந்தையா,மு.13,162,170,171,176, 188,189
கனகசபைப்பிள்ளை 03
காசிப்பிள்ளை(உபாத்தியார்)31,70
காசிவாசி செந்திநாதையர் 96,116,117,176
காந்தி 30,36,73,155
கான்ற் 31,34
கைலாசபிள்ளை, த 31
சங்கரபண்டிதர், நீர்வேலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112,119,176
சங்கராச்சாரியார்,(சங்கரர்)
65,76,110,117,161
சண்டேஸ்வரர் 56
சத்தியகாம ஜாபாலன்
22,42
சதாசிவன் 60
சனற்குமாரர் 111
சபாபதிநாவலர் 38
சம்பந்தர்
41,43,77,97,122,141
சபாரத்தினம,ஆ.
பல்வேறு இடங்களில்
சாமுவேல்பிள்ளை 127
சிவஞான முனிவர் 30,52,73,
12,116,136,139,161,190
சிவப்பிரகாசம் (கலாநிதி) 31
சிவபாதசுந்தரம் ,சு.
6,31,72,79
சின்னத்தம்பி (தலைமை
ஆசிரியர், கணபதிப்பிள்ளை)
9,16,70
சுசீந்திரராசா,சு. பல்வேறு
இடங்களில்
சுந்தரம்பிள்ளை
(மனோன்மணீயம்) 120
சுவாமிநாதன்.சி 5,8,11,31,70
சுப்பிரமணியஐயர் ,ஏரம்பையர்
08,15,30,73
சுப்பிரமணியர்(முருகன்) 40,45,81
சூரியநாராயண சாஸ்திரியார் 110
செந்திநாதையர் (பார்க்க) காசிவாசி
12,40,86,96,111,116,117,176
செல்லத்துரை (ஆசிரியர்)31,70
சேக்கிழார் 30,38,80,111,116,170,176
சைமினி 86,105,109,157,161,190
சோக்கிரட்டீஸ் 5,86
டொய்சென், போல் 109
தாமோதரம்பிள்ளை,சி.வை. 70
தாயுமானவர் 30,39,78,86,91
துரைரத்தினம் (அராலியூர்) 10
பரநிருபசிங்கம், சரவணமுத்து
1,14,16,17,27,34,36,68,69,71,73,74,83,85
,86,101,115,119,142,171,175,177,188,189
பராசரர் 101,107
பரிமேலழகர் 25,139
பாணினி 103. 127
பாரதி 120
பாரதிதாசன் 120
பாஸ்கரர் 110
பிரமா 45.60 61 80 95
பிளேட்டோ 5,16,31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகசிங்கம்,பொ 12
பொன்னம்பலம்,வீரகத்தி
3,4,30
மக்ஸ்முல்லர்
87, 88, 112, 114
மகாதேவர், சுவாமி 07
மகேஸ்வரன் 60
மண்டன மிசிரர் 161
மத்துவர் 110
மழவை மகாலிங்கஐயா 127
மனு 152, 162
மெய்கண்டார்
40, 44, 45, 79,95
மொனிக்கா. ஃபெல்ரன் 07
ராஜாஜி (சக்கரவர்த்தி
ராஜகோபாலாசாரியார்) 07
வாலி 107,117,140,162
விசுவாமித்திரமுனிவர்
30,39, 95
வித்தியானந்தன், சுப்பிரமணியம்
11,17
வியாசர்
41,57,76,79,89,105,111,157,190
விவேகானந்தர் 30,36,65,69,73
விராட் 57
வினோபா, ஆசார்ய 07
விஷ்ணு 40,46,60,81,107
விஸ்வலிங்கம் (ஆசிரியர்) 31
வேதநாயகி (பண்டிதை) 31,71
வைசம்பாயனர் 111
வைத்திலிங்கம் ,மு 31
வைரவியார் 31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவு : இரண்டு (பொருள்)


அகக்கண் 19,95

அகங்காரம் 23,24,
60,67,130,187

அகங்காரவிருத்தி
19,20,52,61,62,63,
113,137,123,124,159

அகச்சமயம் 52

அகண்டாகாரம்
26,27,46,58,75,78,125,187

அகத்தியம் 98

அகம் 7,52,128,129

அக்கினி 92,104,153

அசத் 15,91

அதர்வவேதம் 92

அத்துவசுத்தி 24

அத்துவிதம் (அத்வைதம்)
67,110

அநந்தம் 20,23,24,63,65,130

அநந்நியதநுவம்133

அநாதி சிருஷ்டி 95

அந்தக்கரணம18,23,24,
42,45,54,60,94,128,130,137

அந்தக்கரண விருத்தி 24

அந்தணர்கள் 92,96

அபப்பிரம்சம் 122

அமிர்தம்26,27,28,40,43,48,50,5
3,56,58,74,79,97,125,160,187

அமிர்ததளம்
44,45,56,73,79,80

அமிர்தத்தமிழ்
123,125,142

அமிர்தநோக்கு
55,73,101,159,163

அருவம் 19

அருள்நோக்கு 11,20,21,22,23,24,62,63,
65,70,76,120,122,123,124,
130,136,152,153,154

அர்த்தம 25,26,27,40,41,42,48,51,53,56,
77,82,92,97,106,113,125,136,159,160,187

அர்த்ததளம் 75,92,98,128

அர்த்தத் தமிழ் 122,125

அர்த்தநோக்கு 50,82

அவைதிகம் 97,174

அளவையியல் 112,158,171

அறம் 21,25,26,43,69,149,154

அறிவு
26,33,35,37,71,77,79,87,89,94,97,99,108,
122,133,138,164,165,189

அறுசமயம் 52

அனுமானம் 113,118

ஆகமம்118,137,157,158,159,160,161,189

ஆகவனீயம் 104




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுதி 92,104
ஆசாரம் 17,20,21,23,24,
62,63,65,95,130,131
ஆச்சிரமம்103,111
ஆணவம் 22
ஆதிப்பிரமம் 27,58,125,127
ஆமைத் தமிழ் 123,125
ஆரணியகங்கள் 89,113
ஆரியத்துவம் 11,20,22,23,24,
39,62,63,65,91,97,128,130,153,
162,
ஆரியம் 22,88,102,120,
121,122,124,126
ஆரியர் 87,88
ஆழ்வார்கள் 30,39
ஆறுசமயம் 52
ஆனந்தம் 20,27,58,59,125,187
ஆன்மீகநூல்121
ஆன்மீகம் 22,23,25,42,43,46,
49,63,64,65,73,80,83,105,109,
113,120,121,122,123,124,126,127,
130,131,133,137,149,161,173,174
ஆன்மீகவாழ்வு
06,105,124
இசைத்தமிழ் 126,136,137
இந்துசட்டம் 108
இயற்றமிழ் 126,136,137
இராமகிருஷ்ணமடம் 79,175
இருக்குவேதம் 89,115
இலக்கணக்கடல் 127
இலக்கணநூல் 98,121,127
இலக்கணம் 47,49,98,99,112,116,
120,126,129,140,156
இலக்கியம் 50,66,126,145
இறையனார்களவியல் 134
ஈசுரவாக்கு 91,94
உடன்போக்கு 50,57,134
உணர்ச்சி 02,97,122,134
உண்மைப்பொருள் 10,91,98
உதாத்தம் 103
உத்தரமீமாம்சை
106,107,109,110,161
உபநிடதங்கள் 18,55,57,89
உபதேசகாண்டம் 111
உபப்பிருங்கணம் 114
உபாங்கங்கள் 88,113,159,174
உபாங்கம்105,107,109,159,161,190
உரையாசிரியர்கள்56,109,110,127,
129,132,138,161,165,190
உலகாயதம் 112
உலகியல்பொருள் 108
உள்ள அழிவு 19,62
உள்ளத்தெளிவு 19,62,66,67
உள்ளம் 18,60,61,64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளலயம் 19,64,65,75
உள்ள விருத்தி 62
உள்ளொளி 87
ஊமைச்சாதகர்கள்123
ஊமைத்தமிழ் 123
ஊர்த்துவதமிழ் 123
ஊர் பேர் கழிந்தவர் 40,46
எழுச்சி 05,34,47,48,59,79,80,
83,104,113,118,136,150,163,166
எழுச்சிகள் 47,48,113,163
எட்டுத்தொகை 126
ஐந்தெழுத்து 47
ஓங்காரம் 58
கண்விருத்தி 18,19,20,
63,64,65,81,92
கண்ணப்பநாயனார் புராணம்111
கதி 55,65,73,96,131,140,150
கந்தபுராணம் 81,111,114,176
கரணம் 39,45,96
கருத்து 1,2,7,9,10,12,13,
14,17,22,25,30,34,
35,37,39,42,45,48,49,59,63,64,68,
77,80,82,110,111,113,115,117,120,
121,122,123,124,126,127,128,132,
134,135,138,139,140,148,149,150,
151,152,154,155,156,159,162,163,
164,167,168,173,174
வேத விரோத, 72
வேதம் பற்றிய 88,91,93
விஞ்ஞானம் பற்றிய 164
அண்டவியல் பற்றிய 167
கர்மம் 10,43,92
கர்மாக்கள் 103,104,109
கலி 11,34,64,71,89,95
கலை 118,119,134,136,158,
159,160,163,165,171,187,189
கலைஞானம்31,33,34,47,74,77,125
கல்பசூத்திரங்கள் 103
கல்பம் 96,97,103,113
காண்போன் 128
காட்சி90,97,,98,99,102,128,161,
162,167
ஆகமக் காட்சி 57
ஆன்மீகக் 173
ஞானக் 75,87
நியாயக் 112,190
நேர்க் 101,118,163,167
புராணக் 111
போதக் 57,90
மூலக்காட்சியோகக் 48,101,90,138
ஸ்மிருதிக் 107
காட்சிப் பிரமாணம் 112
காட்சிப்பொருள் 128


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்ஹபத்தியம் 25
காபாலம் 52
காமத்தமிழ் 122
காமநோக்கு 52
காமம் 25,26,27,34,37,
40,41,42,43,48,49,52,
53,56,58,59,77,81,97,
125,133,138,160,187
காரணம் 02,22,33,93,
111,139,152,161,164,171,190
கிரியைகள் 8,90,104
கிருத யுகம் 122
கிருகஸ்தம் 7,103
கிருஹ்யசூத்திரம் 103,104
கேவலம்27,28,29,31,32,33,34,
35,38,39,44,47,125,160,188
கைக்கிளை 49,50,51,133,143
கோயிற்புராணம் 38,80,111
சகலர்44,80
சங்க இலக்கியம் 104,126
சங்கதம் 122
சங்கத்தமிழ் 22,49,126,128
சங்கற்பம் 91,154
சடபாகம் 23,105,190
சட்டப்புத்தகம் 107
சதுர் யுகம் 95
சந்தஸ் 96,97,102,103,113
சமயகுரவர் 58,121
சம்ஸ்காரநோக்கு 159
சம்ஸ்காரம்10,27,30.33,37,38,47,58,69,
81,125,160,187
சம்ஸ்கிருதம் 122,126
சன்னியாசம் 103
சாகை 89, 91,93,சாங்கியம்
49,106,107,191
சாட்சாத்காரம்118,119,158,159,160,
162,163
சாதகர்16,23,24,54,82,105,108,133
சாமவேத கீதம் 92
சாமவேதம் 93
சாஸ்திர புராணங்கள் 81
சித் 27.46,58,77,80,82,125,187
சித்தசுத்தி 104
சித்தவிருத்தி19,39,61,62,63,91,97,162
சித்தாந்த தளம் 51,77,81
சித்துப்பொருள் 21,99
சிருஷ்டி 91,95,96
சிவத்தமிழ் 123
சிவத்துவம் 60,81 (19,82)
சிவமூர்த்தம் 60, 81
சுருதி 75,91,107,118,
119,135,158,159,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160,162,163,189
சூக்தங்கள் 89
சூனியபாஷை 123
சொல்லப்படுமிடம் 113
சொல்லுமிடம் 113
சொற் பிரபஞ்சம்
122,163
ஞானக்காட்சி 48,87
தளம்55,56,75,80,81,
98,103,138
நோக்கு 39,98,138
பொருள்108
ஞானம் (அகங்கார
விருத்தி)20,23,24,45,52,63,65,130
தட்சணாக்கினி 104
தமிழாகமம் 76
தமிழ் 120,121,122,124,
125,126,127,129,131,
136,138,140,141,142,
145,156,158,171,173
தமிழ்ச்சொல் 121
தமிழ்நோக்கு(அருள் நோக்கு)152
தர்மசாத்திரம்24,68,88,105,113
தர்மத்தமிழ் 49,122,123,125 தர்மம்
25,26,27,35,40,41,47,48,
53,58,70,74,77,88,92.93,94,95.97,102,10
6,108,111,125,137,150,151152,15
4,159,160,161,187
தளங்களின்பொருள் 113
தாது 62,92,97,99,163
தாது (வேர்ச்சொல்) 48,101
திரயீ வித்யா 93
திரிபுவனகுரு 45
திருநகரச்சிறப்பு (பெரிய
புராணம்) 111
திருப்பாடல் 81
திருமுறை 81,111,114,121,158
திருமுறைத்தமிழ் 22
தீவினை 92
தென்மொழி 121
தெய்வீகநெறி 121
தெய்வீகமொழிகள் 124,134
தொல்காப்பியம்9,49,50,56,76,83
98,116,120,126,127,128,130,131,
138,140,143,144,175
தொல்காப்பியப் பாயிரம் 98
நக்கீரர்41,75,76,126,127,128,134
,136,138,177
நச்சினார்க்கினியர் 49
நடராஜப் பெருமான் 99
நம்மாழ்வார் 123
நல்வினை 92


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவவியாகரணம் 97
நாகரிகம்3,27,30,33,36,47,58,69,70
,77,78,81,123,125,160,187
நாடகத்தமிழ் 126,136
நாம ரூபம் 82
நாரதர் 101,107
நித்தியாக்கினி 92
நியாயம்49,105,106,107,111,112,
113,159,161,165,190
நிரீச்சுரவாதம் 72
நிரீச்சுரவாத சாங்கியர் 107,157
நிருக்தம் 90,97
நிர்க்குணப்பிரமம் 82
நீலகண்டர் 76,110
நேர்க்காட்சி 57,95,101,118
பண்பாடு 47,50,52,58,78,81,98,
123,125,126
பதம்22,60,90,92,122,163,168
பதினெட்டுப்பாடை 124
பரிபாடல் 126
பாகதம் 122
பார்க்கப்படுமிடம் 92
பார்க்குமிடம் 92
பாஷா 111
பாஷை45,55,99,122,123,137,
150,165
பிரமாணம் 112,157,159.160,162
பிராமணங்கள் 89
பிரதிவிம்பம் 20
பிரத்தியட்சம்118,157,158,160,16
1,189,190
பிரம சமாஜம் 104,118
பிரமச்சரியம் 103
பிரளயம் 95
பீஜம் 97,99
புடைதொறுமலைப்ப 96
புத்திவிருத்தி5,16,19,25,26,28,30,
32,33,34,35,36,37,38,40,42,43,45,
46,47,48, .50,53,61,62,64,65,70,
73,75,91,92,96,97,98,99,103,105,
106,112,113,123,124,128,133,134,
136,159,163,165,167
புராணங்கள்111,116,168
புராணத்தமிழ் 124,125,141
புராணப்பிரசங்கம் 111
புராணம்49,88,105,107,110,
111,113,116,190
புருஷார்த்தம் 26,28,35,36,.
42,43,44,45,93,149
புவனம் 45,94,96,168
புனருற்பவம் 95
பூர்வமீமாம்சை 106,107,109


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம் 52,56,99,152, 70
பைசாசி 122
பொருட்பிரபஞ்சம் 89
போகங்கள் 94,96
பௌதிகவியல் 03,114
மந்திரசங்கிதை 89,91
மந்திரதிருஷ்டா, 39,90,97,162
மந்திரம் 22,35,87,90,91,96,99,
123,126,152,156,163,
மந்திரர் 101,102
மறை 96,116,121
மனத் தெளிவு 19,62,66,67,81
மாயாவாதிகள் 82
மிருதி 49,118,159,191
மீமாம்சை49,74,76,105,106,
107,109,110,113,161,190
முடிந்தசத்தியம்46,58,92,106,
112,125,159
முடிந்த ஞானம்
27,52,57,58,78,80,82,187
முத்தமிழ் 49,115,122,123,124,
126,141,176
முத்தி(முக்தி) 66,76,102
முத்தீ 76,102,104,105
முத்தீச்செல்வர் 92,115
மெய்ப்பொருள் 18,91,128,159
மேல் நோக்கிய (ஊர்த்துவ
தமிழ்)125
மோக்ஷத்தமிழ் 125
மோக்ஷம்2,25,26,27,28,39,48,51,5
8,82,92,97,106,159.187
மௌனமொழி 123
யசுர்வேதம் 93
யாப்பிலக்கணம் 102
யோகம் 49,51,54,55,56,100,
106,107,138,191
லௌகிகவாழ்க்கை 93
வடசொல் 121
வடமொழி 21,22,38,52,
88,97,98,121,126,129,139,
149,156,157
வர்ணம் 90,92,122,163
வாகடத்தமிழ் 124,141
வாயு புராணம் 111
வானசாஸ்திரம் 167
வானப்பிரஸ்தம் 103
விடுதலை 5,52,92
விதி 32,72,103,
விம்பம் 113
வியாகரணம் 55,56,96,97,98,
99,100,101,113,137,138
வேதகாலமதம் 111



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம்37,87,88,89,90,91,92,93,94,95,96,102,114,115,127,140,152,155,161,162,164,165,174,189
வேத ரிஷிகள் 7,89,165
(ரிஷிகள்)44,77,87,89,103,108,165
வேதாங்கம் 56,96,97,101,138,
வைதிக இலக்கணம் 116,127
கர்மாக்கள் 101,103
கிரியை 37,104
சமயம் 105
தமிழ் 152
நெறி 107
நோக்கு 94
முறை 101
வகுப்பு (சாதிப்பிரிவு)131
வைதிகன் 37,101,131,164,165
ஸ்மிருதந்திரம் 107
ஸ்மிருதிக்காட்சி 107
ஸ்மிருதி 35,43,45,46,53,59,62,64,65,89105,106,107,108,109,118,127,129,130,131,137,149,152,158,159,160,161,162,170,171,176,188,189,191
ஸ்ரௌத சூத்திரம்103
ஸ்வரிதம் 103
ஜோதிடம் 96,97,99,101,113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 10 | 20 | ஏறினாா | ஏறினார் |
| 24 | 20 | தீீை,களோடு | தீகைஷகளோடு |
| 28 | 27 | இதனைகப்மறுமக்கத்தில் | இதனை மறுபக்கத்தில் |
| 31 | 13 | சு.சுவாமிநாதன் | சி.சுவாமிநாதன் |
| | 25 | வ.சிவப்பிரகாசம் | கு.சிவப்பிரகாசம் |
| 34 | 27 | ே'க்ஸ்பியா | ஷே க்ஸ்பியர் |
| 41 | 17 | அதனைச் | அதனை |
| 45 | 38 | சோமஸ்கந்த | சோமாஸ்கந்த |
| 51 | 4 | பெருநதிணை | பெருந்திணை |
| 53 | 16 | மோக'ம் | மோக்ஷம் |
| 57 | 26-27 | பொருத ̇ தமே | பொருத்தமே |
| 65 | 8 | எடுத்தக் | எடுத்துக் |
| | 12 | சுாதக | சாதக |
| | 18 | முடிவு காட்டினர் | கட்டினர் |
| | 19 | ஸ்திரப்படுத்தினார் | படுத்தினர் |
| 70 | 4 | நோக்குக்கவரப்பெற்றனர் | கைவரப்பெற்றனர் |
| 71 | 32 | BSc | B.Sc. |
| 72 | 35 | வாதன் | வாத |
| 74 | 15 | போலுமஂ. | போலும் |
| | 17 | குறிப்பிடப்பட்டள்ளார் | பட்டுள்ளார் |
| | 31 | போர்ருக்கு | போருக்கு |
| 78 | 1 | குறிப்பிடப்பட்டள்ளார் | பட்டுள்ளார் |
| | 19 | காட்டியுள்ளர் | காட்டியுள்ளார் |
| 82 | 20 | தற்காலிமாக | தற்காலிகமாக |
| 87 | 24 | பகுத்தறவு | பகுத்தறிவு |
| 90 | 34 | தன்னைப் | தன்னைத் |
| 98 | 34 | அவாகள் | அவர்கள் |
| 103 | 21 | சமானாகாது | சமனாகா |
| 106 | 8 | 19 | 17 |
| 107 | 16 | கவனத்துக | கவனத்துக் |
| 115 | 20 | சமுதாயத்தக்கு | சமுதாயத்துக்கு |
| 117 | 19 | தேன□ | தேன் |
| 132 | 27 | மாத்குதே₃ வோ | மாத்ரு தே₃ வோ |
| | 28 | தே₃ வே | தே₃ வோ |
| 133 | 10 | தணை | திணை |
| 143 | இல.43 | முதலாய் | முதலாப் |
| 146 | இல.56 | 'Hermuanetics' | 'Hermaneutics' |
| 152 | 4 | சிறப்பில 7 | சிறப்பில் |
| 168 | 11 | ஜன்ஸ்ரைனுடைய | ஜன்ஸ்ரைனுடைய |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி..............

"சைவசித்தாந்த நோக்கில் பொ. கைலாசபதி ஸ்மிருதி" என்ற நூலின் ஆசிரியர் மு.கந்தையா (D.Litt.) அவர்கள் லலிதாம்பினியின் ஆய்வுக் கட்டுரையின் பெரும்பகுதியைப் படித்த வுடன் பேராசிரியர் க. சுசீந்திரராசாவுக்கு 10.01.2001 இல் அனுப்பிய கடிதத்தில்.

*அகில பாரதக் கலை, கலாசார, லௌகிக, ஆத்மிக, இலக்கிய விழுமியங்களிற் கால அசைவில் நேர்ந்த கருத்துப் பிறழ்வுகளை நிமிர்த்தி உள்ளும் புறமும் நேர்பட அலசிக் காட்டும் ஒரு ஊடக வியலாகச் சிந்தித்தியற்றப்பட்டது கைலாசபதி ஸ்மிருதி.*

*அதன் முழுமையான சுவபாவம் உரிய தரத்தில் உரிய ஆய்வு முறையில் உரிய ஒவ்வொருவர் முயல்வால் இன்று வெளி வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.*

ISBN 955 8058 02 - 5

Bharathi Pathippakam, 43, K.K.S.Road, Jaffna. Phone: 021 - 222 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org